அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147
Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com



# தாய் வீடு

THAIVEEDU ஒகஸ்ட் 2009 HOME & LIVING



FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®


# கோடையில் குதூகலம்...



ஸ்காபரோவைச் சேர்ந்த மிதுணன் உதயகுமார் (6), மிதுஷா உதயகுமார் (4)ம் ரொறன்ரோ நகர மத்தியில் கோடை விடுமுறையை குதூகலமாகக் களித்தபோது.

படம்: கருணா


RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஜப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

விபத்து
Accident Claim Services
AAA
Theven Kankesu
Tel : 416-939-8789/416-720-6587
Lawyer Consultation will be arranged
TORONTO AND GTA, OTTAWA, LONDON AND WINDSOR

PMCI MORTGAGE CANADA
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002



# R&S AUTO SALES

HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING

சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்

Tel: **416.412.3838**
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield

**Radha**





# VN FINANCIAL SERVICE

உங்கள் அணைத்து மோட்கேஜ் தேவைகளையும் சிறந்த முறையில் செய்திட உடனே அழையுங்கள்

"I AM DEDICATED TO PROVIDING YOU WITH PROFESSIONAL SERVICE AND GUIDANCE THROUGHOUT THE MORTGAGE PROCESS."

VASANTHY NIRANJAN
MORTGAGE AGENT
Lic: M0


Phone: 905-415-1670
Direct: 416-845-8272

# வீடு வியாபாரம் வாங்க விற்க நாடுங்கள்

- Residential
- Commercial
- Industrial
- Investment

HOMELIFE
Higher Standards

*Professional & Friendly Services*



**Logan Appulingam**
Sales Representative
**Direct : 416-200-6120**
Email : logan7@rogers.com

**HomeLife/GTA Realty Inc.,** Brokerage*
1711 McCowan Road, Suite 206, Toronto, ON. M1S 3Y3
**Bus.: 416-321-6969 Fax : 416.321-6963**
*Independently Owned and Operated, REALTOR

*Highest Standard Agents.... Highest Results!...*



# 416.200.5470

ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES

# SANTHA

www.santha.ca

416-200-5470

I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்**

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**After Approval**

# Joy is yours
# Pride is ours





**அகிலா செந்தில்**
**Akila Senthil**, *AMP*
*Lic: M08002166*
*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

## - நகரசபை தேர்தல் -
## “நாம் ஆட்சிக்கு வந்தால்...”

யாழ் குடாநாட்டு கடல்பகுதியில் அண்மைக்காலமாக அதிக அளவிலான தென்பகுதி சிங்கள மீனவர்களுக்கு மாத்திரம் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மீனவர்கள் தாக்கப்பட்டும், அவர்களின் மீன்பிடி உடமைகள் பறிக்கப்பட்டும் துன்புறுத்தப்படுவதாக கடற்தொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன. பருத்தித்துறை, முனை கடற்பகுதியிலும், சிங்கள மீனவர்களால் உள்ளூர் மீனவர்கள் தாக்கப்பட்டு, அவர்களின் உடமைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆழ்கடல் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சிங்கள மீனவர்கள் அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாண மீன்வளம் தமக்கு கிடைக்காமல் போவதாக யாழ்ப்பாண மீனவர்கள் தெரி-வித்துள்ளனர்.

இந்நிலையில் எமது பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கை இணைக்கும் மணலாற்றில் மீண்டும் பாரிய சிங்கள குடியேற்றத்தை நடாத்தும் மிகப் பெரிய திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அன்மையில் மணலாற்றுக்கு நேரில் சென்ற பசில் ராஜபக்ச, அதற்கான திட்டங்களை வகுத்துள்ளார். அதன் அடுத்தகட்டமாக கொக்காவில் மற்றும் மாங்குளத்திலும் பாரிய சிங்களக் குடியேற்றத்தை நடாத்துவதுடன், யாழ், மன்னார், வவுனியாவில் அறுபதினாயிரத்திற்கும் அதிகமான சிங்களவர்களை குடியேற்றி இராணுவக் கிராமங்களை அமைக்கும் முயற்சியிலும் மகிந்த அரசு ஈடுபட்டுள்ளது.

பல புதிய இராணுவ முகாம்கள், அதில் உள்ள இராணுவ வீரர்கள் குடும்பமாக வாழ வசதியான புதிய வீடுகள், அவர்களுக்கு சிறப்பான சிங்களப் பாடசாலைகள், புத்த கோயில்கள், மருத்துவ நிலையங்கள், போக்குவரத்து, மின்சாரம், தொலைத் தொடர்பு, களியாட்டம் என்று தமிழர்களின் பாரம்பரிய நிலங்களில் திட்டமிட்ட குடியேற்றம் நடந்தேறப் போகின்றது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாளுக்கு முன்னர்; முன்பு குடியேற்றி, மணலாற்றில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்கள், மீளக் குடியேற்ற 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் இடம்பெறவுள்ளன. கண்ணிவெடி அகற்றல், மின்சார, குடிநீர் வசதி என பலவகையான விடயங்களில் துரித கதியில் செயல்பாடுகள் நிகழவுள்ளன.

தமது சொந்த நிலங்களில் இருந்து இடம்பெயர்ந்த வன்னி மக்களை உடனடியாக மீளக் குடியேற்ற மறுத்துவரும் சிறீலங்கா அரசு, மணலாற்றில் சிங்கள மக்களை அவசரமாகக் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இலங்கை இனவாத அரசின் கால்களைப் பிடித்துக் கொண்டு இருப்பவர்களும், நாங்கள் கால்களை அல்ல கைகளைத்தான் இறுகப்பிடித்து இருக்கின்றோம் என்று சொல்பவர்களும், “புலிகள் தான் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு வருவதற்கு பெரும் தடை” என்று நம்பிய-வர்களும், சொன்னவர்களும் இனி தமிழ் மக்களுக்கு என்ன சொல்லப் போகின்றார்கள்?

தற்போது நகரசபை தேர்தலில் வெகு ஆக்கிரோஷமாக நின்று “நாம் ஆட்சிக்கு வந்தால் நுளம்புத் தொல்லையை ஒழிப்போம்”, “தெருநாய்களை பிடிப்போம்”, “மீன் பிடியைத் தளர்த்துவோம்” என்று குரல் எழுப்புவோர்கள், தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக சுதந்திரமாக நின்று அரசியல் குரலை எழுப்புவார்களா? அந்த நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இருக்கின்றதா?

நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்?

'''

**தமிழில் பேசுவோம்!**
**தமிழில் பெயர் வைப்போம்!!**
**தமிழில் வழிபடுவோம்!!!**



இடியப்ப மெசீன்
சகலவிதமான வீட்டு வர்த்தக இடியப்ப மெசின்கள்
மீன் தேங்காய் துருவி
உலகம் முழுவதும் இவற்றை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
(Pay Mohan in Canada, He will deliver Worldwide)
Canada- S. Mohan P.Eng
416-433-6006 / 905-273-6836
email: mohan@stringhoppermachine.com
www.stringhoppermachine.com
www.worldtamil.com


# இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

ஒகஸ்ட் மாதக் குறிப்புகள்

- பிள்ளைகளுக்கு பாடசாலையில் பயன்படுத்தத் தேவையான உபகரணங்கள், உடைகள் போன்றவற்றை அடுத்த மாதம் பாடசாலை தொடங்குவதால் பிள்ளைகளுக்கு தேவையானவற்றை இப்பொழுதே வாங்குவது நல்லது.
- இம் மாதம் 3ஆம் திகதி Civic Holiday விடுமுறை.
- உங்கள் விடுமுறைகால நினைவுகளை நினைவுப் புத்தகங்களில் பேணுங்கள்.
- பூட்டுக்களையும் (Locks) பிணைச்சல்களையும் (Hinges) உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி எண்ணெயிடுங்கள்
- நீரை வெப்பமேற்றும் கருவியில் (Boiler), கசிவுகள் காணப்படுகின்றனவா? வேலை செய்கின்றதா? என சரிபாருங்கள்.
- சலவை இயந்திரத்தின் குழாய்களில் வெடிப்புகள், உடைவுகள் காணப்-படுகின்றனவா எனவும் பொருத்துக்கள் துருப்பிடித்து கசிவுகள் ஏற்பட்டுள்ளதா எனவும் சரி பாருங்கள்
- வருடத்திற்கொரு தடவை பூக்கக் கூடிய தாவரங்கட்கு (Annuals) 2 தொடக்கம் 3 கிழமைகட்கு ஒரு தடவை நீரில் கரையக் கூடிய வளமாக்கிகளை இடுங்கள்
- நீண்ட காலத்திற்கு வாழக்கூடிய (Perennials) தாவரங்களின் அடிப்பகுதியில் கடினமான, மணியுருவிலான (Granular) வளமாக்கிகளை இடுங்கள்.
- தாவரங்களில் பூக்கள் உதிர்ந்தவுடன் அவற்றின் காம்புகளை முறிப்பதன் மூலம் (Deadhead) அவற்றின் தோற்றத்தை பொலிவாகச் செய்வதுடன் மேலும் அதிகமாகப் பூக்கவும் வழி ஏற்படும்.
- தோட்டத் தரையின் ஈரலிப்பைப் பேணவும் களைகளை அகற்றுமுகமாகவும் சேதனப் பொருட்களை (mulch) தோட்டத்திற்கு இடுங்கள்.
- முன்னைய இதழ்களில் கூறியபடி தாவரங்களுக்கு காலையிலேயே நீர் விடுவதன் மூலம் இந் நீர் காய்வதற்கு போதிய அவகாசம் கொடுங்கள்.
- உங்கள் தோட்டத்தில் களைகள் காணப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து உடனடியாக களைகளை நீக்குங்கள்.
- பீலிகள், கூரை போன்றவற்றில் கசிவுகள் காணப்படுகின்றதா என அவதா-னித்து தேவையெனின் திருத்தம் செய்யுங்கள்.
- மேலதிகமாக வளர்ந்த புதர்களை வெட்டி விடுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா


Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)



தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com



பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.



**www.inayam.net**

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam
416-400-6406

digi

# தென்னாசியாவின் போர் மேகம் இன்னும் கலையவில்லை

- அ. கணபதிப்பிள்ளை -

தென்னாசியாவில் போர் மோகம் இன்னும் கலையவில்லை. எழுத்துப்பிழை போலத் தோன்றினாலும் போர்மோகம் எல்லாநாடுகளிலும் புரையோடிப்போயிருக்கிறது. போர் என்பது இனங்களுக்கிடையிலான ஒருமைப்பாடு சீர்குலைக்கப்படுகின்றமை நாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவின் முறிவு விடுதலை இயக்கங்களின் அதிவேக வளர்ச்சி சிறுசிறு ஆயதக்குழுக்களின் உருவாக்கம் அன்னியத்தலையீடும் அதன்மூலம் அரசியல் உறுதிப்பாட்டைக் குலைக்கும் கும்பல்கள் உருவாக்கப்படுதல் ஆகிய பல்வேறு வடிவமெடுத்திருக்கிறது.

தென்னாசியாவில் மேலைத்தேயங்களின் பழைய குடியேற்றவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு புதிய நாடுகள் தோற்றம் பெற்ற இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி பல சுதந்திர நாடுகளின் உதயத்துக்கு வழி வகுத்துக் கொடுத்தது. இது தேசிய உணர்வுக்குக் கிடைத்த வெற்றி என்று குறிப்பிடுவதைவிட சுதந்திரத்துக்கும் சுதந்திரத்தை அடைய மேற்கொள்ளப்பட்ட சுதந்திரப் போராட்டத்துக்கும் கிடைத்த வெற்றி என்றே குறிப்பிடலாம்.


சுதந்திர உணர்வு தூண்டி விடப்பட்ட பொழுது அதனைப் பெரும்பான்மையினர் - குறிப்பாக அடக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் - சுதந்திரம் அடைய வேண்டுமென்ற அவாவுக்கும் தன்னம்பிக்கையுடனான செயலாற்றும் திட்டங்களுக்கும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தனர்.

சுதந்திர வேட்கை என்பது அடக்குமுறைக்கு எதிரான போராட்டமாக வெளிக்கொண்டு வரப்பட்டபொழுது மக்கள் தங்களுக்குத் தேவையானதும் சாத்தியமானதுமான போராட்ட வடிவங்களைக் கையில் எடுத்துக் கொண்டனர். சுபாஷ் சந்திரபோசின் ஆயுதப் போர் வடிவமும் காந்தியின் அகிம்சைப் போர் வடிவமும் ஒரே இலக்கை அடையத்தெரிந்தெடுத்த பாதைகளாகவேயிருந்தன.

முதலாம் இரண்டாம் உலகயுத்தங்கள் அடிப்படை ஆயுதங்களிலிருந்து அணுஆயுதம் வரையிலான போர் உபாயங்களை தங்களுக்கு இனமாகக்கிக்கொண்டு பயமுறுத்தலும் மனித அழிவும் என்ற இருவகைப்பட்ட போர் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

போர் என்பது புதிய கண்டுபிடிப்பகளின் குழந்தையாக வடிவெடுத்து அதன் முழு வளர்ச்சியினையும் கண்டிருந்தது. போரை நடாத்திச் செல்கின்ற விதம் இரண்டு அணிகளுக்கிடையிலான ஆயுதப்போராகவும், அதற்கு அதரவு வழங்கும் இரு அணிகளும் துணைபோவனவாகவும் இருந்தன.

இந்நிலையில் சுதந்திரவேட்கை கொண்ட நாடுகள் தங்களின் நலனுக்காக ஆதரவு வழங்கும் நாடுகளின் வரிசையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு தமது போராட்டத்தை வலுப்படுத்திக் கொண்டிருந்தன. உலகப் போரின் முடிவில் சுதந்திரம் என்பது நாகரிகம் என்ற போர்வைக்குள் கொண்டுவரப்பட்டது. சர்வதேச சங்கமும், ஐ.நா சபையும் தோற்றுவிக்கப்படவும் சுதந்திரம் பற்றிய கருத்து அடக்கப்படுபவர்களிடத்திலும் அடக்கு பவரிடத்திலும் பாரியமாற்றத்தைக் கொண்டு வந்திருந்தது. இதன் பின்னணியில் தான் காந்தியின் அகிம்சைப்போராட்டம் வெற்றி பெற்றிருந்தது.



காந்தி கூறியதைக் கருத்திலெடுத்து
இவர்களைப்போன்று செயல்படுகின்றது இவ் உலகம்

> மக்களின் உயிரைச் துச்சமாக மதிக்கும் மனப்பான்மை அரசியல் இயந்திரத்துக்கு எப்பொழுதே ஏற்பட்டவிட்டது. ஈழப்போரில் இருபதாயிரம்பேரின் உயிரைக் கடைசிநாளில் குடித்துவிட்டதாகச் சொல்லப்பட்ட ஆதாரங்களுக்கு இன்று எதிர் ஆதாரங்கள் உருவாக்கம்பெற்றுவிட்டன.

காந்தியின் அகிம்சைப் போராட்டம் பிரித்தானியர்களின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. தனியாக அரசியல் இயந்திரத்தில் ஏற்பட்ட மனமாற்றமாக இது கொள்ளப்பட வில்லை. பிரித்தானிய மக்கள் எல்லோரும் அவர்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் ஊடகங்களும் புத்தகங்களும் கொடுத்த மன மாற்றப்பிரதிபலிப்பு என்று இதனைக் கூறலாம். அத்தகைதொரு பிரதிபலிப்பு இருபதாம் நூற்றாண்டிலும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் அவ்வாறு சுதந்திரமடைந்த தென்னாசிய நாடுகளில் காணப்பட்டதா என்ற கேள்வி பல்வேறு சிறுபான்மையினரின் போராட்டங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டமைக்கு விடை கூறுவதாக அமைந்திருக்கின்றது. காந்தியப் போராட்டம் இலங்கையின் சிறுபான்மையினரின் சுதந்திர வேட்கைக்கு உபாயமாக அமையவில்லை. அரச இயந்திரத்தின் அடக்கு முறை பெரும்பான்மைச் சிங்கள மக்களை வாய்மூடி மௌனிகளாக்கிவிட்டிருந்தது. அவர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டிய ஊடகங்களும் புத்தகங்களும் அரச உதவி நிறுவனங்களின் கருத்துக்களாகவே வெளிவந்தன. இந்நிலையில் தான் சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் மதிப்பளிக்க வேண்டிய பெரும்பான்மை மக்கள் அரச இயந்திர உபகரணங்களாக மாற்றப் பட்டனர். காந்தியப் போராட்ட வடிவம் இலங்கையில் செயலிழந்து போயிற்று.

சுதந்திர கால இந்தியாவின் (பிரித்தானிய இந்தியாவின்) பாகிஸ்தான் இந்திய இனக் கலவரம் ஒன்றுபட்ட இந்தியாவின் பிரிவினையை உறுதிப்படுத்தியது மட்டுமன்றி இனியும் இரண்டு நாடுகளும் நேசநாடுகளாக இருக்கும் நிலைக்கு வரமுடியுமா என்ற ஐயப்பாட்டையும் தோற்றுவித்திருந்தது. இனக் கலவரங்கள் இருசாராரினாலும் தூண்டிவிடப்பட்டன. அதற்குப் பலியானவர்கள் அப்பாவிப் பொதுமக்கள் தான். அதனை அரசியலாக்கிய அரச குடும்பங்கள் அரியணையில் ஏறி அந்த அப்பாவிகளை மேலும் மேலும் சண்டையிடத் தூண்டிக்கொண்டிருந்தன.

இந்தியாவிலும் இலங்கையிலும் இதுவரை ஏற்பட்ட இனக்கலவரங்கள் சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டவையல்ல. இனங்களுக்கிடையிலான நல்லுறவுச் சிக்கலினால் ஏற்பட்ட பிணக்குகளின் அடிப்படையில் பூதாகாரப்படுத்தப்பட்டவைகள் அல்ல அவை. அரச இயந்திரங்களின் அடக்குமுறையும் அட்சியைக் கைப்பற்றும் உபாயத்தினையும் பின்னணியாகக் கொண்டு அதிகார வர்க்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டவை.

பம்பாயிலும், குஜராத்திலும், கொழும்பில் கறுப்பு ஜூலை என்று அடையாளப்படுத்தப்பட்ட இனக்கலவரங்களின் மூலம் ஆயிரக் கணக்கான உயிர்கள் எரிக்கப்பட்டும் அங்க வீனப்படுத்தப்பட்டும் பிணங்களாகக் குவிக்கப்பட்டும் மீண்டும் ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இரண்டு மத வழி மொழிவழி இனங்களுக்கும் ஊட்டப்பட்ட வெறுப்பு மனப்பான்மை என்ற மாறாத காயம் ஆண்டாண்டுகாலமாக தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துகொண்டு வருகிறது.

நாம் ஏன் இதைச் செய்கிறோம் எங்களுக்கு எத்தகைய பொறுப்புணர்வு உள்ளது. நாம் எதனைச் செய்யவேண்டும் என்று மக்கள்


28ம் பக்கம் பார்க்க...

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 2

# ஆழத்து முத்துக்கள்

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

## கலாவேந்தர் திரு. சாமுவேல் பெஞ்சமின்

பெஞ்சமின் ஐயா. நாடகத்துறை சார்ந்தோ-ரிற்கு இவரைத் தெரியாதிருக்க முடியாது. கூத்து, இசைநாடகம், இலக்கிய நாடகம், நவீன நாடகம், நாட்டிய நாடகங்கள் என பெஞ்சமின் ஐயாவின் தொடர்புகள் விரிவு-பட்டன.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்திலே வாழ்ந்த கபிரியேல் சாமுவேல் என்பவர் இவரது தந்தை. கைவினைத்திறனோடு கூத்துக்கலையிலும் சாமுவேலுக்கு ஈடுபாடி-ருந்தது இவர் கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்-கள் பல ஆடியிருக்கிறார் பெஞ்சமின் 08.08. 1919இல் பிறந்தவர்.

பெஞ்சமினின் இளமைநாட்டம் சித்திரத்திலும் ஒப்பனையிலும் காணப்பட்டமையால் இவரது உறவினரான பிலிப்பும் டேவிற்றும் இவரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். தாம் ஒப்பனை செய்யச் செல்லுமிடங்களுக் கெல்லாம் இவரையும் உதவிக்கு அழைத்துச்சென்றனர். நாளடைவில் தானே தனித்து நின்று ஒப்பனை செய்யும் திறனைப் பெற்றுக் கொண்ட பெஞ்சமின் முதன் முதலாக 1939இல் நெடுந்தீவில் "கண்டி அரசன்" நாடகத்திற்கு ஒப்பனை செய்து புகழீட்டினார். நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு அண்ணாவி யார் அக்கூத்தைப் பழக்கியவர்.


ஈழத்து நாடக வரலாற்றில் சிறந்த நடிகர்க-ளெனப் பேசப்படும் இணுவில் நாகலிங்கம் (பூதத்தம்பிக்கு புகழ் பெற்றவர்) நல்லூர் சுந்தரம் (மயானகாண்டத்தில் அரிச்சந்திரனா-கப்புகழ் பெற்றவர்) நெல்லியடி சுபத்திரை-யாழ்வார் (பெண் வேடத்திற் புகழ் பெற்றவர்)- என நீண்ட பெயர்ப் பட்டியலைக்குறிப்பிட்டு இவர்கள் அனைவருக்கும் தான் ஒப்பனை செய்தமையை நினைத்துப் பெருமைப் படுகிறார்

காணிவேல் கொண்டாட்டங்கள், ஆலயத் திருவிழாக்களில் மேடையேற்றங்கள் என்பன மேலோங்கி இருந்த காலத்தில் பெஞ்சமின் ஐயாவின் மண்டப அமைப்புக்கள், மேடை விதானிப்புக்கள் புகழ்பெற்றவையாக இருந் திருக்கின்றன. 75அடி உயரப்பந்தல், 40அடி நீள அகலத்தில் மேடை, அதற்கேற்ற காட்-சித்தட்டிகள் எல்லாம் சேர்த்து 50ம் ஆண்ட-ளவில் நடைபெற்ற 'காணிவேல்' நிகழ்வு-களில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில், கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் எனப் பல இடங்களில் மண்டபமும் மேடையும் அமைத்தார்.

தமிழ் நாட்டில் இருந்து இசை நாடகங்கள் கொண்டுவந்து இங்கு மேடையேறிய காலங்களில் அவர்களின் நுட்பங்கள் இவரது தொழிலுக்கு வலுச் சேர்த்திருக்கிறன. பொருட்-களை விரிவுபடுத்த அவற்றைப் பார்த்த அனுபவம் கைகொடுத்திருக்கிறது. சாதார ணமாக திரைகளில் வீதிக்காட்சி, மாடிக் காட்சி, காடு என்பன போதுமானவையாக அக்காலங்களில் பாவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டு நாடகங்களின் வருகையின் பின்னர் அவற்றில் சித்திர நுணுக்கங்களும், நுட்பங்களும் ஏற்பட்டிருந்தன. வெட்டுக்காட்டுத் திரை உத்தி இந்த தமிழ்நாட்டு வருகை-யின் பின்பே ஏற்பட்டதாகப் பெஞ்சமின் ஐயா தெரிவிக்கின்றார். வீட்டுக்காட்சி, நந்தவனம், அரண்மனை எனக் காட்சித் திரைகள் தேவைக் கேற்ப விரிவுபடுத்தும் நிலைமை படிப்படியா-கத் தோன்றியுள்ளது.

பெரும்பாலன பாடசாலை நாடகங்களில் ஒப்பனைக் கலை செய்வதற்கு இவரையே நம்பியிருப்பார்கள். இவரும் பணத்தின்மீது மட்டும் கண்ணாக இருக்காது, தனது திருப்-திக்காகவும் அழைப்பவரை மதிப்பதற்கா-கவும் சளைக்காது சென்று பணியைச் செய்தார். யாழ்ப்பாணம் மட்டும் அல்லாது வன்னிப் பிரதேசம், குறிப்பாக மன்னார் போன்ற இடங்களிற்கு எல்லாம் சென்று தன்பணியைச் செய்திருக்கிறார். "நான் கஷ் டம் போனாலும் அதிலை ஒரு மனத்திருப்தி கொள்ளுவன்" எனத் தனது மேற்குறித்த நிலையை எடுத்துக் கூறுகிறார்.

உண்மையில் தொழில்சார் கலைஞராக வாழ்ந்து வருகின்ற பெஞ்சமின் ஐயாவின் மனத்திருப்தியும் அவர் தனது தொழிலில் பெற்ற அனுபவங்களும் ஒன்றை ஒன்று விஞ்சியே நிற்கின்றன. இவரது காலத்து நாடகங்கள், நாடகக்காரர்கள் அவற்றின் வரலாறுகள் என்பவை முக்கியமானவை. குறிப்பாக ஈழத்து நாடகப் போக்குகளின் பெரும்பகுதியை தன் அனுபவங்களில் கண்ட "ஒப்பனைக் கலைஞர்" தான் பெஞ்சமின் ஐயா. இவரது இந்த அனுபவங்கள் இன்னும் விரிவாகப் பகிரப்பட வேண்டும். கூத்தரங்கம் இவரை, இவரது அனுபவப் பகிர்வுக்காக இனம்காட்டச் செய்கின்றது.



இன்றும் இனியும் தொழில்சார் கலைஞர் களாக இருப்போருக்கு இவரின் வாழ்வும் அனுபவமும் உளமும் சொல்லும் அர்த்தங்கள் எல்லையற்றவை.

உசாத்துணை: கூத்தரங்கம் - இணையம்
ஈழத்தில் ஒப்பனைக்கலை - நூல்

■ ■ ■

## நடிகமணி வி.வி. வைரமுத்து

வி. வி. வைரமுத்து (பெப்ரவரி 11, 1924 - ஜூலை 8, 1989) இலங்கையின் மிகச்சிறந்த இசை நாடகக் கலைஞராகக் கருதப்படுவர். இவர் அரிச்சந்திரனாகத் தோன்றி நடித்த 'மயான காண்டம்' எண்ணற்ற தடவைகள் மேடையேற்றப்பட்ட இசை நாடகமாகும். தனது இனிய குரல் வளத்தால் பாடி, உருக்கமாக வசனங்கள் பேசி நடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

சிறந்த நாடக நெறியாளரான இவர் கலைப் பணி மீது கொண்ட பற்றால் தான் பணி புரிந்து வந்த ஆசிரியத் தொழிலைத் துறந்து 'வசந்தகான சபா' என்னும் நாடக மன்றத்தை ஆரம்பித்து சரித்திர புராண இதிகாச நாடகங் களை நடித்து மக்கள் மனங்களில் பதிய வைத்திருந்தார்.

இலங்கை வானொலியில் பல இசை நாடகங்-களை வழங்கியவர். மிருதங்கம், ஆர்மோ-னியம், வயலின், ஜலதங்கரம் போன்ற இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவ-ராய் இருந்ததோடு இலங்கை வானொலியில் கர்நாடக இசைக் கச்சேரிகளும் செய்திருக் கின்றார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னம் தனது பவளவிழாவின் போது இவர் பாடி நடித்த 'நந்தனார்' இசை நாடகத்தை ஒலிப்பதிவு செய்து இறுவட்டாக வெளியிட்-டார்கள்.

நடிகமணி வைரமுத்து பாடத்தொடங்க அழுத பிள்ளை வாய்மூடும். அப்படி அந்த குரலில் ஒரு ராஜ கம்பீரம் இருந்தது. தானே ஹார்மோனியத்தை இசைத்தபடி பாடத்-தொடங்க, சபையில் ஒரு அமைதி நிலவும்.




இவரது நல்ல நண்பர்களில் ஒருவர் அக்-காலத்தில் மணியகாரன் என்று அழைக்கப் பெற்ற எழுத்தாளர் சிவஞானசுந்தரம் (இலங்கையர்கோன்). இவர்தான் வைரமுத்து அவர்களின் நாடக மன்றத்திற்கு "வசந்த கானசபா" என்று பெயரிட்டவர். நடிகமணி வைரமுத்துவின் புகழ்பூத்த மயான காண்டம் நாடகத்தை கல்முனை உட்பட பல இடங்-களில் மேடையேற உதவியவர் இலங்கையர் கோன். வசந்தகான சபா நாடக தொடக்கத்-தில் "ஐயாவே..." என்ற ஒரு பாடல் வரும். அது இலங்கையர்கோனைக் கௌரவிப்பதற் கான பாடல்

கலைஞர் ஏ. ரகுநாதன் தயாரித்த நிர்மலா திரைப்படத்தில் இவரது 'மயானகாண்டம்' இசை நாடகத்தின் பகுதியும் இணைக்கப்-பட்டது. அறிஞர் காரை சுந்தரம்பிள்ளை இவர் பற்றிய ஆய்வு நூலாக 'நடிகமணி வி.வி. வைரமுத்து வாழ்வும் அரங்கும்' என்ற நூலை எழுதியுள்ளார்.

கலையரசு சொர்ணலிங்கம் இவருக்கு 'நடிக மணி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌர வித்திருந்தார். பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய 'நாடக தீபம்' என்னும் நூலில் தமிழ் நாடகத்தின் 'மரணிக்காத குரல்' என்று வைர முத்து அவர்களுக்கு புகழாரம் சூட்டியிருக் கின்றார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'கலைக் கோமான்' என்னும் விருதையும் பேராசிரியர் க. கைலாசபதி 'நவரச திலகம்' என்னும் விருதையும், வழங்கி கௌரவப் படுத்தியிருக்கின்றார்கள். யாழ்ப்பாணப் பல்-கலைக்கழகம் 2004 ஆம் ஆண்டில் இவருக்கு 'கலாநிதி' பட்டத்தை வழங்கி கௌரவித் திருந்தது.

நடிகமணி வைரமுத்துவின் இசை நாடகங் களில் பக்த நந்தனாரும் ஒன்று. இந்த நாடகத்தை வானொலிக்காக வடிவமைத்தவர், வைரமுத்துவின் இன்னுமொரு நல்ல நண்ப ரான கே.எம்.வாசகர். இவர் இலங்கை வானொலியில் நாடகத்தயாரிப்பாளராக இருந்-தவர். வைரமுத்துவுடன் வி.மார்க்கண்டு, சிதம்பரம், செல்வராஜா, ஐயாத்துரை போன்ற நல்ல நடிகர்கள் இணைந்து நடித்துவந்-தார்கள்.

'சோக்கல்லோ'
சண்முகநாதன்



நடிகமணி வைரமுத்து ஏழாலை மயிலங் காட்டைச் சேர்ந்தவரா, மல்லாகம் கோட்-டைக்காட்டைச் சேர்ந்தவரா அல்லது காங்கேசன்துறையைச் சேர்ந்தவரா என்ற வாதம் நடந்துகொண்டிருக்கிறது. அவர் மூன்று இடத்திலும் வாழ்ந்திருக்கிறார். உலகத்துக்-குச் சொந்தமான ஒருவரை நாங்கள் ஏன் குறுகிய எல்லையுள் அடைக்க வேண்டும். நடிகமணி வைரமுத்து அவர்கள் பக்த நந்-தனார் இசைநாடக ஒலிப்பதிவுக்கு கொழும்பு வந்தபோது அங்கு அமரரானார்.

உசாத்துணை:விக்கிபீடியா- கட்டற்றகலைக்களஞ்சியம்)

sanmuganathan@thaiveedu.com

18ம் பக்கம் பார்க்க...

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





2 Acres Of Property Including C-Store With 6/49, Rented Two Bay Garage, 900 Sqft Office Space, Chip Truck, Newer Pumps & Two Apartments



Seven Freehold Town Homes. Four With Four Bedrooms And Three With Three Bedrooms. All Have Their Own Basement With Two Washrooms. Now Fully Rented



21.07 Acres Designated On Official Plan As Future Urban Residential. Potential For Commercial Development. Included 3 Bedroom Custom Built Bungalow With Legal Basement Apt



2 Acre Commercial Vacant Lands, Wal-Mart And Box Stores.Abundance Of Residential Future In Imediate Area



Industrial Land With 19,200 Sq.Ft. Building And Rail.Flexible Zoning M1A & M2 Permits Wide Variety Of Uses.5 Minutes To Hwy 401



53 Acre Parcel Of Land, **in stouffiville**

# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | CALL |
| 5 Yrs Fixed | CALL |
| Variable Closed | CALL |
| Variable Open | CALL |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Main Office**
4544 Sheppard Ave E
Suite #208
Scarborough, ON
M1S 1V2

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC

**Ram Krish**
RBC Mortgage Specialist
Direct **416-526-4996**
Email: ram.krish@rbc.com



# ஒன்ரேறியோ மாகாணத்தில் வீடுகளை வாடகைக்கு விடுதல்

## Renting in Ontario

**பகுதி 2**



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -


### வீட்டுரிமையாளர், வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுதல் எவ்வாறு நடை முறைப் படுத்தப்படுகிறது?

சென்ற மாத "தாய்வீடு" பத்திரிகையில் வெளிவந்த எனது ஆக்கத்தின் தொடர்ச்சியாக வருகிறது.

ஓர் வாடகை குடியிருப்பாளரை வெளியேற்ற எப்படியான சந்தர்பத்தில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை தெரியப்படுத்துவதே இதன் நோக்கம்.

### ஒரு குடியிருப்பாளரை வாடகை வதிவிடத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான செயற்பாடு என்றால் என்ன?

ஒரு குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்காக வீட்டு உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்குமான சபையிடம் (Landlord and Tenant Board) விண்ணப்பிப்பதற்கு முன்பு, வீட்டுரிமையாளர் முதலில் சம்பந்தப்பட்ட பிரச்சினையை விளக்கமாக குறிப்பிட்டு வாடகை ஒப்பந்தம் நிறுத்தப்படுவதற்கான அறிவித்தலை (Notice of Termination) குடியிருப்பா-




ளரிடம் வழங்க வேண்டும். சில வேளைகளில் இவ்வாறான அறிவித்தலை வழங்குவதற்கு முன்பு, அந்தப் பிரச்சினையை நீக்குவதற்கு குடியிருப்பாளர் முயற்சி எடுப்பதற்காக அவருக்கு குறிப்பிட்ட சில நாட்கள் அவகாசம் வழங்கிய பின்னரே (Landlord and Tenant Board) சபையிடம் விண்ணப்பிக்க முடியும். குடியிருப்பாளருக்கு எவ்வளவு நாட்கள் அவகாசம் வழங்கப்படுகிறது என்று வாடகை ஒப்பந்தம் (Lease Agreement) நிறுத்தப்படுவதற்கான அறிவித்தலில் தெளிவாக குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட கால அவகாசம் நாட்களுக்குள், குடியிருப்பாளர் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் அல்லது வதிவிடத்தில் இருந்து அவர் வெளியேறாவிடில், குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்காக வீட்டுரிமையாளர் (Landlord and Tenant Board) சபையிடம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். அதனைத் தொடர்ந்து பெரும்பாலும் ஓர் விசாரணை செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இந்த விசாரணையின் போது குடியிருப்பாளரும், வீட்டுரிமையாளரும் சபை உறுப்பினரின் முன்பு சமூகமளிக்க வேண்டும். இரு பகுதியினரதும் கருத்துக்களை கேட்டு அதன் அடிப்படையில் சபை உறுப்பினர் ஓர் முடிவு எடுப்பார்.

குடியிருப்பாளர் வெளியேற்றப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டால், அதற்கான உத்தரவுப் பத்திரத்தில் அவர் வெளியேற வேண்டிய காலம் எது என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த உத்தரவிற்கு ஏற்ப குடியிருப்பாளர் குறிப்பிட்ட தினத்திற்கு முன்பாக வெளியேறாவிடில், இது தொடர்பாக உத்தரவு நீதிமன்றத்திடம் கையளிக்கப்படும். அதனைத் தொடர்ந்து நீதிமன்றம் அனுப்புகின்ற பொலிஸ் அதிகாரி குடியிருப்பாளரை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பார்.

### விசாரணை எதுவுமின்றி ஒரு வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்ற முடியுமா?

ஆம். சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில், விசாரணை எதுவுமின்றி குடியிருப்பாளரை வெளியேற்ற முடியும்.

### பனிக்காலத்தின் போது ஓர் வாடகைக் குடியிருப்பாளரை வதிவிடத்தில் இருந்து வெளியேற்ற முடியுமா?

ஆம். இவ்வாறான காலத்தில் ஓர் வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றக் கூடாது என்று வதிவிட குடியிருப்பாளர் சட்டத்தில் (Residential Ternaries Act) என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

### வீட்டு உமையாளர், வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான காரணங்கள் எவை?

இதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு.

- பொதுவாக ஒரு வதிவிட உரிமையாளர் வாடகை ஒப்பந்தக்காலத்தின் முடிவில் மட்டுமே. குடியிருப்பாளரை வெளியேறும்படி கோர முடியும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குடியிருப்பாளர் எந்த வித தவறும் செய்திருக்க மாட்டார். அந்த வதிவிடத்தை அதன் உரிமையாளர் தனது தேவைக்காக பயன்படுத்த விரும்பியமையே காரணமாக இவ்வாறு கோரப்படலாம்.
- வாடகை செலுத்த தவறுதல் அல்லது வதிவிடத்திற்கு சேதம் விளைவித்தமை போன்ற காரணங்களுக்காகவும் ஓர் வாடகை ஒப்பந்தத்தை இடையில் நிறுத்தி, குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

### வளர்ப்பு பிராணி (pet) வைத்திருப்பதன் காரணமாக ஓர் வீட்டுரிமையாளர் ஓர் வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்ற முடியுமா?

வளர்ப்பு பிராணியை வைத்திருப்பதன் காரணமாக, பின்வரும் சூழ்நிலைகளில் மட்டுமே ஒரு குடியிருப்பாளரை வெளியேற்ற முடியும்.

- அந்த வளர்ப்பு பிராணி அதிகளவு சத்தம் ஏற்படுத்துகிறது, வதிவிடத்தை சேதப்படுத்துகிறது அல்லது ஒவ்வாமை விளைவுகளை (Allergic reaction) ஏற்படுத்துகிறது. ஆகிய காரணங்கள்.
- அந்த வளர்ப்பு பிராணி ஆபத்தானது என கருதப்படுதல்.
- வளர்ப்புப் பிராணியை வைத்திருக்கக் கூடாது என்று வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த வளர்ப்பு பிராணி பிரச்சினை ஏற்படுத்துகிறது. அல்லது ஆபத்தானது என வீட்டு உரிமையாளருக்கும் குடியிருபாளருக்குமான (Landlord and Tenant Board) சபை முடிவு செய்தால் மட்டுமே ஒரு குடியிருப்பாளரை வெளியேற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

### வதிவிட அறையில் மேலதிகமாக நண்பர் ஒருவரை வைத்திருப்பதன் காரணமாக ஒரு குடியிருப்பாளரை வெளியேற்ற முடியுமா?

இல்லை. ஆனால், அந்த நண்பர் வதிவிட உரிமையாளருக்கு அல்லது எனைய குடியிருப்பாளர்களுக்கு பிரச்சினை ஏற்படுத்தினால், குடியிருப்பாளரை வெளியேற்ற முடியும். உதாரணமாக அந்த குடியிருப்பாளரின் நண்பர் அதிகளவு சத்தம் ஏற்படுத்தினால் அல்லது வதிவிடத்திற்கு சேதம் ஏற்படுத்தினால் அல்லது குறிப்பிட்ட ஒரு வதிவிட அலகில் ஏராளமான எண்ணிக்கையான அறை நண்பர்கள் வசித்தால் (Over crowding) வீட்டுரிமையாளர் வாடகை ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் அறிவித்தலை வழங்கி குடியிருப்பாளரை அல்லது அந்த வதிவிடத்தில் உள்ள ஏனையவர்களை வெளியேற்றுவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும்.

> "வீட்டு உரிமையாளருக்கும் குடியிருபாளருக்குமான சபையிடமிருந்து (Landlord and Tenant Board) வெளியேற்ற அறிவித்தல் வரும் வரை குடியிருப்பாளர், தனது வதிவிடத்தில் தொடர்ந்து வசிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது."

### வீட்டுரிமையாளர் தனது சொந்த தேவைக்காக வாடகை தொடர் வீடுகளின் ஒரு அலகில் வசிக்கும் வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்ற முடியுமா?

ஆம். பின்வரும் காரணங்களுக்காக வீட்டு உரிமையாளர் ஒரு குடியிருப்பளரை வெளியேற்ற முடியும். அந்த வதிவிடம்.

- வீட்டுரிமையாளரின் சொந்தப் பாவனைக்கு தேவைப்படுதல்.

21ம் பக்கம் பார்க்க...


ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
(We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# All your Real Estate needs

ஞானி நரசிங்கம்
Sales Representative
**416-937-8090**



ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
**416-629-9797**

## “வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க”

**Office: 416-321-6969**

1ST CHANCE TO WIN ..... **BMW CAR**

2ND CHANCE TO WIN ..... **TRIP TO CUBA**

3RD CHANCE TO WIN ..... **PLASMA TV**

### Weston/Ruterford



**$619,000**

Detached brick 2 Storey
4 bedrooms/ 2full washrooms
one years old, Fully Hardwood
Approx 3100 square feet
Library Room in Main Floor

### Brampton



Tobram/Sandlewood

**$449,000**

Detached brick 2 Storey
4 bedrooms/ 3 full washrooms
Parquet floor, Hardwood fully
Approx 3000 square feet
Den in Main Floor, open Concept

### Brimley/ Denison



**$359,900**

Detached brick 2 Storey
3 bedrooms with 2 full washrooms
Finished Basement/Approx 1600 Sq ft
many upgrades to list
50 k on renovation, Hardwood

### Markham/Lawrence



**$289,900**

Detached brick bangalow
3 bedrooms with 2full washrooms
Finished Bsmt with Sep entrance
2BR in Basement, close to TTC

### Brimley / Eglinton




**$499,000**

Golden opportunity to own attractive
updated Medical /Prof Building
Main floor has 5 fully equipped Exam
rooms, 1 W/R and reception area.
2nd floor has 7 examination rooms
2 washrooms and office

### 9th Line/ 14th Ave



**$549,800**

Detached brick 2 Storey
4 bedrooms with 3 full washrooms
Library room, hard wood floor
9ft ceiling,less than 5 yeaes
Approx 3100 Sq feet, separate Ent

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3**

This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# காச நோய்

# Tuberculosis - TB

## இதயம் மலர்கிறது - 14



கந்தையா
செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -

கசம், காசம் என்று அழைக்கப்படும் இந்நோய் ஓர் தொற்று நோயாகும். பொதுவாகச் சுவாசப்பையைத் தாக்கும் இந்நோய் உடலின் ஏனைய பகுதிகளையும் தாக்கலாம். நகம், மயிர் ஆகிய பகுதிகள் தவிர உடலின் அனைத்துப் பகுதிகளும் தாக்கப்படலாம் என்று கூறினால் மிகையாகாது.

காசநோய் கிருமிகளில் மனிதனைத் தாக்கக் கூடிய பிரதான இனங்கள் Mycobacterium Tuberculosis, Mycobacterium Bovis, Mycobacterium Africanum என்பனவாகும். Mycobacterium Microt என்பது எலி போன்ற பிராணிகளைத் தாக்கக்கூடியது.

Mycobacteria கிருமி வகைகளில் வேறு பல வகைகளும் உண்டு. அவற்றில் சில மண்ணில் வாழ்கின்றன. மேலும் சில வகைகள் தீங்கற்றவையாகச் சூழலில் வாழ்ந்தாலும் மனிதனின் நோயெதிர்ப்புச் சக்தி மிகவும் பாரியதாகப் பாதிக்கப்படும்பொழுது, அக்கிருமிகள் சந்தர்ப்பவாதக் கிருமிகள் போல் இயங்கி மனிதனைத் தொற்றிக் கொள்கின்றன. பொதுவாகக் கூறப்போனால் HIV கிருமியின் தாக்கத்திற்குப் பல நாட்களாக முகங்கொடுத்த ஒருவரின் உடல் நிலை ஒருகாலகட்டத்தில் நோயெதிர்ப்பு சக்தியின் பெரும் பகுதியை இழந்து விடும் அச்சமயத்தில் உடலினால் மேற்கொண்டு HIV வைரசுக் கிருமியுடன் போராட முடியாத கட்டம் வரும் பொழுது இக்கிருமிகள் உடலைத் தாக்கும். இவ்வாறாகப் பல கிருமிகள் உடலைத் தாக்கலாம். அப்பொழுது HIV கிருமித் தொற்றுடையவர் AIDS நோய்க்கு ஆளாகிறார்.

### எப்படித் தொற்றிக் கொள்கிறது

காசநோய் உள்ளவர் தும்மும் பொழுது வரும் சளிகள் மூலம் அவரைச் சுற்றி நிற்பவர்களுக்குக் கிருமியைப் பரப்பலாம். உட்கொள்ளுதல் மூலமோ அல்லது தற்செயலாகத் தோலில் ஏறிக்கொள்ளும் ஊசி மூலமோ பரவுவது மிகவும் அரிது. மருத்துவத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளில் நாம் உட்கொள்ளும் பால் கிருமிநீக்கப்பட்டுள்ளதால் பயப்படத் தேவையில்லை. இங்கு காசநோய் (M. Bovis) உள்ள மாடுகளை இனங்கண்டு அவற்றை அழித்து விடுவார்கள்.

காசநோய்க் கிருமிகள் உள்ள மாடுகளில் இருந்து பெறப்படும் பாலில் காசநோய் கிருமிகள் (M. Bovis) இருக்கலாம். பாலை நன்கு கிருமிநீக்காது உட்கொள்ளும் பொழுது அக் கிருமிகள் எமது தொண்டையிலும், சிறுகுடலிலும் காசநோயை ஏற்படுத்தலாம்.

இப்படியாக இளவயதில் தொற்று ஏற்பட்டு மருந்து செய்யாது விட்டவர்களது உடலில் அவர்களின் நோயெதிர்ப்புச் சக்திகாரணமாக அந்நோய் கட்டுப்பாட்டில் இருந்திருக்கலாம். அவர்கள் வயோதிபத்தை அடையும் பொழுது உடற்பலவீனம் ஏற்படும் பட்சத்தில் அடங்கியிருந்த இந்நோய் மீண்டும் ஏற்படலாம். ஆனால் இப்படி ஏற்படுவது மிகவும் அரிது.

இருமும் பொழுதும், மூக்குச் சிந்தும் பொழுது, பாடும் பொழுதும், சில சமயங்களில் வாயால் வாசிக்கும் இசைக்கருவிகளை இயக்கும் பொழுதும் தொற்று உடையவரின் எச்சிற்துமிகள் மற்றவரைச் சென்று அடையலாம்.

கசக் கிருமிகளின் நீளம் 1 தொட்டு 4 மைக்கிறோ மீற்றராயும் அதன் அகலம் 0.3 தொட்டு 0.6 மைக்கிறோ மீற்றராகவும் இருப்பதால் அவற்றில் 4x0.6 கிருமி பாரங் கூடியதாகவும் 1x0.3 கிருமி பாரங் குறைந்ததாகவும் இருக்கும். தொற்றுடைய ஒருவர் தும்மும் பொழுது வெளிவரும் கிருமிகள் அருகில் உள்ள ஒருவரின் மூச்சுக்குழாயூடாகச் சென்று பெருவாதனாளியில் தங்கி மயிரிழைகளால் மீண்டும் தொண்டையை நோக்கி நகர்த்திச் செல்லப்பட்டு இறுதியில் அவை விழுங்கப்படுகின்றன. மிகவும் சிறிய அளவுடைய பாரங்குறைந்த கிருமிகள் பெருவாதனாளி, சிறுவாதனாளிகளின் நடுப்பகுதிகளினூடாக உட்சுவாசத்தின் பொழுது காற்றுடன் எடுத்துச் செல்லப்பட்டு அவை சுவாசப்பையில் தங்கி நோயை ஏற்படுத்துகின்றன.

> நீரிழிவுநோய், நிறைக்குறைவு, தலை கழுத்துப் பகுதியில் புற்றுநோய், *HIV, AIDS,* உடலுறுப்பு மாற்றுச் சிகிச்சை, சிறுநீரக நோய் உடையவர்கள் கசநோய்பற்றி மிகவும் விழிப்பாகவும் கவனமாகவும் இருப்பது அவசியம். இவர்கள் இலகுவில் இந்நோய் கிருமிகளால் தாக்கப்படக் கூடியவர்கள்.

சுவாசப்பையில் தங்கி வளரும் கிருமிகளால் சுவாசப்பையில் பலவித தாக்கங்கள் ஏற்பட்டு அவற்றில் வீக்கங்கள், உறுத்தல்கள் என்பன ஏற்படலாம். சுவாசப்பையானது உறுத்தல்களுக்கு உள்ளாகும் பொழுது இருமல் ஏற்படுகின்றது.

### குணங்குறிகள் என்ன?

சுவாசப்பைக் காசநோயில் இருமல், வாதநாளி அழற்சி, நிமோனியா, சுவாசப்பைப் போர்வை அழற்சி போன்ற அறிகுறிகளின் போது தொடர்ச்சியான இருமல், மூச்சு விடுவதற்குச் சிரமம், நெஞ்சில் நோவு என்பன காணப்படலாம். இரவில் காய்ச்சல், அதிக வியர்வை என்பன காணப்படும். கசக் கிருமிகளை எதிர்த்து உடம்பின் நோயெதிர்ப்பு சக்தி தொடர்ச்சியாகப் போராடுவதால் உடலின் சக்தி அல்லது தென்பு குறைவாகக் காணப்படும். உடல் மெலிந்து, நிறைகுறையும், மருந்து உட்கொள்ளாத பொழுது சுவாசப்பைக் காசநோய் மற்றவர்களுக்கு இலகுவாகப் பரவும் என்பதனால் வைத்திய ஆலோசனைப்படி நோயைச் சரிவரக் கண்டுபிடித்து மருந்து உட்கொள்ளுதல் வேண்டும்.

சுவாசப்பை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வரும் காசநோயும் அந்தந்த இடத்திற்கு ஏற்ப குணங்குறிகளை ஏற்படுத்தும். எனினும் இரவுக்காய்ச்சல், வியர்வை, உடல் நலிவு, பலமின்மை போன்றவை பொதுவான குணங் குறிகளாகும். அத்துடன் நிணநீர்க் கட்டிகளின் வீக்கம் உடலின் பல பாகங்களிலும் காணப் படலாம். மேற்பரப்பிலுள்ள நிணநீர்க்கட்டிகளில் காணப்படும் கசக் கிருமிகள் காசநோய் மருந்துகளுக்கு இலகுவில் கட்டுப்பட்டு அழிந்து விடுகின்றன.

கசக் கிருமிகள் தொற்றி ஆரம்ப நிலையில் உள்ள காலப்பகுதியில் உடலின் எதிர்ப்பு சக்தி அக்கிருமிகளுக்கு ஏற்ப இல்லாத பொழுது அக்கிருமிகள் சில சமயங்களில் குருதிக் குழாய்களில் சென்று சிறுநீரகங்களில் நிலைகொள்ளலாம். தகுந்த நேரத்தில் நோயைக் கட்டுப்படுத்தாதுவிடில் அக்கிருமிகள் சிறுநீரகத்தின் உட்பகுதியில் உள்ள 'Loop of Henle" என்ற சிறுநீர் வடிகட்டப்படும் பகுதியில் தங்கி நோயை ஏற்படுத்துகின்றது. இப்படியாக இரண்டு சிறுநீரகங்களும் பாதிக் கப்பட்டால் மிகவும் சிரமமாக இருக்கும். ஆனால், அநேகமாக ஒரு சிறுநீரகம்தான் முதலில் பாதிப்படைகிறது.

இங்கு அடிக்கடி சிறுநீர்கழிதல், அடிவயிற்று நோவு, சிறுநீரில் சீழ்கலந்திருத்தல் என்பன குணங்குறிகளாகக் காணப்படும். முதுகுநோவுடன், உடம்பில் அசதியும் காணப்படும். சிறுநீர் விடும் பொழுது முற்று முழுதாகச் சிறுநீரை வெளியேற்ற முடியாத தன்மையும், சில சமயங்கள் சிறுநீர்க் குழாயில் தடையும், சலப்பையின் கொள்ளளவு குறைந்தும் காணப்படும்.

சிறுநீரகத்தில் காசநோய்த் தொற்றுடையவர்கள் அநேகமாக கடைசி நேரம் வரை குணங்குறிகள் அற்றவர்களாக் காணப்படுகின்றனர். சில சமயங்களில் X-Ray அல்லது சிறுநீர்ப்பரிசோதனையோ இதனை உறுதிசெய்யமாட்டாது. நோய்கூடிச் செல்லும் பொழுது இவைகள் புலப்படலாம்.

நோயானது தகுந்த நேரத்தில் கண்டுபிடிக்கப்படாது விடின் அடுத்த கட்டமாக அது சிறுநீரகத்தில் இருந்து இருபக்கமுமுள்ள சிறுநீர் வழிகளைப் பாதிப்பதுடன் சிறுநீர் சேகரமாகும் சலப்பை, சிறுநீர்ப் பாதை என்பனவற்றையும் தொற்றிக்கொள்ளும்.

அதுமட்டுமல்ல ஆண்களில் மூத்திரக்கோளம் (Prostate) சுக்கிலப்பாதை, சுக்கிலப் புடகம், இருபக்க விதைகள், என்பனவற்றிலும் தொற்று ஏற்படலாம். விதைவீக்கமும் ஏற்படலாம்.

பெண்களில் கருப்பப்பை, பலோப்பியன் குழாய்கள் என்பனவற்றில் ஏற்படும் காசநோய் மாதர்கள் கர்ப்பம் தரிக்க முடியாதபடி குழாய்களை அடைத்துவிடலாம். ஒழுங்கற்ற கர்ப்பப்பை உதிரப்பெருக்கு இவர்களில் காணப்படலாம். மேற்கூறிய குணங்குறிகள் வேறு நோய்களினாலும் ஏற்படலாம். இதனால் வைத்தியர்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய பரிசோதனைகள் செய்து ஒவ்வொரு நோயையும் கண்டறிய முயன்று அவை ஒவ்வொன்றும் இல்லை என்று கண்டுபிடித்த பின் இறுதியில் இதுதான் பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்ட சரியான நோய் என்று உறுதி செய்வார்கள். அவற்றை உறுதிசெய்யப் பின்வரும் சோதனைகள் உதவலாம்.

### எப்படி நோயைக் கண்டுபிடிப்பது

குணங்குறிகள் - ஏற்கனவே கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிறுநீரை கிருமி வளர்ப்பு ஊடகத்தில் விட்டு கிருமிகளைப் பல்கிப் பெருக விடுவதன் மூலம் அக்கிருமிகளைப் பல வழிகளில் சோதனைக்கு உள்ளாக்கலாம்.

- X Ray பரிசோதனை
- CT Scan
- Ultrasound
- Peritoneal Fluid ஐ சோதித்தல்
- Endometrial Biosy
- Menstrual Blood
- Microscopic AFB staining

### Mantoux எனப்படும் தோற் பரிசோதனை

இப்பரிசோதனையின் பொழுது 0.1 மில்லி லீற்றர் மருந்து தோலின் கீழே ஏற்றப்படும். இம்மருந்தில் கசக்கிருமிகளின் தூய புரதக் கூறுகளின் செறிவு 5 அலகுகளாக இருக்கும். முன்கையில் முழங்கை மடிப்பிற்கும் மணிக்கட்டு ரேகைக்கும் நடுவில் உள்ள தூரப் பகுதியில் இம்மருந்து ஏற்றப்படும். மருந்து ஏற்றிய பின்பு தோலில் நிகழும் மாற்றங்களை இலகுவாக அறியக்கூடியதாக இருப்பதால் இந்த இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மருந்து ஊசி மூலம் தோலின் கீழ் ஏற்றிய பின்பு வைத்தியர் அதனை மை மூலம் அடையாளம் செய்துவிடுவார். மருந்து ஏற்றியவுடன் அப்பகுதியில் 3 தொட்டு 5 மி.மீற்றர் விட்ட மளவிற்கு தோல் தடிக்கும். இத் தடிப்பு 15 நிமிடங்களில் மறைந்துவிடும்.

வைத்தியர் உங்களைச் சரியாக 48 மணித்தியாலங்கள் கழித்து ஆனால் 72 மணி நேரத்திற்கு முன்பாக தனக்கு ஊசி ஏற்றிய பகுதியைக் காட்டும்படி கூறுவார். ஏற்கனவே கசக் கிருமிகள் தொற்றியிருந்தால் ஊசி ஏற்றிய தோற்பகுதி மிகவும் தடித்துக் காணப்படும். இதனை 'Induration' என ஆங்கிலத்தில் கூறுவர். கொள்ளி எறும்பு கடித்தால் எப்படித் தோல் பகுதி தடிப்பமாகிறதோ அதேபோல் தடித்திருக்கும். தோல் எவ்வளவு தூரம் தடித்து இருக்கிறது என்பதை 48 மணி நேரத்தின் பின்பு அளந்து கொள்வர். தோலின் தடிப்பம் மில்லி மீற்றரில் அளக்கப்படும். தோலின் தடிப்பத்தின் அளவுகளை வாசித்து அறிந்த பின்பு நோயாளிக்கு மேலும் சில

14ம் பக்கம் பார்க்க...

தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி கற்பதற்கு

**Dr. Kandiah Senthilathan**

Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து முதலுதவி கற்பிக்கப்படும்.

**647-801-9252, 416-502-9252**


Buy & Sell Residential and Commercial Properties
Raj. A. Rasaratnam
Sales Representative
416-726-8055
argaccountax@rogers.com
HOMELIFE
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
*Independently own and operated
$174,900
Don Mills & Eglinton
3 br Condo (Corner Unit). Close To Don Valley & 401. Newly Renovated Washroom & Kitchen. Swimming Pool, Sauna, Exercise Room & Gym in building.
$341,300
Brimley & Highglen
3 +2 br Detached Link. Convenient Location. Large Foyer And Principal Rooms. Finished Basement With In-Law Suite.
$395,000
Meadowvale & Sheppard
4 br Detached! Features 9 Ft Ceilings, Crown Moulding Thru-Out Main Floor, Pot Light Neutral Decor, Back Splash And More Easy Access To School, Transit And Shopping.
$414,998
Midland & Steeles
3+1 br Monarch Build All Brick Detached Home, Professionally Finished Basement With Rec-Room, Bathroom & Bedroom. Walk To Ttc & Pacific Mall!
$426,000
Sheppard & McCowan
3+1 br Detached, 1 Yr New, Steps To Ttc, School, Park, Plaza, All Amenities, Mins To 401/Scarborough Town Centre & Future Sheppard Transit Line
$554,000
Markham & 14th Ave
4 +2 br Beautifull Executive Home. 9Ft Ceiling On Main Fl Stunning Bright 18Ft High Entrance Large Kit/Brkft Area Has W/Out To Private Yard W/Deck.Lots Of Upgrades.
Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation
(416) 726-8055


எமக்கென்று ஒரு தனிக்குடில்
சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்
TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS
UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT
MAILVAGANAM (MIKE) AHILAN
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-220-1184
VINCE SINNADURAI
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-917-9462
416.438.1688
Fax: 416 438 1612
1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6
RBC Financial Group

# "வீடு" வினாவும் விடையும்



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

தாய்வீடு சஞ்சிகையின் ஆதரவாளர்களான வாசகர்கள் உங்களுக்கு நன்றி கலந்த வணக்கங்கள். 'Change is the Law of life' என்று கூறுவார்கள். அதாவது, மாற்றங்கள் மட்டுமே மாற்றமடையாதது. வாழ்க்கை பாதையில் மனிதர்கள் மாற்றங்களை அனுசரிப்பதற்கு பழகிக்கொள்ள வேண்டும். பழமை வாதிகள் பலர் இதற்கு முரண்பாடானவர்கள். அவர்களுக்கும் இவ் வாழ்க்கைத் தத்துவம் மிகவும் பொருத்தமானதே. அவர்களிடம் மாற்றங்கள் திணிக்கப்படுகின்றது. விரும்பியோ, விரும்பாமலோ அவர்களும் அதனை ஏற்றுக் கொள்கிறார்கள். விடிவு காலத்தின் விளிம்பிலிருந்து நாம் இன்று அதல பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கின்றோம். இன்னமும் எத்தனை காலங்கள், முயற்சிகள், முதலீடுகள், ரணங்கள் எமது விடிவுக்காக செலவிடப்போகின் றோம் என்பது கேள்விக்குறியே. கீதையின் காலம் தொட்டு இன்றுவரை மனிதர்கள் மாயைக்குள் கட்டுண்டவர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இம் மாயைத் திரை விலகும் தருணங்களில் ஒருவன் வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை அறிந்தவனாகின்றான். அதற்குரிய சந்தர்ப்பங்கள் மனிதருக்கு எத்தனை தடவை வழங்கப்படுகின்றது? நாம் பெரும்பான்மையால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு பின்னர் சிதறடிக்கப்பட்டவர்கள். உணர்வை இழக்காத கொள்கைப் பற்றுமிக்க எம் வழிகாட்டிகளின் மாற்றங்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியம் இன்றைய நிலை. மேலே கூறியது போல் நாமும் மாற்றங்களை ஆதரிக்கப்பழகிக் கொள்ள வேண்டும் என்று கூறி, தொடர்ந்து இம்மாத சஞ்சிகைக்காக வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வீடு துறை தொடர்பான கேள்விகள் மற்றும் கருத்துக்களை ஆராய்வோம்.

### கடந்த மாதங்களில் இருந்த 'வீடு' சந்தை நிலவரங்கள் அண்மைக் காலங்களில் மிகவும் சூடுபிடித்துள் ளதாக கூறுவது உண்மையான தகவலா?

சீவரத்தினம். எஸ். ரொறன்ரோ

வீடு விற்பனையில் அண்மைக்காலங்களில் அவதானிக்கக்கூடிய அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே. ஓர் சீரான வேகத்தில் கடந்த காலங்களில் காணப்பட்ட வீட்டுச் சந்தையானது இவ்வருட ஆரம்பத்தில் மிகவும் மந்தமாக காணப்பட்டது. அதற்கான காரணிகளாக அமெரிக்க பொருளாதாரம், வீட்டு விலைச் சரிவுகள், வட்டி விகித குறைப்புக்கள் என்று கூறிக்கொண்டே போகலாம். அண்மைக்காலங்களில் எமது பொருளாதாரத்தில் மக்களுக்குள்ள விளிப்புணர்வு மற்றும் அதிகரிக்கப் பார்க்கின்ற வட்டி விகிதம், வீட்டு விலைகள், இதுவரை காலமும் பொறுத்திருந்தவர்களை எண்ணத் தூண்டியுள்ளது இன்று வீட்டிற்கான கேள்வி மிகவும் அதிகரித்துக் காணப்படுவதால் தரமாக சந்தைப்படுத்தப்படும் வீடுகள் போட்டி முறைமூலம் ஒருவார காலத்துக்குள் விற்கப் படுவது கண்கூடாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கனடிய பொருளியலாளர்களின் கருத்துக்களின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதிகள் வரை பொருளாதாரம் ஓர் சீரான போக்கினையே கொண்டிருக்கும். அதன் பின்னர் வளர்ச்சியடையும் என்று ஓர் கருத்து உண்டு. ஓர் சீரான விலையும், குறைத்து காணப்படுகின்ற வட்டி விகிதமும் வீடு வாங்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பமே.

### எனது வீட்டின் பின்பகுதியில் உள்ள மரத்தினால் வீட்டிற்கு பாதிப்பு ஏற்படும் என்று ஐயப்படுகின்றேன். அதனை வெட்டி அகற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

குமார். வீ. Scarborough

உங்களுடைய காணிக்குள் ஓர் மரம் இருந் தாலும் கூட, அதனை நீங்கள் வெட்டு



வதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை. இவற்றிற்கெல்லாம் பொது அமைப்பாக இயற்கை வள துறையினர் பணியாற்றுகின்றனர். பொதுவாக ஓர் பட்ட மரத்தினை வெட்டி அகற்றுவதற்கு கூட நீங்கள் உங்கள் பகுதி நகர சபையின் அனுமதி பெறுவது அவசியம். உங்கள் வீட்டின் பின்பகுதியிலுள்ள மரத்தினால் ஏற்படப்போகும் சேத விபரங்களை பட்டியலிட்டு, அதனை அகற்றுவதற்குரிய அவசியத்தினை உங்கள் விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து (City) நகர சபை அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதன் மூலம் உங்கள் முதற் செயற்பாட்டினை தொடங்கலாம். அவர்கள் அதனை ஆராய்ந்து அனுமதியளித்தால் மட்டுமே நீங்கள் அம்மரத்தினை வெட்டலாம். மாறாக அனுமதி பெறாமல் அழிக்கப்படுகின்ற மரங்களுக்காக நீங்கள் தண்டிக்கப்பட வாய்ப்புக்கள் உண்டு. மட்டு மன்றி ஒவ்வொரு காணிக்குள்ளும் வளர்ந்த மரங்கள் எத்தனையுண்டு என்கின்ற தகவல் களும் ஏற்கனவே சேகரிக்கப்பட்டுள்ளது. எப்போதும் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

### RRSPஇல் சேகரித்து வைத்திருக்கும் பணத்தினை வீடு வாங்குவதற்கு உபயோகிப்பதற்குரிய வழிமுறைகள் யாவை?

கரன்.க Brampton

முதற் தடவை வீடு வாங்குபவர்கள் RRSP இலுள்ள பணத்தினை தண்டப் பணமின்றி முழுமையாக பெற்று நுகர்வதற்கு அனுமதிக் கப்படுகின்றனர். ஒருவர் ஆகக் கூடிய தொகையாக $ 25,000 வரை பெறலாம். கணவன் மனைவி இருவரும் இணைந்து வீடு வாங்கும் சந்தர்ப்பங்களில் இத்தொகையானது இரட் டிப்பாகின்றது. இவ் RRSPஇல் வைப்பிலிடப்பட்ட தொகையானது, குறைந்தது 90 நாட்கள் அதாவது மூன்று மாதங்கள் வைப் பிலிருந்திருத்தல் அவசியமானது. நீங்கள் வீடு வாங்குவதற்காக உபயோகப்படுத்துகின்ற பத்திரத்தினை (Purchase of Sale Agreement) RRSP நிறுவனத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் உங்கள் வைப்பீடு மீளளிக்கப்படும்.

### முதல் தடவையாக வீடு வாங்குபவர் கள் அவதானிக்க வேண்டிய முக்கிய மான விடயங்கள் யாவை? எவ்வாறு எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்?

மோகன்.ஐ. Ajax

முதல் தடவை மாத்திரமன்றி வீடு வாங்கும் அனைவரும் அவதானிக்க வேண்டிய பல விடயங்கள் உண்டு. மிக முக்கியமாக உங்கள் வருமானத்தின் அடிப்படையிலும் தேவையின் அடிப்படையிலும் தெரிவுகள் இருக்கின்றதா என்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள். கடன் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடையவர்களான Mortgage ஒழுங்குனர்களின் உதவியுடன், நீங்கள் எவ் வளவு பெறுமதியான வீட்டினை வாங்குவதற்கு தகுதியானவர் என்பதனை அறிந்து கொள்வது மட்டுமன்றி Pre approval என்று கூறப்படுகின்ற முன்கூட்டியே கடன் ஒழுங்கு களை செய்துகொள்ளுங்கள். வீட்டிற்காக சேகரிக்கப்படுகின்ற பணம் வங்கியில் சுமார் 90 நாட்களுக்கு முன்னதாகவே வைப்பிலிடப்பட்டதாக இருத்தல் அவசியம், இதுவே முதல் தடவையாக வாங்குபவர்கள் RRSP இலும் சேர்த்து வைக்கலாம். நீங்கள் ஏற்கனவே வசிக்கின்ற வீட்டு உரிமையாளர்களிடமோ அல்லது நிறுவனங்களுடனோ தொடர்பு கொண்டு, அவ் வீட்டிலிருந்து விலத்திக் கொள்வதற்குரிய கால அவகாசங்களை தெரிந்து கொள்ளுங்கள். மட்டுமன்றி Elevator பாவனையில் தங்கியிருப்பவர்கள் வாரத்தில் எந்த நாட்கள் - நேரங்கள் Elevator – Moving பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் அறிந் திருத்தல் அவசியம்.

வீடு விற்பனை முகவர்கள் அநேகர் அனுப வசாலிகள், அவர்களின் உதவியுடன் பல வீடுகளை பார்த்து உங்களுக்கு பிடித்தமானதை தெரிவுசெய்யும் வேளைகளில், உட்புற வெளிப்புற அமைப்புக்கள், திருத்த வேலைகள், அதற்கான செலவீனங்கள் போன்றவற்றை தெரிந்துகொள்ளுதல் நன்று, வீடொன்றினை பெற்றுக்கொள்வதற்காக வீடுவிற்பனை முகவர், மோட்கேஜ் முகவர், வீட்டுப் பரிசோதகர் மற்றும் வழக்கறிஞர் போன்றவர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களின் உதவியுடன் உங்களுக்குரிய சலுகைகள் மற்றும் தகவல் களையும் பெற்றுக்கொள்ளலாம்.

### 'Grow House' என்றால் என்ன? அதனை வாங்குவதால் ஏற்படும் நன்மை, தீமைகள் யாவை?

ராகவன். V. Scarborough

சட்டத்திற்கு புறம்பான முறையில் வீட்டுக் குள்ளேயே கஞ்சா போன்ற போதை செடி களை வளர்த்து அறுவடையும் செய்கின்றனர். இவ்வகை வீடுகளை Grow House என்று அழைப்பார்கள். இவ்வாறான வீடுகள் இச் செடி வளர்ப்பிற்காக தயார்ப்படுத்தப்படுகின்றது. வீட்டுக்குள்ளேயே வெளிப்புற வெப்ப/தட்ப நிலைகளை பேணுவதற்காக மின்சாரம், நீர் மற்றும் இதர செயன்முறைகள் மாற்றியமைக்கப்பட்டு மக்கள் வாழ்வதற்காக வடிவமைக்கப்பட்ட வீடானது செடி வளர்ப்பிற்காக மாற்றியமைக்கப்படுகின்றது. இதனால் வீட்டின் பாதுகாப்பு தரம் கணிசமான அளவு பாதிப்படைகின்றது. செடி வளர்ப்பின்போது செயற் கையாக உபயோகப்படுத்தும் அதிக வெளிச்சமுள்ள மின்குமிழ்கள் மற்றும் இரசாயன மருந்துகள் போன்றவற்றால் வீட்டின் ஏனைய பகுதிகளிலும் நச்சுத்தன்மை, ஈரப்பதன் மூலம் ஏற்படும் பின்விளைவுகள் போன்றவையுடன் அவ்வீட்டின் வாழ்க்கைத்தரத்தினையும் மிகவும் பாதிக்கின்றது. இவ்வாறாக தரம் இழந்த வீடுகளை மறுசீரமைப்பதற்கு பல ஆயிரங்கள் செலவாகலாம். ஆகையால் இவ்வகை வீடுகள் சந்தைப்படுத்தப்படும் வேளைகளில் மிகவும் குறைவான விலையி லேயே காணப்படும். அது மட்டுமன்றி காப்புறுதி நிறுவனங்களும் இவ்வகை வீடுகளுக்கு உறுதி வழங்க முன்வரமாட்டார்கள். இத்தருணத்தில் கொள்வனவாளர்கள் சுமார் 20-25% முற்பணம் செலுத்தியே கடன் பெறும் நிலைக்கு தள்ளப் படுவார்கள்.

பாடசாலை விடுமுறைகளும், கோடைகால குதூகலிப்புக்களும் இன்றைய அவசர உலகில் எம்மை சற்று இளைப்பாற வைக்கின்றது. இருப்பினும் நேற்று நடந்தது போல் எம் மண்ணின் அவலங்களை அவ்வளவு இலகு வாக எம் இதயங்களிலிருந்து இறக்கி வைத்துவிட முடியாது. இழப்புக்கள் ஒரு புறமிருக்க இன்றும் எம் உடன்பிறப்புக்கள் திறந்தவெளி சிறைகளுக்குள் சிக்கித்தவிப்பது, எம்மினத்தின் சாபக்கேடோ?. அவர்களுக்கு கைகொடுத்துதவுவதற்கு எம்மையன்றி வேறு யார்தான் முன்வருவார்? மீள் குடியேற்றத்தை எண்ணி, ஏங்கி அன்றாடம் தமது வாழ்வினை கேள்விக்குறியாக்கியிருக்கும் எம் எஞ்சிய உறவுகளின் அவல நிலை போக்குவதற்கு இங்கு பல அமைப்புக்கள் முன்னேற்பாடுகள் மேற்கொண்டுள்ளது. அவர்களுடன் நாமும் இணைந்து எமது கடமைகளை ஆற்றுவதற்கு முன்வருகின்ற அதேவேளை, புலம்பெயர் நாடுகளில் எம் இனத்தின் தரம் பேணும் முயற்சிகளிலும் ஈடுபடுதல் அவசியம். அநியாயமான கொலைகள் எமக்கு ஓர் சாபக்கேடு. ஓர் உயிரின் மதிப்பினை அவ்வளவு இலகுவாக எண்ணிவிட முடியாது. அண்மைக் காலங்களில் வானொலிகளில் அன்றாடம் நாம் அறிந்து கொள்வதெல்லாம், Tamils என்னும் இணைப்புடன் கூடிய அவலங்களே.

உணர்வுகளுடன் கூடிய, பற்றுமிக்க வளமான இளம் சமுதாயம் ஒன்று உருவாகவேண்டியது இன்றைய தேவை. ஆகவே வன்முறைகளற்ற பலம் பொருந்திய புலம்பெயர் உறவுகளாக நாம் என்றும் இணைந்திருப்போம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■



## மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker

**Direct: 416-262-4176**




**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o




**Morningside / Staines**
3 Bedrooms 3 Washroom




**Hwy 10 & Steeles**
4+2 Bedrooms 4 Washroom



**HomeLife Today Realty Ltd., Brokerage***

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated. Realtor



## Buying or Selling Homes
Selling Commission , As Low As 1%

HomeLife Landmark
Realty Inc. Brokerage

**Call Nada**
Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093

Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

Platinum Award Winner
Ontario Emerald Club Member




**Markham/Lawerence**
Detached Bungalow
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Westney/Sullivan**
Detached - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Audley/Taunton**
2-Storey Detached
3 Bedrooms - 3 Washrooms
Approx. 1800 Sq. Ft




**Dixie/Finch**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Part. Finished Basement




**Kennedy/Eglinton**
Detached Bungalow
3+4 Bedrooms - 2 Washrooms
Bsmt. Apartment w/ Sep. Entrance




**Rosebank/Finch**
Detached 2 Storey
4 Bedrooms - 3 Washrooms
Approx. 1900 Sq. Ft




**Tapscott/Finch**
Multi-Level Industrial Unit
Well Maintained Complex
Approx. 1550 Sq. Ft

**This space is avaliable to list and sell your home.**

# The Power To Cure - Stem Cells

சிவாஜினி
பாலராஜன்




Stem Cells என அழைக்கப்படும் மூல உயிரணுக்கள் பற்றிய ஆராய்வு தற்போது முழு மூச்சாக அனைத்து நாடுகளிலும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த ஆராய்ச்சி; சிகிச்சை இல்லை என நினைத் திருக்கும் பல விதமான நோய்களை வெல்லலாம் எனும் நம்பிக்கையினைத் தருவதாக அமைந்துள்ளது. உதாரணமாக degenerative disorders (சில நோய்களினால் பாதிக்கப்பட்ட இழையங்கள் தங்களை சீர்செய்ய முடியாது மேன்மேலும் பழுதாகுதல்), including repair of heart tissue or brain tissue to treat heart disease and stroke, (இதயம் அல்லது மூளையின் இழையங்களில் ஏற்படும் பாதிப்பு) spinal cord injury (முள்ளந்தண்டில் ஏற்படும் காயங்கள்), arthritis, diabetes, Parkinson's, Alzheimer போன்ற நோய்களின் சிகிச்சைக்கு Stem cell உதவி புரியக் கூடியது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## Stem cell என்றால் என்ன?

உயிரினத்தின் அடிப்படைக் கட்டமைப்புத் தொழிற்பாட்டு அலகு கலம் அல்லது உயிரணு என அழைக்கப்படும். எங்கள் உடல் பல்லாயிரக்கணக்கான கலங்களினால் ஆக்கப்பட்டது. இவ்வாறு இருக்கும் கலங்கள் அனைத்துக்கும் வெவ்வேறு தொழில்கள் உண்டு. வெவ்வேறு அவயவங்களிலுள்ள கலங்கள் வித்தியாசமான முறையில் வெவ்வேறு தொழில்களைச் செய்வதற்குரியமாதிரி அமைந்துள்ளன. அதாவது கலங்களுள் இருக்கும் DNA (Deoxyribonucleic Acid) தான் கலங்களது தொழிற்பாடுகளுக்கு காரணமாகின்றது. ஒவ்வொரு கலமும் ஒரு முழுப் பிரதி DNAயினைக் கொண்டிருக்கும். இந்த Deoxyribonucleic Acidஇனை எங்கள் உடலின் இரசாயன நீலப்பிரதி (chemical blueprint to your body) எனச் சொல்லலாம். இந்த DNAஆனது கொண்டிருக்கும் நிபந்தனைகள் அல்லது விளக்கங்கள் தான் கலங்களின் தொழிற்பாடுகளுக்கு வழிகாட்டி. அதனால் இவை தங்களுக்கு வரையறுக்கப்பட்ட தொழில்களை மட்டும் தான் செய்கின்றன. ஆனால் Stem cell என அழைக்கப்படும் மூல உயிரணுவானது தனக்கென தொழில் வரையறுக்கப்படா, முதிர்வடையா கலங்கள் ஆகும். இவற்றுள் DNA காணப்படுவதில்லை இதனால் இவை பல்வேறு விதமான கலவகைகளாக மாற்றம் பெறக் கூடிய சாத்தியக் கூற்றினைக் கொண்டது. அதாவது இன்ன தொழிலைத்தான் செய்யவேண்டும் என்றோ அல்லது இன்ன கலம் போலத்தான் தொழிற்பட வேண்டும் என்றோ வரையறுக்கப்படவில்லை. இவை சிதைந்த அல்லது பழுதடைந்த கலங்களை சீரமைப்பது மட்டுமல்லாது மேன் மேலும் பிரிந்து தங்களை ஒத்த புதிய (Identical) பல கலங்களைத் தோற்றுவிக்கும் தன்மை கொண்டவை. இவ்வாறு கலப் பிரிவினை மேற்கொள்ளும் போது தோன்றும் புதிய கலங்கள் தேவைக் கேற்ப வேறு கலங்களாக மாறலாம் அல்லது தொடர்ந்தும் Stem cell ஆகவே இருக்கலாம். இந்த குணாதிசயங்களினால் தான் வைத்தியத்திலும் விஞ்ஞானத்திலும் தனக்கென ஒரு இடத்தினை Stem cell பிடித்துள்ளது. ஒவ்வொரு நாளும் நம்மிடமுள்ள உயிரணுக்கள் பல இறந்து கொண்டு இருக்கின்றன. அவற்றை ஈடு செய்ய இந்த மூல உயிரணுக்கள் தான் தேவையான உயிரணுக்களை உருவாக்கித் தருகின்றன.

விஞ்ஞானிகள் மூல உயிரணுக்களை இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். அவையாவன embryonic stem cells அதாவது முளைய மூல உயிரணு, adult stem cells முதிர்ந்த உயிரணு ஆகும். ஒரு பெண்ணின் கருமுட்டையும் ஆணின் விந்தும் சேர்ந்து உண்டாகும் முளையத்தின் blastocystsல் பல உயிரணுக்கள் வளர்ந்து விரிவடையும். இந்த கரு முட்டை உருவாகும் போது தொடக்க நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள்ளான உயிரணுக்களின் முளையை, முளைய மூல உயிரணு (Embryonic Stem Cells) எனவும், எலும்பு மச்சை, குருதி போன்ற இடங்களில் உள்ள தொடர்ந்து பிரிந்து பெருகும் உயிரணுக்களை வளர்ந்த மூல உயிரணு (Adult Stem Cells) எனவும் வேறுபடுத்தி கூறுகின்றனர்.


மேலும் Stem cellகள் அவற்றின் செயற்பாட்டுத் திறன் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன Totipotent, Pluripotent, Multipotent என்பனவாகும். Totipotent stem cells மிகவும் ஆரம்பகால முளையத்தில் மட்டுமே காணப்படும். இவை ஒரு முழு அங்கஜீவியாக வரக்கூடியவை. இதற்கு உதாரணமாக ஒத்த இரட்டையர்களைக் கூறலாம். (e.g.: identical twins) Pluripotent stem cells என்பது inner cell




mass of the blastocyst எனப்படும் ஆரம்ப கால முளையத்தில் (அதாவது கருக்கட்டி 7 – 10 நாட்களுக்குட்பட்ட காலம்) காணப்படும். இது 200க்கும் மேற்பட்ட வகைக் கலங்களாக மாறக்கூடியது. Multipotent stem cells என்பது தொப்புள் கொடி குருதி Adult Stem Cells என்பவற்றிலிருந்து கிடைப்பது.

**“தொப்புள்கொடி இரத்தத்தை பாதுகாக்க பல வங்கிகள் இப்போது கனடா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் தோன்றியுள்ளன. இவ் வங்கிகளில் (கனடாவில் இரத்த வங்கியே இதனையும் செய்கின்றது) குழந்தை பிற்ப்பதற்கு 30 நாட்கள் முன்பு பதிவு செய்து கொள்ள வேண்டும். பின்னர் குழந்தை பிறந்த உடன் செய்ய வேண்டிய செய்முறையை அவர்கள் நம்முடைய மருத்துவருக்கு அனுப்பிவைப்பார்கள். குழந்தை பிறந்தவுடன், நம் மருத்துவர் தொப்புள் கொடி இரத்தத்தை பாதுகாப்பான முறையில் சேகரித்து அந்நிறுவனத்திற்கு அனுப்புவார். குழந்தை பிறந்த 36லிருந்து 48 மணி நேரத்திற்குள் முறையாக பாதுகாக்கப்பட்ட இரத்தம் அவ்வங்கிக்குச் சென்றடைய வேண்டும். பிறகு அந்த இரத்தம் நீங்கள் விரும்பும் வரை பாதுகாக்கப் படும். ஒரு குடும்பம் பதிவு செய்வதற்கு *$155 (one time registration)* பின்னர் அந்த தொப்புள் கொடி குருதியினை பாகுபடுத்த *$795* அத்துடன் வருடம் *$125* வங்கி வாடகை. இந்த வங்கி வாடகையினை முழுமையாக 18 வருடங்களுக்கு $1800 டாலர்கள் மட்டமாக செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் *http://www.lifebank.com* என்னும் இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்”.**

Adult Stem Cells எனப்படுவது பொதுவாக எங்கிருந்து எடுக்கப்பட்டதோ அதற்குரிய தொழிலை அல்லது அதற்குரிய கலங்களை மட்டும் உருவாக்கக் கூடியது. அதாவது குருதியில் இருந்து எடுக்கும் Stem Cells குருதிக்குரிய கலங்களையும் தோலில் இருந்து எடுக்கப்படும் Stem Cells தோலுக்குரிய கலங்களையும் ஆக்கக் கூடியது. ஆனால் இந்த முளைய மூல உயிரணுவானது எந்த உறுப்புக்குரிய கலமாகவும் சுலபமாக மாற்றமடைந்து வரக்கூடியது. அத்துடன் Adult Stem Cells பிரிந்து தன்னையொத்த Identical கலங்களை உருவாக்கினாலும்




Embryonic Stem Cells வரையறையன்றி (indefinitely divide but don't make any tumors) கலப்பிரிவினை மேற்கொண்டு ஒத்தகலங்களை (Identical) உருவாக்கும் வல்லமை கொண்ட போதிலும் கட்டிகளை (tumor) உருவாக்க மாட்டாது.

தொப்புள்கொடியில் இருக்கும் இரத்ததிலிருந்து நிறைய Stem Cellகளை பிரித்தெடுக்க இயலும் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இவ்வகையான Stem Cellகள், எலும்பு மச்சை மற்றும் வழக்கமான இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கும் Stem Cellகளை விட மிகச் சிறந்தது என்றும், இவற்றை உபயோகிக்கும் போது நோயாளியின் செல்கள் பெரும்பாலும் இதை நிராகரிப்பதில்லை எனவும் ஆராய்வுகள் கூறுகின்றன. அத்துடன் பிள்ளை பிறந்தபின்னர் நாம் தூக்கி எறியும் நச்சுகொடி எனப்படும் placentaவிலும் இந்த Stem Cell காணப்படுகின்றது

பொதுவாக முளைய மூல உயிரணுவானது பரிசோதனைக்குழாய் குழந்தைகள் உருவாக்கும் இடங்களான in vitro fertilization clinic லேயே அதிகம் எடுக்கப்படுகின்றது. குழந்தை பிறப்பதில் சிரமம் இருக்கும் தம்பதியினருக்கு அவர்களது முட்டையும் விந்தும் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்குழாயில் கருக்கட்ட வைக்கப்படும். இவ்வாறு செய்யும் போது தேவைக்கு மேற்பட்ட அளவிலேயே முளையங்கள் உருவாக்கப்படுகின்றன. இவை பின்னர் freezerல் சேகரித்து வைக்கப்பட்டு கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்குப் பாதுகாக்கப்படும். இவ்வாறு மேலதிகமாக தம்பதியினருக்குத் தேவைப்படாத முளையங்களிலிருந்து இவற்றை எடுக்கலாம். In vitro fertilization clinicஇல் எடுக்காது ஒரு கருவுற்ற பெண்ணின் முளையத்திலிருந்து இந்த முளைய மூல உயிரணுவை எடுக்க முடியாது. அவ்வாறு எடுப்பின் அந்த முளையம் அழிக்கப்பட்டு விடும். அத்துடன் இவ்வாறு எடுக்கப்படும் Stem Cells பெற்றுக் கொள்பவரின் உடலினால் (reject) எதிர்க்கப்படலாம். இந் நோய் graft-versus-host-disease (GVHD) என அழைக்கப்படும். இந்த நிலமை செயற்கை முறையில் அதாவது கண்ணாடியில் வைத்து கருக்கட்டவைக்கும் முறையினால் நிவர்த்திசெய்யப்படும் என ஆராய்வுகள் கூறுகின்றன. ஆனால் சாதாரணமாக பெண்ணின் கருப்பையுள் இருக்கும் முளையத்திற்கும் கண்ணாடியுள் உருவான முளையத்திற்கும் வேறுபாடு இல்லை.

## ஏன் இந்த stem cellsகளை மருத்துவத்தில் பாவிக்க வேண்டும்?

முளைய மூல உயிரணு புதிய கலங்களினையும் இழையங்களையும் உருவாக்க உதவுவதனால் அவயவங்கள் மாற்றீடு செய்வதற்கு இது மிகவும் உதவக் கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது. அவயவங்களை மாற்றீடு செய்யும் போது புது அவயவத்துடன் சேர்ந்து புதிய கலங்கள் உற்பத்தியாக்கப்பட வேண்டும். இதற்கு இந்த Stem Cells மிகவும் சிறந்தது. மேலும் இவை பழுதடைந்த இழையங்களை அல்லது கலங்களை சீர் செய்வதற்கும் உதவுகின்றன. பொதுவாக நீரிழிவு அல்லது பார்கின்சன் நோய் உள்ளவர்களுக்கு அவர்களது இழையங்கள் பாதிக்கப்படும். இச் சந்தர்ப்பத்தில் இம் முளைய மூல உயிரணு பாதிக்கப்பட்ட இழையங்களைச் சீர் செய்ய உதவும். மிகவும் சுருக்கமாகச் சொல்லப் போனால் இந்த Stem Cells மிகவும் நீண்டகாலத்திற்கு தொடர்ந்து தங்களைப் புதுப்பிக்கவும் பிரிந்து பல கலங்களினத் தோற்றுவிக்கும் வல்லமை கொண்டிருப்பதுடன் தங்களுக்கென்று பிரத்தியேக தொழிலைக் கொண்டிராதவையாகவும் வேறு இன அல்லது வகையான கலங்களாக மாற்றியமைக்கப்படக் கூடியவையாகவும் இருப்பதே இவற்றிலுள்ள சிறப்பம்சம்.

Stem Cells தனக்கு அருகிலிருக்கும் ஒரு கலத்துடன் இணைந்து வேலை செய்யும் திறமை அற்றது. உதாரணமாக ஒரு இதயத்தின் கலங்களுடன் சேர்ந்து இதயத்தை துடிக்கச் செய்யும் வல்லமை அற்றது. ஆனால் இதயக் கலங்களினை உருவாக்குவதற்கு

14ம் பக்கம் பார்க்க...

# காச நோய்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

பரிசோதனைகள் செய்யும்படி வைத்தியர் கூறலாம். அநேகமாக தோலின் தடிப்பம் 5 மி.மீற்றரும் 10. மி.மீற்றரிற்கும் இடையிலோ அல்லது அதற்கு மேலாகவோ இருந்தால் காசநோய் தொற்றியுள்ளது என்று அர்த்தமாகும். எனினும் இப்பரிசோதனையிலும் சில சமயங்களில் பிழையான தரவுகள் கிடைக்கலாம். அதனால் வேறு சில சோதனைகளின் பின்பு எல்லாவற்றையும் ஆராய்ந்து நோயை உறுதி செய்வார்கள்.

### பிழையான தரவுகள் கிடைக்கக்கூடிய காரணங்கள்:

காசநோயை ஏற்படுத்தாத அதே இன Mycobacteria கிருமி உடலில் தொற்றியிருந்தால் அப்பொழுதும் தோல் தடிக்கலாம். எமது ஆசிய நாடுகளில் BCG என்ற காச நோய்த்தடுப்பூசி சிறுவயதில் கொடுப்பது வழக்கம். இவ்வூசி ஏற்றப்பட்டவர்கள் தோலின் தடிப்பம் தொற்றுடையவர்களின் தடிப்பம் போல் பெரிதாக ஏற்படலாம்.

### வேறும் காரணங்கள்

மேற்கூறியவை தவிர மேலும் தோள் மூட்டு, முழங்கால் மூட்டு, முழங்கை மூட்டு போன்ற மூட்டுகளினுள்ளும் காசநோய்க் கிருமிகள் பெருகி மூட்டுகளை அசைப்பதற்கு இயலாமையை ஏற்படுத்தலாம். இதனால் கசவாதம் ஏற்படலாம். அதுபோல் நெஞ்செலும்புக் கூட்டில் உள்ள எலும்புகள், முள்ளந்தண்டு எலும்புகள், விசேடமாக இடுப்பெலும்புகள் தொற்றுக்கு உள்ளாகலாம். இதனால் முதுகு நோவு ஏற்படும். முதுகுநோய் வேறுபல காரணங்களாலும் ஏற்படுவதால் தகுந்த முறையில் நோயைக் கண்டுபிடித்தல் அவசியம்.

வயிற்றுப் பகுதி, சிறுகுடல், பெருங்குடல் அதைச் சுற்றியுள்ள சுற்றுவிரி என்பனவும் கசக் கிருமிகளால் பாதிக்கப்படும். வயிற்று வீக்கம், நோவு, காய்ச்சல் என்பனவற்றுடன் வயிற்றோட்டம், நிறைகுறைவு என்பனவும் ஏற்படலாம். நேர்குடல் போன்ற பகுதிகளிலும் குதத்திலும் ஏற்படும் கசநோய் ஆங்காங்கே தசைச் சுருக்கங்களை ஏற்படுத்திவிடலாம். அநேகமாக குடற்தசைகளில் புண்கள், வீக்கங்கள் மற்றும் தசைச் சுருக்கங்கள் ஏற்படுவதால் குடலுடன் சம்பந்தப்பட்ட கச நோயில் அதற்கேற்ப குணங்குறிகள் காணப்படும்.

இது தவிர மத்திய நரம்புத் தொகுதி போன்று வேறுபகுதிகளும் பாதிக்கப்படலாம். நோயெதிப்பு குறையும் பொழுது இக்கிருமி உடல் பூராகவும் பரவிவிடலாம். அநேகமாக பல கிருமி தொற்றுடையவர்கள் போன்றோர் கவனமாக இருத்தல் வேண்டும்.

### மிகவும் உயிராபத்தான கச வகைகள்

- சுவாசப்பையில் ஏற்படும் TB - சுவாசப் பையில் ஏற்படும் துவாரங்களில் காற்றுப் பரிமாற்றம் சிக்கலடைதல்.
- இருதயப் போர்வையில் ஏற்படும் TB
- அட்ரீனல் சுரப்பியில் ஏற்படும் TB
- பெருநாடியில் தொற்றிய TB அப் பெருநாடியில் ஒரு விரிசலை ஏற்படுத்தியிருந்தால்.
- மத்திய நரம்புத் தொகுதியில் தொற்றியுள்ள TB
- உடல் பூராகவும் பரவிவிட்ட TB
- சுவாசப்பை TBல் இரத்த வாந்தி
- HIV தொற்றுடன் TB தொற்றும் சேர்ந்து இருந்தால்.
- நோயெதிர்ப்பு சக்தி மிகவும் குறைவாக உடையவர்கள் (உ-ம் புற்றுநோய்) கவனமாக இருத்தல் அவசியம்.
- மூளைப்போர்வையில் ஏற்படும் TB

வைத்தியர்கள் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கும் பொழுது அதற்கேற்ப ஒழுகி நோயைக் குணமாக்க முயல்வது உங்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் நன்மைபயக்கும்.

### சிகிச்சை

காசநோய்க்குப் பலவிதமருந்துகள் உண்டு.

சுவாசப்பை காசநோய் உடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட அளவு சிகிச்சையின் பின்பு தனிமைப்படுத்தல் நீக்கப் படும்.
பின்வரும் மருந்துகள் பாவனையில் உண்டு.

- Isoniazid
- Rifampin
- Ethambutol
- Pyrazinamide
- Streptomycin

மருந்துகளை ஒழுங்காக எடுப்பது அவசியம். மருந்துகளுக்குப் பழகிய அல்லது மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தியுடைய (Resistant TB) கசக் கிருமிகளினால் நோய் வாய்ப்பட்டவர்களுக்கு மேற்கூறிய மருந்துகளில் பலவற்றைச் சேர்த்துக் கொடுப்பார்கள். அப்பொழுது அக்கிருமிகளை அழிக்கக் கூடியதாக இருக்கும். பக்க விளைவுகள் பற்றி மருத்துவரும், மருந்தாளர்களும் ஆலோசனை கூறுவர்.

### கவனிக்க வேண்டியது

நீரிழிவுநோய், நிறைக்குறைவு, தலை கழுத்துப் பகுதியில் புற்றுநோய், HIV, AIDS, உடலுறுப்பு மாற்றுச் சிகிச்சை, சிறுநீரக நோய் உடையவர்கள் இந்நோய்பற்றி மிகவும் விழிப்பாகவும் கவனமாகவும் இருப்பது அவசியம். இவர்கள் இலகுவில் காசநோய் கிருமிகளால் தாக்கப்படக் கூடியவர்கள்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

ஒரே நாளில்

**Saree Blouse**

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse)

தைப்பதற்கும் அழையுங்கள்.

**416 264 6400**

# The Power To Cure...

13ம் பக்கத் தொடர்ச்சி...

பயன்படக் கூடியது. அதாவது எந்த தொழிலைச் செய்யவேண்டும் என்ற வரைமுறை அற்ற போதிலும் தொழில் வகுக்கப்பட்ட கலங்களை உருவாக்கித் தருதலைச் செய்யும் வல்லமை கொண்டது. இச் செயற்பாடு Differentiation என அழைக்கப்படும். (இதயத்தின் கலங்களுடன் சேர்ந்து அவற்றினைப் போன்ற கலங்களை உருவாக்கிக் கொடுப்பது) இவ்வாறான தொழில் முறைகள் அல்லது மாற்றங்கள் எவ்வாறு ஏற்படுத்தப் படுகின்றன என இன்னமும் ஆராய்வுகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு கலத்துள்ளும் நடைபெறும் நிகழ்வுகள் DNAஇலுள்ள பரம்பரை அலகுகளினால் கட்டுப்படுத்தப் படுகின்றன. கலத்துக்கு வெளியே நடைபெறும் நிகழ்வுகள் சுற்றுப் புறக் காரணிகளான மற்றைய கலச் சுரப்புகள், அருகாமையில் அல்லது முட்டிக் கொண்டிருக்கும் கலங்கள், கலத்தினைச் சுற்றி இருக்கும் வேறு பதார்த்தங்கள் போன்றவற்றினால் கட்டுப்படுத்தப்படும். வேறு வகையினைச் சேர்ந்த கலங்கள் இவ்வாறுதான் Stem Cellsஇனைப் பாவித்து உருவாக்கப் படுகின்றன. Stem Cellsகளுக்கு DNA அலகுகள் இல்லாதபடியினால் அவை மற்றைய புறக் காரணிகளுக்கேற்ப தொழிற்படுகின்றன. இந்த கலங்கள் முழுமையாக வளர்ச்சியடையாமல் இருப்பதால், நோயாளி உடலில் செலுத்தும் போது, நோய்வாய்ப்பட்ட கலங்களால், இதனை அறிந்து கொள்ள இயலுவதில்லை. அதனால் நோய் இந்த கலங்களுக்கு பரவுவதில்லை. அதேபோல் முழுவளர்ச்சியில்லாததால், இக் கலங்களால் நோயாளிக்கு வேறு எந்த வகையான வியாதியையும் கொண்டு செல்ல இயலாது. எனவே இவ்வகையான கலங்கள் மிகவும் பாதுகாப்பானவை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தொப்புள்கொடியில் இருக்கும் இரத்ததிலிருந்து நிறைய Stem Cellகளை பிரித்தெடுக்க இயலும் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இவ்வகையான Stem Cells எலும்பு மச்சை மற்றும் வழக்கமான இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கும் Stem Cellகளை விட மிகச் சிறந்தது என்றும், இந்த வகை Stem Cell களை உபயோகிக்கும் போது நோயாளியின் செல்கள் பெரும்பாலும் இதை நிராகரிப்பதில்லை என்றும் கண்டறிந்துள்ளனர்.

இருதய நோய்களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு அவர்களுடைய தொப்புள் கொடியிலுள்ள ஸ்ரெம் செல்லினைப் பாவித்தே புதிய வால்வுகள் உருவாக்குவதற்குரிய வசதிகள் இன்னும் சில காலத்தில் கிடைத்து விடும் என ஜேர்மன் ஆய்வுஒன்று கூறுகின்றது. அதே குழந்தையின் மூல உயிரணுக்களைப் பாவிப்பதால் ஒவ்வாமை ஒன்னும் எதிர்காலத்தில் இருக்காது என முனிச் (Munich) மருத்துவமனையில் இதய சிகிச்சை நிபுணராக இருக்கும் டாக்டர் ரால்ப் சோடியன் Dr. Ralf Sodian, (cardiac surgeon at the University Hospital of Munich.) என்பவர் கூறியுள்ளார். மேலும் செயற்கை வால்வினையோ அல்லது வேறு மாற்றீட்டு வால்வினைப் பொருத்தும் போது பிள்ளைகளின் வளர்ச்சிக் கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்பட வேண்டி தேவை இருக்கும் ஆனால் இவ்வாறு உயிரணுக்களினால் உற்பத்தி செய்யப்பட்ட வால்வுகள் குழந்தை வளரும் போது அதற்கேற்ப வளரக் கூடியவை. ஆனாலும் இதிலுள்ள நடை முறைச் சிக்கல் என்னவெனில் கருவிலேயே குழந்தையின் வால்வில் பிரச்சனை இருக்கும் எனத் தெரிந்தால் தான் இந் நடைமுறைக்கு சாத்தியக் கூறுகள் அதிகம்.

ஸ்பெயின் நாட்டில் Virgen del Rocio hospital in Sevilla என்னும் மருத்துவமனையில் உயிரணு ஆராய்ச்சி அடிப்படையில் செய்யப்பட்ட ஒரு சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது. பரம்பரையில் கடத்தப்படும் ஒரு வகை குருதிச் சோகையினால் (hereditary congenital anaemia,) அவதியுற்ற பையன் ஒருவருக்கு அவருடைய சகோதரனின் உயிரணுக்கள் கொடுக்கப்பட்டு அவரது நோய்க்கு முடிவு காணப்பட்டது.

உலகின் முதலாவது இருதய முளைய மூல அணு (recipient of adult cardiac stem cells) சிகிச்சையினைப் பெற்றுக் கொண்டவர் Congestive heart failure (CHF) என்னும் நோயினால் பீடிக்கப்பட்ட 66 வயதுடைய Michael Jones என்பவராகும். University of Louisvilleஇல் இவ்விதமான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. Congestive heart failure (CHF) என்பது இதயத்தினால் குருதியுடன் அனுப்பப்படும் ஒட்சிசனின் அளவு குறைதல். (உடம்பின் பலபாகங்களுக்கும் இதயம் ஒட்சின் செறிவுள்ள குருதியினை அனுப்புதல் இதயத்தின் நோய்வாய்ப்பட்ட தன்மையினால் இழக்கப்படல்.) இதற்கு coronary artery disease, உயர் இரத்த அழுத்தம், நீண்டகால மதுபான அடிமைத்தனம், இதயத்தின் வால்வுகளில் பிரச்சனை என்பவை காரணிகளாக இருக்கலாம்.

### என்ன நோய்களுக்கு stem cells பயன்படுத்தப் படுகின்றது.

- **Alzheimer's disease –** நோயுள்ள ஒருவருடைய பிறப்புரிமையியல் அலகுகள் புதிய மருந்து வகைகளின் ஆராய்ச்சிக்கு பாவிக்கப் படுகின்றன. (stem cells with the genes for Alzheimer's may help scientists test new drugs.)
- **Arthritis –** பாதிக்கப்பட்ட அல்லது பழுதுபட்ட மென்சவ்வுகள் முளைய மூல உயிரணுவின் உதவியினால் புதிதாக உருவாக்கப்பட்ட மெச்சவ்வுகள் அல்லது மென் எலும்புகளினால் மாற்றீடு செய்யப் படுதல் (damaged cartilage could be repaired with new cartilage grown from stem cells.)
- **Burns –** எரி காயம் ஏற்பட்ட நோயாளிகளுக்கு முளைய மூல உயிரணுவினால் புதிய தோல் உருவாக்கம் செய்யப்பட்டு எரிந்த தோல் புதுப்பிக்கப்படும். இதனால் skin grafting செய்யத் தேவையில்லை.
- **Type 1 Diabetes –** இன்சுலின் தொழிற்சாலை எனப்படும் Beta cellsகளை நீரிழிவு நோயாளிகளுக்கு உருவாக்குவதற்கு பாவிக்கப்படுகின்றது.
- **Parkinson's disease —** மூளையிலுள்ள dopamine-producing nerve cells சரியாக தொழிற்படாத காரணத்தால் அல்லது பாதிக்கப்படுவதால் Parkinson's நோய் ஏற்படுகின்றது. Stem cellsஇனைப் பாவித்து இதற்கு தீர்வு காணலாம் என ஆய்வுகள் கூறுகின்றன.
- **Spinal cord injuries —** விபத்துக்களாலோ அல்லது வேறு காரணங்களாலோ பாதிக்கப்பட்ட முள்ளந்தண்டுக்குரிய கலங்களை ஆரோக்கியமான stem cellsஇனை உட்புகுத்தி சீர் செய்யலாம்.
- **Replace dysfunctional bone marrow and Destroy unhealthy bone marrow that may contain cancer cells:** சில வகையான குருதிச் சோகை நோய்கள் எலும்பு மச்சையிலுள்ள குறைபாட்டின் காரணமாக ஏற்படுகின்றன. இதனால் எலும்பு மச்சையானது தேவையானளவு குருதிக் கலங்களை உருவாக்குதல் தடைப்படும். இச் சந்தர்ப்பத்தில் எலும்பு மச்சையினுள் புதிய மூல உயிரணுக்களைச் செலுத்தி இக் குறைபாடு நிவர்த்திக்கப்படும். (For instance, in aplastic anemia, a noncancerous condition, your bone marrow doesn't make enough new blood cells.)

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***


இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Ervamatin POWER
Dreamron HENNA
Treated Natural Henna
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA & Gift
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)


SOLD
Middlefield and Finch
5 Years New, Largest 3 Bedroom All Brick End Unit in The Complex, Avon Model with 1728 Sq.ft. plus Unspoiled Basement, Close to all Amenities plus 24 Hour TTC, Separate Shower Room in the Master Bedroom, R/I For Central Vac, 5 Appliances, CAC
Price $ 319,000
SOLD
Staines Road and Finch
5 Years New 5 Bedrooms Detach Home, Pie Size Lot, Hardwood Floor in Main Floor, 2 car Garage, Separate entrance to Basement, 4 Appliances
Price $ 379,000
விற்பனைக்கு...
விற்பனைக்கான உங்களது வீட்டினை இங்கே காட்சிப்படுத்தி அதற்கான அதி கூடிய விலையினை பெற்றுக் கொள்ளுங்கள்.
SOLD
SOLD
SOLD
Ninth Line & 16th Ave
Excellent 3 Bedroom Mattamy Built Semi In Cornell Village, Premium Lot, Brick Built, 9' Ceiling, Oak Stairs, Double Detached Garage & Extra Double Parking, Sprinkler System, Interlocking Patio & Walkway, Main Floor Laundry, Finished Basement with Wet Bar, Newer Paint, Easy Access to Hwy 407, Cornell Public School, Park & Hospital; Extras: Fridge, Flat Top Stove, B/I Dishwasher, Washer, Dryer, All Electrical Light Fixtures, Central Air Conditioning, Central Vacuum and all accessories, Humidifier, All Window Coverings (Except Main Floor). Lot Size: 22' x 148' feet, Taxes: $3,181.13 (2008)
Price $ 369,000
Brimley and Denison
Lowest in the Market! Fabulous and Bright 3-Bdrm Home in a Great Neighbourhood. Close to School, TTC, Pacific Mall, Shopping and all other Amenities. Excellent Move-In Condition. No Sidewalk - 4 cars can be parked in the Driveway. Motivated Vendor! 4 Appliances, CAC
Price $ 289,000
McCowan and Sheppard
Approx. 1600 Sq. Ft. Spacious Suite, Well Managed Condo With Many Facilities. Close to 401, TTC, School. 24 Hour Security. Split Bedrooms. Separate Shower Stall and Tub Ensuite for Master Bedroom. 5 Appliances, CAC
Price $ 189,000
COLDWELL BANKER
Exceptional Real Estate Services, Brokerage
3107 Sheppard Ave East
Toronto, ON. M1T 3J7
Office: 416-497-9794
தொடர்புகளுக்கு
V. Logan, Broker
Direct Line:
416-410-1620 (24hrs)
vlogan599@yahoo.com

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....




Oshawa
$349,888

$169,500
Hurontario / Dundas
1+2 Bedrooms 1 Washroom

$245,000
Morningside/Sheppard
3 Bedroom 2 Washroom
Hardwood Floor, Finished Basement

$237,500
Townline & Adelaide
3Bedrooms 3 Washroom
Part Finished Basement


$269,900
Morningside & Finch
3+2 Bedrooms 4 Washroom

$319,500
Hwy 10 / Dundas
3 Bedrooms 3 Washroom
Finished Basement

$334,900
Warden & St.Clair
2+1 Bedrooms 2 Washroom

$339,000
Morningside & Staines
3 Bedrooms 3 Washroom

$349,900
9 th Line & Hoover Park
3 Bedrooms 3 Washroom



$369,900
Mccowan / Steels Ave
3+2 Bedrooms 3 Washroom

$359,900
Hwy10 / Steeles
4+2 Bedrooms 4 Washroom

$1,150,000
Yonge/Sheppard
4 Bedrooms 4 Washroom
Finished Basement w/o

$479,900
14 th & McCowan
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement W / O

Looking for New & Experienced Sales Rep. Please Contact Us...

Ravi Logarajah B.Sc.
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative

Call : 416-843-7474

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

BUS: 416-298-3200 / FAX: 416-298-3440



# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

invis

**Siva Ratnasingam**
*Lic: M08002133*
Mortgage Consultant
***2005,2006,2007,2008 Diamond Award Winner***
**416.430.0111 ext:1**
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



**வீடு, காணி** (Residential Properties and Land)
**வர்த்தகவியல்** (Commercial, Corporate and Business)
**சகல வங்கிகளுடைய பலவிதமான ஈடு** (Mortgage) **சம்பந்தப்பட்ட**
**துல்லியமான சட்ட தேவைகளுக்கு**
**நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சட்ட நிலையம்.**

# யசோ சின்னத்துரை

**கனடிய சட்டத்தரணி**
**மூன்று சகாப்தத்திற்கு மேலான சட்ட அனுபவம்**
**கனடாவில் 16 வருடங்கள் ஆழ்ந்த அனுபவம் நிறைந்த சேவை.**

**The Law Offices of:**

# Yaso Sinnadurai

**Barrister and Solicitor, Notary Public**

**Over 16 Years of Canadian Experience**
in the areas of Residential and Commercial Real Estate Law
and Business and Corporate Law.

- **Real Estate Law Residential and Commercial**
  - Purchase and Sale of Properties
  - Transfers of Title
  - Mortgages, Refinancing, Mortgage Enforcements
- **Business and Corporate Law**
  - Purchase, Sale, Transfer of Business Assets/Shares
  - Lease Review and Representation
  - Incorporation, Partnership and Shareholders Agreements
- **Alternative Dispute Resolution (ADR)**
  - Conflict resolution by ADR on all civil matters

**Please call for appointments at**

## 416.265.3456

**2100 Ellesmere Road, Suite 202, Scarborough**

**OUR MISSISSAUGA CONSULTATION OFFICE WILL BE RELOCATED TO**
**3024 HURONTARIO ST, SUITE 216** (Dundas and Hwy 10)
(Building next to our earlier location; telephone number 905-306-1100 remains the same)

**எமது மிசிசாகா அலுவலகம் முன்பு இருந்த நிலையத்திற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்திற்கு ஆவணி மாத பிற்பகுதியிலிருந்து மாற்றப்பட்ட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.**

ஆழத்து முத்துக்கள்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

# நடிகநாதமணி அல்வாய் மு.செ.விவேகானந்தன்

அல்வாய் என்ற கிராமம், பாரம்பரிய கலைகளிலும், விளையாட்டுத்துறையிலும் பிரபல்யம் பெற்றது. நடிகமணி வி.வி. வைரமுத்து, மு.செ. விவேகானந்தன், கே.வி. ரத்தினம், வி. நற்குணம் போன்ற பல புகழ்பெற்ற கலைஞர்கள் இங்கு தங்கள் திறமைகளை நாடகஅரங்கிலே வெளிக்காட்டியிருக்கிறார்கள். வருடந்தோறும் இவ்வூர் ஆலயங்களிலே கூத்துக்கள், இசைநாடகங்கள், சிந்து நடைக் கூத்துகள், என்பனவற்றோடு அண்மைக்காலத்தில் நவீனநாடகங்களும் மேடையேறின.

கூத்தில் ஹரிச்சந்திரன், பூதத்தம்பி, காத்தவராயன், இவைகளை விடிய விடிய தூங்கித் தூங்கித்தான் பார்த்து ரசித்த ஞாபகம் இருக்கிறது. நடிகமணி வைரமுத்து அவர்களுடைய நடிப்பில் ஆழ்ந்து மிகவும் ரசிப்போம். அவரே கணீரென்ற குரலில் உச்சஸ்தாயியில் பாடி நடிப்பார்.

அவருடைய காலங்களிலேயே ஒரு சிறந்த கூத்து நடிகர் இருந்தார். அவர்தான், அவ்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா அவர்களுடைய மகன் விவேகானந்தன்.

தந்தையான கவிஞர் செல்லையா அல்வாய்க் கிராமத்தின் கலையுலக முன்னோடியாகத் திகழ்ந்தவர். தன் கிராமத்தின் கல்வி உயர்வுக்காக அரும்பாடுபட்ட இவர் இலங்கை வானொலி நடத்திய கவிதைப்போட்டியிலே தங்கப்பதக்கம் பெற்றவர்

சிறுவயதிலேயே சிறப்பாகப்பாடும் திறன் வாய்த்திருந்த விவேகானந்தன், அவரது தந்தையார் எழுதி, இசையமைத்துக்கொடுத்த பாடல்களை பாடிப்பிரபலமானார். கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியிலே பலவருடங்கள் இவரோடு ஒன்றாகப் படித்ததோடு, உயிர் நண்பனாக விளங்கிய கே.எஸ்.பாலச்சந்திரன், தனது நண்பனின் குரலினிமையை, நடிப்புத் திறனை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் பாராட்டிச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

இவர் தென்னிந்தியாவில் இசைகற்பதற்காக சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் வேளையில், தந்தையார் இறந்துவிடவே படிப்பைத் தொடராமல் நாடு திரும்ப நேர்ந்தது. சிறந்த சங்கீதவித்வானாக வரவேண்டியவர், தொடர்ந்து நாடகத்துறையில் கால் பதித்தார்.



'நடிக நாதமணி' என்று அழைக்கப்பட்ட மு.செ.விவேகானந்தன் தான் ஆரம்பித்த நாடகமன்றத்திறகு தந்தையாரின் ஞாபகமாக 'அவ்வாயூர்க்கவிஞர் நாடகமன்றம்' என்றே பெயரிட்டிருந்தார். விவேகானந்தனின் நடிப்பு, குரல்வளம் அபாரம். இவருடைய திறமைக்கு குடும்பம், தகப்பனாருடைய தமிழ் அறிவு, மற்றும் இவர் பிறந்த ஊர், நல்ல கலை ஆர்வம் மிக்க மக்களின் ஆதரவு என்பன காரணமெனலாம்.

எனது சிறியவயதில், என் பெரியதந்தையான வானொலிக்கலைஞர் வேதாரணியம் ஆசிரியர் அவர்களுடன், சங்கீதத்தின் நுட்பங்கள் பற்றி கதைத்துக்கொள்வதற்காக எங்கள் வீட்டிற்கு வரும்போது, அவரைப் பார்த்திருக்கிறேன்.

பின்னர் அவருடைய காத்தவராயன் கூத்து பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. விடிய, விடிய நடந்த கூத்தை, பாடல்கள், ஆடல், வசனம் என்பனவற்றுடன் சுருக்கமாக ஒரு மணித்தியாலத்துள் அமைந்த சிந்துநடைக் கூத்தாக வழங்கினார். குரல் பிசிறு இல்லாமல் பாடல்கள் பாடி நடிப்பார். மேடை நடிப்புக்கு உடல் அமைப்பும் முக்கியம். அதுவும் அவருக்கு அமைந்திருந்தது.

இவருக்கு சோடியாக பெண் பாத்திரத்தில் நடிப்பது இவரது மனைவியே. சிவகுரு வாத்தியாருடைய மகளான இவரும் அல்வாயைச் சேர்ந்தவர். மனையாளும் அவருக்கு ஈடுகொடுத்து இணையாக நடிப்பார். ஒரு கலைஞனுக்கு ரசனையுள்ள மனைவி அமைந்தாலே போதும். ஆனால் இவருக்கு பாடி நடிக்கும் ஆற்றலுள்ள மனைவி கிடைத்ததே பெரும் பாக்கியம்.

இவரது 'காத்தவராயன்' சிந்துநடைக்கூத்து, வெளிமாவட்டங்களில், குறிப்பாக கொழும்பில் பலதடவைகள் மேடையேறியுள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தார், இந்த நாடகத்தை ஒலிப்பதிவுசெய்து பலதடவைகள் ஒலிபரப்பியதோடு தங்கள் பவளவிழாவையொட்டி வெளியிட்ட சிறப்பு இறுவட்டுகள் பத்தில் ஒன்றாக இந்த நாடகத்தையும் வெளியிட்டார்கள். இலங்கை ரூபவாகினியும் இந்த நாடத்தை பலதடவைகள் ஒளிபரப்பியது.

மு.செ.விவேகானந்தன் பாடிய மெல்லிசைப் பாடலான "அழகுநிலா வானத்திலே பவனி வரும் வேளையிலே" வானொலி நேயர்களை மிகவும் கவர்ந்த பாடலாகும். மண்டூர் அசோகா இயற்றிய இந்தப்பாடலுக்கு ஆர். முத்துசாமி இசையமைத்திருந்தார். இவர் பாடிய பக்திப்பாடலான "வேவிலந்தை பதியிலமர் முத்துமாரி" என்பதும் இனியதோர் பாடலாக அமைந்திருந்தது.



எஸ்.சிவனேசன்

இந்த புகழ்பூத்த கலைஞன் மறைந்துவிடடாலும், அவரோடு நடித்த பல கலைஞர்கள் தொடர்ந்தும், அவர் நினைவோடு கூத்துக்கலையை பேணிவருவது ஆறுதல் தருகிறது.

sivanesan.s@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■



# வீட்டு பராமரிப்பு செயல்குறிப்பு அட்டவணை

## வீடும் விடியலும் - 42

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



### ஒழுங்கான பராமரிப்புத்தான் ஒரு வீட்டின் மூலாதாரம்

ஒழுங்கான முறையில் உங்கள் வீட்டை கண்காணிப்பதும் மற்றும் சிறந்த பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதும்தான், உங்கள் வீட்டிற்கு நீங்கள் போட்ட முதலீட்டை காப்பாற்றுவதற்குரிய மிகச்சிறந்த வழி. நீங்கள் ஒரு நேரத்தில் ஒரு சில வேலைகளை அல்லது பல வேலைகளை ஒரே தடவையாக செய்து முடிக்க வேண்டும் என்று நினைத்தாலும் இரண்டு வகையிலும் அவைகளை செய்துமுடிக்கும் பழக்கத்தை உண்டாக்குவது தான் மிகமுக்கியமானது ஆகும். உங்களுக்காக ஒரு வழக்கமான வேலை முறையை உருவாக்கி கொள்ளுங்கள். வேலை செய்வது மிகவும் சுலபம் மற்றும் அது மிகவும் நேரத்தை செலவழிக்கும் விஷயம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். பருவத்துக் கேற்றபடி மாறும் வீட்டு பராமரிப்பு செயல் குறிப்பு அட்டவணையைத் தயாரித்து அதை ஒழுங்காக பின்பற்றினால் மிக சாதாரணமான செலவுடன் வீட்டைப்பராமரிக்கலாம். செலவு அதிகமாகும் பிரச்சினைகளை அவை ஏற்படுத்துவதற்கு முன் நீங்கள் ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியும். தேவைப்பட்டால், பின்னால் வரும் ஒரு சூழ்நிலையின் வேலைகளை கண்காணிப்பதற்கும், செய்து முடிப்பதற்கும் தேவையான அறிவுரைகளை ஒரு வல்லுனரிடமிருந்து பெறுவதற்கு வசதியாக ஒரு புகைப்பட கருவியை கொண்டு நீங்கள் விரும்பிய எந்த படங்களையும் எடுங்கள்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை பின்பற்றுவதினால், நீங்கள் செலவிட்ட முதலீட்டை காப்பாற்றுவது பற்றியும் மேலும் உங்கள் வீட்டை ஒரு பாதுகாப்பான மற்றும் வாழ்வதற்குகேற்ற ஆரோக்கியமான ஒரு இடமாக மாற்றுவது பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில வீட்டுப்பராமரிப்பு வேலைகளை செய்வதற்கு நீங்கள் சிரமப்பட்டால் அல்லது உங்களிடம் தேவையான, உதாரணமாக ஒரு ஏணி போன்ற உபகரணங்கள் இல்லையென்றால், ஒரு தகுதி வாய்ந்த கைத்திறன் மிகுந்த ஒரு மனிதரை உங்களுடைய பணியாளராக உங்களுக்கு உதவ நீங்கள் நியமித்துக் கொள்ளுங்கள்.

### பருவத்துக்கேற்றபடி வீட்டு பராமரிப்பு வேலைகளை செய்தல்

அனேகமான வீட்டு பராமரிப்பு வேலைகள் எல்லாம் பருவகாலம் சம்பந்தமானது. வரப் போகும் இலையுதிர்காலத்திற்குரிய வேலைகளை செய்து முடிப்பதற்கு கோடை காலம் தான் சரியான நேரம். உங்கள் வீட்டில் எதாவது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதா என்பதை கவனமாக சோதனை செய்து மற்றும் வெகுசீக்கிரத்தில் அவைகளை சரிபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். வழக்கமான வீட்டு பராமரிப்பு செயல் முறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டியது முக்கியம்.

### கோடைகாலம்

- அடித்தளத்தின் ஈரப்பதத்தை கண்காணியுங்கள். மேலும் ஈரப்பதத்தின் அளவுகள் 60 சதவிகிதத்துக்கும் மேல் ஆவதை தடுத்து விடுங்கள். பாதுகாப்பான ஈரப்பதத்தை வைத்துக்கொள்வதற்கு ஒரு ஈரத்தை அகற்றும் கருவியை (Dehumidifier) பயன்படுத்துங்கள்.
- அடித்தளத்தில் இருக்கும் குழாய்களில் குளிர்ந்த நீர் தேங்கிவிடாமலும் மற்றும் சொட்டு சொட்டாக வடியாமலும் பார்த்துக் கொள்ளுங்கள். சரிபடுத்தக்கூடிய செயல்களை மேற்கொள்ளுங்கள். உதாரணமாக ஈரப்பதத்தை குறையுங்கள். அல்லது குளிர்ச்சியான தண்ணீர்க் குழாய்களுக்கு வெப்பகாப்பு (insulate) செய்யுங்கள்.
- அடித்தளத்தின் தரையில் உள்ள சாக்கடை குழாயின் trapல் நீர் உள்ளதா என்பதை பாருங்கள். தேவைப்பட்டால் தண்ணீர் ஊற்றுங்கள்.
- கம்பளி விரிப்புகள் மற்றும் தரைவிரிப்புகளை நன்றாக சுத்தம் செய்யுங்கள்.
- குளியலறை விசிறியின் தடுப்பை (grill) துப்பரவு செய்யுங்கள்.
- உலரவைக்கும் கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு உட்பட குழாயின் 'லிண்ட்துணி', உங்கள் ஆடைகளை உலரவைக்கும் சாதனத்தை சுற்றியுள்ள இடங்கள் மற்றும் வெளிப்புறத்திலுள்ள உங்கள் உடை உலரவைக்கும் சாதனத்தின் வெளியேற்று வழி ஆகியவற்றை துப்பரவு செய்யுங்கள்.
- அனைத்து guardrails & handrailsகளின் பாதுகாப்புத் தன்மையை சோதனை செய்யுங்கள்.
- அனைத்து ஜன்னல்களும் சுலபமாக இயங்குவதற்கு எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள்.
- கண்ணாடி சட்டங்களின் வெளிப்பக்கம் இருக்கும் ஜன்னல் Putty/ Caulkingகளை கண்காணியுங்கள். தேவைப்பட்டால் மாற்றி அமையுங்கள்.
- கதவுகளின் கீல்களில் எண்ணெய் அல்லது கிரீஸ் தடவுங்கள். மேலும் ஸ்குரூ ஆணிகளை இறுக்கமாக முறுக்குங்கள்.
- வண்டிக் கொட்டகையின் (Lubricate garage door) கதவில் உள்ள இரும்பு சாதனங்களில் கிரீஸ் அல்லது எண்ணெய் தடவுங்கள். அது நல்ல முறையில் இயங்கும்படிச் செய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகையின் தானே திறக்கும் கருவியின் மோட்டார், சங்கிலி, ஆகியவைகளில் எண்ணெய் அல்லது கிரீஸ் போடுங்கள். மேலும் தானே பின்புறம் செல்லும் செயல் நுட்பம் சரிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யுங்கள்.
- வண்டிக்கொட்டகை மற்றும் வீட்டிற்கு இடையே உள்ள கதவு உள்ளிட்ட ஜன்னல்கள் மற்றும் கதவுகளை சுற்றியுள்ள இடத்தில் உள்ள Caulking/weather stripes போன்றவைகளை சோதனை செய்யுங்கள் மற்றும் மாற்றியமையுங்கள்.
- உங்கள் வீட்டிற்குள் நுழையும் மின்கம்பி இணைப்புகள் பாதுகாப்புடன் உள்ளனவா என்பதை கண்காணியுங்கள். மேலும் மின் கம்பிகள் செல்லும் குழாய்களின் மீது தண்ணீர் கசிவுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.
- வெளிப்புறத்திலுள்ள மரப்பலகையிலான பக்கப்பாதை (Siding) மற்றும் trimings சேதமடைந்துள்ளனவா என்பதை பாருங்கள். அவைகளை சுத்தப்படுத்துங்கள். தேவையானால் மாற்றியமையுங்கள் அல்லது வேலைப்பாடுகளுடன் மீண்டும் புதுப்பியுங்கள்.
- வெளிப்புறத்தில் ஏதாவது ஓட்டைகள் இருந்தால் அதை அடைத்து விடுங்கள். ஏனென்றால் எலி போன்ற சிறிய பிராணிகள் வீட்டினுள்ளே அதன் வழியாக நுழைந்து விடும்.
- பக்கப்பாதை அல்லது செங்கல், கூரை ஆகியவற்றை தொடும்மரம் அல்லது ஊடுருவும் வேர்கள் ஆகியவற்றை அகற்றி விடுங்கள்
- உங்கள் கூரையின் மேல் ஏறி அல்லது பைனாகுலர்களை பயன்படுத்தி கூரையின் பொதுவான நிலையை சோதனை செய்யுங்கள். பாரம் தாங்காது கூரை வளைந்து அல்லது தொய்ந்து போயிருந்தால், கூரையின் கட்டமைப்பில் பழுதுகள் ஏற்பட்டுள்ளன என்று அர்த்தம். கூரையில் மேல்மாடி அறையில் உள்ளே இருந்து புலனாய்வு செய்தால்தான் கூரையின் நிலைமையைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள முடியும். கூரையின் அனைத்து மரப்பலகைகளையும் சோதனை செய்யுங்கள். பழுதுகள் ஏதாவது இருந்தால் சரிப்படுத்துங்கள் அல்லது அவைகளை மாற்றியமையுங்கள். புகைபோக்கி மற்றும் கூரை இணைப்புகள் போன்ற அனைத்து கூரைப்பகுதிகளிலும் ஏதாவது பிளவுகள் அல்லது கசிவுகள் உள்ளனவா என்பதை சோதனை செய்யுங்கள்.
- ஏதாவது விறகு அடுப்பு அல்லது கணப்பு அடுப்புடன் இணைக்கப்பட்டுள்ள புகை போக்கிகளை துப்பரவு செய்யுங்கள். பருவ காலத்தின் இறுதியில் அவைகளில் ஏற்படும் பிரச்சினைகளை கண்காணியுங்கள்.
- புகை போக்கியின் மூடி மற்றும் புகை போக்கி மற்றும் மூடிக்கிடையே உள்ள Caulking பூசி அடைக்கப்பட்டிருக்கும் ஓட்டையை சோதனை செய்யுங்கள்.
- வாகனப்பாதை மற்றும் நடைபாதைகளில் உள்ள பழுதுகளை தீருங்கள்
- பாதுகாப்புக்கு பிரச்சினையாக ஏதாவது சேதமடைந்த படிகள் இருந்தால் அவைகளில் பழுதுகளை தீருங்கள்.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca



For Buying and Selling
Commercial, Residential & Investments...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Sales Representative
3321 McNicoll Ave,
Toronto, ON M1V 5B3
Tel: 416 291 3000
Fax: 416 298 9963
PROPERTY MAX Realty Inc. Brokerage
For Listing Lowest Commission Starting from 1%



$355,000



Markham/Elson
$379,900



Mccowan/14th
$419,800



Brimley/Denison
$437,900



Denison/Fonda/Markham
$459,000



Middlefield/Denison
$478,900



Markham / 14th
$529,900




9th Line & 14th Avenue
$549,900



Markham/14th Ave
$554,000



14th Ave/Markham


Want To Buy A Home In Your Budget?
399,900
Bovaird/Fernforest
212,900
Hwy10/Central Parkway
210,000
Finch/Middlefield
599,000
Woodbine/16th Ave
418,000
Highglen/Mccowan
224,900
Hwy 403/Hurontario
*THIS WEEKS HOT DEAL*
509,900
14th Ave/9th Line
"Your Satisfaction Is My Success..."
MANGA ARUNASALAM
Real Estate Broker
Commercial & Residential
HomeLife/Landmark Realty Inc. Brokerage
HOMELIFE
Independently Owned & Operated
5200 Finch Avenue East, Suite 206
Scarborough, ON M1S 4Z4
CELL: (416) 816 8775
TEL: (416) 293 5093
RES: (905) 944 9604
FAX: (416) 293 5237


Buy / Sell Properties Call Kirew
Fairview & Hwy 10
4+2 Bedrooms, 3 Washroom
$359,900
Kennedy & Steels
3+2 Bedrooms, 4 Washroom
$389,000
16th & Old Markham by pass
3 Bedrooms, 3 Washroom
$309,000
McCowan & 14th
3 Bedrooms, 4 Washroom
$379,900
16th & 9th Line
3 Bedrooms, 3 Washroom
$314,900
Brimley & Lawrence
3 Bedrooms, 2 Washroom
$269,900
Lawerence / Scarb.Golf
3+2 Bedrooms, 2 Washroom
$287,900
Brimley & Eglinton
3+2 Bedrooms, 2 Washroom
$334,500
Hurontario & Central Pkwy
3+2 Bedrooms, 2 Washroom
$335,000
Hurontario & Dundas
1+2 Bedrooms, 1 Washroom
$169,500
Mavis & Dundas
3 Bedrooms, 3 Washroom
$373,900
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd. Brokerage*
Phone : 416-298-3200
Cell : 416-903-4663
Kirew Kanagasabai
Broker of Record
Kirewk@yahoo.com
31 Progress Ave. Suite 210,
Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR

# பெருவாசகம்

## குமார் புனிதவேல் பக்கம்

அண்மையில் நான் கணனி இணையத்தளத்தில் ஒரு சுவையான ஆழ்ந்த கருத்துள்ள வாசகத்தை படித்தேன். இங்கு அதை உயர்ந்த வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். அப்படி என்னை கொள்ளை கொண்ட வாசகம்,

'இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்
மனிதன் மனிதனுக்குச் சொன்னது குறள்'.

இந்த வாசகம் நிச்சயமாக உங்களையும் கொள்ளை கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த இனிய இளவேனிற் காலத்தில் மாலை வேளையில் உலாச்செல்லும் வேளையில் எனது உள்ளம் இந்த வாசகத்தை இரைமீட்டது. எண்ண அலைகள் மோதி மோதி கொஞ்சம் கொஞ்சமாக சுனாமியாகவே மாறிவிட்டது. அது எனது மனதில் அழியாத கோலமாக சுவடு பதித்தது.

இந்த வாசகத்தில் சொல்லப்பட்டது, சொல்லப்படது என்று மூன்று விடயங்கள் கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்படி சொன்னதை சொல்லப்பட்டவர்கள் கேட்டார்களா என்று சிந்தித்தேன். முதலாவது வாசகமான 'இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை என்ற வாசகத்தை எடுத்தால் அந்த வாசகத்தை இறைவன் அருச்சுனனுக்குச் சொன்னான். அவ்வேளை அருச்சுனன் காண்டீபத்தை கைநழுவவிட்டு கைகட்டி வாய்பொத்தி கண்ணா! கோவிந்தா! நீயே கதி' என்ற போது அவனில் இரங்கிய இறைவன் அருச்சுனனுக்கு அறிவுரை சொன்னான். அருச்சுனனும் அதைக் கேட்டான் பயன் பெற்றான்.

இப்படி இறைவன் மனிதனுக்கு மீண்டும் மீண்டும் அறிவு சொல்லி வந்துள்ளான். ஆனால் அவர்கள் கேட்டார்களா? யூதர்களுக்கு கபாலாவில் சொல்லிவைத்தான். கிறிஸ்தவர்களுக்கு தனது குமாரனாகிய யேசுவின் வாயினூடாக மலைப்பிரசங்கத்தில் கூறிவைத்தான். இசுலாமியர்களுக்கு நபிகள் நாயகம் ஊடாக குரானில் கூறிவைத்தான். பௌத்தர்களுக்கு அபிதர்மாவில் அழகு நடையில் கூறிவைத்தான். இவை அனைத்திலுமிருந்து மனிதன் பயனடைந்தானா? அருச்சுனனைப்போல் கேட்டு அதர்மத்தில் ஏற்றமும் உயர்ச்சியும் வளர்ச்சியும் அடைவதற்கு கேட்கத் தயாராக இருக்க வேண்டும். இறைவன் சொல்வதை மனிதன் கேட்கத் தயாராய் இல்லை என்பதுதான் உண்மை. மனிதன் தான் விரும்புவதைத்தான் கேட்கிறானே அன்றி சொன்னதை கேட்கவில்லை.

இந்துக்கள் தேவாரத்தையும் திருவாசகத்தையும் படிப்பார்களே அன்றி பைபிலையோ குரானையோ படிக்கமாட்டார்கள். அதேபோல் தான் மற்ற மதத்தவர்களும். அப்படிப்படித்தால் பாவம், நரகம் கிட்டும் என்ற எண்ணமுடையவராயிருப்பர். மேலும் பொதுவுடமைவாதி பொதுவுடமை கருத்துக்கள் கொண்ட செய்தித்தாளை விரும்பிப்படிப்பர் ஆனால் முதலாளித்துவத்தில் உள்ள நல்ல கருத்தை பெறத்தவறிவிடுவர். கேட்கத்தயாராய் இல்லாத போது கொடுப்பதில் அர்த்தமில்லை. அதனால் தான் யேசுபிரானும் கேளுங்கள் தரப்படும் என்றார்.

யூதர்களுக்கு கபாலாவில் சொன்னதை கேட்டுவாழ்ந்தால் இன்று பலஸ்தீன மக்களை இவ்வளவுதூரம் அடக்குமுறையை புகுத்தி இருப்பார்களா? அல்லது இறைவனின் குமாரன் மலைப்பிரசங்கத்தில் கூறிச் சென்றதை கேட்டிருந்தால் அயர்லாந்தில் கிறிஸ்தவர்கள் கத்தோலிக்கர்களுடன் கை கலப்பில் ஈடுபட்டிருப்பார்களா? மேலும் நபிகள் நாயகம் சொல்லிச் சென்றதை காதில் கேட்டுக்கொண்டிருந்தால் ஈராக் நாட்டில் சியாக் முஸ்லிம்கள் சுன்னி முஸ்லிம்களை குண்டுவைத்து கொன்றிருப்பார்களா. அல்லது அபிதர்மாவில் அன்பே உருவான புத்தரின் போதனையை இலங்கைப் பௌத்தர்கள் செவிசாய்த்திருந்தால் இந்துக்கள் சிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் என்று எல்லோரையும் கொன்று குவித்திருப்பார்களா? எனவே முடிவாக சொல்லலாம் இறைவன் சொன்னதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கின் ஒலியே.

இனி நாங்கள் மனிதன் இறைவனுக்குச் சொன்னதை கவனிப்போம். காலத்துக்குக் காலம் மனிதன் இறைவனிடம் செய்த விண்ணப்பங்களை கேட்டு பல நன்மைகள் செய்துள்ளார். யேசுபிரான் கூறியதைக் கேட்டு முடவனை நடக்கவைத்தார். ஊமையை பேச வைத்தார். இன்னும் சம்பந்தர் சொல்கேட்டு இறந்தவர்க்கு உயிர் கொடுத்தார், சுந்தரர் விண்ணப்பத்துக்கு செவிசாய்த்து பொன் கொடுத்தார். எனவே இறைவன் மனிதன் சொல்வதை கேட்கத் தயாராயுள்ளான். ஆனால் மனிதன் தான் சொல்லத்தெரியாத ஊமையாயுள்ளான். இனி நாங்கள் அந்த வாசகத்திலுள்ள மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம் என்னும் வாசகத்திலும் சில எண்ண அலைகள் தோன்றின. அவற்றையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

உங்கள் எல்லாருக்கும் கீழ்க்கண்ட வரிகளை வாசிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா
எமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்பல
ஆயிடினும்
ஆரியம்போல உலகவழக் கழிந்தொழிந்து
சிதையாஉன்
சீரிளமை திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே'

மேலே தரப்பட்ட வரிகள் ராய்பகதூர் பெ.சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய 'மனோன் மணீயம்' என்னும் நாடகநூலில் தமிழ்தாய் சிறப்பில் கூறப்பட்டுள்ளது. சென்ற நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் காப்பிய அமைப்பில் எழுதப்பட்ட தமிழ் நாடக இலக்கியம் இது.

மேற்கூறிய நூலில் இரண்டுவரிகள் திருவாசகத்தையும் இரண்டுவரிகள் குறிப்பிடப் பட்டுள்ளது. அது:

கடையூழி வரும்தனிமை கழிக்கவன்றோ,
அம்பலத்துள்,
உடையாருன் வாசகத்தி லொருபிரதி
கருதினதே.

கடையூழி பிரளய காலம், அதாவது உலகம் ஒடுங்கும் நேரம். அவ்வேளையில் மனிதர் தேவர்கள் படைப்புகள் அனைத்துமே ஒடுங்கி விடுவார்கள். சக்தியும் சிவத்துடன் கலந்து விடும். எஞ்சி இருப்பது சிவமும் விடை எனும் தர்மமும் மட்டுமே என்பது சைவ சமயக் கோட்பாடு. இவ்வேளையில் தனிமை கழிக்க தனது தனிமையை போக்குவதற்கு சிவபெருமான். அம்பலம் அதாவது திருச்சிற்றம்பலமான தில்லையை உடையார் - உரிமையுடையவரான இறைவன் வாசகம் - திருவாசகம், திருவாசகம் தமிழில் இயற்றப்பட்டதால், தமிழாகிய உன்வாசகம் என்று தமிழன்னையை புகழுகிறார். ஒரு பிரதி கருதினது - ஒரு பிரதி எழுதிக்கொள்வதற்கு எண்ணம் கொண்டது. மாணிக்கவாசகர் மனமுருகி இறைவனை கேட்டது. அவருக்கு கேட்டபடியால் தான் அவர் மனித உரு எடுத்து திருவாசகத்தைத் தாமே, தமது திருக்கையால் திருவாசகத்தின் பிரதியை எழுதிக் கொண்டார்.

மீண்டும் 'மனோன் மணியத்தை', அந்த வாசகத்தைப் பார்ப்போம்.

கடையூழி வரும்தனிமை கழிக்கவன்றோ,
அம்பலத்துள்,
உடையாருன் வாசகத்தி லொருபிரதி
கருதினதே.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

# ஒன்ரேறியோ மாகா...

7ம் பக்கத் தொடர்ச்சி...

- வீட்டுரிமையாளரின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு தேவைப்படுதல்.
- வீட்டுரிமையாளர் அல்லது அவரின் குடும்ப அங்கத்தவர்கள் யாருக்காவது உடல் பராமரிப்பு சேவைகளை வழங்கும் ஒருவரை அந்த கட்டிட தொகுதியில் தங்க வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுதல்.

மேற்குறிப்பிட்ட ஏதாவது ஓர் காரணத்தை குறிப்பிட்டு வீட்டுரிமையாளர், வாடகை ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான அறிவித்தலை வழங்கி, அதன் பின்பு குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான உத்தரவை பிறப்பிக்கும்படி இயக்குநர் சபையிடம் விண்ணப்பிக்க முடியும். எனினும் இந்த உத்தரவு வழங்கப்பட்டாலும் வாடகை ஒப்பந்தக் காலத்தின் முடிவில் மட்டுமே குடியிருப்பாளரை வெளியேற்ற முடியும் என் பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

வீட்டுரிமையாளர் அவரது வீட்டை விற்பனை செய்த பின்பு அந்த வதிவிடத்தை வாங்கியவர் அதில் குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டால் குடியிருப்பாளரை வெளியேற்ற முடியும்.

எனினும் அந்த வாடகை குடியிருப்பில் 3 அல்லது குறைந்த எண்ணிக்கையான அலகுகள் (Units) இருந்தால் மட்டுமே இவ்வாறு செய்ய முடியும்.

### ஒரு வதிவிடத்தில் வசிக்கும் அறை நண்பர் அல்லது விருந்தாளி செய்த ஒரு விடயம் காரணமாக வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்ற முடியுமா?

ஆம். ஒரு வதிவிடத்தின் குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான பல காரணங்கள், அந்த வதிவிடத்தில் வசிப்பதற்கு அனுமதித்த ஒருவரால் ஏற்படுகிறது. உதாரணமாக ஓர் வாடகைக் குடியிருப்பாளரின் விருந்தாளி, Hallway Wall பகுதியில் கையால் அடித்தோ அல்லது ஆயுதங்களை பாவித்து சுவரில் ஓட்டையை ஏற்படுத்தினால், வீட்டுரிமையாளர், குடியிருப்பாளரை வெளியேற்றுவதற்கான விண்ணப்பத்தை நிர்வாக சபையினரிடம் கையளிக்க முடியும். இப்படி பல உதாரணங்கள் கூறலாம்.

### வாடகை ஒப்பந்த கால முடிவு பற்றிய அறிவித்தலைப் பெற்ற குடியிருப்பாளர் என்ன நடவடிக்கை எடுக்கலாம்?

வாடகைக் குடியிருப்பாளர் தனக்கு வழங்கப்பட்ட அறிவித்தலை நன்கு வாசித்து ஏன், எப்போது அந்த வதிவிடத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது என்பதை அவதானிக்க வேண்டும். அதன் பின்பு அந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றி வீட்டுரிமையாளரிடம் கலந்துரையாட வேண்டும்.

பிரச்சினைக்கு தீர்வு காண முடியாவிடில் பின்வரும் விடயங்களை செய்யலாம்.

- வீட்டுரிமையாளர் குறிப்பிட்ட பிரச்சினைக்கு ஓர் தீர்வு காண முயற்சி எடுக்க வேண்டியது அவசியம்.

அல்லது

- வதிவிடத்தில் இருந்து வெளியேற வேண்டும்.
- அந்த வதிவிடப் பகுதியை பராமரிக்கும் நிர்வாக சபையிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும். இது தொடர்பாக விசாரணைக்கு அழைக்கப்படும் போது சபை உறுப்பினரிடம் குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி விளக்கி கூறலாம்.

வீட்டு உரிமையாளருக்கும் குடியிருப்பாளருக்குமான சபையிடமிருந்து (Landlord and Tenant Board) வெளியேற்ற அறிவித்தல் வரும் வரை குடியிருப்பாளர் தனது வதிவிடத்தில் தொடர்ந்து வசிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

mahensingaraja@thaiveedu.com




VN FINANCIAL SERVICE

உங்கள் அனைத்து மோட்கேஜ் தேவைகளையும் சிறந்த முறையில் செய்திட உடனே அழையுங்கள்

"I AM DEDICATED TO PROVIDING YOU WITH PROFESSIONAL SERVICE AND GUIDANCE THROUGHOUT THE MORTGAGE PROCESS."

VASANTHY NIRANJAN
MORTGAGE AGENT
LIC# M08010387

Phone: 905-415-1676
Direct: 416-845-8272

# கொண்டோ வாங்குவது எப்படி?

சென்றமாதத் தொடர்...

## பாகம் - 4



S.K. பாலேஸ்

- வீடு விற்பனை முகவர் -

### கொண்டோச் சபையிலும், நிர்வாகத்திலும் திருப்தி இல்லாவிட்டால் மாதாந்தம் செலுத்தும் பணத்தை நிறுத்தலாமா?

இல்லை. நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மாதாந்தம் கட்டும் பொதுப் பராமரிப்புப் பணம் சட்டப்படி நீங்கள் செலுத்தியே ஆக வேண்டும். பொதுச் செலவில், காப்புறுதி வரவு செலவுக் கணக்குகள் அங்குள்ள வசதிகளையும் சொத்துக்களைப் பராமரிக்கும் செலவுகள் அடங்கும். நீங்கள் மாதாந்த பொதுச் செலவிற்கான பணத்தைச் செலுத்தாவிட்டால் கொண்டோ மேனியம் கோப்பரேஷன் உங்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்.

மேலும் கட்டப்படாத தொகைக்கு வட்டியும், இதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கும் செலவும் உங்களிடமிருந்து வசூலிக்கப்படும். இத்தொகையை நீங்களே உங்கள் மோட்கேஜ் (ஈட்டுக்கடன் தொகை) செலுத்திய கம்பனியோ செலுத்தாவிட்டால், உங்கள் கொண்டோவை, கொண்டோ கோப்பரேஷன் விற்று தனக்கு வர வேண்டிய பணத்தை பெறலாம்.

கொண்டோ நிர்வாகம் சரியாக இயங்கவில்லையென்று நீங்கள் நினைத்தால், கொண்டோ நிர்வாக சபையின் டைரக்டர்ஸின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். அல்லது வருடாந்தக் கூட்டத்தில் நீங்களே இவ்விடயத்தை எழுப்பலாம். நிர்வாக முகாமையால் நிர்வாக சபையின் விதிகளிற்கு அமைய தனது கடமையைச் செய்யாவிடின் கொண்டோ சபை தகுந்த நடவடிக்கை எடுக்கும்.



### உங்களை இதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமா?

ஆம் நீங்கள் உங்களை இதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கொண்டோமீனியத்தில் நீங்கள் பணம் முதலீடு செய்துள்ளீர்கள். குறைந்த பட்சம் பொதுக் கூட்டங்களிலாவது நீங்கள் பங்குபற்றி முக்கியமான விடயங்களில் நீங்கள் உங்கள் வாக்குரிமையை உபயோகியுங்கள்.

ஒரு கொண்டோமீனியச் சமூகம் பல விதத்தில் ஒரு சிறிய நகரம் போலவே செயல்படுகின்றது. ஒரு நகர மக்கள் நகரசபையை தேர்ந்தெடுப்பது போல கொண்டோ உரிமையாளர்கள் ஒரு நிர்வாகசபையைத் தெரிவு செய்து அதன் மூலம் கொண்டோ நிர்வாகத்தை நடத்துகிறார்கள்.

> "நீங்கள் வாங்குவது என்ன என்பதையும், அங்கு உங்களால் வாழமுடியுமா என்பதையும், கொண்டோமினியத்திலுள்ள நன்மைகளையும் அதில் உள்ள சிக்கல்களையும் தெரிந்து கொண்டு நீங்கள் கொண்டோவை வாங்கினால் மகிழ்ச்சியாக வாழலாம்."

### நிர்வாக சபையில் டைரக்டர்களில் ஒருவராக வர வேண்டுமானால் செய்யவேண்டியவை

உங்கள் திட்டத்தில் உள்ள மக்களுக்கு, உங்களுக்கு கொண்டோ பராமரிப்பில் ஆர்வமும் அதற்குரிய தகுதியும் உள்ளதென்பதை உணர்த்துங்கள். கொண்டோ அபிவிருத்தி சபையில் அதிக கொண்டோக்கள் கொண்டோ அபிவிருத்தியாளரிடம் இல்லாவிடின் 42 நாட்களில் ஒரு புதிய நிர்வாக சபையை கூட்ட வேண்டும். அப்போது அபிவிருத்தியாளரின் சபைக்கு பதிலாக வெறொரு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படும்.

கொண்டோமோனியம் சட்டத்தின்படி குறைந்தது மூன்று டைரக்டர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். உங்களுடைய கோப்பரேஷன் உபவிதிகள் மூன்றுக்கு மேல் டைரக்டர்கள் தேவையா எனக் கூறும்.

கொண்டோ உரிமையாளர்கள் நிர்வாகிகளை தெரிவு செய்வார்கள். அவர்கள் தங்களுக்குள் தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார்கள். நிர்வாகிகள் மூன்று வருடம் பதவியில் இருக்கலாம். விரும்பினால் மறுபடியும் தெரிவு செய்யப்படலாம். உறுப்பினர்கள் ஒரு நிர்வாகியை தம் வாக்குப் பலத்தால் நீக்கலாம். அப்படி நீக்கப்பட்டவர் இடத்திற்கு இன்னொருவரை தெரிவு செய்யலாம். அவர் முன்னையவர் செய்ய வேண்டிய கடமையை அவர் செய்ய வேண்டிய காலத்திற்கும் பதவியில் இருப்பார்.

ஒருவர் இராஜினாமா செய்தாலோ காலமானாலோ கொண்டமேனியச் சட்டத்தின்படி இன்னொரு தகுதியானவரை நிர்வாக சபை, அவரிடத்திற்கு நியமிக்கலாம். இவர் அடுத்த பொதுக்கூட்டம் வரை பதவியில் இருப்பார்.

### நிர்வாகிகளின் கடமை என்ன?

உரிமையாளர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் கொண்டோ சொத்தையும் அது சம்பந்தமான அலுவல்களையும் நிர்வகிக்கும் பொறுப்பு நிர்வாகிக்கு உண்டு. நிர்வாகசபைக் கூட்டம் முன்கூட்டியே ஏற்பாடு செய்தபடி அநேகமாக மாதம் ஒருமுறை நடைபெறும்.

சட்டத்தில் குறிப்பிட்டது போல கோப்பரேஷன் பணம் நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், முதலீடு செய்யப்படவும் இவற்றிற்கான கணக்குகள் சட்டப்படி சரிவர இருக்கின்றனவா என்று உறுதிப்படுத்துவதுமே நிர்வாகிகளின் முக்கிய கடமையாகும்.

நிர்வாக வேலைக்குத் தகுந்த நபர்களை தேர்ந்தெடுத்தல், ஒப்பந்த வேலைகளிற்கு நிறுவனங்களை அமர்த்துதல், பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவுடன் மேலதிக சொத்துக்களை வாங்கவோ, இருப்பவற்றை விற்கவோ முடியும்.

பொருளாளர் மற்றும் டைரக்டர்ஸ் கோப்பரேஷனின் அலுவல் நிர்வாகத்திற்கு பொறுப்பாயுள்ளனர். அலுவலக முகாமையாளர் எழுதும் காசோலைகள் அனைத்தும் பொருளாளர் மற்றும் ஒரு நிர்வாகியின் ஒப்பம் இட்டால் மட்டுமே செல்லுபடியாகும்.

### நல்ல நிர்வாகியாக எப்படி இருக்கலாம்?

நிர்வாகிகள் வழமையாக ஊதியம் எதுவும் பெறுவதில்லை. ஆனால், நிர்வாகத்திற்கும் அங்கிருக்கும் பணத்திற்கும் அவர்களே பொறுப்பு. கொண்டோமினியம் நிர்வாகத்தை நடத்துவதற்கு ஒரு சிறந்த முகாமைத்துவ கம்பெனியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு பல நிபுணர்களின் ஆலோசனையை நாடலாம். நிர்வாகி செய்யும் செயல்களிற்கு அவர்கள் பொறுப்பாக முடியாது. (நேர்மையற்ற செயல்களைத் தவிர)

### கூட்டங்கள் எப்போது நடைபெறும் அதை யார் கூட்டலாம்?

முதலாவது பொதுக்கூட்டம்; ஒரு திட்டம்,

28ம் பக்கம் பார்க்க...


## House for Sale

**Scarborough**
Midland & Lawrence
$334,000




Bedrooms: 4, Washrooms: 2,
Very Good Location.
Tottaly Renovated In 2007.
Two Kitchens.6Years Roof.
All Window Was Replaced

**Ajax**
Salem & Williamson
$419,900



Bedrooms: 4, Washrooms: 2,
Exclusive Great Gulf Homes.
Huge Front Porch,Fully Fenced.
Close To Transit & Golf Courses

**Century 21** Affiliate Realty Inc.
S.K Bales
CRA, CAR, MVA, FRI, CRES.
Tel- 905-201-0929, Cell- 416-801-3219.

**Canadian Home Appraisals Inc.**
Residential & Commercial Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

**MY PROFESSIONAL DESIGNATIONS:**
- CRA (Canadian Residential Appraiser)
  Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer)
  Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential
  Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute)
  Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist)
  Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
  Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member


# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...


## Elagupplai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**$279,000**
Detached Bungalow, Bed rooms 3, Washrooms1
All Brick Bungalow, 5 Cars Parking Driveway, Walking Distance To Ttc, Go Transit,



**$279,000**
Town house 2 story, Bed rooms 3 , Washrooms 2
Beautifully Maintained Townhome 3 1/2 Years Old Shows Like New.



**$333,000**
Link 2 Story Bed rooms3+1, Washrooms 3
Well Maintained, 1600 Sq Ft Plus Bsmt Apartment With Sep Entrance, Walk To Ran-



**$354,900**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 2
All Brick Spacious 3 Bedroom House, Laminated Walkout Basement



**$369,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3,
New Windows 2006, 2080 Square Foot, Demand Area Of Markham



**$375,900**
Detached 2 Story, Bedrooms 4 Wasroom 3,
Almost New 4 Bdrm Home Apprx 1885 Sq Ft Of Luxurious Open Concept Living



**$399,000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3, Demand Location, Newly Painted, A Spacious Breakfast Area, Access To Garage From The House



**$399,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3, Directly Access To House With Garage, Basement Professionally Finished With Panelled Wall



**$409,800**
Detached 2 Story, Bed rooms 3+1, Washrooms 3
Detached W/Fin.Bsmt +Sep.Entrance W/Long Driveway For 4 Cars



**$429,000**
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3,
Only 2 Year Old,Hardwood Floor & Solid Oak Staircase-Closed To Shoping



**$469,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4,
Two Years Gorgeous Custom-Built 2500+ Sf. House,Big Windows



**$469,900**
Detached 2 Storys, Bed rooms 3, Washrooms 3
This New Home Loaded With Upgrades Featuring, Hardwood Floors,Oak Staircas



**$469,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4,
More Than $70K In Upgrades 9Ft Ceilings With Lots Of Natural Light.



**$519,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3
Less Than 5 Years Old House, Steps To School And Ttc. Over 2800 Sq.Ft



**$535,000**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 4
Main Floor 9 Ft Ceiling. All 4 Bedroom Have Washroom. Gas Fireplace



**$549,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3,
Upgraded Kitchen W/Granite Counter Top, Pot Lights, Upgraded Entry Door



**$1,588,000**
Detached 2 Story, Bedrooms 7+1 Washrooms 6,
Custom Built 6000Sf. On 1.1 Ac Lot With 2 Sep.Houses Fin.Bsmt Sep.Ent



**$299,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3
Ideal For A Young Family Features Large Family Room W/ Fireplace



**$319,000**
Detached 2 Story, Bed rooms 3 ,Was rooms 2
Detached Starter Home With An Entertainer's Yard! This Fully Fenced



**$289,800**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2,
Affordable Detached All Brick Two Storey, Laminate Floors In Living/Dining Rooms



**$369,900**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3,
Large Family Room W/Gas Fireplace. Steps To School & Transit



**$$749,000**
Sale Of Business With Property Gas Stations, Full Service Esso Gas Station, Video 99 Rental, Coffee Time



**$159,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Self-Service Gas Bar And Convenience Recently Renovated


RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**


**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

## ஓய்வூதியம் பற்றி...

# வாழ்வுக் கொடுப்பனவு

**தொடர்: 3**



கல்யாணி நாதன்
-நிதி திட்டமிடல் ஆலோசகர்-

சென்ற இதழ்களில் ஓய்வூதியம் சம்பந்தமாக பல விடயங்களை ஆராய்ந்தோம். இம்முறை தொகையான பணத்தால் வாழ்நாள் வரை வரவுவைப்பதற்காக ஒரு வாழ்வுக் கொடுப்பனவு சம்பந்தமாக பலகோண ஆராய்ச்சியில் ஈடுபட்டு அது உங்களுக்கு உகந்தது தானா என்று பார்ப்போம்.

ஓய்வூதிய வரவுகளுடன் மேலதிக வரவாக இந்த திட்டத்தைப் பாவிப்பது வழமையாகும். எனவே இந்த வாழ்வுக் கொடுப்பனவு உங்கள் ஓய்வூதியத்தில் கனிசமான பங்கு வகிக்கலாம். இந்த தொகையான முதலீட்டின் மூலம் இரு வகையான கொடுப்பனவுகளை திட்டமிடலாம். முதலாவது வாழ்வுக் கொடுப்பனவு இரண்டாவது வரையறைப்பட்ட காலக் கொடுப்பனவு. இக்கட்டுரையில் இத்தகைய கொடுப்பனவுகளின் விளைவுகள் பற்றி பல கோணங்களில் பார்ப்பதன் மூலம் உங்கள் ஓய்வூதியத்தின் ஒரு அங்கமாக இதை பாவிக்க முற்படுவீர்கள் என நம்புகின்றேன்.

### கொடுப்பனவு அல்லது annuity என்றால் என்ன?

வாழ்நாள் கொடுப்பனவு உங்களுக்கொரு நிரந்தர வருவாயை, நீங்கள் விரும்பும் காலத்திற்கு ஒருமுறை, இறக்கும்வரை பெற்றுத்தரும் எனும் வேளை, நீங்கள் எவ்வளவு காலம் உயிருடன் இருந்தீர்கள் என்ற வரையறை இல்லை. இத்தகைய வருவாய் உங்கள் மரணத்துடன் நிறுத்தப்படுவதுடன், மரணத்தின் பின் ஒரு தொகையும் எஞ்சி இருக்க முடியாது. அதாவது உங்கள் வாரிசுகளுக்கு ஒரு தொகையும் தரப்பட மாட்டாது. எனினும் கூட்டு கொடுப்பனவாக இன்னொருவருடன் சேர்ந்து அல்ல வரையறை செய்யப்பட்ட குறைந்த அளவுகால எல்லை குறிக்கப்பட்டிருப்பின் (பின்பு விளக்கப்படும்) அது முதலாமவருக்குப் பின்பும் தொடரும்.

இந்த வருவாய் மாதத் தவனையிலோ, காலாண்டுக்கு ஒருமுறையோ, அல்லது அரையாண்டுக்கொருமுறையோ, மேலும் வருடம் ஒருமுறையாகவும் தரப்பட ஏற்பாடு செய்யலாம். வாழ்வுக் கொடுப்பனவு ஒரு காப்புறுதி அமைப்பிடம் மட்டுமே பெறலாம். அப்படித்தரப்படும் தொகை ஆரம்பத்திலிருந்து ஒரே சீரான தொகையாக வாழ்நாள் முடியும் வரை தரச்சொல்லலாம். அல்லது காலத்துக்குக் காலம் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் மாற்றம் செய்ய திட்டமிடலாம். இப்படி பெறப்படும் தொகையை பல காரணிகள் தீர்மானிக்கும்.

உதாரணத்திற்கு தற்போதைய வட்டி விகிதப்படி இத்தொகை தீர்மானிக்கப்பட்டாலும் உங்கள் வாழ்நாளில் வட்டிவிகிதம் மாறக் கூடும். ஆனால், அதனால் உங்கள் வரவு மாற்றமடையாது.

வாழ்வுக்கொடுப்பனவு Registered வைப்புகளைப் பாவித்து வாங்க அனுமதி உண்டு. இப்படியான registered திட்டங்களில் RRSP, RRIF, LIF, LRIF, DPSP ஆகியன யாவும் அடங்கும். நீங்கள் வேலை செய்யும் கம்பெனி ரெஜிஸ்டட் ஓய்வூத் திட்டங்களையும் நீங்கள் வாழ்வுக் கொடுப்பனவாக மாற்றலாம். இப்படியான வாழ்வுக் கொடுப்பனவிலிருந்து பெறப்படும் பணம் பெறும் வருடத்து வருவாயாக கணிக்கப்பட்டு வரி அறவிடப்படும் என்பதை மனதில் கொள்வதவசியம்.

உங்கள் பணம் ஏதும் தொகையாக register பண்ணாமல் வைத்திருந்தால் அதனைப் பாவித்தும் வாழ்வுக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளலாம். இப்படி Register பண்ணாத பணத்திலிருந்து பெறப்படும் வருவாய் வரி மிக சொற்பமாகவே அறவிடப்படும். காரணம் உங்கள் வைப்பு வைத்திருக்கும் பணத்தில் பெறப்படும் வட்டிக்கு மட்டுமே வரி அறவிடப்படும். அத்துடன் வட்டி வாழ்நாள் முழுவதற்கும் ஒரே அளவினதாகவே கணிக்கப்படும். இது வரியின்பின் மீதமுள்ள பணம் சார்பானதாக இருக்கும். உதாரணமாக நீங்கள் வங்கியில் வைத்திருக்கும் பணத்தால் பெறப்படும் வட்டிக்கு வருடாவருடம் வரி அறவிடப்படும். இப்பணத்தால் ஆயுள் கொள்வனவு அமைப்பை பாவிக்கையில் கனிசமான அளவு குறையவே வரி கொடுப்பீர்கள். நீங்கள் போடும் பணம் உங்களுக்குப் பின் உங்களுடைய வாரிசுகளுக்கு செல்லவேண்டுமானால் அத்தொகைக்கு ஒரு ஆயுள் காப்புறுதியை பெற்று அதற்கு பணம் செலுத்திவந்தால் காப்புறுதி மூலம் உங்கள் வாரிசுகள் பணத்தைப் பெற்றுக் கொள்வார்கள். மேலும் காப்புறுதிப்பணத்துக்கு வரி அறவிடப்படாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அனேகமான வேளைகளில் இப்படி காப்புறுதி மூலம் முதல் காக்கப்படுவதில் உங்கள் செலவுக்கு கனிசமான பணம் மிஞ்சும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். பணத்தின் வட்டியை பெற்று அதில் பெறப்படும் தொகைக்கு நீங்கள் வரி செலுத்தி முதல் குறையாமல் செய்வது சாமர்த்தியமற்ற செயலாகும்.

### வித்தியாசமான வாழ்வுக் கொடுப்பனவுகள்

#### தனி உயிர் கொடுப்பனவு

இதில் நீங்கள் வாழும் வரைக்கு நீங்கள் கேட்டுக்கொண்ட இடைவேளையில் வருவாய் வந்துகொண்டிருக்கும். ஆனால் முன்பு குறிப்பிட்டபடி மரணத்தில் இது நின்றுவிடும். குறை ஆயுளில் மரணித்தால் நட்டமாகும்.

#### கூட்டு உயிர் கொடுப்பனவு

இது இருவருக்கு தொடர்ந்து பணம் தரும், இரண்டாமவர் இறந்தவுடன் நின்றுவிடும். நீங்களும் உங்கள் துணைவரும் வாழும் வரை வருவாய் இருப்பதற்கு இது வகை செய்யுமாகையால் இருவராய் உள்ளவர்கள் இதை பயன்படுத்தலாம். இங்கு ஒரு நிபந்தனை அரசு வைத்துள்ளது. ஏதாவது ஒரு registered ஓய்வூதிய திட்டத்திலிருந்து வாழ்க்கை கொடுப்பனவு பெறுவதானால் நீங்கள் கட்டாயமாக கூட்டு உயிர்க் கொடுப்பனவு தான் பெறலாம். ஆனால், ஒரு துனைவர் கையொப்பம் வைத்து தன்னை விலக்குவதற்கு ஒத்துக்கொள்வதானால் தனி உயிர் கொடுப்பனவு திட்டம் பெற்றுக்கொள்ளலாம். எனினும் இப்படிச் செய்வது வரவேற்கக் கூடாது. காரணம். உயிருடன் இருப்பவரை விலக்குவதாக அமைந்துவிடும். மேலும் ஒருவர் இறந்த பின் இருப்பவர் கூடிய காலம் வாழக்கூடுமாகையாலும் தனியொருவர் தேவை குறைவாயிருக்குமாகையாலும் உயிருடன் இருப்பவருக்கு 75, 60 அல்லது 50% தொடர்ந்து பெறச் செய்யலாம். இது இறுதிவரை வருவாய்க்கு வழிவகுக்கும்.

### உத்தரவாதங்கள்

எல்லாக் கொடுப்பனவும் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் பணம் கொடுக்கும். ஆனால், இறந்தவுடன் ஒன்றும் மிஞ்சாது. எனவே குறைந்த ஆயுளில் (ஓய்வூதிய ஆயுள்) இறந்தால் நீங்கள் உங்கள் கொடுப்பனவு தொடர்ந்து ஒரு காலவரையளவு கட்டப்பட உத்தரவாதம் பெறலாம். இக்காலம் பொதுவாக 5, 10, 15 அல்லது 20 வருடங்களுக்கு அல்லது உங்களுக்கு குறிப்பிட்ட வயது வரை என உத்தரவாதத்தை பெற்று வைக்கலாம்.

உதாரணத்திற்கு உங்கள் வாழ்நாள் கொடுப்பனவுக்கு 10 வருட உத்தரவாதம் பெற்றிருந்த நிலையில் நீங்கள் ஐந்து ஆண்டுகளில் இறந்துவிட்டால் மீதி ஐந்து ஆண்டுக் கொடுப்பனவை தொகையாக... வாரிசுக்குத் தரப்படும்.

### தீர்மானம் எடுப்பது எப்படி?

முற்காலத்தில் தொலைக்காட்சியில் ஒரு அலைவரிசையில் மட்டும் படம் வந்தது. இதனால் எல்லாரும் அந்த ஒன்றை பார்த்து மகிழ்ந்தார்கள். இன்று தொலைக்காட்சியில் நூற்றுக்கணக்கில் படம் வருகிறது. எந்த படம் பார்ப்பது என்னும் பிரச்சினை அதேபோல் ஓய்வுக் கொடுப்பனவிலும் பலவகையான கொடுப்பனவுகள் இருப்பதால் எதைப் பாவிப்பது என்று தீர்மானிப்பது சிரமமான விடயம். எனவே அது பற்றி சிறிது கவனிப்போம்.

உங்களுக்கு தரப்படும் கொடுப்பனவு பொதுவாக நிபந்தனைகள் அதிகரிக்க அதிகரிக்க குறைந்துகொண்டே போகும். ஆகக் கூடிய கொடுப்பனவு ஒருவருக்கு ஒரு நிபந்தனையும் இல்லாது இருக்கும் போது பெறலாம். இதிலிருந்து நீங்கள் ஏற்படுத்தும் உத்தரவாத நிபந்தனைகள் தொகையை குறைத்துக்கொண்டு ஆகக்குறைந்த கொடுப்பனவு, கூட்டுக்கொடுப்பனவு, இரண்டாவதாக இறப்பவருக்கு 100% உத்தரவாதத்துடன் தொடர்வதில் ஏற்படும். நீங்கள் தீர்மானம் எடுக்கு முன் வெவ்வேறு திட்டங்களில் பெறப்படும் தொகையை வைத்து ஆராய்ந்து தீர்மானத்தை எடுக்கலாம். இப்படிச் செய்வதால் உங்கள் தேவைக்கு ஏற்ற திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும். இல்லாவிடில் தரப்பட்ட திட்டத்திற்கு ஏற்றபடி உங்கள் வாழ்க்கைத் திட்டத்தை மாற்ற வேண்டியவராவீர்கள்.

### ஆரோக்கியக் குறைவு

உங்கள் எல்லாருக்கும் தெரிந்த ஒரு விடயம் ஆரோக்கியம் குறையக் குறைய காப்புறுதிக் கட்டணம் கூடும் என்று. ஆனால், இது கொடுப்பனவில் உங்கள் ஆரோக்கியம் குறைவாக இருப்பின் கொடுப்பனவுத் தொகை கூடவாக இருக்கும். இது ஒரு விதத்தில் நியாயமானதுதானே.

### எத்தகையோருக்கு வாழ்வுக் கொடுப்பனவு தேவைப்படும்

அனேகமானவருக்கு அடிப்படையில் வாழ்வின் கொடுப்பனவுத் தொகை இறுதிவரை தொடர்ந்து பெற்றுக்கொண்டிருந்தால் போதுமானது எனினும் இங்கு சில நிலைமைகளை தருவேன் உங்கள் கவனத்திற்கு.

- உங்களுக்கு இறுதிவரை ஒரு குறிப்பிட்ட வருமானம் இருக்க வேண்டும் என்று நினைத்தால்.
- நீங்கள் முதலீட்டுத்தீர்மானங்கள் எடுக்கவேண்டி இருந்தால்.
- உங்கள் முதலீடுகளை இப்போ பெறப்படும் வட்டி விகிதத்தில் ஸ்திரப்படுத்துவதற்கு.
- உங்கள் வாரிசுகளுக்கு அதீத தொகையை விட்டு செல்ல தீர்மானிக்காவிட்டால்

### தொகுப்பு:

உங்கள் கடைசிக்கால வாழ்க்கை, பெரும் அமைதியை ஆயுள் கொடுப்பனவுகள் வழங்கும். மற்றைய முதலீடுகள் போலவே ஆயுள் கொடுப்பனவு விடயத்திலும் நீங்கள் நல்ல வல்லுனரின் ஆலோசனையை பெற்று அதன்படி நடந்தால் கூடிய பயனை பெறலாம்.

ஆரோக்கியமான ஓய்வுக்காலத்துக்கு எனது வாழ்த்துக்கள்.

kalyani.nathan@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*



# HOMELIFE FUTURE REALTY

7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8

Office: 905-201-9977
Fax: 905-201-9229

**14th Ave/9th Line**



$535,000

5 Bedrooms.
4 Washrooms.
Hardwood Floors Thru-out
9' Ceilings on Main Floor.
Close to all Amenities.

**McCowan/Sheppard**



$449,000

4 Bedrooms.
3 Washroom.
Close to all Amenities.
Stainless Steel Appliances
A Must See Property.

**16th Ave/9th Line**



$519,000

4+2 Bedrooms.
4 Washrooms.
Finished Basement.
Luxuriously Upgraded.
Hardwood Floors.



## LOKAN SUNDARAM

*Broker*

*416-450-3984*
*lokan.homelife@gmail.com*

LOW INTEREST RATES!
OPPORTUNITY TO BARGAIN!
ACT NOW!!
BUY WITH LOKAN!

CALL ME FOR ALL YOUR, MORTGAGE AND RE-FINANCING NEEDS

# வீடு வாங்கவும், விற்கவும்.......

**Morningside/Sheppard**



$319,000

3 Bedrooms, 3 Washrooms
Well Kept Home,Very Spacious Layout With Eat In Kitchen & W/O To Large Back Yard

**Steeles / Martin Grove**



$319,900

3 Bedrooms, 3 Washrooms
Beautiful 3 Bed Room Family Home In 'Cul-De-Sac'**Many Upgrades**Pride Of Ownership

**Hillcrest/Confederation**



$499,000

3+3 Bedrooms, 3 Washrooms
Bright Spacious Bunglow On Huge Lot, Massive 3 Bedrooms Bsmt Apartment W/Sep Entrance

**Morningside/Warnsworth**



$309,000

4 Bedrooms, 3 Washrooms
High Demand West Hills Area. Freshly Painted,Renovated Kitchen, New Furnace (2007), New Ac (2007)


**Creditview/Eglinton**



$499,000

5+1 Bedrooms, 4 Washrooms
Wow! Big And Beautiful! Perfect For The Growing Family And A True Entertainer's Delight. 3300 Square Feet


**Birchmount/Danforth**



$309,900

3+2 Bedrooms, 3 Washrooms
Beautiful And Well-Maintained Home. Move-In Condition.

**Islington/Rexdale**



$294,500

3 Bedrooms, 2 Washrooms
Excellent Location, The House Need Several Tlc, Upgraded Kitchen And Windows

**Markham/Mclevin**



$259,900

3 Bedrooms, 2 Washrooms
Well Maintained House With New Kitchen, Backyard Facing School, Good Location. New Windows

சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக் கொடுக்கப்படும

***To Fill any Forms (Sponsors, ODSP, Tax & etc...)***

இரஞ்சன் *or*
செல்வா
**416.816.1220**

RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
® INDEPENDENTLY OWNED AND OPERATED
Real Estate Services


*INDEPENDENTLY OWNED AND OPERATED



## *RANJAN* FRANCIS XAVIER

Sales Representative
*Cell: 416.816.1220*
*Office: 416.284.5555*
880 Ellesmere Road, Suite 204, Scarborough, ON.

# வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......


நலம் நாடுவதும் அதுவே
உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்
$ 83,500
Neilson & Sewells
$ 90,000
Markham & Eglinton
$98,500
Lawrence & Midland
$99,900
Markham & Eglinton
$118,100
Sheppard & Neilson
$119,900
Neilson & Finch
$194,900
Neilson & Sheppard
$199,900
Sheppard & Neilson
$239,800
Neilson & Sheppard
$245,000
Brimorton & Orton Park
$259,900
Markham & Finch
$279,900
Morningside & Sheppard
$279,900
Morningside & Finch
$287,900
Lawrence & Scarb.golf
$294,900
Neilson& Mclevin
$299,900
Mccowan & Ellesmere
$332,900
Brimley & Steeles
$341,300
Brimley & Highglen
$350,000
Kennedy & 14th
$359,900
Mccowan & Ramerville
$389,900
Markham & Elson
$389,900
Bur Oak & 9th line
$398,000
Mccowan & 16th Ave
$420,000
Mccowan & Dennison
$423,000
Mccowan & steeles
$425,000
Bur Oak & 9th
$428,000
Castlemore & 9th Line
$428,888
Mccowan & Steeles
$478,900
Markham & 14th
$485,000
Hwy48 & Bur Oak
$489,900
16th Ave & 9th Line
RE/MAX
Call me for a change
RE/MAX
Kathir S Kathirgamanathan P. Eng.
Sale Representative
www. kathirsubramaniam.com
Email: kathirhomes@gmail.com
24 Hrs 416 856 6900
Tel: 905 470-9800
Fax: 905 470-7770
www.realtronhomes.com
Realtron Realty Inc., Brokerage
Independently owned and operated
7800 woodbine Ave. PH
Markham ON L3R 2N7

# ரொறன்டோ நகரசபை வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது!

- சிவா சுப்ரா -

யூலை மாதம் முப்பதாம் திகதி நள்ளிரவுடன் ரொறன்டோ நகரத்தில் நடைபெற்ற நகரசபைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்று நகரசபை அறிவித்துள்ளது.

நகரசபை நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களின் தொழிற் சங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். முப்பத்தி ஒன்பது தினங்கள் தொடர்ந்து நிகழ்ந்த இந்த வேலை நிறுத்தம், ரொறன்டோ பெருமளவில் பாதித்துள்ளது.

"தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை நிர்வாகம் ஏற்க மறுக்கின்றது" என்று தொழிற்சங்கமும், "தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமற்றது" என்று நிர்வாகமும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டார்கள்.

இந்த வேலை நிறுத்தத்தினால் ரொறன்டோவில் எற்றோபிக்கோ தவிர்ந்த ஏனைய மாநகரப் பகுதிகள் அனைத்திலும் வீதிகளில் இட்டுவைக்கப்படும் கழிவுகள், வீடுகளில் இருந்து அகற்றப்படும் கழிவுகள், குப்பைகள், மீள் பாவனைப் பொருட்கள் (Can, Bottles, paper and newspapers) ஆகியவற்றை அகற்றும் மாநகர சபையின் பணி நிறுத்தப்பட்டது.

எற்றோபிக்கோ உட்பட எல்லா மாநகரத்திலும் வளவுக் கழிவுகளை அகற்றும் பணியும், வதிவிடத்தில் இருந்து மக்கள் தமக்குத் தேவையில்லை என்று கழித்து விடுகின்ற குளிர்ச்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், மின்னடுப்பு போன்றவற்றை கழிவகற்றும் வேலையும் இரத்துச் செய்யப்பட்டது.

இதன் காரணமாக வீடுகளுக்குள்ளும், கராச்சுகளுக்குள்ளும், வீதிகளில் குப்பை போட இருந்த கலங்களுக்குள்ளும் குப்பைகள் குவிந்து துர்நாற்றம் எழுந்தது.

பொதுமக்கள் பலர் தமது வீட்டுக் கழிவுகளை பொதுமக்கள் பயன்படுத்தும் பொது இடங்களில் எறிந்துவிட்டச் சென்றனர். இது ஒரு சட்ட விரோதமான காரியமாகும். இவ்வாறு பலர் செய்ததால் ரொறன்டோ நகரத்தின் பல பாகங்களிலும் துர்நாற்றம் எழுந்தது. அழகிய ரொறன்டோவின் அழகு பறிபோனது. பொது இடங்களில் கழிவுகளை எறிந்தவர்கள் சிலர் தண்டப்பணம் செலுத்த வேண்டி வந்தது.

இதே சமயம் கழிவுகளை எறிவதற்காக நகரம் முழுவதும் சில தற்காலிக நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இதனால் மக்கள் வாழும் சில பகுதிகளில் பெரும் துர்நாற்றம் எழுந்தது.

அங்கு குவிந்த கழிவுகளை காட்டு விலங்குகள் சுவைபார்த்தன. அதனால் அந்தப் பகுதிகளில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. ஏராளமான எலிகள் நகரத்துக்குள் படை-



யெடுத்தன. குட்டி போட்டுள்ளன. இதனுடைய தாக்கம் இன்னும் சில மாதங்களுக்கு இருக்கும் என்று நம்பலாம்.

கழிவுப் பொருட்களின் தொகையை குறைப்பதற்காக, வேலை நிறுத்தம் முடிவுக்கு வரும் வரை வீட்டின் கொல்லைப்புறங்களில் சுத்திகரிப்பு, புல்லு வெட்டும் வேலைகளை பின்போடவும் என்று மாநகரசபை கேட்டுக் கொண்டது. அல்லது வளவுக் கழிவு சேதனக் கழிவுகளை பின்வளவில் வைத்து பசளையாக்கும் படியும் மாநகர சபை கேட்டுக் கொண்டது. இறைச்சி, பால்வகைப் பொருட்களை பசளையாக்கக் கூடாது.

வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்ததும் கழிவுகளை அகற்றும் நாட்களில், நேரங்களில் சில வேலைகள் மாற்றங்கள் ஏற்படலாம். எனவே இதை www.toronto.ca இணையத்தளத்திற்குச் சென்று பார்வையிடவும்.

வீடுகளில் வசிப்பவர்கள் தமது மேலதிக கழிவுகளையும், குப்பைகளையும், recyclables யும் வைக்கலாம். இதற்காக மாநகரசபை மேலதிக கட்டணத்தை அறவிடாது.

இந்த வேலைநிறுத்தத்தால் நகர குழந்தை பராமரிப்பு நிலையங்கள் மூடப்படும் அபாயம் இருந்தது. அத்தோடு All scheduled meetings of council, community councils, standing committees, advisory committees and task forces என்பன இரத்து செய்யப்படும் நிலை ஏற்பட்டது. அத்தோடு நகர சபையினால் திட்டமிடப்பட்ட நிகழ்சிகள் பல நிகழாமல் போனது. ரொறன்டோ தீவுகளுக்கிடையேயான fatty service, பூங்காவில் உள்ள சில வசதிகளை பாவிப்பதற்கான அனுமதி, எல்லா community centres உள்ள பல வசதிகளை பாவிப்பது என்பன தற்காலிகமாக நிறுதப்பட்டது. Beaches உள்ள தண்ணீரை தினமும் சோதித்து அது குளிப்பதற்கு பாதுகாப்பானதா என்று செய்யப்படும் சோதனைகள் தற்காலிக நிறுத்தப்பட்டது. யாராவது குளிப்பது என்றால் அது அவருடைய தனிப்பட்ட விருப்பத்தின் பெயரில் செய்யலாம் என்றார்கள். வீட்டு விலங்குகளுக்கு வழங்கப்படும் அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இவை எல்லாவற்றையும் நிலைமை கட்டுக்கடங்காமல் போன போது மேலும் பல சேவைகள் பாதிப்புக்கு உள்ளாகியது.

இத்தகைய பாதிப்புகளையும் அபாயங்களையும் கொண்ட இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக இன்னுமொரு பேர் இழப்பு ரொறன்டோவுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த கோடை காலத்தில் உல்லாச பயணம் மேற்கொண்டு சுற்றுலா வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை பெருமளவில் வீழ்சியடைந்து விட்டது. இதனால் ரொறன்டோவுக்கு வரவேண்டிய பல இலட்சம் டொலர் வருமானம் வராமல் போய்விட்டது பெரும் துரதிஸ்டம்.

வருங்காலத்திலும் இத்தகைய ஒரு நெருக்கடி நிலை வராது என்று உறுதியாகக் கூறமுடியாது.

siva.subra@thaiveedu.com

■ ■ ■


Tutoring

Grade 1-7: English, Math, Science & Social science

Grade 8- 11: English & Math

அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா

B.A (Hons), M.Sc, Ph.D

(Kennedy & Ellesmere அருகாமையில்)

(647) 291 1357

For all grades: English, French & Spanish

Alex: (416) 556 5412

Home visit (வீடுகளுக்குச் சென்று கற்பித்துக் கொடுக்கப்படும்)

BUYING A HOME or REFINANCING

We will find the best solution for your mortgage needs.

3 yrs-3.65%*, 5 yrs-3.95%*
Prime ARM-2.50%*

No Headache! No Hassle!
Solutions For Every Home Owner

| | BEFORE | | AFTER | |
|---|---|---|---|---|
| | Balance | Payment | Balance | Payment |
| Mortgage(3.99%) | $250,000 | $1,101 | $278,000 | $1,224 |
| Line of Credit | 15,000 | 450 | - | - |
| Visa(20%) | 8,000 | 240 | - | - |
| Retail(28%) | 5,000 | 150 | - | - |
| Total | $278,000 | $1,941 | $278,000 | $1,224 |

Get debt free without Bankruptcy

CENTUM Optimo Mortgage Inc.

Office: 13-2800 John Street
Markham, Ontario L3R 0E2
Licence No: 10894

Each Office is Independently Owned and Operated



For Free Consultation Call:

Rajee Iyadurai
Mortgage Agent
416.918.7346

# தென்னாசியாவின்...

4ம் பக்கத் தொடர்ச்சி...

எண்ணுவதற்கும் சிந்திப்பதற்கும் முன்பாகத் தேர்தல்களும் இடைத்தேர்தல்களும் வந்து விடுகின்றன. தேர்தல் வாக்குறுதிகள் இன உணர்வுக்கும் இனக்கலவரத்துக்கும் தூண்டுதலாக அமையும் வண்ணம் அமைந்து விடுகின்றன.

அரசியல் என்ற அபினூட்டப்பட்ட அப்பிராணிகள் ஒருபுறம் சுதந்திரம் என்பது என்னவென்று சிந்திக்காத வண்ணம் செயலிழந்து விடுகிறார்கள், மறுபுறம் மற்றவர்களின் சுதந்திரத்தை எவ்வாறு மதிக்கவேண்டும் என்ற சிந்தனைக்கு வடிவம் கொடுக்காதவாறு மாற்றப்பட்டு விடுகிறார்கள். அந்தர உலகத்தில் அசைந்துகொண்டிருக்கும் ஆவிகளைப் போன்று பற்றில்லா வாழ்வில் பரிதவிக்கும் பணப் பேய்களாக மாற்றப் படுகிறார்கள்.

பணத்துக்காக ஓட்டுப்போட்டு வாக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஆட்சி அதிகாரத்துக்காகவும் அதனைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்காகவும் என்ற நிலை உருவாகிவிட்டது. "ஜனநாயகம் என்பது தனிமனித சுதந்திரத்தினைப் பேணுதல்" அத்தகைய சுதந்திரம் தேர்தல் அன்றுகூடக் கிடைப்பதில்லை என்ற நிலை இன்னமும் மாறவில்லை.

பணத்துக்காக விற்கப்பட்ட சுதந்திரம், தூண்டிவிடப்பட்ட உணர்வுகளுக்காக அடகுவைக்கப் பட்ட சுதந்திரம், வன்முறைக்கும் கட்டாயத் துக்குமாகப் பயத்துக்குட்படுத்தப்பட்ட சுதந்திரம், சமூக உறவுகளினால் அன்புக்கட்டளைக்குக் கட்டுப்பட்ட சுத்ந்திரம் என்ற பல்வேறு வகையான சுதந்திரங்களும் உண்மையான சுதந்திரத்தைக் கண்டு எள்ளிநகையாடிக்கொண்டிருக்கும் தேர்தல் காலம்தான் அரசியல் இயந்திரத்தின் அடக்குமுறைக்குக் கொடுக்கப்படும் அங்கீகாரம் என்ற நிலை மாறிவிட்டது.

பயங்கரவாதத்தடைச் சட்டங்களும் தடா பொடா போன்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களும் மக்களையும் நாட்டையும் பாதுகாக்க வென்று மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் உருவாக்கப் பட்டனவல்ல. ஆட்சி இயந்திரத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு எதிர்ப்பாளர்களின் ஆக்கிரமிப்புக்களை அடியோடு வேரறுக்கவும் ஆக்கப்பட்டவைகள் தான் அவை. என்று எண்ணுமளவுக்கு அவற்றின் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தச் சட்டங்களை எடுத்துவிட்டு எந்த நியாயமற்ற அரசியல்வாதியாவது மக்கள் மத்தியில் சென்றுவிட முடியாது. நேர்மையான அரசியல்வாதிகளை மக்கள் அடையாளம் கண்டுகொள்ளாதவரை ஐந்து வருடங்களுக்கு ஆட்சி நிலையானதாகவே இருக்கும். அதனைப் பத்து வருடங்களாக மாற்றுவதற்குக் கூட மக்கள் ஆணையினைப் பெறுவதில் எத்தகைய சிக்கலும் ஏற்படப்போவதில்லை.

ஆட்சியாளர்களைக் காப்பாற்றும் சட்டங்கள் அவர்களுக்கு ஆட்சியதிகாரத்தை வழங்குகிறது. ஆனால், இராணுவத்துக்கும், பொலிசாருக்கும் ஊர்காவற்படையினருக்கும் அன்றாடம் அடக்குமுறை அதிகாரத்தினை அளித்துக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு ஊரிலும் பொலிஸ் படையினதும் ஒவ்வொரு பிராந்தியத்தில் இராணுவத்தினதும் சர்வாதிகாரப் போக்கு அதிகரித்துவிடுகிறது. மக்களிடமிருந்து பணம் பறிப்பது முதல் எதிரிநாட்டை வெல்லும் பொழுது அந்நாட்டின் பசுக்களையும் பெண்களையும் கொள்ளையிடுவது போன்ற காட்டுமிராண்டி நாகரீகத்தினைக் கையிலெடுப்பது வரையிலான செயற்பாடுகளில் அவர்களை ஈடுபட அரசு, அனுமதியளிக்கிறது. எங்கு பார்த்தாலும் பொலிஸாரின் அட்டூழியங்கள், அல்லது இராணுவத்தினரின் அட்டூழியங்கள். இவை ஒன்றில் நேரடியாக அவர்களாலேயே செய்யப்படுகின்றன அல்லது இடைத்தரகர்கள் முகவர்கள் போன்றவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. பொலிசாரின் பின்னணியிலும் இராணவத்தினரின் பின்னணியிலும் மேற்கொள்ளப்படும் எத்தகைய சமூக விரோத அநாகரீகச் செயற்பாடுகளிலிருந்தும் அரசு தன்னைக் காப்பாற்றிக் கொண்டு பழியினை கேட்பாரற்ற எதிராளிகள் மீது போட்டு விடுகின்றது. அதற்கு நீதியும் நிர்வாகமும் துணை போகின்றன.

சுதந்திர இந்தியாவில் எங்கெங்கு காணிலும் சக்தியடா என்றமக்கள் சக்தி மலர வேண்டும் என்ற அவா சுதந்திரவேட்கைப் பாரதிக்கு இருந்தது. கடையனுக்கும் கடைத்தேற்றம் உண்டு என்ற உணர்வு மகாத்மாகாந்திக்கிருந்தது. மக்கள் எல்லோரிலும் சக்தியைக் கண்டவர் பாரதி. மக்களைச் சக்தியாக உருவாக்கியவர் மகாத்மா காந்தி.

இப்பொழுது மக்கள் சக்தி உருவாக்கம் என்பது பாதுகாப்பின்மை என்ற மக்கள் உணர்வினால் மழுங்கடிக்கப்பட்டுவிடுகிறது. மக்கள்சக்தி உருவாகியிருக்கிறது என்பது போலியான மனப்பிரமை என்பது போராட்டத்தை முன்னெடுப்பவர்களின் கருத்தியலாக மாறிவருகிறது.

வன்னி மக்கள் வதைக்கப்படும் பொழுது வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் அடக்கப் பட்டார்கள். அழிக்கப்படுவதாகப் பயமுறுத்தப்பட்டார்கள். தென்னிந்தியத் தமிழர்கள் ஊர்வலம் போகும் பொழுதும் எழுந்து குரல் கொடுக்கும் பொழுதும் அடக்கப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள். வெளிநாடுகளில் உள்ளவர்கள் அந்த நாடுகளின் சட்டங்களின் பிடிகளில் சிக்கிக் கொள்ளாத வரையில் தப்பிவிட்டோம் என்ற நிலைக்கு மாற்றப்பட்டார்கள். சுதந்திரத்துக்கான குரல் என்பது ஒலிக்காதவாறு உணர்வுகளுக்குப் பூட்டுப் போடும் செயற்பாடுகள் எங்கும் இடம் பெற்றிருந்தன. அதற்கு வடிவம் கொடுக்கப் படவில்லை. வடிவங்களை மக்கள் உணருவதற்கும் எதிராக மாற்றுக்கருத்துக்கள் கொடுக்கப்பட்டன.

தன் உயிர்கொடை என்ற உயிராயுதம் சாத்வீகப் போராட்டத்தின் உயர்கட்டம். இந்துமுஸ்லிம் இனக் கலவரங்களில் காந்தி உண்ணாவிரதத்தின்மூலம் தன் உயிர்க் கொடைக்குத் தயாராகியிருந்தார். ஆனாலும் அவரை மதித்து அவருடைய உயிர்க்கொடையின் தத்துவத்தை மதிப்பவர்கள் இந்துக்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் இருந்ததால் அதனைக் கைவிடும் படி கேட்டுக் கொண்டனர்.

தமிழரின் சுதந்திரத்துக்காக உயிர்க்கொடை செய்த தமிழகத்தின் இளைஞர்களின் தியாகத்தையும் அந்த வடிவப் போராட்டத்தினையும் அந்தரங்க சுத்தியுடன் கருத்துக்கெடுத்துக்கொள்ளவேண்டும். அஹிம்சை வடிவத்தில் அதுவும் ஒன்று; ஆனால் தீவிரமான போக்கைக் கொண்டது என்பதனை விளங்கிக்கொள்ள வேண்டும். அவர்களது உணர்வுக்கு மதிப்பளிக்கவேண்டும். அகிம்சையையே ஏற்றுக்கொள்ளாத அரச இயந்திரமும் அதனாற் புடம்போடப்பட்ட மனிதர்களும் தீவிர அகிம்சையினை எவ்வாறு ஏற்றுக் கொள்ளுவார்கள். செவிடன் காதில் சங்கு எந்தப்பலனையும் அளிக்கப்போவதில்லை. ஆனால் சுதந்திரத்துக்காக உயிரீந்தோர் தியாகங்கள் சுதந்திரத்தின் படிக்கட்டுக்கள். மக்களின் உயிரைத் துச்சமாக மதிக்கும் மனப்பான்மை அரசியல் இயந்திரத்துக்கு எப்பொழுதே ஏற்பட்டவிட்டது. ஈழப்போரில் இருபதாயிரம் பேரின் உயிரைக் கடைசநாளில் குடித்துவிட்டதாகச் சொல்லப்பட்ட ஆதாரங்களுக்கு இன்று எதிர் ஆதாரங்கள் உருவாக்கம்பெற்றுவிட்டன. உயிர் மேலுள்ள பயம் அன்றைய காந்திக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். இன்றைய ஊடகவியலாளர்களும் சமூக நலன்விரும்பிகளும் மனித உரிமை ஆர்வலர்களும் ஏன் சாதாரண குடிமக்கள் கூட உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் சுதந்திரத்தை உல்லாசமாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இராணுவ கட்டுப்பாட்டிலும் துப்பாக்கி முனையிலும் முள்வேலி முகாம்களுக்குள்ளும் இருக்கும் மக்கள் உல்லாசமாக இருப்பதாகவே 'இந்து' போன்ற பத்திரிகைகள் எடுத்துச் சொல்லுகின்றன. தென்னிந்திய அகதிமுகாம்களிலுள்ளவர்கள் தமது நாட்டை விட்டு, உறவை விட்டு, உயிருக்குப் பயந்து தமிழகத் தமிழர்களிடம் அடைக்கலம் புகுந்திருந்தமை கூட உயிரினைப் பாதுகாக்கத்தான்.

காந்தியின் தீயவைகளைப் பாராத, தீயவைகளைக் கேட்காத, தீயவைகளைப் பேசாத மூன்று குரங்குகளாக தீயவைகளைத் தட்டிக் கேட்காத தீயவைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்காத தீயவர்களை அடையாளம் காட்டமுடியாத குருடர்களாகவும் செவிடர்களாகவும் ஊமைகளாகவும் தனிமனிதர்கள் மாத்திரமல்ல நிறுவனங்களும் ஊடகங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இருந்து வருகின்றன. தமதுபாகாப்புக்கே இந்த அவல நிலை தென்னாசிய போர்மேகம் கொடுத்து வரும் சாரலின் விளைவு.

## ஆயதப் போராட்டமா அகிம் சைப் போராட்டமா

காந்தியின் போராட்டம் காந்தியால் நடாத் தப்பட்டதல்ல. காந்தியை ஆதரித்தவர்களாலும், காந்தியை எதிர்த்தவர்களாலும், மக்களுக்காக நடாத்தப்பட்டது. அஹிம்சைப் போராட்டம் என்பது ஆயுதத்துக்கு எதிராக நெஞ்சை நிமிர்த்தி, சுடுவதனால் சுட்டுப்பார் என்று சொல்லும் அசாத்தியத் துணிவல்ல. அது ஒரு மன மாற்றம் மற்றவர்களில் இருக்கும் ஆன்மாவைக் கூட மதிக்கின்ற மனப் பக்குவம். 'பகைவனுக்கருள்வாய் நன்நெஞ்சே பகைவனுக்கருள்வாய்' என்ற காந்தியின் உன்னத தத்துவத்தின் வெளிப்படை இதையே

"தன்னைத் தான் காதலனாயின்
எனைக்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்"

என்ற திருவள்ளுவரின் அகிம்சையும் போதித்திருந்தது.

"உனது வாழ்க்கையை நீ காதலிப்பாயானால் எங்களை வாழவிடு. நாங்கள் வாழ முடிய வில்லை என்றால் உன்னாலும்வாழ முடியாது" இதன் வழிவந்த ஆயுதப்போராட்டம் என்பது போர் மோகமல்ல. அடக்குமுறைக்கெதிரான ஒரு ஆயுத வடிவம் அது மறையலாம். ஆனாலும் அடக்குமுறைக்கெதிரான சுதந்திர வேட்கை புதிய புதிய வடிவங்களை எடுக்கும்.

திருவள்ளுவர், யேசுபிரான், காந்தி ஆகியோர் போதித்தவடிவங்களைக் கூட வன்முறையில் காட்டும் பொழுது ஆயுதப் போராட்டம் தான். அதனை மற்றவருக்குத் துன்பம் ஏற்படாதவாறு வெளிக் காட்டும்பொழுது அன்புப் போராட்டம் என்ற வடிவத்தைப் பெறுகிறது அதனை ஏற்றுக்கொள்ளத்தக்க மனப்பக்குவத்தை எல்லோரிடத்திலும் பரவலாக்க வேண்டும். அதுவே அகிம்சைப்போராட்டம் வெற்றி பெறுவதற்கு அடிப்படை. அது முடியாமற் போகும்பொழுதில்தான் இரண்டு கைகளையும் உயர்த்துவோம் அநீதியை அழிக்க கிருஷ்ண பரமாத்மா யுகங்கள் தோறும் பிறப்பெடுக்கிறார் - இதனை நம்பித்தானாகவேண்டும்?

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய
விமர்சனங்களை
எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர்
ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# கொண்டோ வாங்...

22ம் பக்கத் தொடர்ச்சி...

பதிவு செய்த மூன்று மாதங்களிற்கு பிறகு கூட்டப்பட வேண்டும். அடுத்த கூட்டங்கள் வருடமொருமுறை நடத்தப்பட வேண்டும். கூட்ட நடவடிக்கைகள் விளக்கமாக அது அறிக்கைகளாக வெளியிடப்பட வேண்டும். கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானம் ஒவ்வொன்றும் நன்றாக விவாதிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்படும். கூட்டத்திற்கு ஒரு சிலர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஏனையோர் சபைத் தலைவரின் அனுமதி பெற வேண்டும்.

பதினைந்து வீத உரிமையாளர்கள் தேவையேற்படின் கூட்டத்தைக் கூட்டலாம்.

## எத்தனை அங்கத்தவர் குறைந்த பட்சம் வரவேண்டும்? யார் கூட்டத்தில் வாக்களிக்கலாம்?

25 வீதமான அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு வரவு தர வேண்டும். ஒரு கோப்பரேஷன் விரும்பினால் கூட்டத்திற்கான குறைந்தபட்ச அங்கத்தவர் வரவு எண்ணிக்கையை 1/3% ஆக உயர்த்தலாம். கொண்டோ உரிமையாளர்களதும், மோட்கேஜ் கடன் கொடுப்பவர்களின் பெயர்களும் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கூட்டம் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்படும். கோப்பரேஷனிற்கு மாதாந்த பணம் கட்டாதவர்கள் கூட்டத்திற்கு வருகை தரவோ, வாக்களிக்கவோ முடியாது. ஒவ்வொரு கொண்டோ உரிமையாளரும் தங்கள் பெயரை அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டியது அவசியம்.

## கொண்டேமினியம் பத்திரங்களை எப்படி மாற்றுவது?

கொண்டோமினியம் அங்கத்தவர்களிற்கு, பத்திரங்களை மாற்றக்கூடிய அதிகாரம் உண்டு. ஆனால், அது நடைமுறையில் மிகவும் காத்திரமானது. எண்பது அல்லது தொண்ணூறு வீதமான அங்கத்தவரின் ஆதரவு அல்லது ஒரு நீதிமன்ற ஆணை உபவிதிகளை மாற்றப் போதுமானது.

## கொண்டோமினியம் எப்படி காப்புறுதி செய்யப்படுகிறது?

1998 கொண்டோமினியம் சட்டத்தின் படி கொண்டோமினியம் திருத்துவதற்கான விதி முறைகளை விளக்குகிறது. கொண்டோமினியத்தின் சொத்துக்களை காலத்திற்குக் காலம் விற்க வேண்டும். காப்புறுதிக்கட்டுத் தொகை சகல உரிமையாளர்களிடமிருந்து பொதுச் செலவு பணத்துடன் வாங்கப்படுகின்றது. வீட்டிற்குள் உள்ள உரிமையாளரின் சொத்துக்கள், மேலதிக மின் இணைப்புக்கள், அவர்களின் தனிப்பட்ட உடமைகள் கொண்டோ உரிமையாளர் ஒவ்வொருவராலும் காப்புறுதி செய்யப்பட வேண்டும்.

## பொழுது போக்கு வசதிகளை வாங்குதல்

கொண்டேமினியம் கோப்பரேஷன் மேலதிக பொழுது போக்கு வசதிகளையோ, 'கொல்வ்' (Golf, Course) விளையாட்டு மைதானத்தையோ வாங்க முடியுமா? ஆம், முடியும். ஒரு கொண்டோமினியம் கோப்பரேஷனிற்கு இந்த அதிகாரம் உண்டு. கோப்பரேஷன் கொண்டோமினியம் உரிமையாளரின் வழமையான சேவைகளையும் மாற்ற உரிமை உடையது.

கொண்டேமினியத்தில் வசிப்பது தனிவீட்டில் வசிப்பதை விட சிக்கலானது. நீங்கள் வாங்குவது என்ன என்பதையும், அங்கு உங்களால் வாழ முடியுமா என்பதையும், கொண்டோமினியத்திலுள்ள நன்மைகளையும் அதில் உள்ள சிக்கல்களையும் தெரிந்து கொண்டு நீங்கள் கொண்டோவை வாங்கினால் மகிழ்ச்சியாக வாழலாம்.

skbales@thaiveedu.com

■ ■ ■

# முழு நேர வீடு விற்பனை முகவர்



Warden & Finch
3 Bedroom Condo



Staines & Finch
3 BR + 3 WR



Steeles & Markham
4 BR + 3 WR



Weston & 401
3 BR + 3 WR



Nelsion & Sheppard
3 BR + 3 WR



Staines & Steeles
4BR + 3 WR



Markham & Steeles
3 BR + 3 WR



Neilson & Finch
3 BR + 4 WR
Finished Bsmt.



Markham & Passmore
4 BR + 3WR



Warden & Finch
3BR + 2WR



Finch & Neilson
4+1 BR



Birchmount & Finch
3 BR + 2 WR



Steeles & Markham
3 BR + 4 WR



Morningside & Sheppard
4+2 BR + 4 WR



Salem & Rossland
4 Bedroom 3 Washroom



Markham & Passmore
4BR + 3WR



Staines & Steeles
4 BR + 3 WR


Apex Creation - 416-297-0707

**பஞ் சொக்கலிங்கம்** Broker

வீடு வாங்கும்போது
உங்கள் மோட்கேஜ்
முகவரிடம் குறைந்த வட்டிவீதத்தை
உறுதிப்படுத்துவது எமது கடமை

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract - Independently Owned Operated

Century 21
Affiliate Realty Inc. Brokerage *
Tel : 416-290-1200
**416 PUNCH ME**
**416.786.2463**




# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்








Over **50 Years**
Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife

## FIREMAN WOLFE LLP
PERSONAL INJURY LAWYERS
CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION
SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH



**Jack J. Fireman Q.C. LLM.**
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**தீபன்**
Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)



**William C. Wolfe B.A. LLB**
Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

**(416) 505-9804**
இலவச ஆலோசனைகளுக்கு:
24 Hours Direct Line **(416) 624-4751**

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO
**$1,000.00** IRB'S PER WEEK
வரை
இழப்பீதற்கு அனுமதிக்காதீர்கள்

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்
"One of the best personal injury law firm in Ontario"

TORONTO SCARBOROUGH MISSISSAUGA

Century 21
King's Quay Real Estate Inc.
Brokerage
Bus: 905-940-3428 Fax: 905-940-0293 7300 Warden Ave., Suite 401 Markham, On L3R 9Z6

For All Your Real Estate Needs
**HomeExpertTeam.com**
**416-496-2625**

*Committed to Providing Real Estate Service to attain results beyond your expectations.*
*Knowledge + Experience + Team work = Result*


**AMIR RAMALINGAM ***
Masters Hall of Fame
CENTURION Honor Society

*Flexible & competitive commission!*


**PRATHEEP BALASUBRAMANIAM ****
Masters Ruby (2003-2007)
Masters Diamond (2008)


**THAYA SUBRAMANIAM ***
Masters Silver (2007)
Masters Diamond (2008)


**JUGA SUREES ***


**ATHAVAN KULARAJASINGHAM ***

* Sales Representative ** Broker

உங்கள் வாடகைப்பணத்தில் சொந்தமாக வீட்டை அமைத்திட இன்றே அழையுங்கள்

**416-496-2625**
Top Producers Award Winning Team

முழுநேர வீடு விற்பனை முகவர்கள் உங்களுக்கு உதவக்காத்திருக்கின்றோம்
நம்பிக்கை நேர்மை நட்பான சேவை !



Exceptional Stunning Home With Amazing Upgrades Thru-Out In Prestigious Cachet Woods. Granite Foyer, 10' Ceiling On Main Flr, Granite Counter Top In Kitchen And Bathrms, 2 Home Theaters and Much More



Well Maintained 3 Bedroom Pent House, One Of The Largest Suite In The Building With 2 Baths, Over 1,400 Sq. Ft. Ensuite Laundry Room And Locker, Open Balcony With Unobstructed North View.



Bright And Clean, Very Good Condition, Large End Unit Over 1600 Sq. Ft, Parquet Floor Through-out the House, Minutes To Main Hwys



Busy Convenience Store & Dollar Store With 649, Residential Neighborhood Plaza In The Busy Intersection. Sale $10500 Per Week, Lotto Commission Covers Most Part Of The Rent $4000 (Incl Tmi).



Lovely, Bright & Spacious Corner Unit In Extremely Well Maintained Luxury Building. 2 Bdrms W/Den & 2 Washrms. Steps To Ttc, Go Train & Shops.



Spacious 3 Br End Unit, Glimmering Hard Wood On Main Flr, 2 Pc Bath In Master Br Very Convenient Location. Steps To Ttc, School, Shopping, Hospital, Park

**Earn AIR MILES reward miles when you buy or sell your home with us**

# வீடு வாங்க விற்க...


**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**





**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**



**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o

"சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு"



**Morningstar / Goreway**

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்

HomeLife Higher Standards

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated. Realtor

## பதின்ம முன் வயதினரின் வளர்ச்சிப் படிநிலைகள்

# முதலாவது மாதவிலக்கு

**பாகம் - 5**

சிவவதனி
பிரபாகரன்



பூப்பெய்துகின்ற பெண் சிறுமிகள் முதலாவது மாதவிலக்கை எதிர்கொள்வது பற்றிய விளக்கங்களை சிறுமிகளும் பெற்றோரும் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பதோடு அவர்களுக்குள் வெளிப்படையாக இதுகுறித்து கருத்துப் பகிரும் சுதந்திரமும் உறவுமுறைமையும் இருப்பது அவசியமாகும்.

முன்னைய காலங்களில் பெற்றோரும் பிள்ளைகளும் அந்தரங்கமான உடலியல் விடயங்களை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ளக் கூச்சப்படுவர். அதனால் பல பெண் சிறுமிகளுக்கு முதல் மாதவிலக்கு வந்தவுடன் தமக்கு ஏதோ ஊறு நேர்ந்துவிட்டதாக எண்ணி அதிர்ச்சியுற்று அச்சப்படுவதுண்டு. இது பல உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துவதுமுண்டு.

ஆனால், இன்றைய உலகம் அவ்வாறால்ல. ஓரளவுக்கு பருவமெய்த முன்பே அதுகுறித்த விளக்கங்களை பெண்பிள்ளைகள் பெற்றோர், நண்பர்கள், ஆசிரியர்கள், நூல்கள், ஆலோசகர்கள் போன்றோரிடமிருந்து அறிந்து கொண்டுவிடுவர். அங்ஙனம் அறிவுறுத்தப்பட்டு அவர்கள் தயார்ப்படுத்தப்படுவதும் மிக அவசியமாகும்.

பூப்பெய்துதலும் மாதவிலக்கு ஏற்படுவதும் சாதாரணமானதும் இயற்கையானதுமான விடயம் என்பதனை பிள்ளைகள் உணர வேண்டும். அதுமட்டுமன்றி அங்ஙனம் உரிய பருவத்தில் மாதவிலக்கு ஏற்படுவது ஆரோக்கியத்தின் அடையாளம் என்பதையும் அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். பொதுவாக பெண் குழந்தைகளுடன் தாய்மார் இது பற்றிப் பேசுவது நன்று. சில குடும்பங்களில் தாய்மார் இல்லாமல் தந்தையரால் மட்டும் வளர்க்கப்படும் சிறுமிகளாயின் இவ்விடயத்தை பகிர்ந்து கொள்வதில் சவால் இருக்கலாம். எனின் தாய்க்கு நிகராகப் பழகும் ஒரு பெண்ணின் வழிகாட்டல் அவசியம். ஆண் சகோதரர்கள் உள்ள சகோதரிகள் தம் மாதவிலக்கு விடயம் தம் சகோதரர்களுக்கோ பாடசாலையிலுள்ள சக ஆண் மாணவர்களுக்கோ தெரிந்துவிடக்கூடாது என மறைப்பதிலும் மிகவும் மன அமைதி இழந்து போகின்றனர்.

மூத்த பெண் சகோதரிகள் உள்ள வீடுகளில் உள்ள சிறுமிகள் ஓரளவுக்கு இது குறித்த விடயங்களை அறிந்து சாதாரணமாக எடுக்கப் பழகிக் கொள்வர். ஆனால் அவர்கள் மூத்த பெண் குழந்தையாக இருக்கும் பட்சத்தில் அவர்களுடன் பெற்றோர் மனம் விட்டுப் பேசுவது அவசியமாகும்.

தமிழர்கள் போன்ற சில இனத்தவர்கள் பூப்பெய்துதலை களியாட்ட விழாவாக்கி கொண்டாடி மகிழ்வதுண்டு. ஆனால், பல சிறுமிகளுக்கு இச்செயலே மனச்சங்கடத்தை உருவாக்குவதுண்டு. இன்றைய காலகட்டத்தில் மிக ஆடம்பரமாக ஆர்ப்பாட்டமாக இவ்விழாக்களை செய்வதை விடுத்து இதற்காக செலவு செய்யும் பணத்தை அவர்களின் எதிர்கால கல்வி மேன்மைக்காகவும் வாழ்வியல் மேம்பாட்டிற்காகவும் இதர அறவழிச் சேவைகளுக்காகவும் செலவு செய்வதே சாலச்சிறந்தது என்பது என் எளிமையான கருத்தாகும்.

பருவமெய்தும் சிறுமிகட்கு பூப்பெய்துதல் என்பது மிகவும் அந்தரங்கமான அவர்களின் தனிப்பட்ட விடயம். நெருங்கிய உறவினர் நண்பர்களுடன் இதனைப் எளிமையாக பகிர்ந்து மகிழ்வதில் தவறில்லை. மாறாக மாபெரும் விழாவாக பெரும் செலவில் விழா எடுப்பதானது அவர்கள் மனதையும் புண்படுத்தக்கூடும் என்பதை நாம் கவனித்தாக வேண்டும்.

## பாலியல் உறவுமுறை பற்றிப் பேசுதல்

பாலியல் உறவு (Sex) என்றாலே பத்தடி பின்வாங்கி தமக்குச் சம்பந்தமில்லாததுபோல் ஒதுங்கிக்கொள்ளும் கலாச்சார மென்னுணர்வு உள்ளவர்கள் தமிழர்கள். பேசுவதோ எழுதுவதோ வாசிப்பதோ தவறு எனப் புறக்கணிக்கப்படும் விடயங்களில் ஒன்றாக பாலியல் சார் விடயங்களை நாம் எண்ணியுள்ளோம். இத்தகைய கூச்சவுணர்வால் நாம் இதைப் பற்றி எக்காலத்திலுமே எம் பிள்ளைகளோடு பேசுவதை விரும்பாதிருக்கின்றோம். அதற்காக மேலைத்தேய கலாச்சாரத்துடன் தொடர்புள்ள இந்நாடுகளில் வளரும் எமது சிறார்கள் பருவவயதுவரை பாலியல் உறவு பற்றி எதுவுமே அறியாதோராக வளர்கின்றனர் என எண்ணிவிடக் கூடாது.

எனினும் பதின்மமுன் வயதினருக்கு இது குறித்து தெரிந்திருக்கும் என நினைப்பதும் தவறு. இவ்வயதுச் சிறுமி ஒருத்தி என்னிடம் சொன்ன ஒரு கதை. "நீங்கள் கூடாத சாப்பாட்டை சாப்பிட்டால் வயிறு பெரிதாகி அம்மாவாக ஆவீர்கள்" என்பதாகும். இதைக் கேட்டு சிரிப்பு வந்தாலும் சிரிப்பதைவிடுத்து பக்குவமாக விளக்கமளிப்பது அவசியமாகும். ஓரளவுக்கு அம்மாவின் வயிற்றில் குழந்தை உருவாகின்றது என்பது அனைத்து சிறார்களுக்கும் தெரிந்த விடயமே. அத்தோடு இவ்வயதுச் சிறாரில் பலர் திருமணமான அப்பா அம்மாவிற்கு பிள்ளை பிறக்கும் என்றும் தெரிந்திருப்பர்.

இந்த பதின்மமுன் வயதினருக்கு பாலியல் குறித்த முழுமையான தகவல்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை, தெரிந்திருக்கவேண்டிய கட்டாயமுமில்லை. பாதுகாப்பான பக்குமான தகவல்களை அவர்கள் தெரிய வேண்டிய அளவிற்கு தெரியப்படுத்துவதனூடாக தேவையில்லாத தவறான கருத்துக்களை அவர்கள் நம்பாமல் தடுக்கலாம்.

கனடியக் கல்வி முறைமையில் பாடசாலையில் responsible sexual choices என்ன என்பதை கற்பிப்பார்கள். எனினும் சில ஆசிரியர்களுக்கும் இதனைக் கற்பிப்பதில் மனச்சங்கடம் ஏற்படுவதுண்டு. பாடத்திட்டத்திற்மைய இப்பாடத்தினைக் கற்பிக்க முடிந்தாலும் ஆசிரியர்களால் குழந்தையின் மனப்பக்குவத்திற்கேற்ப கற்பிக்க முடியுமெனக் கூற முடியாது. சிலசமயங்களில் அவர்களின் வினாக்களுக்கு தெளிவாக பதிலளிக்க முடியாது போகலாம். அதேபோல் ஆசிரியர்களிடம் மனம்விட்டுப் பேசும் சகஜநிலை குழந்தைக்கும் இல்லாதிருக்கலாம். எனவே அங்கு தோன்றும் வெற்றிடத்தை நிரப்ப வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. பிள்ளைகளை கேள்விகளைக் கேட்கும் நிலைக்கு ஊக்குவிக்க வேண்டும். இதைப்பற்றி பெற்றோராகிய உங்களிடம் உங்கள் பிள்ளைகள் பேசுவதில் தவறில்லை என்பதை புரியவைக்க வேண்டும். இதைப்பற்றி நீங்களும் பேசத்தயாராக உள்ளீர்கள் என்பதையும் புரிய வைக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் புதிரான மனதில் எழும் வினாக்களுக்கு விடைகளைத் தேட சிறுவர் தவறான வழிகளை நாட நேரிடக் கூடும்.

அந்தந்த பருவங்களில் ஏற்படவுள்ள பருமாற்றங்கள் குறித்த விடயங்களை, குறித்த வயதைத் தொடவுள்ள சிறாருக்கு எளிமையாகப் புரிய வைத்தல் அவசியம். கனடாவில் பாடசாலைகளில் இது குறித்த கல்விகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றமை உண்மை. எனினும் அதை மட்டும் நம்பியிருத்தல் கூடாது. உங்கள் குழந்தைகள் தமது உடலியல் சம்பந்தப்பட்ட வினாக்களை ஆசிரியர்களிடம் வினவக் கூச்சப்படக்கூடும். பெற்றோரைவிட நம்பத்தகுந்தவர்கள் உலகில் வேறு எவருமே ஒரு பிள்ளைக்கு இருக்க முடியாது எனும் நம்பிக்கை பொதுவாக சிறுவர்களிடம் உண்டு. அதை நாம் பேணிக்காப்பாற்ற வேண்டும்.

வீட்டில் உள்ள பெண்குழந்தைகள் பூப்பெய்தும் வேளைகளில் அவர்களின் ஆண் சகோதரர்களுக்கும் பல தரப்பட்ட வினாக்கள் எழுவது இயற்கை. அவற்றையும் தெளிவுபடுத்தி விளக்க தாயும் தந்தையுமாக பொறுப்பேற்று நடப்பது அவசியம்.

மாதவிடாய் குருதிப்போக்கு என்பது இயற்கையானதும் சாதாரணமானதுமான விடயம் என்பதை ஆண் சகோதரர்களாக விளங்கும் சிறாருக்கு எளிமையாக புரியவைக்க வேண்டும். (அவர்களும் பதின்ம முன்பருவத்தினராக இருந்தால்).

சில சிறுமிகளுக்கு முதல் மாதவிடாய் என்பது மிகவும் மன அதிர்ச்சி அல்லது மன அழுத்தம் தரக்கூடியதாக இருக்கக்கூடும் என்பதையும் பெற்றோர் எதிர்பார்த்து உணர்ந்து பக்குமாக கையாள வேண்டும்.

சில சிறார்களுக்கு இது அவர்களின் தனிப்பட்ட அந்தரங்கத்தில் ஏற்படும் பாரிய மாற்றமாகும். அதனைப் பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும். பூப்புனித நீராட்டு விழாவை ஆர்ப்பட்டமாக ஆடம்பரமாக கொண்டாடி மகிழும் பெற்றோர் இத்தகைய சடங்குகள் தமது பிள்ளைகளுடைய மனதிற்கு ஏற்புடையனவா என்பதைப் புரிந்து நடப்பது அவசியம். பூப்பெய்துவது என்பது சாதாரண பிறந்த நாள் போன்ற நிகழ்வல்ல என்பதைப் பெற்றோர் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர். சிறுமிகள் தானே என அவர்களின் உணர்வுகளை உதாசீப்படுத்தாமல் அவர்களின் கருத்துக்களையும் மதித்து நடப்பது அவர்களின் மன ஆரோக்கியத்திற்கு சிறந்ததாகும்.

என்வரையில் பல ஆயிரம் டொலர்கள் என செலவு செய்து ஆர்ப்பாட்டமாக மாபெரும் மண்டபங்களில் விழாவெடுக்கும் பெற்றோர் இந்த பூப்புனித நீராட்டுவிழாவிற்கு செலவு செய்யும் பணத்தை அவர்களின் எதிர்கால கல்விக்கும் மேற்படிப்புகளுக்கும் முதலிடுவது அவர்களுக்கு பெற்றோராகிய நீங்கள் செய்யும் மாபெரும் உதவியாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

ஒரு பெண் என்னிடம்கேட்டாள். ஏன் தமிழர்கள், பெண்கள் பூப்பெய்துவதை இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணி பப்ளிக் படுத்துகிறார்கள். ஆண்கள் பருவமெய்துவது போல் தானே இதுவும். ஏன் ஆண்களை இயல்பாக விட்டு விட்டு பெண்பிள்ளைகளின் அந்தரங்கத்தினை இங்ஙனம் அம்பலப்படுத்துகின்றார்கள் என்று. எனக்குள் கொழுந்து விட்டெரியும் இக்கேள்விக்கு விடை தேடிக்கொண்டிருக்கும் நான் அப்பெண்ணுக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் வெறுமனே புன்னகைத்தேன். எம் தமிழ் பெற்றோர் ஒரு கணம் நின்று நிதானித்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய வினா இது. இந்த வினாவிற்கு நீங்கள் என்ன பதில் சொல்கின்றீர்கள்?

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

> “ சில சிறுமிகளுக்கு முதல் மாதவிடாய் என்பது மிகவும் மன அதிர்ச்சி அல்லது மன அழுத்தம் தரக்கூடியதாக இருக்கக்கூடும் என்பதையும் பெற்றோர் எதிர்பார்த்து உணர்ந்து பக்குமாக கையாள வேண்டும். ”

**தமிழ் வகுப்பு**

*(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)*

இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

- உங்கள் பிள்ளைகளும் தமிழில் பேசி, எழுதி, வாசித்து தேர்ச்சி பெற வேண்டுமா?
- பேச்சுப் போட்டிகள், சிறுவர் நாடகங்கள், பட்டிமன்றங்கள், சிறுவர் அபிநயப் பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்த வேண்டுமா?
- தொலைக்காட்சி, வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது திறன்களை ஆளுமையுடன் வெளிக்கொண்டுவர வேண்டுமா?

**அழையுங்கள்: 905-554-2496**

"தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை அதன் தொடர்ச்சியில் உள்ளது."

நாளைய எமது தமிழ்ச் சந்ததியினர் தமிழ் பேசும் நல்ல தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வது எமது கரங்களிலேயே உள்ளது.

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI

## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi



Thinking of Buying or Selling Real Estate
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
21 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.........
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
Web: redcarpetcanada.com
Multi Award Winner
Karu Kandiah FRI, CRES,
Real Estate Broker / President
Dir: 416.284.5698 Bus: 416.284.5555 (24 Hrs.)
Mccowan/16th Markham
OPEN HOUSE
Sat & Sun 2-4
Stunning Executive 1 Year New Home!
5 Bedrooms, 4 Washrooms
Approx 3881 Sq Ft.
Child Safe And Quiet
All 5 Bedroom Attach washroom
Custom Kitchen, Granite Counters
Slate Backsplash
Walk To Go Station, Ext. Ttc, York Bus; Pub. Schools And Park. Close To Angus Glen Golf Club And Library.
Asking $674,900
Just Listed!
Major Mack / Markham
A Beautiful Home with
4 Bedrooms, 3 Washrooms
Approx 1900 Sq Ft.
1 Year New Home
Walk to GO Station
Close to Bus & Shopping
Asking $399,000
Dixie / Sandalwood
$329,000
4 Bedrooms, 3 Washrooms Four Bedroom End Unit House Connected On One Side Only. Walk-Out From Breakfast Area
Midland/Eglinton
$129,900
2 Bedrooms, 1 Washroom Well Maintained Large Spacious Unit, Balcony Facing Field View. Close To Kennedy Subway
South Lake/ Bovaird
$429,990
4 Bedrooms, 3 Washrooms A Beautiful Home With Main Level Hardwood Floor. Nice Layout Home With A Fireplace.
Creditview / Sandlewood
$339,000
3 Bedrooms, 3 Washrooms A Very Convenient Location. This Home Is Very Close To Schools, Go Bus/Train And Shopping.
$325,000
3 Bedrooms, 3 Washrooms 'Tridel' Luxury Townhouse, Unit Approx. 1800 Sq.Ft Step To Ttc, Shopping
Markham/Eglinton
$90,000
2 Bedrooms, 2 Washrooms Good Starter Home. Call for more info
$166,900
2 Bedrooms, 2 Washrooms Fully Renovated Corner Unit. Thousands Spent On Renovations **Brand New Kitchen**Brand New Washrooms
Conlins/Ellesmere
$570,000
4 Bedrooms, 3 Washrooms Beautiful 1 1/2 Yrs New Home On A Sought After Location. Approx. 2500 Sq.Ft,
$199,000
4+2 Bedrooms, 4 Washrooms Bright Spacious 4Br Townhouse Newly Renovated & Painted Kitchen, Washrooms
Bellamy/Lawrence
$345,000
3+3 Bedrooms, 3 Washrooms Bright And Spacious!! Buyer Will Not Be Disappointed! Located In A Highly Demanding Area
Eglinton/V.Park
$1,300 For Lease
2 Bedrooms, 2 Washrooms Spacious And Close To All Amenities, All Elf's Washer, Fridge, Dryer And Stove.
Brampton
$1,450 For Lease
3 Bedrooms, 3 Washrooms A Very Convenient Location. Close To Schools, Bus Go Station And Shopping. Tenants Are Very Cooperative
Mccowan/Steeles
$ 600 For Rent
1 Bedroom, 1 Washroom Finished Basemen with Sep Entrance call for more info.
Vaughan
$463,500
4 Bedrooms, 3 Washrooms Nice And Cozy Four Bedroom Family Home In A Great Area Of Dufferin Hills. Parquet Floor Throughout
Hwy 10/Hillcrest
$1,450 For Lease
2+1 Bedrooms, 2 Washrooms Renters Choice !! Laminate Floors !! Clean, Brightened, Spacious, Beautiful East (City) View
இலவசமாக வீடு ஒன்றை அதிர்ஸ்டலாபச்சீட்டில் வென்றெடுக்க அழையுங்கள்...
கரு கந்தையா@416.284.9999
Win a House
More info: www.redcarpetcanada.com

# தோல் & புற்று நோய் ஆராய்ச்சி மையம்

நாகர்கோவில், தமிழ்நாடு
91-93627 28808

- முகப்பரு
- சொடுகு
- சொரியாசிஸ்
- எக்சிமா
- பாலுண்ணி
- உலர் சருமமம்
- தேமல்
- கருவளையம்
- கட்டிகள்
- தோல் புற்று நோய்

போன்றவைகளுக்கு எளிய
ஆயுர்வேத மூலிகைகள்
பக்க விளைவுகள் அற்ற
இயற்கை வழித் தீர்வு



Lymph Nodes of Thoracic Region

- இரத்த அழுத்தம்
- தைராய்டு
- இருதய பலவீனம்
- ஆஸ்துமா

போன்றவைகளுக்கு சித்த மருத்துவம்

## கேரளா ஆயுர்வேதா

டாக்டர் ராஜசேகர் ஆத்தியப்பன்
416 995 0416
ayurvetha@gmail.com

## மெலிந்து பார்க்கலாம் வாங்க சிற்றிடையும் ஒட்டிய உடையும் என்றென்றும் உங்கள் சொந்தம்

"அழகுராணி"
மூலிகை மாத்திரைகள்
பக்க விளைவுகள் அற்றது



இந்தியாவில் பிரசித்தி பெற்ற
"அழகுராணி" மூலிகை மாத்திரைகள்
உடல் எடை குறைப்பில் புரட்சிகரமானது

**பயன்பெற்றோர் பாராட்டுகின்றனர்**

<u>ஷிரோமி, குடும்பத்தலைவி</u>

"நான் சீனி மற்றும் எல்லா இனிப்பு வகைகளையும் சாப்பிடுவதை முற்றிலும் விட்டுவிட்டேன். மூன்றுமாதங்களில் இருபது பவுண்ட் எடை குறைந்துள்ளது."

<u>ஜெரீனா, பணியாளர்</u>

"இயற்கை வைத்யம் என்னை முற்றிலும் சக்தியுள்ளவளாக மாற்றியுள்ளது"

## கேரளா ஆயுர்வேதா

தொடர்புக்கு
**416-995-0416**
**ayurvetha@gmail.com**

எடை குறைந்தால் - உடல் அழகு
உடல் அழகானால் - உடை நளினம்.

# மருத்துவ கேள்வி பதில்

**டாக்டர், இரத்தசோகை (Anemia) என்பது பிரசவத்திற்குப் பின் எல்லாப் பெண்களுக்கும் ஏற்படும் சாத்தியம் உண்டா? அப்படியென்றால் அதனைத் தடுக்க என்ன செய்யலாம்?**

கிரிஸான் தங்கமணி

எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுமென்பதில்லை. இரத்தசோகை என்ற குறைபாடு வராமல் பாதுகாத்துக்கொள்வது எப்பொழுதும் நல்லது. தினமும் அத்திப்பழம், கறிவேப்பிலை சாப்பிடுபவர்களை இந்தக் குறைபாடு நெருங்கவே நெருங்காது.

**டாக்டர், சர்க்கரை நோய்க்கு நாவல் பழம் நல்லதா?**

சிவபாலன்

நாவல் கொட்டையைக் காயவைத்து பொடி செய்து தினமும் தேனீர்போல அருந்திவந்தால் விரைவாக இரத்தத்திலுள்ள சர்க்கரையைக் கட்டுப்படுத்தும்.

**தோலில் சுருக்கங்கள் விழாமல் பாதுகாக்க எந்தவகை கிரீம் நல்லது?**

மோனிக்கா

மரணக் கடல் உப்பு (Dead sea salt) மற்றும் தேன் போன்ற சில கூட்டுப் பொருட்களை சேர்த்து தயாரித்து அருமையான கிரீம் இஸ்ரேலில் இருந்து வருகின்றது. வேகமாக செயல்பட்டு விரைவான பலனைத் தரும்.

**உடம்பில் தேய்த்துக் குளிப்பதற்கு சவர்க்காரம் நல்லதா அல்லது சீயக்காய் நல்லதா?**

சமுத்திர லோஹினி

சீயக்காய் நல்லதுதான். ஆனால் தோல் உலர்ந்துவிடும். குளிப்பதற்கேற்ற பல நல்ல கிரீம்கள் கிடைக்கின்றன. (Shower cream) தேங்காய்ப் பாலில் தயாரித்த குளியல் கிரீம் மற்றும் முருங்கையிலையில் தயாரித்தவை நன்மை பயக்கும்.

**நான் மாலையில் குளித்தாலும் இரவில் படுக்கையில் எனது கணவர் வியர்வை மணம் அதிகமாக இருப்பதாகக் கூறுகின்றார். இதனால் எனக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. உங்கள் ஆலோசனை எனக்கு நிச்சயம் உதவும் என்று நம்புகின்றேன்.**

லலிதா சங்கர்

Ion cleansing என்று இங்கு இருக்கிறது. தொடர்ந்து 10 நாட்கள் செய்திடுங்கள். வியர்வை மணம் குறையும். சுத்தமான சந்தனத் தூள் அல்லது தேய்காய்ப் பாலைத் தேய்த்துக் குளியுங்கள்.

**டாக்டர், உடல் எடை குறைவதற்கு புதுமையான தகவல் ஏதேனும் தர இயலுமா?**

மரியரத்னம்

கடைகளில் Cedar vinegar என்று கிடைக்கும். அதனை வாங்கி காலையில் இரண்டு கப் நீரில் இரண்டு தேக்கரண்டி கலந்து மெதுவாக சுவைத்துக் குடியுங்கள். அப்படியே மாலையில் ஒரு முறை குடியுங்கள். தொடர்ந்து 60 நாட்கள் செய்துவந்தால் கணிசமான அளவு சதை காணாமல் போய்விடும்.

**எனது கணவர் Lubricant உபயோகிக்கலாம் என்கிறார். நாற்பது வயதுக்கு மேல் இல்லறவாழ்வில் இப்படிப்பட்ட உராய்வுத் தைலங்களை பாவிக்கலாம் என்று சொல்கின்றார். அப்படியென்றால் எந்தவிதமான மருந்தை எங்கு வாங்கலாம்?**

கோசலை

சாதாரணமாகக் கடையில் கிடைக்கும் ஆமணக்கு எண்ணெயை வாங்கிப் பயன் படுத்துங்கள். எளிமையானது - இனிமையானது – பக்க விளைவுகளற்றது.

**டாக்டர், மனச்சோர்வு நீங்க என்ன செய்யலாம்?**

வேணி நரசிம்மன்

வருடத்தில் இரண்டு முறை சுகபேதி மருந்தை எடுங்கள். இரவு நேரத்தில் குறைந்தபட்சம் 7 மணிநேரம் நித்திரை கொள்ளுங்கள். தினமும் குளிக்கலாம், இனிமையான பாடல்கள் கேட்கலாம். நடை பயிலலாம், வாய்விட்டுச் சிரிக்கலாம். அத்துடன் Chaywan prash வாங்கி தினமும் ஒரு தேக்கரண்டி சாப்பிடுங்கள். மாலை அல்லது இரவு நேரத்தில் காபி அருந்துவதை விட்டுவிடுங்கள். எல்லாவற்றையும்விட உங்கள் மனதைப் பகிர்ந்துகொள்ள ஒரு துணை அல்லது இணை அல்லது தோழமை அவசியம்.

**எனக்கு எப்பொழுதும் குறைந்த சக்தி (Low energy) இருப்பது போன்று உணர்கின்றேன். இதற்கு பொதுவான மருந்து ஏதேனும் உண்டா?**

காமினி

Double X என்று மாத்திரைகள் கிடைக்கின்றன. தொடர்ந்து எடுத்துவாருங்கள். சிங்கம் போல களிநடை நடந்துசெல்வீர்கள்.

**நரம்புகள் வலுப்பெற என்ன செய்ய வேண்டும்?**

சாமுவேல்

விதைநீக்கிய பேரீச்சம்பழத்தை தேனில் ஊற வைத்து 41 நாட்கள் கழித்து தினமும் ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் நரம்புகள் வலுப்பெறும்.

**டாக்டர், தொண்டை அலர்ஜி நீங்க என்ன செய்யவேண்டும்?**

அருள் தேசமரத்தினி

உரித்த வெள்ளைப்பூண்டை ஒரு துணியில் கட்டி அனலில் வாட்டி சாறுபிழிந்து அத்துடன் சம அளவு தேன் கலந்து தொண்டைப் பகுதியில் தடவிவர சுகம் கிடைக்கும்.

**எனக்கு மன உளைச்சல் இருக்கிறது. எனது வயது 36. மாதவிடாய்க் காலங்களில் பல உபாதைகள். எந்த நாட்டு மருத்துவக் குறிப்பென்றாலும் தந்துதவுங்கள்.**

எகிப்து நாட்டு மருத்துவக் குறிப்பிலிருந்து நல்ல தகவலைத் தருகின்றேன். சின்ன வெங்காயத்தை பச்சையாகத் தினந்தோறும் உணவில் சேர்த்துக்கொண்டால் மாதவிலக்குக் காலங்களில் ஏற்படும் உபாதைகளைக் குறைக்கலாம். மன உளைச்சல் நீக்கி மன அமைதியைத் தரும் குணம் உடையது சின்ன வெங்காயம்.

**கண் குளிர்ச்சியடைய எளிய வீட்டு வைத்தியம் சொல்லுங்களேன்.**

சரோஜா

தேங்காய் எண்ணெய் ஒரு தேக்கரண்டி, பசும்பால் 2 தேக்கரண்டி, சீரகம் 1 தேக்கரண்டி, சின்ன வெங்காயம் 20, எல்லாவற்றையும் சேர்த்துக் காய்ச்சி தினமும் குளிக்குமுன் தலையில் 20 நிமிடங்கள் தேய்த்து ஊற விட்டு பின் குளிக்கவும். கண்கள் குளிர்ச்சியடைந்து பார்வை தெளிவடையும்.

**டாக்டர், தேகம் வலுப்பெற எளிய சமையலறைப் பக்குவம் ஒன்று சொல்லுங்கள்.**

கருணா தம்பிராஜா

தினமும் படுக்கைக்கு முன் உலர் திராட்சைப் பழங்களை பாலில் கொதிக்கவைத்து சாப்பிட்டுவந்தால் எலும்புகள் வலிமைபெற்று தேகம் புத்துணர்ச்சிபெறும்.

**டாக்டர், விட்டமின் கே (Vitamin K) எந்த வகை உணவில் உள்ளது? இதனால் என்ன பயன்?**


பிரபாவதி

வாழைத்தண்டு, நெல்லிக்காய், கொய்யா பிஞ்சு, மொச்சை ஆகியவற்றில் இந்த உயிர்ச்சத்து காணப்படுகின்றது. இரத்தசோகை மற்றும் இரத்தம் உறைதல் போன்றவற்றிற்கு இந்த உயிர்ச்சத்து அவசியம்.

**எனக்கு காலில் நரம்புகள் புடைத்து அசிங்கமாக இருக்கின்றது. (Varicose vein) இதனைத் தீர்க்க மூலிகை வைத்தியம் என்ன?**

மனோன்மணி

மஞ்சள் மற்றும் வல்லாரை சேர்ந்த குளிசைகள் இதற்கென்று கிடைக்கின்றன. Vaingeo என்ற E.H.P. மருந்து சிறப்பான பலனைத் தரும்.



இராஜசேகர் ஆத்தியப்பன்

**எனக்கு வயது 45. தினந்தோறும் வைன் (சிவப்பு திராட்சை ரசம்) ஒரு கோப்பை அருந்துவது நல்லதா?**

சின்னராஜா

நல்லது. ஆனால் தாம்பத்தியம் சம்பந்தமான எந்தவித மருந்தும் எடுக்கக் கூடாது. அப்படி இரண்டையும் எடுத்தால் இதயம் பலவீனமாகும்.

**டாக்டர், எனது மனைவி இறந்து விட்டாள். இனி ஒரு பெண்ணை திருமணம் செய்ய மனம் ஒத்துக் கொள்ளவில்லை. ஆசையைத் துறக்க மூலிகை மருத்துவம் ஒன்று சொல்ல முடியுமா?**

செல்வேந்திரன்

முடியுமே! உங்கள் கேள்வி என்னைக் கவர்ந்தது. "விட்டதடி ஆசை விளாம்பழத்து ஓட்டோட" என்பது பழமொழி. விளாம்பழத்து ஓட்டைப் பொடியாக்கி தினமும் அரைத் தேக்கரண்டி இருவேளை எடுத்துவந்தால் 48 நாட்களில் நீங்கள் சன்னியாசி.

**உடல் தேற என்ன சாப்பிடலாம்?**

விக்கினேஸ்வரன்

"இளைத்தவனுக்கு எள்ளு" என்பது பழமொழி. எள் சாப்பிடுங்கள். எளிதாக உடல் தேறும்.

**வெற்றிலை போடுவது எதற்கு நல்லது?**

சிவசேனன் நல்லபிள்ளை

வெற்றிலை தாம்பத்தியத்திற்கு நல்லது. ஆனால் புகையிலை தாம்பத்தியத்திற்கு எதிரானது. வெற்றிலை பாக்கு, சுண்ணாம்பு இவைகளால் பெரியஅளவில் கெடுதி இல்லை. வெற்றிலையும், சுண்ணாம்பும் வீரியத்தைக் கூட்டி துவர்ப்புச் சுவையுள்ள பாக்கு இன்பத்தை நீட்டிக்கும். ஆனால் புகையிலை விந்துவை நீர்த்துப் போகச் செய்துவிடும்.

**அனாஹதத்தை நினைத்துக் கொண்டு 'ஓம்' ஒலியை எழுப்பலாமா?**

நிர்மல் ஜெயராஜ்

நிர்மல், நீங்கள் குரு இல்லாமல் யோகா பயில நினைக்கிறீர்கள். இது மிகப்பெரிய தவறு. அனாஹதத்தை நினைத்து 'ம்' என்ற ஒலியை எழுப்பலாம். மூலாதாரத்தை நினைத்து 'ஓம்' என்ற ஒலி எழுப்பலாம். ஆக்கினையை நினைக்கும்போது அது 'சிவாயநம' என்று மாறும்.

**யோகப் பயிற்சியின் மூலம் 120 வயதுவரை வாழலாம் என்று எனது குரு சொல்கின்றார். மருத்துவர் என்ற முறையில் உங்கள் விளக்கம் என்ன?**

எந்தப் பயிற்சியின் மூலமும் 120 வயது வரை வாழ இயலாது. ஆயுள் என்பது நமது கைகளில், நமது முயற்சியில், விஞ்ஞானத்தில், மெய்ஞானத்தில் மருத்துவத்தில் இல்லை. ஆனால், ஆரோக்கியம் என்பது இவை எல்லாவற்றிலும் உண்டு. யோகப்பயிற்சியின் மூலம் ஆரோக்கியமாகவும் வாழலாம்.

**வயாகரா, சியாலிஸ், லெவிட்ரா இவைகளில் எது நல்லது?**

டயானா கண்ணன்

ஒவ்வொன்றும் வித்தியாசமான தன்மைகளைக்கொண்டது. உதாரணமாக நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்பத்திற்காக லெவிட்ரா பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் எல்லாமே பக்கவிளைவுகள் கொண்டவைதான். இயற்கையாகக் கிடைக்கும் அமுக்ரா, சிலாசத்து மற்றும் பூனைக்காலி விதை போன்றவையே சிறந்தது.

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■

**Driving School**

ஒட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின்
தனித்துவமான பயிற்சி

General Driving School
Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்

416-731-2829

# கீரை உணவு வகைகள்

# தூதுவளைக் கீரை

கீரை உணவு - 9




கடந்த இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளில் அந்தந்தக் கீரையில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்தோம். சில முக்கியமான சத்துக்கள் எந்தெந்தக் கீரைகளில் உள்ளன என்று இந்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

அகத்திக் கீரை, தண்டுக் கீரை, முருங்கைக் கீரை, பீட்ரூட் கீரை, கொத்தமல்லிக் கீரை, கருவேப்பிலை முதலியவற்றில் வைட்டமின் "ஏ" அதிகமாக இருக்கின்றது. வைட்டமின் "ஏ" கண்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்குத் தேவைப்படுகின்றது. இதனை மலிவான மேற்படி கீரை வகைகளிலிருந்து எளிதாகப் பெறலாம். கீரை உணவைச் சமைக்கும் போது வைட்டமின் "ஏ" அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

அகத்திக்கீரை, முளைக் கீரை, கருவேப்பிலை, புளிச்சக் கீரை, பொன்னாங்காணிக் கீரை ஆகியவற்றில் வைட்டமின் "பீ" அதிகமாகக் காணப்படுகின்றது. வைட்டமின் "பீ" குறைவினால் பல நோய்கள் தலைகாட்டக் கூடிய நிலை ஏற்படும்.

அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, முளைக் கீரை, முட்டைக்கோஸ், கொத்தமல்லிக் கீரை ஆகியவற்றில் வைட்டமின் "சீ" அதிகமாகக் கிடைக்கின்றது. வைட்டமின் "சீ" பல், எலும்பு முதலிய உறுப்புகள் உறுதியாக வளர அதிகமாக உதவுகின்றது. அத்துடன் நோய்களை எதிர்க்கும் சக்தியையும் கொடுக்கின்றது. கீரை உணவைச் சமைக்கும்போது வைட்டமின் "சீ" பெருமளவில் அழிந்துவிடுகிறது. அதனால் அதிக நேரம் வேக வைக்காமலும் வேக வைத்த நீரை வடிக்காமல் வற்ற வைத்தும் எடுக்க வேண்டும்.


அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, அரைக் கீரை, கருவேப்பிலை, பொன்னாங்காணிக் கீரை, பாலக் கீரை ஆகியவற்றில் சுண்ணாம்புச் சத்து அதிகமாகக் கிடைகின்றது. இதயம் ஒழுங்காகச் சுருங்கி விரிவதற்கு சுண்ணாம்புச் சத்து அவசியம். வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் சுண்ணாம்புச் சத்து அதிகம் தேவைப்படுகின்றது.

முளைக் கீரை, அரைக் கீரை, கொத்தமல்லிக் கீரை, மணத்தக்காளிக் கீரை, பசலைக் கீரை, வல்லாரைக் கீரை, தூதுவளைக் கீரை ஆகியவற்றில் இரும்புச் சத்து அதிகம் கிடைக்கின்றது. இரும்புச் சத்து உடல் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது. இரும்புச் சத்தின் பற்றாக்குறைவினால் இரத்த சோகை உண்டாகும். இரும்புச் சத்து கர்ப்பிணிப் பெண்களுக்கு நிறையத் தேவை.

## தூதுவளைக் கீரை

தூதுவளைக் கீரையைப் பற்றி இந்தக் கட்டுரையில் பார்ப்போம். 'தூதுளையும் மாதுளையும் இருக்கும் வீட்டில் மார்பிலும் வயிற்றிலும் களங்கமில்லை' என்று கிராமங்களில் சொல்வதுண்டு. மார்பு சம்பந்தப்பட்ட நுரையீரல், இருதயம், நெஞ்சுச்சளி தொடர்பான நோய்களைக் குணமாக்கும் தனிச்சிறப்புத் தூதுவளைக்கும் வயிறு சம்பந்தப்பட நோய்களைத் தீர்க்கும் தனிச்சிறப்பு மாதுளைக்கும் உண்டு என்பது இந்தச் சொலவடையின் அர்த்தமாகும். செடி, கொடி, மரங்களின் மருத்துவப் பயன்களை அறிந்த மக்கள் தூதுவளைச் செடியையும் மாதுளம் மரத்தையும் கட்டாயமாக தாம் குடியிருக்கும் வீட்டுத் தோட்டங்களில் வளர்க்க விரும்புவார்கள். தமிழீழத்தில் பல வீடுகளில் தூதுவளைச் செடி வளர்ப்பதைப் பார்த்திருக்கிறேன். எல்லோருக்கும் தூதுவளைச் செடியின் முழுப் பயனும் தெரியாவிட்டாலும், தலை முறை தலைமுறையாக வாய்வழியாக வந்த "தூதுவளை உடம்புக்கு நல்லது" என்ற நம்பிக்கை இதனை வளர்க்கவும் பயன்படுத்தவும் தூண்டுகோலாக இருந்திருக்கின்றது. அதனால் வீடுகளில் அடிக்கடி தூதுவளைப் பச்சடி செய்து சோற்றுடன் உண்ணும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் சுவைக்குச் சுவையும் கிடைக்கின்றது; சுகத்திற்குச் சுகமும் கிடைக்கின்றது.

தூதுவளை, கொடி இனத்தைச் சேர்ந்த ஒரு மூலிகையாகும். இதனை ஏறு கொடி என்றும் அழைப்பார்கள். இது ஈரமான இடங்களில் செழித்துப் புதர்போல வளரும். இதன் இலைகளில் சிறகாக உடைந்த முட்களையும் இதன் தண்டில் வளைந்த முட்களையும் நிறையக் காணலாம். தூதுவளை கரும் பச்சை நிறத்தில் கத்தரி இலை போன்ற வடிவத்தில் இலைகளையும் கத்தரிப்பூ நிறத்தில் பூக்களையும் கொண்டது. சுண்டைக்காய் வடிவத்தில் உருண்டையான சிறிய பச்சை நிறக் காய்கள் உண்டாகிச் சிவப்பு நிறத்தில் பழுக்கும். தூதுவளை பெரும்பாலும் வேலிகளில் கொடி போலப் படர்ந்து வளரும். இந்தக் கொடியை சிறிய பந்தல் போட்டு வீட்டுத் தோட்டங்களிலும் வளர்க்கலாம். சாதாரணமாக ஐந்து வருடங்கள் வரை வளரக் கூடிய தூதுவளையை நன்கு பராமரித்து வந்தால் அதற்கு மேலும் வளர்க்கலாம். இதனைத் தூதுளை, தூதுவேளை, தூதுளம், சிங்கவல்லி, அளர்க்கம், ஞானசாதனம் என்றும் அழைப்பார்கள்.





மருத்துவச் சிறப்புமிக்க கீரைகளில் தூதுவளை முன்னணியில் இருக்கிறது. தூதுவளை ஒரு மருத்துவச் செடி என்றும் உணவுக்கானது அல்ல என்றும் பலர் நினைப்பதனால் கடைகளுக்குப் போய்க் கேட்டு வங்குவதில்லை. அதனால் இது பெரும்பாலும் கீரை வகைகள் விற்கும் கடைகளில் விற்பதுமில்லை. ஆனால் இது சாதாரணமாக வயலோரங்களிலும் தோட்டங்களின் வரப்புகளிலும் தானாக முளைத்து வளரும். இதனை அடையாளம் தெரிந்தவர்களும் இதன் அருமையையும் பெருமையையும் அறிந்தவர்களும் பிடுங்கிக் கொண்டுபோய் வீட்டுத் தோட்டங்கிகளில் நாட்டிப் பாதுகாப்பாக வளர்ப்பார்கள்.

ஞாபக சக்திக்குப் பெரிதும் உதவுவதால் தூதுவளைக் கீரையை 'ஞானக்கீரை' என்றும் 'ஞான மூலிகை' என்றும் அழைப்பார்கள். வள்ளலார் தூதுவளையுடன் கரிசலாங் கண்ணி, பொற்றலை, கையாந்தகரை, வல்லாரையையும் ஞானமூலிகைகள் என்று கூறுகின்றார். அகத்தியர், தேரையர், புலிப்பாணி போன்ற சித்தர்களும் ஞானிகளும் போற்றிப் புகழ்ந்த செடி தூதுவளையாகும். 'கபநாசினி' என்று வியந்து கூறப்பட்ட தூதுவளை ஓர் அற்புதமான மூலிகை. மூலிகைகளின் சிறந்த பயன்களைக் கூறிவந்த வள்ளலார் கரிசலாங்கண்ணிக் கீரைக்கு அடுத்த இடத்தில் தூதுவளையை வைக்கிறார்.

இதில் புரதம், தாது உப்பு, சுண்ணாம்பு, இரும்புச்சத்து ஆகிய சத்துக்கள் இருக்கின்றன. தீராத இருமல், சளிச்சிக்கலுக்கு தூதுவளையைப் போன்ற மருந்து வேறு எதுவுமே கிடையாது.

தூதுவளையின் மருத்துவப் பயன்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. தூதுவளையின் இலை, பூ, காய், பழம் மற்றும் வேர் அனைத்துமே மருத்துவப் பயன் உள்ளவை. இவற்றின் பயன்களைத் தனித்தனியாகப் பார்ப்போம். தூதுவளைக் கீரை கசப்பான சுவையுடையது. ஆனால் உடலுக்கு வெப்பத்தைத் தருகின்ற அதனுடைய பயன் மிகவும் இனிப்பானது. முட்களை நீக்கிவிட்டுத் தூதுவளைக் கீரையை நல்லெண்ணையில் வதக்கி வெங்காயம் உப்புச் சேர்த்து சோற்றுடன் பிசைந்து சாப்பிடலாம். தூதுவளைக் கீரையில் பச்சடி, துவையல், கூட்டுப் போன்றவற்றையும் செய்யலாம். தூதுவளை இலையை அரைத்துப் பச்சடி செய்து உணவுடன் சேர்த்துச் சாப்பிடுவது பொதுவான ஒரு வழக்கம். தூதுவளைக் கீரையில் தூதுவளைத் தோசை, தூதுவளை ரசம், தூதுவளைக் கசாயம் ஆகியவற்றையும் செய்து உணவுடன் சாப்பிடலாம். பசு வெண்ணையுடன் தூதுவளைக் கீரையைச் சேர்த்துக் காய்ச்சிய நெய் காசநோய், மார்புச் சளி, நிமோனியா எனப்படும் சளிக் காய்ச்சல் ஆகியவற்றைக் குணப்படுத்தும். தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் நாட்டு மருந்துக் கடைகளில் தூதுவளைச் சாற்றில் செய்த தூதுவளை நெய், தூதுவளை லேகியம் ஆகியன விற்பனைக்கு உண்டு. இவை காச நோய்க்குக் கைகண்ட மருந்து என்று நாட்டு மருத்துவர்கள் பரிந்துரை செய்கின்றனர்.

கபமும் மலச்சிக்கலும் ஏற்படாமல் உடலைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என்பது மருத்துவர்களின் ஆலோசனை. ஏனைய நோய்கள் உடலாகிய வீட்டுக்குள் நுழைவதற்கு இந்த இரண்டும்தான் வாசற்படிகள் என்பர். இந்த இரண்டையும் தூதுவளை குணமாக்கும். தூதுவளைக் கீரை உணவு ஆஸ்மா மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் வராமல் தடுக்கும்; வந்துவிட்டால் அவற்றைத் தாக்கியழிக்கும். மூளை நரம்புகளைப் பலப்படுத்தி நினைவு ஆற்றலைப் பெருக்க உதவும். தூதுவளைக் கீரைப் பொடியைப் பசும்பாலில் கலந்து அருந்தினால் பித்த மயக்கம் தீரும். எருமை மோரில் கலந்து அருந்தினால் இரத்தவிருத்தி உண்டாகும். தூதுவளைக் கீரையை நெய்யில் வதக்கித் துவையல் செய்து வாரத்தில் இரண்டு மூன்று நாட்கள் உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாயுவைக் கண்டிக்கும். உடல் பலமுறும். தாம்பத்திய உறவு மேம்படும். தூதுவளைக் கீரையை அடிக்கடி உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் புற்று நோய் வராமல் தடுக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. குறிப்பாக தொண்டைப்புற்று, கருப்பைப்புற்று மற்றும் வாய்ப்புற்றுக்கு மிகவும் உகந்த மருந்து என்று கூறப்படுகின்றது.

தூதுவளை இலைச் சாறும் எலுமிச்சம்பழச் சாறும் சம அளவு எடுத்து உப்புக் கலந்து உட்கொண்டால் வயிறு சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

தூதுவளை இலை கபத்தை நீக்கும். உடலைப் பலபடுத்திக் காம உணர்வைத் தூண்டும். தூதுவளை காதுவலியைப் போக்கும். தூதுவளை இலையைப் பிழிந்து எடுத்த சாற்றில் ஒன்றிரண்டு துளிகளைக் காதில் விட்டால் காது வலியும் காதில் சீழ் வடிதலும் காது கேளாமையும் குணமாகும். இலையை நெய்யில் வதக்கித் துவையலாகவோ குழம் பாகக் கலந்தோ சாப்பிட்டால் கபம் நீங்கி உடல் பலமுறும். தூதுவளை இலைச் சாற்றை சம அளவு நெய்யில் காய்ச்சி காலை மாலை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தாலும் நெஞ்சுச் சளி நீங்கும். நிழலில் காய வைத்து இடித்த ஒரு தேக்கரண்டி தூளை ஒரு கிளாஸ் பசும்பாலில் கலக்கிக் காலையில் மட்டும் தொடர்ந்து குடித்து வந்தால் கபம், காசம், நாவரட்சி, முட்டுவலி ஆகியன குணமாகும். தூதுவளை இலையை நிழலில் காய வைத்து உலர்த்தி தயிர் உப்பில் ஊறவைத்து மீண்டும் நன்றாகக் காய வைத்து எண்ணெயில் பொரித்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் மனக் குழப்பம், இதய பலயீனம், மலச்சிக்கல் ஆகியன மயமாய் மறைந்து போகும்.

சில செடிகளுக்கு மட்டும் முட்கள் இருப்பதைக் காணலாம். இப்படியான முட்கள் நிறைந்த கீரைச் செடிகளுக்கு ஒரு தனித் தன்மை இருக்கின்றது என்பது முன்னோர் வாக்கு. அதாவது, முட்கள் உள்ள மூலிகைச் செடிகளின் பூக்கள் நரம்புகளைப் பலப்படுத்தும் தனித்திறனை இயல்பாகக் கொண்டவை என்பர். அந்த வர்க்கத்தில் தூதுவளையும் ஒன்று. தூதுவளைப் பூக்க-

42ம் பக்கம் பார்க்க...


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க
$499,900
9th Line / 14th Ave
4 Bedrooms 3 Washroom
$329,800
Port Union / 401
3+1 Bedrooms 3 Washroom
$369.000
Rutherford / Hwy 400
3 Bedrooms 4 Washroom
Finished Basement
$599.000
WOODBRIDGE
Rutherford / Western Rd
4 Bedrooms, 4 Washroom
Finished Basement
$424.000
SOLD
BRAMPTON
Gore & Cottrelle
4 Bedrooms,3 Washroom
In Cambridge
GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE
$845.000
In Orillia
GAS STATION
$1,499.900
In Niagara
SHELL GAS STATION
$1,400.000
In peterborough
ESSO GAS STATION
$749,000
In Fort Erie
ESSO GAS STATION
$2,299.900
மேலும் பல GAS STATION களும் விற்பனை
நிலையங்களும் விற்பனைக்குண்டு
நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்
*Some conditions may apply
சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)
416-816-1500
Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900
Century 21


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Great Deals For Buyers
Sale of Business - Brampton
Great chance, Don't miss it
$39,000+ Stock
Sandalwood / Vankirk
Price Reduced!!!!
3 Years New
Warden / Lawrence
Sold in 3 Days
Sold for 102% of asking Price
I Need More Listings!!!!
For Sale - Toronto
Sold in 4 Days
Sold for 109% of asking Price
Yonge/Finch
For Sale - Brampton
$289,900
North Park/Nuffield
3+1 Bdrm, 3 Wrm,
Great Location,
Basement Fin.
For Sale - Brampton
Sold in 2 Weeks
Sold for 100% of asking Price
Willms Pkwy/Royal Orchard
Call before you list, See the Difference!!!
LOW Commission
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
rubysri@hotmail.com, www.buyandsellwithruby.com
HomeLife Higher Standards



**Market is hot!!!**
**Sell your house for top dollars!!!**

# Shan Thayaparan

Sales Representative

Re/Max Vision Realty Inc. Brokerage, 1-2210 Markham Road, Toronto M1B 5V6

**Dir:416.567.7675** web:www.shan123.com **Bus:416.321.2228**

**Morningside/Finch**



**$238,800**

Convenient Location, Close Schools, TTC, Shoppin,401, Hardwood Floors throughout Affordable Condo Townhouse Ideal for 1st Time Buyers

**Kipling/Steels**




**$159,900**

Well Maintained Corner unit 2 Bedrooms, 2 Washrooms & 2 Parking. Steps to TTC Schools and U of York.

**Scar.Golf/Ellesmere**




**$319,900**

Large 4 bedrooms Back Split Priced for quick sale. 3 Washrooms. 2 Bedrooms Basement Apart./Sep Entr.

**Markham**



**$389,900**

Large 4 bedrooms Open Concept. 3 Washrooms, Pot lights. Close to Go station & School

**Morningside/Finch**




**$429,900**

4Bedrooms, Doble Garage Finished basemet. 4 Wash rooms. Steps to TTC. Close to Schools & Parks

**McCowan/Ellesmere**



**$299,900**

Great Family Neighborhood Original Owner!!!. 3 Br. Bungalow. Close to TTC, 401, Schools, LRT & Scarborough Town Center

**Midland/Steels**



**$488,500**

Monarch Built Home!!! Port Royal Area. Sep. Ent Bsmt Apt. Steps to Schools TTC. Shows Well.

**Neilson/Sheppard**




**$279,900**

Bright& Spacious Detached Home. 3Bed Room & 2 Bed Room Basement Apartment Sep. Entrance. Large B.Yard Steps 24hrs. TTC

**Brimly/Steels**



**$349,900**

Immaculate&Affordable $$$ Spent on upgrades Basement Apt./Sep. Entr. Updated Well Kept & Clean Good Neighborhood!!!!

**McCowan/Steels**



**$195,000**

Immaculately Clean & Specious 2+1 Condo Corner Unit. Steps to Everything. Great Facilities

**Warden/Finch**



**$179,900**

Convenient Location!!!
3 Large Bedrooms
2 Full Washrooms
Steps to Everything!!!

**Neilson/McLevin**



**$169,900**

Bright& Spacious,2+1 Large Corner Unit with 2 Parking Extra Large Locker. Clean &Well Maintained.

**Markhm/Ellesmere**




**$338,500**

Bright& Spacious Detached Home. 3Bed Room & 2 Bed Room Basement Apartment Sep. Entrance.

**Markham/Highglen**



**$337,000**

3 Bedrooms/ 1 bedroom Basement Apart. Close to Mall, Transit, Schools & Park Full Brick house

**Brimly/Denision**



**$338,900**

3 Bedrooms/ 1 bedroom Basement Apart. Close to Mall, Transit, Schools & Park Full Brick house


**Neilson/Finch**




**$139,900**

Very Convenient Location 2 Bed Rooms, 2 Washrooms 24 Hrs. Gate house Security Close to Mall, Schools, Park Doctors office & TTC

**McCowan/Denision**



**$359,900**

Well Maintained home. 3 Large Bedrooms, Finished Basement. Close to Transit, Schools & Shopping

**Meadowale/Shepp**



**$395,000**

Power Of Sale!!!! Bright, Spacious, 4 Bedroom House. Hardwood Floors & Tons of upgrades. A Must See!!!

**9th Line/14th Ave.**



**$599,900**

Beautiful home by Arista!!! Over 3000 Sqf. 4 Large Bedrooms, Main floor Den 53' frontage. Many Upgrades

**Markham/Lawrence**



**$334,900**

Beautiful Well maintained All Brick Bungalow/ Fin. Bsmt. Sep. Entr. Hardwood floors Close to everything

**I will help you to find Lawyers, Home Inspectors, Mortgages Refinances and find Tenants for your Rental properties**

*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*

**அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்**

# காப்புறுதியில்லாவிடினும் உடல் காயத்திற்கு நட்டஈடு பெறலாம்

**வாகன விபத்தில் காப்புறுதி யில்லாவிடினும் உடல் காயத் திற்கு நட்டஈடு பெறலாம்.**

காப்புறுதியில்லாது கனடாவில் வாகனம் செலுத்தி விபத்துக்கு உள்ளான ஒருவர் தமக்கு ஏற்பட்ட உடல் காயத்திற்கு நட்டஈடு பெற வேண்டுமானால் காப்புறுதி ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் அந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு காப்புறுதி கம்பனியினையும் அணுக முடியாது!

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அதாவது அவருக்கு ஏற்பட்ட உடல் காயத்திற்கு மட்டும் (வாகனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கோ அல்லது இழப்புகளுக்கோ எந்த சந்தர்ப்பத்திலும் எவரும் நட்டஈடு வழங்க மாட்டார்கள்) நட்டஈடு வழங்க என மாகாண அரசின் நிதி அமைச்சின் ஒரு பிரிவு என்றும் தயார் நிலையில் உள்ளது என்பதனை அறிந்து கொண்டீர்களா?

- இந் நிறுவனத்தினை எவ்வாறு அணுகுவது?
- எந்த அடிப்படையில் இங்கு நட்டஈடு என்பதனை மாகாண அரசின் நிதி அமைச்சு வழங்குகின்றது?
- காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தி, விபத்தில் சிக்கி உடல் காயமடைந்த நிலையில் நட்ட ஈடு என்பதனை மாகாண அரசில் பெற்று கொண்டாலும் காப்புறுதியில்லாது வாகனம் செலுத்திய குற்றச் சாட்டுக்காக எப்படியான பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டி வரும்?

இதுவே இங்கு இது வரையும் அறியவில்லையானால் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்களில் ஒன்றாகும்.

“வாகன விபத்துகளில் நட்டஈடு கோரும் நிதியம்” (The Motor Vehicle Accident Claims Fund) என்னும் நட்டஈடு வழங்க என ஒரு முதலீட்டு திட்டம் மாகாண நிதி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந் நிதியத்தில் இருந்து நட்டஈடு பெற வேண்டுமானால் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

**Financial Services Commission of Ontario (FSCO)**
**Motor Vehicle Accident Claims Fund**
**5160 Yong Street**
**P.O. Box 85**
**Toronto, Ontario M2N 6L9**

**தொலைபேசி: 416– 250-1422**
**அல்லது: 1-800-268-7188**
**தொலைநகல்: 416 590 7076**
**இணையதளம்: www.fsco.gov.on.ca**

இங்கு விபத்தில் காயமடைந்தவர் எந்த ஒரு காப்புறுதி கம்பனியிலும் நட்டஈடு பெற முடியாத நிலைமையில் இருந்தால் மட்டுமே இந் நிறுவனம் கை கொடுக்கும்.


விண்ணப்பப் படிவங்களை எடுத்து நிரப்பி, மருத்துவ அத்தாட்சிகள், விபத்து தொடர்பான சட்டரீதியான அத்தாட்சிகள் யாவும் சமர்ப்பித்து, விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால் 14 நாட்களுக்குள் நட்டஈடு கிடைக்கும். ஆனால் சில நிபந்தனைகள்:

- இது மாகாண அரசினால், பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கும் வட்டியில்லாத கடன் மாதிரியே! முதல் முழுவதும் திருப்பி செலுத்தப்படல் வேண்டும். (பணத்தினை முழுவதாகவோ அல்லது பகுதி பகுதியா கவோ திருப்பி செலுத்துமாறு கோரி கடிதம் அனுப்பிக் கொண்டேயிருப்பார்கள்)
- வாகன காப்புறுதி சட்டத்தின் பிரகாரம் குற்றவாளியான நிலையில் உடல் காய முற்று நட்டஈடு பெறுவதால், நட்டஈடு பணம் முழுவதும் திருப்பி செலுத்தி முடியும் வரை சாரதி அனுமதி பத்திரம் ரத்தாகியிருக்கும்.

  (கடன் பணம் முழுவதும் செலுத்தி முடிந்த பின்பு இது பற்றி மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு $150 டொலர் பணத்துடன் விண்ணப்பித்து ரத்து செய்யப்பட்ட சாரதி அனுமதி பத்திரத்தினை திரும்ப பெறலாம். இவ்வாறு திரும்ப பெறும்போது, மீண்டும் காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தும் தவறினை செய்ய மாட்டேன் என்பதனை உறுதிபடுத்தும் விதமாக வாகன காப்புறுதி ஒப்பந்தம் செய்த பத்திரமும் சமர்ப்பித்தல் வேண்டும்).
- இக் கடன் மாதிரி வழங்கப்படும் நட்டஈடு திருப்பி செலுத்தாவிட்டால் செலுத்தாதவரின் சொத்துகள், உடமைகள் சட்டரீதியாக பறிமுதல் செய்யப்படும்.
- உடல் காயத்திலிருந்து மீண்டு வேலை செய்ய தொடங்கி விட்டால் சம்பளத்திலிருந்து மாதா மாதம் 10% இக் கடனை திருப்பி படிப்படியாக வழங்க வேண்டும் என்ற சட்டரீதியான உத்தரவுக்கு (Garnishee Order) உள்ளாக வேண்டி வரும்.
- ஆனால் ஒன்று! “வங்குரோத்து நிலைமை” (Bankruptcy) என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டால் இந்த கடனும் தள்ளப்பட்டு விடும். ஆனால் சாரதி அனுமதி பத்திரத்தினை மீள பெறவேண்டுமானால் முழு கடனையும் செலுத்தினாலேயே தவிர எந்தச் சந்தர்ப்பத்திலும் திரும்ப மீள பெற முடியாது.
- கடனை திருப்பி செலுத்த முடியாத நிலையில் நிதி நிலைமை என்பது பாதக மாக இருந்தால் திருப்பி செலுத்த வேண் டிய கடன் தொகையினை குறைக்கமாறு கோரும் போது சில நேரங்களில் நிலைமைகள் சாதகமாக அமைந்தால் அதனை நிதி அமைச்சு ஏற்று கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட சகல நிபந்தனைகளுக்கும் உட்பட்டே மாகாண அரசு பாதிக்கப்பட்டவருக்கு தமது சொந்த வாகன காப்புறுதியிலிருந்து உடல் காயத்திற்கு நட்டஈடு (Statutory Auto Accident Benefits) பெறுவது போல ஒரு தொகையினை வழங்குவார்கள். (ஆனால் ஒழுங்கான முறையில் வாகன காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருந்து விபத்தில் நிரபாரதியாக இருந்து உடல் காயம் என்பது வாழ்வில் நிரந்தரமாக பாதித்து இருந்தால் தப்பான முறையில் விபத்தினை உருவாக்கியவரின் வாகன காப்புறுதி கம்பனிக்கு எதிராக சட்ட ரீதியாக நட்டஈடு கோரும் வழக்கு

**தகவல் தொடர் - 32**



**சிவ பஞ்சலிங்கம்**
**- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -**

தொடர்ந்து பெருந்தொகை நட்ட ஈடு பெறுவது போல இங்கு வாகன காப்புறுதியில்லாது விபத்தில் சிக்குண்டவர்கள் பெற முடியாது).

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாகனம் ஒன்றினை வீதியில் நிறுத்தி பரிசோதனை செய்யும் போது சாரதி சமர்ப்பிக்கத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய மூன்று பத்திரங்கள் பின்வருமாறு!



- வாகனம் செலுத்த அனுமதிக்கும் வலிமை யான சாரதி அனுமதி பத்திரம் (Driver’s License)
- வாகனத்தின் வலிமையான உரிமை பத்திரம் (Vehicle Ownership)
- வாகன காப்புறுதி பத்திரம் (Auto Insurance)

இம் மூன்று பத்திரங்களில் ஏதாவது ஒன்றேனும் அந்த நேரம் கையில் இல்லாது விட்டால் அல்லது வலிமையாக இல்லா விட்டால் தண்டனை ரிக்கற் வழங்குவது ஒரு பக்கம்!

சில நேரங்களில் தண்டனை ரிக்கற்றுடன் இக் குறிப்பிட்ட பத்திரங்கள் இல்லையென்றால் வாகனமும் பறிமுதல் செய்யப்படலாம். (வாகனத்தினை மீளப் பெற இன்னொரு பண நட்டம்)

இங்கு மூன்றாவதாக குறிப்பிடப்பட்ட வாகன காப்புறுதி பத்திரம் இல்லாது வாகனம் செலுத்தியது தெரிய வந்தால் என்ன மாதிரி பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டி வரும்?

- ஆகக் குறைந்தது $5,000 பண தண்டனை. இதனை விட கூடுதலாகவும் கிடைக்கலாம்.
- விபத்தின் போது நிரபாரதியாக இருந்தாலும் வாகனத்தின் பாதிப்புக்கு நட்டஈடு பெற எந்த காப்புறுதி ஒப்பந்தமும் இல்லை.
- உடல் காயத்திற்கு மேற்குறிப்பிட்ட மாதிரி மாகாண நிதி அமைச்சிலிருந்து சிறு தொகை நிபந்தனைகளுடன் கடனாக பெற முடிந்தாலும் வாகன காப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து சுதந்திரமாக பாதிப்பின் எல்லை வரை பெறுவது போல பெற முடியாது.
- வாகன காப்புறுதியில்லாது வாகனம் செலுத்தி பிடிபட்ட குற்றம் பதிவுகளில் போகும் போது மீண்டும் நேர்மையான முறையில் காப்புறுதி செய்ய முயலும் போது, ஏற்கனவே செய்த தவறுக்காக காப்புறுதியின் விலை என்பது அதிகமாக இருப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விடும்.

sivapanchalingam@thaiveedu.com

■ ■ ■


உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call



Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)

Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON



எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416•291•3997

# 'ஒரு நாடுகடந்த நாட்டின் உதயம்'

## பகுதி - 2



மாமூலன்

'அவலை நினைத்து உரலை இடித்ததுபோல' என்ற ஓர் பழமொழி உண்டு. நாடு கடந்த அரசு என்பதற்கு அந்தத் தரப்பினரின் கனடாவிலிருக்கும் அதிகாரம் மிக்க பேச்சாளர்களால் வழங்கப்பெற்றுவரும் விளக்கங்கள் தரும் மயக்கம் இப்படி ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

அவர்கள் சொல்லிவரும் விளக்கங்களிலிருந்து அது நாடுகடந்த அரசு அல்ல (trans national state) என்பதுபோலத் தெரிகிறது. அவர்களுடைய அதிகாரமுள்ள பேச்சாளர்கள் சொல்வதும் எழுதுவதும் குழப்பமாக இருக்கிறது.

பெரும்பாலும் அவர்கள் புகலிட அரசு என்பதனை (இதைத்தான் தற்போது புறநிலை அரசு என்ற சொல்லப்படுகிறதாயிருக்கும்) முன்னுக்கு பின் முரணாக நாடுகடந்த அரசு என்னும் உரையாடல்கள் வரும்போது பயன்படுத்துகிறார்களாயிருக்குமோ என்று எண்ண வைக்கிறது.

அதை வைத்துப் பார்க்கும்போது வெளியில் இருந்துகொண்டு நாடுகடந்த அரசைப்பற்றி தமிழில் பேசவரும் பிறர், அவலை நினைத்து உரலையா இடிக்கிறார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

ஏனென்றால் 'நாடு கடந்த அரசு' என்று குறிப்பிடும் கருத்தின் மூலப்பிறப்பிடம் William I Robinson என்னும் சமூகவியல் பேராசியர் தான். அவருடைய அவதானிப்பில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் அவரால் ஆய்வு என்ற அளவில் கண்டறியப்பட்டு இந்த நிலை உலகிற்கு சுட்டிக் காட்டப்பட்டது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் யப்பானிய மற்றும் பிற ஆசியநாடுகளின் முதலீடுகளின் ஓட்டத்திற்கு ஏற்ப அந்த நாடுகளில் ஓர் அரசியல் ஓட்டத்திற்கான இடைவெளி இருக்கிறது என்று அவர் ஆய்ந்தறிந்தார். அதன் முடிவையே, அவதானிப்பையே அவர் இன்றுவரை வலியுறுத்தி வருகின்றார்.

ஆனால் நாடுகடந்த அரசின் அதிகாரமுள்ள பேச்சாளர்கள், பேராசிரியத் தமிழர்கள் பெரும்பாலும் அதைச் சொதப்பிவிடுகிறார்கள். அதாவது பேராசிரியர் Robinsonஇன் சொல்லுடன் இருக்கும் பொருளும் கருத்தும் எமது தமிழ்த் தரப்பினர் தமிழில் பயன்படுத்தும் 'நாடு கடந்த அரசு' என்பதற்குப் பொருந்தி வரவில்லை. அல்லது இன்னும் அவர்களுக்கு இந்தப் பக்கம் எட்டவில்லையாய் இருக்கலாம். எப்படியிருப்பினும், இந்த நிலையில் நாம் தமிழில் தற்போது உரையாடப்பட்டுவரும் நாடு கடந்த அரசைப்பற்றிப் பேசமுனைந்தால் மிகச் சரியாக அவலை நினைத்து உரலைத்தான் இடிப்போம் போலத் தெரிகிறது.

'நாடுகடந்த அரசு' என்னும் பேராசிரியர் ரொபின்சனின் கருத்துக்களைப் பின்னர் நாடு கடந்த இடைக்கால அரசு நடைமுறைக்கு வரும்போது பிற்பாடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

அதனால் இந்தக் கட்டுரையில் 'நாடுகடந்த' என்ற சொல் வருகையில் அது தற்போது தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்துநிலையைத்தான் பேசுகிறது என்று கொள்க.

நாடுகடந்த அரசு அமையும்போது அது மக்களாட்சி முறையில் அமைய வேண்டும் என்பது மறுப்பிற்கிடமில்லாமல் ஏற்றுக்கொள்ளப்படும்.

> "ஓர் தேர்தலில் மக்களை, பெரும்பான்மை விழுக்காட்டினரை வாக்களிக்க வைக்க வேண்டிய பொறுப்பு, அனைத்து மக்களையும் சேர்ந்தது. அதாவது மக்கள் பங்கேற்கும் தேர்தலாக அது இருக்கவேண்டும் என்ற நிலையை எப்போதும் உருவாக்கவேண்டும்."

மக்களாட்சி – ஜனநாயகம் என்று சொல்லப்படுவதன் தமிழ் - நடைமுறையில் இன்று பல நாடுகளில் இருக்கிறது. ஆனால் பெயரில் இருப்பது செயலில் இல்லாத நிலைதான் எங்கெனும் காணப்படுகிறது. அதற்காக அந்தச் சாக்குப் போக்கை வைத்துக்கொண்டு உண்மையான ஓர் மக்களாட்சி நிலையை நடைமுறையில் கைக்கொள்வதற்கு தயங்கவோ அல்லது தட்டிக்கழிக்கவோ கூடாது.

மக்களாட்சி என்பது "மக்களால் மக்களுக்காக மக்களே ஆள்வது" என்று வரையறை செய்யப்பட்டது. இது 1963இல் ஆபிரகாம் லிங்கன் பேசிய தேர்தல் பரப்புரைப் பேச்சில் வரும் ஓர் வரியாகும். கெற்றிஸ்பேர்க் பேச்சு என்ற புகழ்பெற்ற பேச்சு அது. (Gettysburg, Pennsylvania) அந்த வாக்கியத்தை ஆபிரகாம் லிங்கன் பின்வருமாறு முடிக்கிறார்... "இப்படிப்பட்ட ஓர் அரசு இவ்வுலகிலிருந்து ஒருபோதும் அழிந்துபோகாது". மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே ஆய்ந்தறிந்து கொள்கையில் அது சரியானதாகவும் அதனால் மக்களின் ஆதரவுடன் தொடர்ந்து நிலைக்கும் தன்மையுடையதாயும் இருக்கும் என்றே அவர் கருதினார்.

கடந்த நூற்றாண்டாக அதன் பல்வேறு வடிவங்கள் முன்னரும் பின்னரும் சோதித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

அவற்றின் அடிப்படைகளை இந்த, வரப்போகிறது என்கிற நாடுகடந்த அரசு கைக்கொள்ளவேண்டும். இருக்கின்ற மக்களாட்சியின் பொதுவான கூறுகளை அவர்கள் நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் மக்களாட்சியின் அனைத்துக் கூறுகளையும் இந்த நாடுகடந்த அரசினால் கைக்கொள்ள முடியாது என்ற நிலையும் உண்டு. அது அந்த நாடுகடந்த என்னும் நிலை காரணமாக இருக்கும்.

அவர்கள் அதிகம் செய்யக்கூடியது மக்களால் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக்கொண்டு தமிழ் மக்களின் குரலை உலகம் முழுதும் தங்கு தடையின்றி ஒலிக்கச் செய்யலாம். (இதை எழுதிய அடுத்த நாட்களில் தான் உருத்திரகுமாரனின் தேர்தல் பற்றிய அறிவிப்பு வந்தது. 'தாய்வீடு' ஓர் மாதப்பத்திரிக்கை)

அதைப்போல இந்தப் பிரதிநிதிகளை உலக நாடுகளுடன் தொடர்பாடி இலங்கைத் தமிழர்களின் தேவைகளையும் துன்பங்களையும் எடுத்து சொல்லி கருத்துமாற்றம் ஏற்பட வழிசமைக்கலாம்.

மக்களாட்சி முறைக்குள் இந்த நாடுகடந்த அரசு அமையும்போது கடைப்பிடிக்கவேண்டிய மக்களாட்சியின் நடைமுறைகளைப்பற்றிப் பார்க்கலாம். மக்களாட்சியின் அடிப்படை நடைமுறைகள் நான்கு:

- ஒரு நேர்மையான தேர்தல் முறை மூலம் தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களை மக்கள் தேர்வு செய்யும் உரிமை. அதே போல அவர்களை மாற்றீடு செய்யும் உரிமை. அதற்கான முறையான நடைமுறை.
- பொது வாழ்விலும் அரசியலிலும் மக்கள் விருப்புடன் பங்கேற்கும் நிலை.
- அனைத்து தரப்பு மக்களினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் நிலை.
- ஓர் சட்டச் செயலாக்கம். இதில் அனைத்து மக்களுக்கும் சமமானதாகச் சட்டம் செயற்படும் நிலையைத் தோற்றுவித்து நடைமுறைப்படுத்தல்.

முதலாவது நிலையை ஏற்படுத்துவது எளிதானதே. அதைச் செயற்படுத்துவதற்குப் பணச் செலவைத்தவிர ஆளணி ஏற்பாடுகள் இருந்தால் நடந்துவிடும். (அதனால்தான் விரைவாகத் தேர்தல் நடத்துங்கள் என்று வலியுறுத்துகையில் அதை நடத்த முடியும் என்று எண்ணத் தோன்றுகிறது.)

இரண்டாவதாகிய பொதுவாழ்விலும் அரசியலிலும் மக்கள் பங்கேற்கும் நிலை தற்போது முழுமையடையும் என உடனே எதிர்பார்க்க முடியாது. ஏற்கெனவே நடந்து முடிந்துவிட்ட பல தொடர் நிகழ்வுகளினாலும் கடந்த 40 ஆண்டுகால அரசியல் போக்கின் திசைமாற்றங்கள் அவற்றின் விளைவுகள் ஏற்படுத்திய தாக்கத்தினாலும் மக்கள் சோர்வடைந்து சலிப்படைந்து இருக்கிறார்கள். இதை அரசியலில் தொடர்புடன் இருப்பவர்கள் யாரும் மறுப்பதற்கில்லை.

இரண்டாவதில் குறிப்பாக இந்த நாடுகடந்த அரசு என்பது இலங்கையில் இருக்கும் மக்களுக்கு என்ன அடிப்படையிலான அணுகு முறையை வைக்கிறது என்பதையும் இதில் கருத்தில் கொள்வேண்டும். அதனால் அவர்களின் இந்தப் பங்களிப்பு எப்படியிருக்கும் என்பது தற்போது கூறமுடியாதது. அதுவும் சேர்ந்ததாகவே இந்த நடைமுறை சாத்தியப்பாடு பற்றிப் பேசலாம்.

இரண்டாவதில் அடுத்தாக இந்தியாவில் அகதிகளாக இருக்கும் மக்களை இந்த அரசியல் போக்கில் பங்கெடுக்க - அதாவது பொது வாழ்விலும் அரசியலிலும் மக்கள் விருப்புடன் பங்கேற்கும் நிலைக்கு – யார் விடப்போகிறார்கள். கலைஞர் கருணாநிதியா? சோனியாவா? ரவா?

ஆக இவையனைத்திற்கும் பதிலாக இதற்குத் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் அறிஞர் குழு முன்வைக்கும் திட்டங்கள் என்ன என்பதைப்பார்த்து அடுத்த கட்ட சிந்தனைகளைச்

43ம் பக்கம் பார்க்க...

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net


முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

# நிரந்தர வதிவிட உரிமை



குரு அரவிந்தன்

நிரந்தர வதிவிட உரிமை என்று சொல்லும் போது கனடாவில் குடிவரவாளராக அனுமதிக்கப்பட்ட, அல்லது அகதி நிலை கோரி வந்த ஒருவர் கனடாவின் குடிவரவுச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப, அதற்குரிய தகுதிகள் அவருக்கு இருக்குமாயின், அவர் நிரந்தர வதிவிட உரிமையைப் பெறுவதையே குறிக்கும். கனடாவிற்கு வந்து, தங்கியிருக்கும் ஒரு சாதாரண விருந்தினரைவிட, நிரந்தர வதிவுடமை பெறுபவருக்கு அதிக சலுகைகள் வழங்கப்படும். ஆனால் ஒரு கனடிய குடிமக்களுக்கு கிடைக்கும் எல்லா உரிமைகளும் நிரந்தர வதிவிட உரிமை பெற்றவருக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

எல்லாத் தகுதிகளும் உங்களுக்கு இருந்தாலும், நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர் குறைந்த பட்சம் மூன்று வருடங்களாவது கனடாவில் தங்கி இருந்திருக்க வேண்டும். கனடிய பிரசையாவதற்கு உரிய எல்லாத் தகுதிகளும் உங்களுக்கு இருந்தால், மூன்று வருடங்களின் பின் நீங்கள் கனடிய பிரசை ஆவதற்காக விண்ணப்பிக்கலாம். நிரந்தர வதிவிட உரிமையை ஏற்கனவே பெற்றவர் கூட தவிர்க்க முடியாத வேறு சில காரணங்களுக்காக நாட்டை விட்டு வெளியே அனுப்பப்படலாம். எனவேதான், எல்லாத் தகுதிகளும் உள்ள நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்கள் காலதாமதம் செய்யாமல் எவ்வளவு விரைவாக கனடிய பிரசையாக குடியுரிமை பெறமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றுவிட முயற்சி செய்வது நல்லது.

குடியுரிமை, குடிவரவுத் திணைக்களத்தால் (CIC) வழங்கப்படும் அடையாள அட்டை, நீங்கள் கனடா நாட்டில் நிரந்தர வதிவுரிமை பெற்றவர் என்பதை உறுதிப் படுத்தும். நிரந்தர வதிவிடவுரிமை பெற்று கனடாவிற்கு வருபவர்கள், எல்லையிலோ அல்லது வந்து இறங்கும் இடத்திலோ தாங்கள் கனடாவில் தங்கியிருக்கப் போகும் இடத்தின் முகவரியைக் கொடுக்க வேண்டும். அவர்களைப் பற்றிய தேவையான மேலதிக சொந்த விபரங்கள் அங்கே உள்ள அதிகாரிகளால் அப்போது சேகரிக்கப்படும். இந்த நடவடிக்கை மூலம் அவர்களுக்குரிய நிரந்தர வதிவிடவுரிமை அடையாள அட்டை நான்கு வாரங்களுக்குள் அவர்கள் கொடுத்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் கனடாவை விட்டு, தேவை கருதி வெளியே சென்றிருந்தால் திரும்பி கனடாவிற்குள் வரும்போது, நீங்கள் கனடாவின் நிரந்தர வதிவிடவுரிமையாளர் என்பதை கனடிய எல்லையிலோ அல்லது வந்து இறங்கும் இடத்திலோ கட்டாயம் நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிப்பதற்கு கனடிய நிரந்தர வதிவிடவுரிமை அட்டை மிகவும் உதவியாக இருக்கும். உங்களிடம் வதிவிட உரிமை அட்டை இல்லாவிட்டால், நீங்கள் அதற்குரிய ஆவணத்தை அதிகாரிகளிடம் காட்ட வேண்டும். அவர்கள் அந்த ஆவணத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், சில சமயங்களில் நீங்கள் ஒரு கனடிய நிரந்தர வதிவிடவுரிமையாளர் என்பதை நிரூபிப்பது உங்களுக்கு ஒரு கடினமான காரியமாகவும் மாறி விடலாம். எனவேதான் நீங்கள் எப்போதும் கனடா நாட்டை விட்டு வெளியே செல்லும் போது, உங்களிடம் நிரந்தர வதிவிட உரிமை அட்டை இல்லாவிட்டால், அதற்காக விண்ணப்பித்து அதை எப்போதும் கைவசம் வைத்திருப்து உங்களுக்கு நன்மை பயக்கும்.

நீங்கள் கனடாவில் எவ்வளவு காலம் வாழ்ந்தீர்கள் என்பது முக்கியமல்ல, ஆனால் பின்வரும் ஏதாவது காரணங்களுக்காக அவர்கள் உங்களை நாட்டைவிட்டு வெளியேறும்படி சில சமயங்களில் வற்புறுத்தலாம்.

- கடந்த ஏதாவது ஐந்து வருடகாலத்தில், மூன்று வருடங்களுக்கு மேலாக நீங்கள் அனுமதி பெறாமல் வெளிநாட்டில் தங்கியிருந்தால்,
- நீங்கள் வதிவிட உரிமை பெறுவதற்கு தவறான அத்தாட்சிப் பத்திரங்களைப் பாவித்திருந்தால்,
- தவறான அல்லது முழுமையாக நிரப்பப் படாத தகவல்களைக் கொடுத்து வதிவிட உரிமை பெற முயற்சி செய்திருந்தால்,
- உங்களைக் கனடாவில் ஏற்றுக் கொள்வதாகப் பொறுப்பு எடுத்தவர் தவறான தகவல்களைக் கொடுத்திருந்தால்,
- அகதி நிலை கோரும்போது தவறான தகவல்களைக் கொடுத்து நிரந்தர வதிவிட உரிமை பெற்றிருந்தால்,
- அதிகாரிகளால் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, அதைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்தத் தவறியிருந்தால்,
- வதிவிட உரிமை பெறுவதற்கு முன்பாகவோ அல்லது அதற்குப் பின்பாகவோ ஏதாவது பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுப்டிருந்தால்,
- கனடாவில் ஏதாவது பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டிருந்தால்,
- பயங்கரவாதத்தோடு சம்பந்தப்பட்ட குற்றங்களில் ஈடுபட்டிருந்தால், பாதுகாப்புக் காரணங்களுக்காக உள்ளே அனுமதிக்க முடியாவிட்டால்,
- நீங்கள் குற்றச் செயலில் ஈடுபடாவிட்டாலும், குற்றச் செயலில் ஈடுபட்டிருக்கும் குழுக்களுடன் உங்களுக்குத் தொடர்பிருந்தால்,
- மனிதர்களையோ அல்லது பணத்தைக் கடத்துவதிலோ உங்களுக்குத் தொடர்பிருந்தால்,
- போர்க் குற்றங்களிலோ அல்லது மனித நேயமற்ற குற்ற நடவடிக்கைகளிலோ ஈடுபட்டிருந்தால்,
- இப்படியான குற்ற நடவடிக்கைகளுக்குக் காரணமான அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு வகிக்கும் அதிகாரியாக இருந்தால்,

உங்களுடைய நிரந்தர வதிவிட உரிமை பாதிக்கப்படலாம். அப்படிப் பாதிக்கப்படும் பட்சத்தில் நீங்கள் தகுந்த சட்ட ஆலோசனையைப் பெறமுடியும்.

மேற்கூறிய இத்தகைய காரணங்களுக்காக ஒருவரை நாட்டைவிட்டு வெளியேற்றும்போது, கனடிய குடியுரிமை இல்லாத அவரது குடும்பத்தினரும் அவரோடு சேர்ந்து வெளியேற்றப்படலாம்.

(தொடரும்)

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

MORTGAGE

1st & 2nd Mortgages
New Immigrants / Self Employed
Refinance
Equity Line of Credit
Renewal
All other Financial Arrangement

Kethes Sivasubramaniyam
Mortgage Agent - (Lic # M08006105)
Cell : 416.873.5780



Via Financial Services Inc.
(Lic # 10669)


My Office :
5200 Finch Ave. E,
Suite 304,
Scarborough, ON.
M1S 4Z5
Tel : 416-548-8005

Head Office :
120 Traders Blvd.
Suite 206,
Mississauga, ON.
L4Z 2H7

வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

EFILE




KETVAR
TAX & ACCOUNTING
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-873-5780 / 416-548-8005
Email : ketvar@gmail.com

**Computek College**
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
www.computek.edu

NEW LOCATION IN MARKHAM !

Markham Campus
Markham / Steeles
(On Steeles,1 Block East of Markham Rd)
202 - 7 Eastvale Drive.
Markham

905.471.3344




AMPLE FREE PARKING AVAILABLE !

Courses Offered :

Ms Vista
Word
Excel
Access
Powerpoint
Outlook

Financial Accounting
Quickbooks
Simply Accounting
AccPac



Early Childcare Assistant (ECA)



Computerized Accounting



Personal Support Worker (PSW)



Network Engineering



Business Administration
Medical Office Admin (MOA)

PLEASE NOTE THAT NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES.

Scaborough Campus
Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Toronto Campus
Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

# தூதுவளைக் கீரை

36ம் பக்கத் தொடர்ச்சி...

ளைத் தொடர்ந்து உணவுடன் சேர்த்து வந்தால் நரம்புகள் பலப்படும், சரும நோய்கள் நீங்கும், பார்வைக் கோளாறு குறையும், காது கேளாமையும் போகும். முருங்கைப் பூக்களைப் போலவே தூதுவளைப் பூக்களுக்கும் ஆண்மையைப் பலப்படுத்தி வீரியத்தை வீறுகொள்ளச் செய்யும் தன்மை உண்டு. உடம்பு மெலிந்தவர்கள், சக்தியை இழந்தவர்கள், ஆண்மைக் குறைபாடு உள்ளவர்கள் தூதுவளைப் பூக்களை மருந்தாகவோ உணவாகவோ தொடர்ந்து சாப்பிட்டு வர விரைவில் நல்ல பலனைக் காணலாம்.

பின் வருவனவற்றில் ஏதாவது ஒன்றை முறையாகவும் ஒழுங்காகவும் கடைப்பிடித்து வந்தால் மிகச் சிறந்த பலன் கிடைக்கும். நிழலில் காய வைத்த தூதுவளைப் பூக்களில் நூறு கிராம் எடுத்து, அத்துடன் சாதிக் காய் நூறு கிராம், மாதுளம் பூ நூறு கிராம் சேர்த்து அரைத்த கூட்டில் காலை மாலை இரண்டு கிராம் அளவு சாப்பிட்டு வரலாம். அல்லது தூதுவளைப் பூக்களை பசும்பால் விட்டு ஒரு சட்டியில் காய்ச்சிக் கற்கண்டு சேர்த்துப் பருகலாம். அல்லது பத்துத் தூதுவளைப் பூக்களைப் பாலில் காய்ச்சி சர்க்கரையுடன் 45 நாட்கள் பருகி வரலாம். இதனால் கிடைக்கக்கூடிய பயன்கள் என்ன வென்றால், நரம்புத் தளர்ச்சி நீங்கி நித்திரையில் விந்து வெளியாவது கட்டுப்படும். மெலிந்து சோர்ந்து பொலிவிழந்த 'சோப்பிளாங்கி' உடம்பு 'இரும்பென' இறுகித் திண்மை பெற்றுத் திணறும். துவண்டு தூங்கிக் கிடந்த இளமைப் பருவம் தூதுவளையின் தூண்டுதலினால் துடித்தெழுந்து உடலாகிய வீட்டின் கதவைத் தடதடவென்று தட்டும். தாது வளர்ச்சியுறும். காம உணர்வு பெருக்கெடுக்கும். வசீகரம் வந்து அட்டணைக்கால் போட்டுக் கம்பீரமாய் அமர்ந்து, கவர்ச்சி காட்டிக் கன்னியரின் கவனத்தை ஈர்க்கும். பாவையரின் கடைக்கண் பார்வைகள் கிட்டும். அர்த்தமுள்ள பார்வைகள் வசமாகும்; பரவச மாகும். ''மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாய்''த் தோன்றும். ஆண்மைக் குறைபாடு ஓட ஓட அடித்து விரட்டப்படும். அதனால் குழந்தைப் பாக்கியம் கிட்டும். இவையெல்லாம் தூதுவளையின் தனிச் சிறப்பு என்று சித்தர்களும் முனிவர்களும் மூலிகை மருத்துவர்களும் கூறுகின்றனர்.

தூதுவளைக் காயும் கபத்தை நீக்கும். பசியை உண்டாக்கும். காயை உலர்த்தி தயிர் உப்பில் ஊறவைத்து எண்ணெயில் பொரித்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் பைத்தியம், இதய பலவீனம், மலச்சிக்கல் ஆகியன நீங்கும். நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் அனைத்தையும் துரத்திக் கொண்டு போய்த் தூரத்தில் நிறுத்தும். மலச்சிக்கலைப் போக்கவும் பயன்படும்.

தூதுவளைப் பழமும் கபத்தை நீக்கும். பசியைத் தூண்டும், மலச்சிக்கலைப் போக்கவும் பயன்படும்.

பெரிய நீர்நிலைகளைத் தூய்மைப்படுத்தி அதனுள் நீரை நிறைத்து வைத்தால், உயிரினங்கள் பயன் அடையும். அதைப் போலவே மாறுபட்ட குற்றமுடைய நெஞ்சத்தைத் தூய்மை ஆக்கும் ஆற்றலுடையது தூதுவளை என்னும் பொருள் கூறுகிறது பின்வரும் பாடல்:

திருக்குளத்தை நன்றாக்கித்
தின்னுவையேல் நல்ல
திருக்குளத்தைப் போலே திருத்தும் –
திருக்குளத்தை
எல்லாம் இரவுவிளை என்னவருந்
தூதுவளை
எல்லாம் இரவும் இளியென்

தொடரும் ...!

uthayanan@thaiveedu.com

**Law Office**

**T. JEGATHEESAN**
(Barrister, Solicitor and Notary Public (on)

உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

# ஒரு நாடுகடந்த...

40ம் பக்கத் தொடர்ச்சி...

செய்யலாம்.

அவர்கள் எதையும் அறிவிக்க முன்பாகவே நாடுகடந்த அரசின் சாத்தியங்கள் சாதிய மின்மைகள் பற்றிப்பேசுவது பொருத்தமாக அமையும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை.

மூன்றாவதாகச் சொல்லப்பட்டது மனித உரிமைகள் பற்றியது. நாடு கடந்த தமிழரசின் திட்ட வகுப்பாளர்களான அறிஞர்கள் மக்களாட்சியின் அடிப்படையை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வழி வகுப்பார்கள் என உறுதியாக நம்பலாம். அதாவது மக்களாட்சியின் அடிப்படைக்கு ஊற்றுக் கண்ணான மனிதவுரிமை என்பதை அவர்கள் மதிப்பார்கள் என்று நம்பலாம்.

ஆனால் இந்த மனித உரிமை, அதுவும் அடிப்படை மனித உரிமை என்பதிலெல்லாம் நாட்டுக்கு நாடு நிறைய வேறுபாடுகள் உள்ளன. மனித உரிமைக்கும் உலகளவில் அளவு மாறுபாடுகள், குணமாறுபாடுகள் உள்ளனதான். இது ஏறக்குறைய உண்மையில் விகித அளவில் வேறுபடும் உண்மைகள் உண்டு என்று சொல்வதைப்போல்தான்.

எனக்குத் தெரிந்தவரை கனடாவில் இருக்கும் மனித உரிமை யாப்பினை பின்பற்றுவது உலகின் சிறப்பான முன்மாதிரியானது. அதைனைக் கைக்கொள்வது தமிழர் அனைவருக்கும் பெருமை சேர்க்கும்.

பிற நாடுகள் எங்கினும் இந்தக் கனடாவின் மனிதவுரிமை யாப்புப்போன்றவை செயற்படுத்தப்படுவதுமில்லை. கருத்து நிலையிலும் கூட இல்லை. கனடாவின் மனித உரிமைகள் யாப்பு மிகவும் சிறப்பானது.

பல நாடுகளில் தூக்குத் தண்டனை சாதாரணமாக உண்டு. மதங்களைப் பின்பற்றும் உரிமை மறுக்கப்படும் நிலை உள்ளது. இன ஒதுக்கல், நிற ஒதுக்கல் சாதிய ஒதுக்கல் பிரதேச ஒதுக்கல் போன்ற பல பிரிவினைகள் தூண்டப்படும். அவை அனைத்தும் நடக்காமல் இருக்க கனடாவின் அடிப்படை மனித உரிமை யாப்பை நடைமுறைக்கு கொண்டு வருவது அனைத்து தரப்பாலும் வலியுறுத்தப் பட வேண்டும். அது உலக அளவில் வரவேற்கப்படுவதாயிருக்கும்.

மனித உரிமைகள் நடைமுறைப்படுத்துவதும் முழுமையாக நாடுகடந்த தமிழரசின் கையில் தங்கியிருக்கப்போவதில்லை. ஆனால் அவர்கள் தங்கள் கருத்து நிலையில் அவை முழுமையாக அடையப்படவேண்டும் என்பதை வலியுறுத்தலாம். வலியுறுத்தவேண்டும்.

நடைமுறையில் இலங்கைத் தமிழர்களிடம் உள்ள பிரதேச வேறுபாடு, மத வேறுபாடு, சாதி வேறுபாடு என்பன அனைத்தும் அடிப்படை மனித உரிமைகளுக்க முரணானது என்பது இந்தஇடத்திலாவது எம் தமிழர்களுக்கு சுட்டிக்காட்டப்படவேண்டும் என்று கருதுகிறேன். எந்த அரசியல் பேசுபவர்களாயிருந்தாலும் சாதியில்லாத – பார்க்காத இலங்கைத் தமிழர்களைப் பாரக்கமுடியுமா? (வாதங்களின்போது விரல் விட்டு எண்ணும் விதிவிலக்கை எப்போதும் எதிர்வாதமாய் வைப்பதை நிறுத்திக்கொள்வோம்.)

மக்களாட்சியின் நான்காவது கூறாக உள்ளது நடைமுறைச் சட்டமியற்றும் அதிகாரமும் அதைச் செயலாக்குவதற்கான சுயாதீன அமைப்புமாகும். நாடுகடந்த தமிழரசினைப் பொறுத்த வரைக்கும் இது நடைமுறைக்கு வருவது மிகவும் சொற்பச் சாத்தியமே உடையது.

அதாவது ஒரு சட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்துவது என்பதும், அதனை மக்கள் கைக்கொள்வது என்பதும் இப்படியான நிலையில் பொருந்தாது. ஏனெனில் தமிழ் மக்கள் அனைவரும் வெவ்வேறு நாடுகளில் வாழுகிறார்கள். அவர்கள் எப்படி ஒரு நாட்டிற்குள் மற்றொரு சட்டத்தைக் கைக்கொள்ளமுடியும் என்ற கேள்வி எழுகிறது. ஆக சட்டத்தை விட்டுவிட்டு மற்ற அனைத்தையும் நாடுகடந்த அரசினர் முன்வைக்கலாம்.

அப்படியாயின் எப்படி மனித உரிமைகளைப் பாதுகாப்பது குறித்து பேசலாம் என்ற கேள்வி எழுவது இயற்கைதான். ஆனால் மனித உரிமை நிலைப்பாட்டைச் செயற்படுத்த தேர்தல் வழி வரும் நாடுகடந்த அரசின் பிரதிநிதிகள் 'அந்தந்த நாடுகளின் சட்டத்திற்குட்பட்டு' முழுதாக முயற்சித்தால் அந்த மனிதவுரிமையைநோக்கி நகரலாம். இது எப்படிச் சாத்தியமாகாது என்பது இப்போதே பலருக்கும் வெளிப்படையானது.
இவ்வாறு கற்பனையில் பல சாத்தியங்களைச் சொல்வது மட்டுமே இன்றைய நிலையில் பொருந்துகிறது. வெளியிலிருப் போருக்கு முடியுமாயிருக்கிறது.

### தேர்தல் நடைமுறைக்கான குறிப்புக்கள்:

அனைத்திலும் முக்கியமாக, தேர்வு செய்யப் படப்போகும் உறுப்பினர்களைப் பற்றியும் எப்போதும் இடமிருக்கவேண்டும். தேர்தலில் வாக்களிக்க அல்லது பங்கெடுக்கத் தவறிவிட்டு, ஓர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தவறிழைக்கிறார் என்று குற்றம்சாட்ட ஒரு பொது மகனுக்கு உரிமையில்லை. உண்மையில் வாக்காளர் அட்டையில் சில வகையான நாடுகடந்த, அரசுசார் முன்னுரிமைகளைப் பெற வாக்களித்தமைக்கான சான்று முத்திரை வைத்திருக்கவேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டேவரலாம். இது ஏறக்குறைய வாக்களிப்பது கட்டாயம் என்று ஆக்குவதைப்போன்றது. வாக்களிக்காமல் இருப்பதற்கான ஒருவரின் அடிப்படை மனிதவுரிமையை இது பாதிக்கும் என்பதையும் இங்கு சுட்டவேண்டும்.

வாக்கு முறையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அல்லது கட்சிக்கு கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில் உறுப்பினர்களை வழங்குவது என்ற நடைமுறை வேண்டும்.

எடுத்துக்காட்டாக பச்சைக்கட்சி என்ற கட்சி கனடாவில் உள்ளது. அதன் கொள்கைகளை பலர் விளங்கிக்கொள்வதுமில்லை. அவை

> ஆளாளுக்கு ஆங்காங்கே சட்டமியற்றுவோராயும், சட்டத்தைச் செயற்படுத்துவோராயும், பத்திரிக்கை சுதந்திரத்தை அடித்தும் இடித்தும் கேள்விக்கு உள்ளாக்குவோராயும் இருந்தால், நாடுகடந்த அரசால் ஒரு துளியும் தமிழர்வாழ்வில் நன்மை செய்யமுடியாது

மக்களிடம் வந்துசேர அந்தக் கட்சிகளிடம் போதிய பரப்புரை வாய்ப்பும் இல்லை. இந் நிலையில் அந்தக் கட்சி பெறும் குறைந்த வாக்குகளுக்காக ஒருவர் நேரடியாக உறுப்பினராக தேர்வாகமாட்டார். அவர்களால் இயலாது. ஆனால் அந்தக் கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கு ஓர் அல்லது பல பிரதிநிதித்துவம் அவையில் வேண்டும். வேண்டுமல்லவா? அதனால் அவர்களுக்கு, அதைப் போன்ற கட்சிகளுக்கு அவர்களின் கருத்துக்கள் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் உறுப்புரிமை வழங்கப்படவேண்டும்.

தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் முறையாகச் செயற்படாதவிடத்து அவரைத் திருப்பி அழைக்கும் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தவேண்டும். இதனால் மக்களாட்சியின் முன்மாதிரியான பண்புகளை உலகிற்கு நாங்கள் நடைமுறைப்படுத்திக் காட்டலாம்.

கட்சிகள் அல்லது கருத்து நிலைசார் குழுக்களுக்கு உறுப்புரிமை வழங்கும் வகையில் உறுப்புரிமை பொதுக்குழுவில் இருக்க வேண்டும். பொதுக்குழுவில் இருக்கும் உறுப்புரிமத்தின் அடிப்படையை மட்டும் கருத்தில் கொள்ளாது (அது வெறும் கணக்கு மட்டுமே என்பதால்) பல்வேறு கருத்து நிலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் மையக்குழு அமைக்கப்படவேண்டும்.

ஒரு தலைமைக்குப் பதிலாக உலகிற்கு முன்மாதிரியாக இரு இணைத் தலைமைகளை நடைமுறைக்கு கொண்டு வரலாம். மையக் குழுவிற்கு ஓரிரு பேச்சாளர்கள் அமையலாம்.

### மக்களாட்சியின் நான்கு தூண்கள்:

மக்களாட்சி செயற்பட மேற்சொன்ன நான்கு கூறுகளும் இருக்கவேண்டும். ஆனால் அதே வேளை மக்களாட்சி நடைமுறையில் செயற்பட நான்கு தூண்கள் போன்றசமூகத்தின் அமைப்புக்கள் முதன்மையானவை என்பது உலகின் பட்டறிவு.

- சட்டமியற்றுவோர்.
- நிறைவேற்று அதிகாரிகள்.
- சட்டத்தை செயற்படுத்துவோர்.
- ஊடகத்துறையினர்.

இந்த நான்கு துறையினரும் தன்னிச்சையாக இயங்கும் வாய்ப்பு இருக்கும்போதே ஓர் பொறுப்புள்ள சமூகத்தில் மக்களாட்சி சிறப்பாக நடைமுறையில் இருக்கிறது என்று பொருள்.

அந்த நடைமுறையையும்பற்றி இப்போது இங்கே சிலவற்றைமுன்வைப்பது மிகவும் தேவையானது.

ஓர் தேர்தலில் மக்களை, பெரும்பான்மை விழுக்காட்டினரை வாக்களிக்க வைக்க வேண்டிய பொறுப்பு, அனைத்து மக்களையும் சேர்ந்தது. அதாவது மக்கள் பங்கேற்கும் தேர்தலாக அது இருக்கவேண்டும் என்ற நிலையை எப்போதும் உருவாக்கவேண்டும்.

இவ்வளவு நாளும் தமிழர் இருந்ததைப்போல இருக்கவேண்டியதில்லை. தமிழ்த் திரைப் படத்தில் நடப்பவற்றை ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்க்கும் மக்களின் மனநிலை இல்லாமல், மக்கள் முழுமூச்சாக ஆட்சிமுறையில் அதாவது அரசியல் நடைமுறையில் பங்கெடுக்கும் நிலை வேண்டும். அதற்கு வாய்ப்பான இடங்களிலாவது அது சாத்தியப் படவேண்டும். ஓரிருவர் மட்டுமே திரும்பவும் திரும்பவும் மேடையில் தோன்றும் நிலை மாறிவிடவேண்டும். நட்டாமுட்டித் தனங்கள் நிறுத்தப்படவேண்டும்.

எவ்வாறு ஒரு போர் நடந்த சூட்டோடு சூடாக மகிந்த ராசபக்சவின் சிறிலங்கா அரசு ஓர் தேர்தலுக்க துடிக்கிறதோ அதே போன்றது தான் தற்போது தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நாடுகடந்த அரசினர் திட்டமிடுவதும். (இந்தக் கட்டுரையை எழுதியபின் வந்த நாடுகடந்த அரசினரின்? தேர்தல் அறிவிப்பால் இது சேர்க்கப்படவேண்டி வந்திருக்கிறது) இப்போது என்னதான் அவசரம்? என்ன சாதனை இந்த வேகத்தால் நிகழ்த்த முடியும்? முதலில் திட்டத்தை முறையாக தீட்டிவிட்டுப் பின்னர் செயலுக்கு வருவதே தொடர்ந்தும் தவறுகள் நடக்காதிருக்க வழியாயிருக்கும்.

பலதரப்பட்ட கருத்துநிலைகளுக்கும் எங்கும்

இன்று சிறலங்காவை நினைத்துப்பார்த்தால் மக்களாட்சிக்குரிய அனைத்தும், தடைகளுக்கும் சிக்கலுக்கும் உள்ளாகியிருப்பது கண்கூடாகத் தெரிகிறது.

ஆனால் நாடுகடந்த அரசு என்பதை இடைக் கால நிலையிலேனும் உருவாக்க நினைப்பவர்கள் இவற்றை நினைவில் கொள்ளவதும் தங்கள் உடன் நெருங்கிய பணியாளரிடமும் கூட்டாளிகளிடமும் இவற்றைப்பற்றி அறிவுறுத்தி வைத்திருத்தல் மிகவும் நல்லது; தேவையானது.

ஆளாளுக்கு ஆங்காங்கே சட்டமியற்றுவோராயும், சட்டத்தைச் செயற்படுத்துவோராயும் பத்திரிக்கை சுதந்திரத்தை அடித்தும் இடித்தும் கேள்விக்கு உள்ளாக்குவோராயும் இருந்தால், நாடுகடந்த அரசால் ஒரு துளியும் தமிழர்வாழ்வில் நன்மை செய்யமுடியாது.

இந்த அடிப்படையை தமிழ் மக்களும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வோரும் நினைவில் கெண்டால், இருக்கின்ற உலகிற்குள் தமிழர்கள் தங்களுக்கான சிறப்பான வழிமுறைகளை ஏற்படுத்தலாம். அவ்வாறான வாய்ப்புக்கள் இன்னும் பெருகும்.

### நிறைவாக

நாடு கடந்த அரசின் தற்போதைய பேச்சாளரான உருத்திரகுமாரன் முதலனாவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது இன்னும் ஆணித்தரமாக்கப்படவில்லை. பேராசியர் சுகிர்தராஜா முன்வைத்தது மற்றும் அந்த அறிவிக்கப்பட்ட அறிஞர் குழு முன்வைத்தவை என அனைத்தும் மக்கள் முன் வைக்கப் பட்டு ஒப்புதல் பெறப்படவேண்டும்.

எழுந்தமானத்துக்கு எதையேனும் செயலாக்கி விட்டு பிள்ளைப்பூச்சியை மடியில் கட்டிய நிலையை நாம் இனியும் ஏற்படுத்திக்கொள்ள முடியாது.

மேலும் நாடுகடந்த என்ற சொல் பல காலமாக நடைமுறையில் உள்ளது. ஆனால் நாடுகடந்த அரசு என்பதுதான் நடைமுறைக்கு வராத ஒன்று. இந்நிலையில் முன்பே நாடு கடந்த என்ற சொல்லின் பல பரிமாணங்கள் உலக அரசியலில் உருவாகியுள்ளதையும் அறிந்து நுணுக்கமாகச் செயல்படவேண்டும்.

இதில் வயிற்றில் புளி கரைக்கும் செய்தி ஒன்றையும் சொல்லித்தானாகவேண்டும். அமெரிக்காவின் ஹாவார்டு பல்கலைக்கழகம் 2002இலிருந்து நாடுகடந்த நிலையில் உள்ள ஆயுதக் குழுக்களைப்பற்றி கண்காணிப்பு ஆய்வகம் ஒன்றை நடத்தி வருகிறது. இது பின்லாடனையும், அல்கைதாவையும் முன்நிறுத்திச் செய்யப்படும் ஆய்வாகும். ஆனாலும் நாடுகடந்த என்ற சொல் அங்கும் பட்டியலிடப்பட்டிருக்கையில் மனம் திகீர் என்பதைத் தவிர்க்கமுடியவில்லைத்தான்.

அனைத்தையும் மீறி தற்போது பரந்து பட்ட மக்களின் கவனம் நாடுகடந்த அரசு என்பதன் மீது திரும்பியிருப்பதை எளிதாக, மலினமானதாக மதிப்பிடாது பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாம் இங்கு வைக்கமுடியும்.

வரலாற்றின் பொறுப்புள்ள காலங்களில் இதுவும் ஒன்று என்பதை நினைத்து ஒவ்வொரு சொல்லும் செயலும் குறிப்பாகவும் செறிவாகவும் சிறப்பாகவும் இருக்கவேண்டும்.

mamoolan@thaiveedu.com

■ ■ ■

# காப்புறுதியில் குழப்பமா?

**தொடர்: 5**


சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

சென்ற இதழில் குறிப்பிட்ட சலுகைகளுடன் கொடுபடும் இன்னுமோர் சலுகை ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்ட மற்ற நபர்கள் காப்புறுதிக்கு மனுச்செய்யும் போது மாதக் கட்டணம் ஒரே வங்கியிலிருந்து ஒரே நாளில் கழிபட வேண்டுமாயின் இவர்களுக்கு வருடாவருடம் அறவிடும் காப்புறுதிப்பத்திரம் அளிப்பதற்கான வருடாந்த பணமான Policy Feeஇல் ஓரளவு கழிவு கொடுபடும், இதனையே ஆங்கிலத்தில் Policy Fee Discount என அழைப்பார்கள். இந்த சலுகையை எல்லா நிறுவனமும் சகல காப்புறுதி ஒப்பந்தங்களுக்கும் கொடுப்பதில்லை என்ற காரணத்தால் இதையும் தீர விசாரித்து தகுந்த காப்புறுதி திட்டத்தை தரமான, 'உங்கள் தேவையை' பூர்த்தி செய்யும் காப்புறுதித் திட்டமாக எடுப்பது நிச்சயம் எதிர்காலத்தில் மன ஆறுதல் திட்டத்தை கொடுக்கும் என்றால் மிகையாகாது.

ஏற்கனவே முன் இதழ்களில் குறிப்பிட்ட மாதக்கட்டணம் மாறாமல் மருத்துவரீதியாக, வருடாவருடம் காப்புறுதித்தொகை அதிகரிக்கும் வண்ணம் கொடுபடும் காப்புறுதி ஒப்பந்தத்தை போல மருத்துவ ரீதியின்றி இரு நிறுவனங்கள் அளிக்கின்றன. இதில் நிறுவனம் A, $30,000இனையும் நிறுவனம் B, $50,000 இனையும் கொடுக்கின்றன. நிறுவனம் Aஇல் மேலதிகமாக காப்புறுதிக்கு விண்ணப்பிக்க விரும்பினால் அதிகபட்சம் $20,000இனை ஆரம்பத்திலிருந்து இறுதி வரை காப்புறுதி தொகை மாறாத திட்டமாக மனுச் செய்யலாம். ஆனால் இரு நிறுவனங்களும் $50,000இற்கு மேற்பட்டு கொடுக்கமாட்டார்கள். வருடா வருடம் அதிகரிக்கும் காப்புறுதி ஒப்பந்தத்தை பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட இரு நிறுவனங்களும் வருடா வருடம் காப்புறுதி தொகையை 3 வீதத்தினால் அதிகரித்து கொண்டு போகும். இதன்படி, எவ்வளவு காலம் மனுச செய்தவர் உயிரோடு இருக்கிறாரோ அதற்கு தக்கபடி, விலைவாசிக்கு ஏற்ப காப்புறுதி தொகையும் அதிகரித்து போகும். ஆனால், ஆரம்பத் தொகையின் இரு மடங்கு தாண்டியதும் மேலதிகமாக அதிகரிக்கமாட்டாது. உதாரணமாக, நிறுவனம் Aஇல் $30,000இற்கு மனுச் செய்தால் அதிகபட்சம் $60,000 வரை தான் காப்புறுதி அதிகரிக்கும். நிறுவனம் Bஇல் மனுச்செய்தால் அதிகபட்சம் $100,000 வரை தான் காப்புறுதி அதிகரிக்கும். இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் இடையில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் நிறுவனம் Aஇனை பொறுத்தவரை மேலதிக கட்டணமின்றி சாதாரண மரணமாயின் $30,000உம் அகால மரணமாயின் $60,000உம் இந்த அகாலமரணம் ஒரு பொது மக்கள் செல்லும் பேருந்து, வாடகை வண்டி, புகையிரதம், விமானம் ஆகியவற்றில் பிரயாணம் செல்லும் போது விபத்து ஏற்பட்டு அதன் விளைவாக மரணம் ஏற்படின் $ 90,000 கொடுபடும். அத்துடன் மட்டுமல்லாது தடுப்பு ஊசி (Insulin) உபயோகிக்கும் சலரோகக் காரருக்கும் இவர்கள் காப்புறுதி அளிக்கிறார்கள். ஆனால் நிறுவனம் (B) இனை பொறுத்தவரை சலரோகத்திற்கு தடுப்பு ஊசி உபயோகிக்கும் விண்ணப்ப தாரருக்கு காப்புறுதி அளிக்கப்படமாட்டாது. மேலும் இந்த திட்டங்களை நிறுவனம் A, 40 வயதிற்கும் 85 வயதிற்கும் இடைப்பட்டவருக்கும் நிறுவனம் B, 35 வயதிற்கும் 75 வயதிற்கு இடைப்பட்டவர்க்கும் இத்தகைய காப்புறுதியினை மனுச் செய்ய அனுமதிக்கின்றன. அத்துடன் இந்த இரு நிறுவனங்கள் கொடுக்கும் காப்புறுதி திட்டங்கள் அவர்கள் கேட்கும் ஒரு சில கேள்விகளுக்கு இல்லை என்று பதில் கொடுத்தால் மட்டுமே உடனே அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதித்திட்டத்தை வழங்குகிறார்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளில் முக்கியமான கேள்வியானது 'கடந்த இரண்டு வருடங்களுக்கு ஏதாவது காரணத்தையிட்டு நீங்கள் மனுச் செய்த காப்புறுதி நிராகரிக்கப்பட்டதா அல்லது பின்போடப்பட்டதா' என்பதாகும். அதற்கு 'ஆம்' என்று பதில் கொடுத்தால் 2 வருடத்திற்கு பின்னர் அமுலுக்கு கொண்டுவரும் காப்புறுதி திட்டத்தை சற்று கூடிய மாதாந்த அறவீட்டு பணத்திற்கு மனுச்செய்யலாம். இந்த மாதிரியான திட்டங்கள் 'ஏகப்பட்ட வருத்தங்கள் உள்ளவர்கக்கு மட்டுமே சிறப்பாக அமையும். காரணம், ஒரு வருத்தமும் இல்லாதவர்கள் குறைந்த மாதாந்த கட்டுப்பணத்திற்கு இதே தொகைக்கு மனுச் செய்லாம் அல்லது இதே மாதாந்த கட்டுப்பணத்திற்கு ஏறழத்தாழ இரு மடங்கு காப்புறுதி தொகைக்கு மனுச் செய்யலாம். அத்துடன் 2 வருடத்திற்கு பின்னர் அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி கொடுபடும் காப்புறுதித்திட்டத்தை பொறுத்தமட்டில் நிறுவனம் A, 25 வயதிற்கு மேற்பட்ட எவருக்கும் காப்புறுதித்திட்டத்தை $50,000வரை வழங்குகின்றது. இந்த திட்டம் ஆயுள் காலம்வரை மாதாந்த கட்டணத்தை செலுத்தும் வகையில் கொடுபடும் திட்டமாகும். நிறுவனம் Bயினை பொறுத்தவரை 20 வருடம் மட்டுமே கட்டுப்பணத்தை செலுத்தி ஆயுள் காலம் வரை நீடிக்கும் காப்புறுதித்திட்டத்தை வழங்குகிறார்கள். இவ்வகையான காப்புறுதித் தொகையில் ஒரு விதமான அதிகரிப்பும் இல்லாத மருத்துவ ரீதியின்றி கொடுபடும் காப்புறுதியினை பொறுத்தவரை 10 நிறுவனங்கள் மூலம் குறிப்பிட்ட தொகைக்கு மேலாக காப்புறுதி செய்வதற்கு அனுமதிக்காமல் மொத்தமாக $375,000 வரை காப்புறுதி மனுச் செய்வதற்கு வசதிகள் உண்டு என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அத்துடன் தேக நிலை சீராக உள்ள 45 வயதிற்கு உட்பட்ட எவருக்கும் $245,000 வரை ஒரு வித மருத்துவ சோதனையின்றி ஆயுள் காப்புறுதி வழங்க ஒரு பிரபல்யமான காப்புறுதி நிறுவனம் உள்ளது என்பதையும் வாசகர்களாகிய உங்களுக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன். ஆகையினால் உங்கள் தேகநிலையை பொறுத்து, எடுக்கும் மருந்துகளைப் பொறுத்து, உங்கள் ஆயுள்கால, தற்காலிக தேவைகளை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை அனுபவமுள்ள, தேர்ச்சியுள்ள பல நிறுவனங்களுடன் ஈடுபடும் காப்புறுதி பிரதிநிதியுடன் தொடர்புகொள்வது உங்களுக்கு சாலவும் சிறந்தது.

மேற்கண்ட திட்டங்கள் அனைத்திற்கும் மனுச் செய்ய முடியாமல் கொடிய வியாதிகள் மூலம் அவலப்படும் 85 வயதிற்கு உட்பட்ட எவருக்கும் ஈமக்கிரியைகளுக்கான செலவை ஒழுங்குபடுத்தும் காப்புறுதித் திட்டத்தை தற்சமயம் ஒரு ஈமக்கிரியை நிலையம் (Funeral Home) மூலம் ஒரு காப் புறுதி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி இறுதிச்சடங்கிற்கான முழுச் செலவு அனைத்தையும் உள்ளடக்கும் திட்டத்தை நீங்களே தேர்ந்தெடுத்து (பார்வை பெட்டி உட்பட) அதற்கான மாதாந்த கட்டணத்தை 10 வருடங்களுக்குள் கட்டி முடிக்கக்கூடியதாக (80 வயதிற்கு உட்பட்ட) அல்லது 5 வருடத்திற்கு கட்டி முடிக்கக்கூடியதாக ஒழுங்குகள் செய்யலாம். இதன்படி மாதாந்த கட்டுப்பணத்தை தொடங்கி 2 வருடத்திற்கு பின்னர் மரணம் ஏற்படின் மீதிச் செலவுக்கான பணத்தை காப்புறுதி நிறுவனமே ஏற்றுக்கொள்ளும். பதிலாக, 2 வருடத்திற்குள் மரணம் ஏற்படின் முழுத்தொகையையும் நீங்களே கட்ட வேண்டும். இதனோடு ஒப்பிடும்போது மருத்துவ ரீதியின்றி கொடுபடும் காப்புறுதி திட்டம் சாலவும் சிறந்தது. காரணம், காப்புறுதி ஒப்பந்தம் அளித்தபின்னர் எப்போது மரணம் ஏற்படினும் முழுக் காப்புறுதி இழப்பீட்டு பணமும் வாரிசுதாரரையடையும். அத்துடன் மாதாந்த கட்டுப்பணமும் குறைவு.


அண்மையில் எனது 76 வயது வாடிக்கையாளர் ஒருவர் என்னுடன் தொடர்புகொண்டு 'ஏன் எனக்கு மருத்துவ ரீதியின்றி காப்புறுதி கொடுத்தீர்கள் ஈமக்கிரியை நிலையம் மூலம் ஒழுங்கு படுத்தும் காப்புறுதி திட்டத்தை கொடுத்திருக்கலாமே' என்றார். அவருக்கு ஈமக்கிரியைக்கான மொத்தம் $9,000இற்கான மாதாந்த கட்டுப்பணம் $106; பதிலாக அதே $106 கட்டுப்பணத்திற்கு மனுச் செய்யும் காப்புறுதி தொகை $12,500 இரண்டையும் அவரிடம் காட்டி இதில் எந்த திட்டம் உங்களுக்கு சாதகமாக அமைகிறது என்று கேட்ட போது ஒருவித பதிலும் வரவில்லை. அத்துடன் மரணம் வெளிநாட்டில் நடந்தால் திரும்ப உடம்பை இங்கு கொண்டு வருவதற்கான மேலதிக அறவீட்டு பணத்தையும் கூறியபோது மருத்துவ ரீதியின்றி கொடுபடும் காப்புறுதித் திட்டம் சாலவும் சிறந்தது என்பதை புரிந்து கொண்டு இன்னும் 2 வயோதிபர்களுக்கு காப்புறுதி மருத்துவ ரீதியின்றி வழங்க உதவி செய்தார். இதை எழுதிக் கொண்டு இருக்கும் போது கடந்த வருடம் நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது.

70 வயதுடைய முதியோர் சங்கத்தில் பிரபல யமான முன்னால் வைத்தியர் வீட்டிற்கு அவரின் மகளின் காப்புறுதித் திட்டத்தை பரிசீலிக்க சென்றிருந்தேன். அவர்களின் திட்டத்தை பரிசீலித்து முடித்தவுடன் 'தம்பி இந்தத் திட்டங்கைளயும் பார்த்து சொல்லுங்கள்' என்றார். இரண்டு திட்டங்களும் அவரது மனைவியாருக்கும், மனைவியின் தாயாருக்கும் செய்த காப்புறுதி திட்டங்கள். அதிலுள்ள குறைநிறைகளை சுட்டிக்காட்டி உங்கள் பிரதிநிதியை கூப்பிட்டு ஆவண செய்யுமாறு கேட்டுவிட்டு இதற்கான கட்டுப்பணத்தை யார் பொறுப்பு எடுத்திருக்கிறார் என்று கேட்டபோது 'நான் தான்' என்றார். உங்களுக்கு என்ன மாதிரியான திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது 'எனது தேகநிலை ஒழுங்காகத்தான் இருக்கிறது. ஆனபடியால் நான் காப்புறுதி செய்யவில்லை. அத்துடன் எனக்கு இதில் நம்பிக்கையும் இல்லை. ஆனால் இவர்கள் இருவரும் வருத்தக்காரர்கள் அன்றாடம் நான் தேகப்பியாசம் செய்கிறேன். முதியோர் விளையாட்டுத்துறைகளிலும் பங்கு பற்றியிருக்கிறேன்' என்றார். 'அவர்கள் போகும் போது நீங்கள் இருப்பீர்களா' என்று கேட்ட போது 'புரியவில்லை' என்றார். அவர்களின் இறுதிப்பிரயாணம் வரை உயிரோடு இருப்பீர்களா என்று கேட்டபோது சிரித்துக்கொண்டே 'நீங்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஏனெனில், போன மாதம் தான் எனது மருமகள் 39 வயதில் புற்றுநோயினால் மரணமடைந்தார். அவருக்கு காப்புறுதி செய்யவில்லை என்றபோதுதான் 'உங்களின்' உதாசீனத்தால் உங்களுக்கும் காப்புறுதி இருக்காது அதன் காரணத்தால் அவர்கள் இருவரின் காப்புறுதியும் கட்டுவதற்கு நீங்கள் இல்லாமல் போனால் எல்லாம் விரயமாகும் என்றேன்.

'இது உங்கள் வாழ்க்கைப் பிரச்சினை அறிவுரை கொடுப்பது எனது தொழில். முடிவு எடுப்பது உங்கள் கடமை. நன்றி' என்று கூறிவிட்டு எனது வாகனத்தில் ஏற முயற்சிக்கும் போது அவரது மகள் 'அப்பா கூப்பிடுகிறார்' என்றார். சென்றபோது தம்பி இந்த நாட்டிற்கு வந்து 18 வருடங்கள். ஆனால், இதுவரை எனது சிந்தனையைத் தூண்டும் வகையில் ஒருவரும் எனக்கு இந்த விதமான ஆழமான கேள்விகள் கேட்கவில்லை. மனம் உறுத்துகிறது. ஆனபடியால் ஒரு கணிசமான தொகைக்கு காப்புறுதி

46ம் பக்கம் பார்க்க...

## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 144 துரித காப்புறுதி இழப்பீடுகள். 20 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

**- சக்திவேல் -**

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!


TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Morningside & Sheppard
$436,900
4 Bedrooms, 4 Washroom
Morningside & Sheppard
$369,900
4 Bedrooms, 3 Washroom
9th Ave. & 14th Ave.
$569,900
4 Bedrooms, 4 Washroom
McCowan & 16th
$369,900
2+1 Bedrooms, 3 Washroom
Markham & 16th Ave.
$449,999
3 Bedrooms, 3 Washroom
Rutherford & Weston
$385,900
3 Bedrooms, 3 Washroom
Whites & Finch
$319,600
4 Bedrooms, 3 Washroom
Westney/Ravenscroft
$319,900
4 Bedrooms, 4 Washroom
Audly & williamson
$389,000
4 Bedrooms, 3 Washroom
Neilson & Mclevin
$337,900
3+3 Bedrooms, 2 Washroom
Jane & Steeles
$389,900
3+1 Bedrooms, 2 Washroom
Neilson & Sheppard
$289,000
3+2 Bedrooms, 2 Washroom
North Park/Nuffield
$289,900
3+1 Bedrooms, 3 Washroom
Vanvirk/Sandalwood
$269,900
3 Bedrooms, 2 Washroom
Nightstar & Neilson
$129,900
3 Bedrooms, 2 Washroom
16th & 9th Line
$519,900
4 Bedrooms, 4 Washroom
Warden & Lawrence
$359,900
3+1 Bedrooms, 2 Washroom
Neilson & Staines
$399,900
3+1 Bedrooms, 4 Washroom
Kennedy & Eglinton
$199,000
2+1 Bedrooms, 2 Washroom
Morningside & Lawrence
$449,900
4 Bedrooms, 3 Washrooms
Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.
Apex Creations • 416-297-0707
முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள்,
வீடு வாங்க விற்க அழையுங்கள்
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8
Bus.: 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated, REALTOR
தமிழ் சுப்பிரமணியம் (செல்வன்)
முகுந்தன் நடராஜா
Thamil Suberamaniam (Selvan)
Sales Representative
Direct : 416.358.6200
Email : thamilrealtor@gmail.com
Mugunthan Nadarajah
Sales Representative
Direct : 416.276.8025
Email : homelifemugunthan@gmail.com

# கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை

## (Personal Bankruptcy in Canada)



சங்கர்.T
C.R.Canada

உலகளாவிய ரீதியில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை காரணமாக, அநேக தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டும், அதே வேளை பல்வேறு தொழில் நிலையங்களில் பெருமளவு ஆட்குறைப்பும் செய்யப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக அநேக உலக நாடுகளைப் போன்று கனடாவிலும் பல்வேறு மட்டங்களில் பொருளாதார நிலை பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பலர் மிகவும் மனக் குழப்பமான நிலையில் உள்ளனர். இவ்வாறான நிலையினால் பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளவர்களில் பலர் இதற்கான சரியான தீர்வு என்னவென்று அறியாத நிலையில் உள்ளனர். தமது நிதித் தேவைகளுக்கு தற்காலிகமான முடிவு காண்பதற்காக கடன் பெறும் பலர் தமது கடன்களை மீண்டும் செலுத்தாவிடில், தாம் வாங்கிய கடன்கள் தொடர்பான தகவல்கள் யாவும் 7 வருடங்களில் Credit Bureau வில் இருந்து முற்றாக மறைந்து விடும் என்ற தவறான கருத்தை கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பான பல்வேறு விதமான சந்தேகங்களுக்கு விடை தருவதே இக் கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

### வங்குரோத்து நிலை (Bankruptcy)

உங்களது கடன்கள் யாவற்றையும் முழுமையாக நீக்குவதற்கு வங்குரோத்து நிலை பொறுப்பாளர் ஒருவருடன் நீங்கள் கலந்துரையாடி கடனில் இருந்து விடுபடுவதற்கு முயற்சி செய்வதே வங்குரோத்து நிலைக்கான விண்ணப்பத்திற்கான செயற்பாட்டின் அர்த்தம்.

இந்த செயற்பாட்டில் ஈடுபடும் போது உங்களது சொத்துக்கள் எவையும் பறிபோகாத வகையிலும் உங்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

### தனிநபரின் வங்குரோத்து (Personal Bankruptcy)

ஒரு தனிநபர் வங்குரோத்து நிலைக்கு செல்வது என்பது கனேடிய மத்திய அரசின் சட்டத்தினால் (the Bankruptcy & Insolvency Act) கட்டுப்படுத்தப்படும் ஓர் சட்டபூர்வமான செயற்பாடு. இச்சட்டமானது நேர்மையான ஒருவர் துரதிர்ஷ்டவசமான ஓர் சூழ்நிலைக்கு தள்ளப்படும் போது, அவரது கடன்களில் இருந்து அவர் விடுபடுவதற்கு வழி செய்கிறது. அதேவேளை இச்சட்டமானது ஒரு தனிநபருக்கு கடன் கொடுத்த அனைவரையும் சமமான, நியாயமான முறையில் நடத்துகிறது.

கனடாவில் ஒருவர் வங்குரோத்து நிலைக்கு செல்வதாயின் அவர் கனடாவில் வசிப்பவராக அல்லது கனடாவில் வர்த்தகம் செய்பவராகவும், அவர் தனது கடனைத் தீர்க்க முடியாதவராகவும் (Insolvent) இருத்தல் அவசியம்.

### பெற்ற கடனும் தீர்க்கமுடியாத நிலையும்

ஒருவர் தனது கடனை தீர்க்கமுடியாமல் இருத்தல் என்றால் என்ன?

> “ தமது நிதித் தேவைகளுக்குதற்காலிகமான முடிவு காண்பதற்காக கடன் பெறும் பலர் தமது கடன்களை மீண்டும் செலுத்தாவிடில், தாம் வாங்கிய கடன்கள் தொடர்பான தகவல்கள் யாவும் 7 வருடங்களில் ***Credit Bureau***வில் இருந்து முற்றாக மறைந்து விடும் என்ற தவறான கருத்தை கொண்டுள்ளனர். ”

அவர் தனது கடன்கள் யாவையும் திரும்ப செலுத்த வேண்டிய நேரத்தில் அவற்றை கொடுக்க முடியாத நிலையில் இருத்தல்.

வங்குரோத்து செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர்கள் யாவரும் மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள். அவர்களது கட்டணங்கள் அரசாங்கத்தினால் மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதனால், வங்குரோத்து தொடர்பான செலவு நியாயமான அளவாக அமைகிறது.

வங்குரோத்து செயற்பாடு என்பது, ஓர் சட்டபூர்வமான நடவடிக்கை. எனவே நீங்கள் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்த பின்பு உங்களது சம்பளத்தில் இருந்து பணம் கழிக்கப்படுதல் (Garnishment) அல்லது ஏதாவது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் ஆகியன நிறுத்திவைக்கப்படுகிறது. அதேவேளை உங்களுக்கு கடன் வழங்கியவர்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்துதலும் நிறுத்தப்படுகிறது.

வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிக்கும் ஒருவர், முன்பு ஒருபோதும் இவ்வாறான நிலைக்கு சென்றிராவிடில், அவர் தனக்குரிய பல்வேறு கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியான முறையில் நிறைவேற்றினால் அவர் 9 மாதங்களில் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு தகுதி பெறக்கூடிய நிலை ஏற்படலாம்.

இவர்கள் தங்களின் வங்குரோத்து (Bankruptcy) நிலையில் இருந்து விடுபட்ட பின் பாதுகாப்புக் கடனட்டை (Secure Credit report) பெற்று உபயோகிப்பதன் மூலம் உங்கள் Credit Scoreஐ உயர்வடையச் செய்து பழைய நிலைக்கு நீங்கள் வரமுடியும்.

### கடன்களில் இருந்து விடுபடலும் விதிவிலக்கான விடயங்களும்

ஒருசிலவகைக் கடன்கள் ஒருபோதும் நீக்கப்படமாட்டாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வங்குரோத்து செயற்பாடு என்பது, உத்தரவாதமற்ற (Unsecured) தன்மையான கடன் வகைகளுடன் மட்டுமே சம்பந்தப்படுகிறது. அதாவது, கடன் அட்டைக்குக் கட்டவேண்டிய கடன், தனிப்பட்ட கடன், வருமானவரி, ஒருவர் தனது வங்கிக் கணக்கில் உள்ளதை விட அதிகளவு பணம் (Overdrafts) பெறுதல் என்பவை. ஒருசில உதாரணங்கள். எனினும் உத்தரவாதமற்ற ஒரு சில வகை கடன்களில் இருந்து விடுபட முடியாது என்பதை கருத்தில் கொள்வது அவசியம்.

உதாரணமாக சிலவற்றை குறிப்பிடலாம்:

- விவாகரத்துப் பெற்றிருந்தால் மனைவி / பிள்ளைகள் ஆகியோருக்கு வழங்க வேண்டிய தாபரிப்பு (Alimony or child support) பணம்,
- மாணவர்கள் கல்விக்காக பெற்ற கடன். (இந்த கடன் கல்வி கற்று முடிந்து 7 வருடங்கள் வரைக்கும் விடுபட முடியாமல் இருக்கும்)
- தெண்டப் பணம் (Fines) போன்றவையும் இவற்றுள் அடங்கும்.

### உத்தரவாதமுடைய கடன்கள் (Secured Loans)

வாகன கடன் அல்லது அடைமானக் கடன் போன்றவை உத்தரவாதமுடைய வகையான கடன்கள் (Secured Debt) என அழைக்கப்படும்.

ஏனெனில் இவ்வகைக் கடன்களுக்கு விண்ணப்பிக்கும் போது ஏதாவது ஒரு சொத்தை பொறுப்பாக வைத்தே இவ்வகைக் கடன் வழங்கப்படுகின்றது. எனவே உங்களுக்கு கடன் வழங்கியவர்கள் அவர்களுக்கு சேரவேண்டியவற்றை உங்களிடம் இருந்து இலகுவாக பெறமுடியும். அந்த சொத்தை மீளக் கையளிக்காத பட்சத்தில் நீங்கள் இக்கடனை கட்ட வேண்டிய பொறுப்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கனடாவில் வங்குரோத்து நிலை ஏற்படுவதற்கான மூன்று முக்கிய காரணங்கள்.

- **வேலை இழப்பு**

வேலை இழப்பு ஏற்படுதல் அல்லது மேலதிக வேலை நேரம் குறைக்கப்படுதல் போன்றவை உங்கள் கடனைக் குறைப்பதற்கு தடையாக அமையலாம். இவ்வாறான சூழ்நிலையின் போது நீங்கள், அத்தியாவசியமற்ற செலவுகளைக் குறைக்க முடியுமானால், வங்குரோத்து நிலையை தவிர்க்க கூடியதாக இருக்கலாம்.

**திருமண முறிவு / விவாகரத்து:**

கனடாவில் தனிப்பட்ட வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பிப்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இவ்வாறான சூழ்நிலையில் உள்ளவர்களாக இருப்பது என அறியப்பட்டுள்ளது. விவாகரத்தின் பின்னர் பிரிந்து வாழுகின்ற நிலையில் நீங்களும், உங்களது முன்னாள் துணைவரும் தனித்தனியே வீட்டு செலவுகளை செலுத்த வேண்டி ஏற்படுகிறது. இதனால் உங்களது செலவு அதிகரிக்கிறது.

**உடல் ஆரோக்கிய பிரச்சினைகள்:**

கடுமையான நோய் காரணமாக நீங்கள் பலமாதங்கள் வேலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டால், மருத்துவ காப்புறுதி இருந்தாலும், உங்கள் வருமானம் குறைவு ஏற்பட்டு அதன் காரணமாக கடன் பளு அதிகமாகிறது.

### கடனை முழுமையாக திருப்பி செலுத்த முடியாத ஒருவருக்கு உள்ள வழிகள்

கடனை முழுமையாக திருப்பி செலுத்த முடியாத ஒருவருக்கு உள்ள வழிகள் பிரதானமாக இருவகைப்படும்.

- பெறப்பட்ட கடனின் ஓர் பகுதியை மட்டும் மீண்டும் செலுத்துவதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்துதல் (Consumer Proposals for Creditors).
- வங்குரோத்து நிலைக்கு செல்லுதல் (Declaring Bankruptcy).

### பெற்ற கடனும் உங்கள் நிலையும்

- நீங்கள் ஒரு நல்ல வேலையில் இருந்தும், உங்களது வீட்டுச் செலவுகளை சமாளிக்க முடியாமல் உள்ளதா?
- நீங்கள் வங்குரோத்து நிலைக்கு செல்வது பற்றி சிந்திக்கிறீர்கள். ஆனால், உண்மையில் அதைச் செய்வதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறீர்களா?

இவ்வாறான சூழ்நிலையில் நீங்கள் என்ன செய்யலாம் என்பதுபற்றி September மாதத் "தாய்வீட்டில்" பார்ப்போம்.

தொடரும்...

shankar.t@thaiveedu.com

■ ■ ■

# காப்புறுதியில்...

44ம் பக்கத் தொடர்ச்சி...

மனுச்செய்ய இருக்கிறேன் என்று தன்னால் கட்டக்கூடிய மாதாந்தக் கட்டுப்பணத்தை சொல்ல அதற்கேற்ப 'மருத்துவ ரீதியின்றி' நிறுவனம் A மூலம் காப்புறுதி விண்ணப்பித்து ஒருசில தினங்களில் காப்புறுதி ஒப்பந்தமும் அளிக்கப்பட்டது. அடுத்த மாதம் இஸ்ரேல் நாட்டிற்கு நானும் மனைவியாரும் இங்குள்ள முதியோர் சங்கத்துடன் சுற்றுலா செல்ல இருக்கின்றோம். ஆனபடியால் பிரயாணக் காப்புறுதியும் செய்ய வேண்டும். அத்துடன் எனது கடவுச்சீட்டையும் புதுப்பிக்க வேண்டும் என்று சொல்ல அதனையும்செய்துகொடுத்து விட்டு. காப்புறுதி மனுச் செய்ததற்கு நன்றி செலுத்தி விடைபெற்றேன். ஏறத்தாழ மூன்று கிழமையின் பின் காலை 7 மணியளவில் அவரின் மகள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'அப்பா போயிட்டார்' என்றதும். இஸ்ரேலுக்கு சுகமாக போய்ச்சேர்ந்துவிட்டாரா என்று கேட்ட போது அழுதுகொண்டே 'அவர் ஒன்றடியாகப் போய்விட்டார்' என்றார். விபரம் கேட்டபோதுதான் வீட்டுக்கு அண்மையில் பேருந்து நிலையத்தில் நிற்கும் போது மயக்கமுற்று விழுந்ததால் தலையில் அடிபட்டு மாரடைப்பால் இறந்துபோனதாக கூறினார். அதன்படி அடுத்த நாளே காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்க அவர்கள் இவர் அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு 'இவரது மாரடைப்பு விழுந்ததன் பின் ஏற்பட்டதா அல்லது மாரடைப்பு வந்து விழுந்தாரா' என வினவினார்கள். காரணம், விழுந்தபின் மாரடைப்பு ஏற்பட்டிருந்தால் காப்புறுதியின் இழப்பீட்டு தொகை இருமடங்கு. மாரடைப்பு வந்து விழுந்திருந்தால் விண்ணப்பித்த தொகை மட்டுந்தான். மாரடைப்பு வந்துதான் விழுந்தார் என்று அவர்கள் உறுதிப்படுத்தியதும். விண்ணப்பித்த தொகை வாரிசுகளிடம் கொடுக்கப்பட்டது. அத்துடன் இழப்பீட்டு விண்ணப்பப்பத்திரம் நிரப்புவதற்காக சென்ற அதேநாள் அவரது புதிய கடவுச்சீட்டும் வந்து கிடைத்தது.

saththivel@thaiveedu.com

■ ■ ■

# எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு.

## உங்கள் கடன் பிரச்சினைகளை தீர்க்கும் போது அதனால் உருவாகும் நன்மை தீமைகளை சரியாக அறிந்துள்ளீர்களா?

## நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அற்ந்துகொள்ள
இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள
பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

Having Difficulty Repaying Your Student Loan? New Rule Changes Can Help

CRCanada
அழையுங்கள்
சங்கர் அல்லது கிறிஸ்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும் தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.



T.SHANKAR
Director

# CRCanada
Credit Reform Canada
*Judgement in your favour!*
885 Progress Ave, Unit - 202, Scarborough.
CR Canada **416-264-1010**


Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations • Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



**ஐம்பது வீதத்துக்கும் அதிகமான பணத்தை மீளப்பெற ஒரு வாய்ப்பு**

உங்கள் Furnace, Air Conditionerஐ Energy efficient systemதிற்கு மாற்றினாலும், தண்ணீர் சூடேற்றியை Tankless Systemமாக மாற்றினாலும் Rebates & Grantsஆக பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதை விட **15%** அரசாங்க grant பெறலாம். நீங்கள் செலவளிப்பதில் இருந்து ஐம்பது வீதத்திற்கும் அதிகமான பணத்தை பெற்றுக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.

Furnaceக்கு **$1845**
Air Conditionerக்கு **$750 - $900**
Tankless Systemக்கு **$950 - $1050**

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

## பாதுகாப்பு

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

**For all kind of Vacuums**

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard
HEATING & AIR CONDITIONING
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

## Raman Appliances

# Raman Chelliah

3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com



பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை
இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!

ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது!
வாத வலியை நீக்குகிறது!
உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA & Gift

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

JeyaCS416 275 0070



S.P.IMPORTERS
Furniture



அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077

கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை



Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE


ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# பயணக் கட்டுரை...

# படுவான்கரைப் பயணம்

- குமார் புனிதவேல் -

மனிதனுக்கு எப்போதுமே அடிவானத்தில் என்ன உள்ளது என்பதை அறிவதில் ஆர்வம் உண்டு. இந்த ஆழமான ஆசை, ஆதங்கம் தான் மனிதனை தான் அறியாத தொலை தூரத்திற்கு இட்டுச் செல்கிறது. இந்த ஆதங்கம்தான் அமெரிக்கோ வெங்புக்கியை அமெரிக்காவுக்கு செல்லவைத்தது. ஸ்பானியரான கொலம்பஸ் மேற்கிந்திய தீவுக்கரையை அடைந்ததும் இத்தகைய ஆவல்தான். வஸ்கொடகாமாவை காலி மாத்தறையூடாக யாழ்ப்பாணம் அழைத்து வந்ததும் இந்த வேட்கைதான். இத்தாலியரான மார்க்கோ-போலோவை சீன தேசம் வரை இட்டுச் சென்றதும் இந்த வேட்கைதான். இத்தகைய ஆதங்கம் எல்லார் மனதிலும் அடித்தளத்தில் உண்டு. சிறு பையனாக இருந்தவேளை கண்காணாத இடத்தில் உள்ளதை அறியும் ஆவல் மாரிகால நீரோடையில் காகிதக் கப்பலை செலுத்தி பூர்த்தி செய்துகொண்டது என்றால் மிகையாகாது.




ILLUSTRATION' DIGI MEDIA CREATIONS

இது போன்ற ஒரு உந்துதல் தான் ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளில் ஒன்றாக பரியோவான் கல்லூரியில் படித்த நண்பர்கள் நால்வரை தமது அறுபது வயதுகளில் ஒரு நெடும்பயணத்தை மேற்கொள்ள வைத்துள்ளது. கனடாவின் எழுவான்கரையில் உள்ள பட்டினம் ஹலிபக்ஸ் படுவான் கரையிலுள்ள பட்டினம் வான்கூவர். அறுபதுகளில் ஒன்றாக படித்த கனக்ஸ், விஜயன், சந்திரன், புனிதன் என்ற நால்வரையும் வான்கூவர் என்ற பட்டினம் கூவி அழைக்க அதைநோக்கி பயணமெடுக்க முன்வந்தார்கள்.... இப்பயணத்தை மேற்கொண்டது உசிதமானதே. இந்த பாரிய நாடாகிய கனடாவின் அழகை எல்லாப் பரிமாணத்திலும் பார்த்து இரசிக்க முற்பட்டோம்.

இவ்வளவு தூரம் செல்கிறோம் என்பதை அறிந்தவுடன் எம்மில் மிக அன்புடைய சிலர் ஏன் VIA Railஇல் செல்லலாமே என்றார்கள். இன்னும் சிலர் Fly பண்ணலாமே. என்றார்கள். நல்ல மாலை நேரம் இதமான குளிர்காற்று காலார நடந்து வரலாமே என்று புறப்பட்டவருக்கு ஏன் காரில் போகலாமே என்று சொல்வதுபோல் இருந்தது. பரந்த வட அமெரிக்காவின் பிரேரிஸ் எனச் சொல்லப்படும் மலைகள் இல்லாத பெரும் நிலப்பரப்பை, உலகின் நீண்ட மலைகளில் ஒன்றான ரொக்கி மலையை எல்லாம் ரெயிலிலும் பிலேனிலும் சென்று இரசிக்க முடியுமா? மேலும் இடையிடையே பல அதிசயங்களை எல்லாம் இரசிக்க முடியுமா? இதனால்தான் நால்வரும் காரிலே செல்வோம் என்று புறப்பட்டோம். அதிலும் நண்பர் சந்திரன் 1996ம் ஆண்டிலேயே இப்படி ஒரு பயணத்தை செய்ய முன்வந்தார். ஆனால் அது நிறைவுபெறவில்லை. இப்போ இறைவன் அருளால் கூடிவந்துள்ளது.

இப்பயணத்தைப் பற்றி நான் குறிப்பிட்டபோது 'தாய்வீடு' பத்திரிகை ஆசிரியர் இப்பயண அனுபவத்தை வாசக நேயர்களோடு பகிர்ந்து கொள்ளலாமே என்றார். எனவே நான் எமது அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று எண்ணுகின்றேன்.

ஒரு பெரிய ஆலமரத்தை பார்க்கும்போது நாம் எல்லாரும் பிரமித்து நிற்கிறோம். ஆனால், எமக்கு பிரமிப்பை ஏற்படுத்திய அந்த பெரு விருட்ஷத்துக்கு மறு பக்கத்திலுள்ள இன்னுமொரு பெருவிருட்ஷத்தை நாம் நோக்க தவறிவிடுகிறோம். அதுதான் அந்த மரத்தை தாங்கிப்பிடித்து கொண்டிருக்கும் வேர்கள். பயணம் செய்வோம் என்ற சிறு விதைபின் திட்டமிடல் செயற்படுத்துதல் என பல செய்றாபடகள் இடம்பெற்றது. அவற்றை முதலில் கவனிப்போம்.

எங்கள் முதலாவது தேவை ஒரு நம்பகரமான வாகனம். எங்கள் சொந்த வாகனம் வழியில் பழுதாகினால் வேறு வாகனம் பெறுவது கடினம். ஆனால் தேசிய ரீதியாக பல கிளைகள் உள்ள ஒரு ஸ்தாபனத்திலிருந்து வாகனத்தை வாடகைக்கு அமர்த்தினால் வழியில் பழுதுபட்டால் உடனே வேறு வாகனத்தை பெற முடியும். இச்சந்தர்ப்பத்தில்தான் டான் என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் அரவிந்தன் எனும் நண்பர் AVIS ஸ்தாபனத்தினூடாக மிக மலிவாக வாகனத்தை எமக்கு வாடகைக்குப் பெற்றுத் தந்தார். நெடும் பயணம் செல்பவர்கள் கட்டாயமாக வாடகைக்கு வாகனம் அமர்த்தி செய்வதின் நன்மையை கவனத்தில் கொள்வது அவசியம்.

இந்தியாவுக்கு தான் செல்வதாக எண்ணிக் கொண்டு மேற்கு இந்தியத்தீவை வந்தடைந்த கொலம்பஸ் போல் அல்லாமல் நால்வரும் பயணத்தையை திட்டமிட்டு செயல்பட முனைந்தோம். உடனடியாக சந்திரன் தான் CAAஇல் 1996ல் இத்தகைய பயணத்திற்கான வரைபட ஆவணத்தை 'Trip Tick' எனும் பெயரில் பெற்றதாக குறிப்பிட்டார். எனவே அவருடன் விரைந்து நாங்கள் CAAஇனை அனுகினோம். அவர்களும் நாம் செல்ல வேண்டிய இடங்களுக்கான பாதையை மிகவும் கைஅடக்கமான வரைபட புத்தகமாக தந்தார்கள். இது எமது வேலையை மிக எளிதாக்கியது.



பயணக் குழுவினருடன் வாடகை வாகன முகாமையாளர் திரு டான்

அடுத்தபடியாக எங்கெங்கு இரவை கழிப்பது என்பது ஒரு முக்கியமான விடயம். நாங்கள் பெற்றுக்கொண்ட வரைபடத்தில் பெரு நகரங்களுக்கான இடைத்தூரம் துல்லியமாக தரப்பட்டுள்ளதால் இதுவும் எளிதாக முடிந்தது. கீழே தரப்பட்டுள்ள வரைபட அட்டவணை நகரங்களுக்கு இடையில் உள்ள தூரங்கள் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| டொறன்டோ | - | வேவ்வுஷேன் | 115 |
| வவுபவுஷேன் | - | சட்பரி | 248 |
| சட்பரி | - | சால்ட ஸ்டீமேரி | 302 |
| சால்ட ஸ்டீமேரி | - | தண்டபே | 711 |
| தண்டபே | - | வின்னிபெக் | 682 |
| வின்னிபெக் | - | ரெஜயினா | 558 |
| வின்னிபெக் | - | மெடிசின்ஹட் | 466 |
| மெடிசின்ஹட | - | கல்கரி | 288 |
| கல்காரி | - | கோல்டன் | 251 |
| கோல்டன் | - | கிம்லூப்ஸ் | 357 |
| கிம்லூப்ஸ் | - | ஹோப் | 204 |
| ஹோப் | - | வன்கூவர் | 134 |

நாங்கள் அண்ணளவாக 700 கி.மீட்டருக்கும் 1000 கி.மீட்டருக்கும் இடைதூரமுள்ள முக்கிய நகரங்களில் தங்க முடிவு செய்தோம். இதன்படி மூன்றாம் திகதி காலை புறப்பட்டு

3ம் திகதி இரவு சோல்ட் ஸ்ரிமேரி
4ம் திகதி இரவு தண்டபே
5ம் திகதி இரவு ரெஜயினா
6ம் திகதி இரவு கல்கரி
7ம் திகதி இரவு வன்கூவர்
8ம் திகதி இரவு வன்கூவர்
9ம் திகதி இரவு கல்கரி
10ம் திகதி இரவு ரெஜயினா
11ம் திகதி இரவு தண்டபே
12ம் திகதி இரவு சோல்ட் ஸ்ரிமேரி
13ம் திகதி இரவு வீட்டில்

மேற்படி பயணத்தில் பல அதிசயங்களையும் அனுபவங்களையும் பெற்றோம் என்று நம்பும் நாம் அவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகிறோம். எனவே இக்கட்டுரை தொடர்ந்து வளரும்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

## கூர் - 2009

**விரைவில் வெளிவரவிருக்கும் கனடா தமிழ் கலை, இலக்கியத் தொகுப்புக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**
**கவிதை, சிறுகதை, கட்டுரை எதுவாயினும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

மின்னஞ்சல்:
**koorcircle@gmail.com**

மேலதிக தொடர்புகளுக்கு: தேவகாந்தன் 416-458-9426, டானியல்ஜீவா 416-500-9016, கௌசல்லா 416-299-6392
கூர் கலை, இலக்கிய வட்டம், 102 Hntingdale Blvd., Scarborough, ON M1W 1T1



## வங்கிக் கடன் தொல்லையா?

# புதியதோர் ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம்

- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் வாகனம், வீடு, முதலீடுகள் என்பவற்றை தொடர்ந்து வைத்திருக்கலாம்
  **Keep your car, home, RRSP and RESP**
- மாதாந்த ரீதியில் எல்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one simple monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

**இலவச**
ஆலோசனைகளுக்கு
அழையுங்கள்

digi Media

## Suren Sornalingam

Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**

Fax: 416.332.0914

web: www.creditrecoverycanada.com



**CREDIT RECOVERY CANADA**
**Working with Trustee in Bankruptcy**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

"Eliminate Your Debt Stress"

## காதல் வாழ்க்கை - 8

# பூம்புகார்த் திருமணம்



வி. கந்தவனம்

காவிரி ஆறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் அமைந்திருப்பது காவிரிப்பூம் பட்டினம். புகார் நகரம் என்றும் இது அழைக்கப்படும். புகார் நகரம் சோழவள நாட்டின் தலைநகரம். உயர்ந்தோர் வாழ்வதால் குறைவொன்றும் அறியாத தனிச் சிறப்பும் நீள் போக வாழ்வும் கொண்ட வளநகரம்.

இத்தகைய புகழ் மிகுந்த புகார் நகரத்திலே வான் மழையை ஒத்த வள்ளல் ஒருவன் இருந்தான். பெயர் மாநாய்கன். அவனது குலம் தழைக்கப் பிறந்தாள் ஒரு பூங்கொடி. வானத்து வல்லிக் கொடியை ஒத்த அந்தப் பொன்னொளிக்கு வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. 'செந்தாமரைப் பூவிலே நிறைந்திருக்கும் திருமகளைப் போன்று எல்லோரும் போற்றும் அழகு மிகுந்தவள்' என்றும் 'தீது இல்லாத வடமீனின் திறம் இவள் திறம்' என்றும் மாதர் தொழுது ஏத்தும் பெருங்குணம் படைத்தவள். அவள் பெயர் கண்ணகி.

அதே பட்டினத்திலே சோழமன்னனால் தலைமைக்குடியென உயர்த்தி வைக்கப்பட்ட பெருங்குடி மரபிலே வந்தவன் மாசாத்துவான். வாணிபத்தால் உயர்ந்து ஓங்கு செல்வத்தான். தான் பெருக்கும் செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து உதவும் பெருமனத்தான். சங்கநிதி பதுமநிதிகளுக்குக் கிழவனான குபேரனை ஒத்த அந்த வள்ளலுக்கு ஒரு மகன். கோவலன் என்று பெயர்.

கோவலனுக்குப் பதினாறு வயது ஆகிவிட்டது. அவன் வாணிபத் துறையில் பெரும் புகழை அடைந்தவன். மதிமுக மடவார் நெஞ்சங்களில் நடமாடுகின்றவன். அவர்கள் தமது ஆயத்திலே பண்ணினும் இனிய மொழியினாலே, 'கண்டு ஏத்தும் செவ்வேள்' இவன் என்று புகழும் காதல் பேச்சுக்களுக்கு எல்லாம் உரிமையானவன்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஒரு பெரு நாளிலே திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் விரும்பினர். மணவினைச் செய்தியை அழகிய அணிகலன்களை அணிந்த பெண்களை யானையில் இருத்தி நகர் எங்கும் அறிவித்தனர்.

அதன்வழி, திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முரசுகள் கொட்டின. மத்தளங்கள் அதிர்ந்தன. சங்குகள் முழங்கின. அரசன் ஊர்வலம்போல வெண் குடைகளின் மத்தியில் மங்கல அணியும் புகார் நகரின் வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டது.

திருமண வைபவம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்தக் காட்சியின் மாட்சியை இளங்கோ அடிகள் சுருக்கமாக இவ்விதம் விளக்குகின்றார்:

"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூண்
அகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வான் ஊர் மதியம் சகடு அணைய
வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு
என்னை!

திருமண மண்டபம் மாலைகள் தொங்கவிடப்பெற்ற உச்சியினையுடைய வயிரமணித் தூண்களைக் கொண்டது. அந்த அழகிய மண்டபத்துள் நீலப்பட்டு விதானத்தின் கீழ் அழகிய முத்துப் பந்தர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதுவே மணவறையாகும். அந்த முத்து மணவறையில் சந்திரன் உரோகணியைச் சேரும் முகூர்த்த நேரத்தில், அருந்ததியை ஒத்த கண்ணகியைக் கோவலன் மணந்துகொள்கின்றான். திருமணச் சடங்கை அனுபவம் முதிர்ந்த அந்தணர் வேதம் ஓதி நடத்தி வைக்கின்றார்.

கோவலன் கண்ணகியை மணந்து, தீவலம் வந்த காட்சியைக் கண்டவர் கண்கள் செய்த தவந்தான் என்னேயோ என்று இளங்கோ அடிகள் வியப்புக்குறியிலே முடிப்பதற்குக் காரணம் இருக்கிறது. கோவலன் - கண்ணகி திருமணம் சாதாரண வைபவம் அன்று. அரச திருமணம் போன்று நடந்த செல்வந்தர் திருமணம். பூம்புகார் மக்கள் அதுவரை கண்டிராத கண்கொள்ளாத் திருமணம். அதுபோன்ற பெருமணம் இனிமேல் எவருக்காவது புகார் நகரத்தில் நடக்குமோ என்னவோ? அதனாலே அந்த அரிய திருமணத்தைக் கண்டவர் தவஞ் செய்தவராகின்றார்.

திருமணத்தின் பெருஞ் சிறப்புக்களுக்கான முத்திரை மேலும் பதிக்கப்படுகின்றது. வாசனைப் பொருட்கள், நறுமலர்கள், சாந்து வகைகள், மணப்புகைகள், கவர்ச்சியான மாலைகள், சுண்ணப்பொடிகள், விளக்குகள், நல்ல கலன்கள், விரிந்த தாழிகள், முளைக் குடங்கள், நிறைகுடங்கள் என்பவற்றைத் தாங்கியவாறு பலவகைப் பெண்கள் மணப் பெண்ணைச் சூழ்ந்தனர். அவர்களுடன் அழகான அணிகலன்களைப் புனைந்துகொண்டும் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் நாணம் மிக ஓரக் கண்களாற் பார்த்துக் கொண்டும் மேலும் பல பெண்கள் சேர்ந்து கொண்டனர்.

அவ்விதமான மலர் சூடப்பெற்ற விரிந்து வளர்ந்த கூந்தலையுடைய, அழகிய பொற் கொடிகள் போன்ற பெண்கள் பலரும்



'காதலற் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல்
தீது அறுக'

(காதலராகி நீவிர் ஒருவரையொருவர் என்றும் பிரியாது, தழுவிய கைகள் நெகிழாது, தீமைகள் எதுவும் அணுகாது இன்புற்று வாழ்வீராக)

என மணமக்களை வாழ்த்தி மலர் தூவினர். மேலும் 'இமயத்துக்கு அப்பாலும் இப்பாலும் எங்கும் புலிக்கொடியினை ஏற்றியவனும் போரிலே மேம்பட்டு விளங்கும் சினம் மிகுந்த வேலினை உடையவனுமாகிய கரிகாலன் எப்பாலும் தான் ஒருவனே ஆகித் தன் ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்தி உயர்வானாகுக!' என்று சோழனையும் வாழ்த்தி, இந்த அழகிய உலகின் கண்ணே இருக்கின்ற ஓர் அருந்ததி போன்ற கற்பிலே சிறந்த கண்ணகியை மங்கலக் கட்டில்மீது மகிழ்ந்து ஏற்றினர்.

இதுவரை மூன்று முறை அருந்ததியார் கண்ணகிக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றார். அருந்ததி வசிட்டமா முனிவரின் மனைவி, சிறந்த கற்பரசி. சிலப்பதிகாரமும் கற்பின் மகிமையைக் காட்டவுள்ள காப்பியமாதலால் அருந்ததியை அடுத்தடுத்து எமக்கு நினைவூட்டியிருக்கின்றார் இளங்கோ அடிகள்.

kandavanam.v@thaiveedu.com

■ ■ ■

VIN
KITCHEN & BATH
Design & Install



Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops

15 years experience
100% satisfaction guaranteed

For
free estimates and design

Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com

இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
# Mortgage Life Insurance

### வங்கிக் கடன் காப்புறுதி

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
**Office: 416-291-0451 Ext.227**
**Cell: 416-518-9489**
**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**

## Arajen Dress Making



சாறி, பிளவுஸ், சட்டை, சுடிதார், ஸ்கேட் மற்றும் உடை வகைகள் உங்கள் மனதுக்குப் பிடித்த வண்ணத்தில் தைத்துக்கொடுக்கப்படும்


**திருத்தவேலைகள்**
சிறிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள அழையுங்கள்

**பயிற்சி வகுப்புக்கள்**
2நாள் பயிற்சி வகுப்பில் சாறி, பிளவுஸ் தைக்கலாம்

**அரஜன் அழகு நிலையம்**
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)
**Tel: 416.509.7978**
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

www.arajenbeauty.ca

## ARAJEN CAKE HOUSE
**Wilton Cake decorating classes**




**Wilton Cake decorating classes**
Basic/Advance courses
Gun paste flowers
Candy Making
Cookie blossoms
Ginger bread houses
And More...

**Wedding Cake**
**Engagement Cake**
**Birthday Cake**
**Rich Cake**
**Cheese Cake**
**Marble Cake**
**Eggless Cake and More...**

**by a Wilton Certified instructor**

கேக் அலங்காரப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் அனைத்து கேக் தேவைகளுக்கும் அழையுங்கள்

**Sasi Naren**
Diploma in Cake Making
Twenty years experience in cake making
Tel: **416-509-7978**
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2, (இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

# வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 01

K.S. பாலச்சந்திரன்



**கொஞ்சம் நில்லுங்கள்... ஒரு நெடுமூச்சு விட்டு வருகிறேன். இது என் வாழ்க்கை வரலாறு அல்ல. இதில் காலரீதியான தொடர்ச்சி இருக்காது. அங்குமிங்குமாக, கலைவாழ்வில் நான் கண்ட மேடைகள், சந்தித்த கலைஞர்கள், ரசிகர்கள் என்று என் பல அனுபவங்களை உங்களோடு பங்கிட்டுக்கொள்ளப் போகிறேன். அவ்வளவு தான்.**

கொழும்பில் சரஸ்வதி மண்டபத்தில் ஒரு நாடகம். நான் அந்த நாடகத்தில் நடிக்க வில்லை. ஆனால் மேடையின் பக்கத்தட்டி-களுக்குப் பின்னால் கையில் நாடகப்பிரதியுடன், நின்று நடிப்பவர்களுக்கு மறந்த வசனங்களை சொல்லிக் கொடுக்கும் பணி எனக்கு. அப்போதைய இளமைக்காலத்தில் நாடகம் என்று வந்துவிட்டால், பைத்திய-மாகத் திரிந்த காலம். நாடகத்திற்காக எந்த பணிக்கு அழைத்தாலும் போவேன்.

கதாநாயகனாக நடித்தவர் எனக்கு மிகவும் தெரிந்த வானொலி அறிவிப்பாளர். உங்க-ளுக்கும் அவரைத் தெரிந்திருக்கும். இப்போது அது முக்கியமில்லை. நடுத்தரவயதான அவரை முக்கியபாத்திரத்தில் (கதாநாயக-னாக) நடிக்க அழைத்திருக்கிறார்களே என்ற பரபரப்பு அவருக்கு. சாதாரணமாகவே எதற்கும் பதட்டப்படும் சுபாவம் அவருக்கு. மேடையில் வசனங்களை மறந்து தடுமாறி நிற்கவேண்டி வந்துவிட்டால் என்ற மனப் பயத்தினால் "பாலா... மறக்காமல் வந்து நீ தான் என்னை காப்பாற்றவேண்டும்" என்று வருந்தி அழைத்திருந்தார். அதைவிட அந்த நாடகத்தில் நடித்த மற்றவர்களோடு எனக்கு எந்தவித அறிமுகமும் இருக்கவில்லை.

நாடகப்பிரதி என்றால் அரசநாடகம் மாதிரி-யும், சமூக நாடகம் மாதிரியும் இல்லாமல் ஒரு கலப்பு வடிவமாக இருந்தது. அந்தக்கால (எந்தக்கால என்று என்னைக் கேட்காதீர்கள்) ராஜாவாக நடித்தவர் கையில் சீக்கோ மணிக்கூடு பளபளக்க மேடைக்கு வந்தார். போதாதற்கு அடிக்கடி அதில் மணி பார்த்-துக்கொண்டார். நடித்தவர்கள் பலருக்கும் அது முதல்மேடையாக இருந்திருக்கவேண்டும். தங்கள் ஒப்பனை பூசிய முகங்களை வந்தி-ருக்கும் பார்வையாளர்களுக்கு (உறவினர்-களும், நண்பர்களும் நிரம்பிய கூட்டம்) காட்டிவிடவேண்டுமென்ற ஆவலில், தாங்கள் வரவேண்டிய காட்சிகள் இல்லாதபோதும் மேடைக்கு அடிக்கடி வந்தார்கள், பிரதியில் இல்லாத சொந்த வசனங்களை பேசி சொந்-தக்காரர்களிடம் மட்டும் 'அப்ளாஸ்'(விசிலடி யுந்தான்) வாங்கினார்கள். நான் பிரதியை வைத்துக்கொண்டு இருட்டுக்குள் அந்த வசனங்களைத் தேடிக்காணாமல் தடுமாறிக் கொண்டு நின்றேன். என்னைக் கவனிக்கா-மல் எப்படியோ நாடகம் தன்பாட்டில் நகர்ந்தது.

இடைவேளைக்கு முந்திய காட்சியில் கதா-நாயகியின் தந்தைக்கு யாரோ விஷம் வைத்து விடுகிறார்கள். (நிச்சயமாக பார்வையாளர்-களல்ல) அசலாக ரத்தம் போல இருக்க வேண்டும் என்பதற்காக ஏதோ பெயின்ற் மாதிரி திரவம் ஒன்றை அவர் வாயில் விட்டு, மேடைக்கு அனுப்ப, அவர் 'ரத்தம்' கக்கிச் செத்துப்போனார். தொடர்ந்து வந்த இடை வேளையில் ராஜா செத்துப்போன சோகத்தில் மூழ்கிப்போன பார்வையாளர்களை உற்சா-கப்படுத்த வேண்டும் என்று நினைத்தாரோ என்னவோ, நாடகத்தின் இயக்குனர், உதிரிப் பாத்திரங்களில் வந்துபோன நடிகைகள் சிலரையும் அழைத்துக்கொண்டு மேடைக்கு வந்து, 'டிங்கிரி டிங்காலே' பாட்டுக்கு ஆடி சபையினரை கலக்கத்(கலைக்கத்) தொடங்-கினார்.

சிவப்பு பெயின்ற் வாயுடன் நின்ற செத்துப்-போன நடிகருக்கு தாளாத கவலை. இனி நாடகத்தில் தான் வருவதற்கு வழி இல்லை யே என்ற கவலைதான். பார்த்தார். வேறு வழி தெரியவில்லை. 'டிங்கிரி டிங்காலே' பாட்டில் அவரும் பின்னால் இணைந்து ஆடத் தொடங்கிவிட்டார். பார்வையாளர்கள் கூக்குரல் இட்டுத்தான் பார்த்தார்கள். இயக்குனர் கண்ணை உருட்டிப் பார்க்கத்தான் செய்தார். அவர் மசியவேயில்லை. போதாதற்கு இயக் குனர் "உள்ளுக்கு போடா" என்று அடங்கிய குரலில் சொல்லிக்கொண்டே ஆடிக்கொண்டு போனார். இத்தனைக்கும் செத்துப்போன ராஜா ஆட்டத்தை முழுப்பாட்டுக்கும் ஆடித் தான் தீர்த்தார். நான் சிரிப்பை அடக்க முடியாமல் திண்டாடினேன்.

இடையில் ஒரு காதல் காட்சி வந்தது. இயக்குனருக்கும், நமது கதாநாயகனுக்கும் ஏதோ மனத்தாங்கல். காதல் பாட்டை தூக்கி வில்லனுக்கு கொடுத்து விட்டார்கள். (வெண்-சங்கு என்ற இலங்கைத் தமிழ்த் திரைப் படத்தில் காதல்பாட்டை வில்லனாக நடித்த லடிஸ் வீரமணிக்கு கொடுத்த ஞாபகம் வரு கிறது) அக்கால சினிமாப்பாட்டின் பின்ன-



ஓவியம்: கருணா

## கோடாலி வெடி

ணியில், வில்லனும், ஜோடியும் 'வசந்த முல்லை போலே வந்து அசைந்தாடும் வெண் ணிலாவே' என்று பாடியாட, கதாநாயகன் எனக்கருகில் நின்று பெருமூச்சுகளாக விட்டுக்கொண்டு நின்றார். அவரது சாபமோ, என்னவோ, பாடல் முடிந்த கையுடனேயே 'வெண்ணிலா' வில்லனை பழிவாங்கிவிட்டது. அவரோடு காதல்பாட்டு பாடிய பெண்மணி தான் வெண்ணிலா என்று நினைத்து விடாதீர்கள்.

காதல்வசனம் பேசுபவர்கள் நிலவையும், ஆகாயத்தையும் சாட்சிக்கு இழுக்கும் அந்தக் கால நாடகமரபில் வில்லனுக்கும் ஒரு வசனம் வைத்திருந்தார்கள். கூடவே ஒருபக்கத் தட்டியிலே, முழுநிலவு மாதிரி வட்டமாக ஒளி பாய்ச்சும் ஒழுங்கும் இருந்தது. நேர் எதிர் தட்டியைக்காட்டி வசனம் பேசி ஒத்தி-கையும் பார்த்திருக்கிறார்கள். வில்லன் வீரப்பாவின் சிரிப்புடன் வசனத்தை ஆரம்பித் தார். "கண்ணே அந்த நிலவின் மீது சாட்சி யாகச் சொல்கிறேன்" – சொல்லிக்கொண்டு போனவர் - சபையோர் கூக்குரலிடவும் நிமிர்ந்து பார்த்தார். அவர் காட்டிய திசை யில் சந்திரன் என்ற சங்கதியேயில்லை. தடுமாறி அங்கும் இங்கும் நிலாவை தேடத் தொடங்கினார். அந்த நிலா.. அந்த நிலா என்று சொல்லிக்கொண்டுதான்.

ஒளி பாய்ச்சிய புண்ணியவான், வில்லனுக்கு பின்புறமாக வலு மும்முரமாக நிலவை காட்டிக்கொண்டிருந்தார். சபையிலிருந்து யாரோ கத்தினார்கள். "திரும்பிப்பார்.. நிலவு உன் பின்னால் இருக்கிறது" அதற்குப்பிறகு தான் வில்லன் நிலவைக்கண்டுபிடித்து, வசனத்தை ஒருவாறு பேசி முடித்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

அவர்களின் சோதனை அத்தோடு முடிய-வில்லை. கடைசிக் காட்சி. வில்லனும், கதாநாயகனும் 'நீயா நானா' என்று முடிவு கட்டும் சண்டைக்காட்சி. வில்லனின் கையில் ஒரு கத்தி. கதாநாயகன் கையிலே ஒரு போலித்துப்பாக்கி. மேடையின் நடுவிலே அடுக்கு வசனங்களைப் பேசியபடி இருவரும் சுற்றிச்சுற்றி வந்தார்கள். வசனங்கள் முடிந்த பின்னரும் சுற்றுவது நிற்கவில்லை. ஏன் அப்படிச்செய்தார்கள் என்று யாருக்கும் விளங்-கவில்லை எனக்குந்தான். மீண்டும்.. மீண்டும்.. சுற்றினார்கள். காரணம் பிறகுதான் தெரிந்தது.

துப்பாக்கி வெடிக்கும் சத்தத்தை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பும் வசதி அப்போது நாடகக் காரர்களுக்கு இருக்கவில்லை. எனவே கோடாலி வெடி ஒன்றை ஒழுங்கு பண்ணி வைத்திருந்தார்கள். கோடாலி வெடியின் துளைக்குள்ளே வெடிமருந்தை நிரப்பி, ஆணிப்பகுதியை அதற்குள் நுழைத்துவிட்டு, ஓங்கி நிலத்தில் அடித்தால் பலத்த வெடி ஓசை கேட்கும். கிராமப்புறங்களிலே அக் காலத்தில் காவடிகள் போகும் போது சந்திக்கு சந்தி கோடாலிவெடி அடித்துக்கொண்டே போவார்கள். (சீன வெடிகள் பாவிப்பது அப்போது குறைவு)

இப்படியான கோடாலி வெடியொன்றை, மண்டபத்துக்கு வெளியே வைத்து, கதாநா-யகன் துப்பாக்கியை நீட்டிப்பிடிக்கும் வேளை-யிலே அதை வெடிக்கவைக்க ஒரு ஆளையும் ஒழுங்கு பண்ணியிருந்தார்கள். அந்த படுபாவி பொறுத்தநேரத்தில் கோடாலிவெடியை அனாதரவாக விட்டுவிட்டு தன்பாட்டில் எங்கோ போய்விட்டார். யாரோ அந்த வழியால் போன புண்ணியாத்மா, எதற்காக கோடாலிவெடி இருக்கிறது என்று தெரியாமல் ஒதுக்குப்பு-றமாக அதை மறைத்து வைத்துவிட்டு போய்விட்டார்.

விஷயம் தெரியாமல் எங்கள் கதாநாயகனும், வில்லனும் கத்தியுடனும், துப்பாக்கியுடனும் காதை வெளிப்புறமாக வைத்துக்கொண்டு தொடர்ந்து சுற்றிவந்து கொண்டிருந்தார்கள். வெடிச்சத்தம் கேட்டால்தானே, கதாநாயகன், வில்லனை நோக்கி சுடுவதாக பாவனை செய்யலாம். வில்லனும் 'ஹா' என்று அலறிக் கொண்டு கீழே விழலாம். வெளியே பலபேர் கோடாலி வெடியைத் தேடி ஓடிக்கொண்டி-ருந்தார்கள்.

நேரம் போய்க்கொண்டிருக்க பொறுமை இழந்த சபையில் இருந்து ஒரு பெருமகன் எழுந்து சொன்னார். "ஐயா கதாநாயகரே.. சுடுகிற நோக்கமிருந்தால் சுட்டுத்தொலையும்.. அடே.. வில்லன்.. நீயெண்டாலும் கத்தியாலை குத்து. இல்லையெண்டால் நாங்கள் அந்த வேலையைச்செய்வம். இண்டைக்கு வெள்-ளிக்கிழமை. வெள்ளவத்தையிலை சாப்பாட் டுக்கடையள் பூட்டினால் நாங்கள் பட்டினி தான் கிடக்கவேண்டிவரும்." என்று சொல்லவும், சபையே 'ஓ'வென்று சிரிப்பில் மூழ்கியது.

நிலைமை தலைக்குமேல் போய்விட்ட-தென்று தெரிந்துகொண்ட அறிவிப்பாளரான கதாநாயகன், 'வருவது வரட்டும்' என்ற பாணியில், தனது சிம்மக்குரல் வாயால் "டுப்" என்று குரலெழுப்பி, துப்பாக்கியை வில்லனின் நெஞ்சுக்கு நேரே நீட்ட, அவரும், 'ஹா' என்று அலறிக்கொண்டு மேடையில் விழுந்து, மிச்சமிருந்த வசனங்களை பேசி முடித்து, துடித்து இறந்தார்.

'அப்பாடா ..ஒரு படியாக நாடகத்தை முடித் தார்களே' என்று பார்வையாளர்கள் நிம்மதிப்-பெருச்சுடன், கலையத்தொடங்கும் நேரத்திலா, எங்கோ நின்ற கோடாலிவெடிக்காரருக்கு ஞாபகம் வரவேண்டும்.

ஓடோடிப் போய் கோடாலி வெடியைத்தூக்கி அடித்தார்....'படார்'. போனவர்கள் நின்ற நிலையில திரும்பிப்பார்த்தார்கள். கதாநா-யகன் துப்பாக்கியை 'படக்'கென்று நீட்டினார். செத்துப்போன வில்லன் மீண்டும் ஒரு முறை எழுந்து விழுந்து கடைசிமுறையாக செத்துப்போனார். திரை மூடியது.

skbales@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய

விமர்சனங்களை

எதிர்பார்க்கின்றோம்.

விமர்சனங்கள் எம்மை ஓர்

ஆரோக்கியமான

பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*

*Fax: 416-849-0594*

*Tel: 416-646-3422*

# பட்டம்மா, நீ பாடுபட்ட பாட்டம்மா

70களின் பிற்பாதியில் அந்தக் குரலை அடிக்கடி கேட்டிருக்கின்றேன். அடிக்கடி கேட்டும் குரலுக்குரியவரின் பெயர் தெரிந்திருக்கவில்லை.

தெரிந்துகொள்ளும் ஆர்வமும் அப்போது இல்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அனைத்திந்திய வானொலியின் சென்னை, திருச்சி நிலையங்களில் ஒலிபரப்பாகிய அந்தக் குரல் மெல்ல மெல்ல

> **"பட்டம்மாள் மறைவு அதிர்ச்சி தருகிறது. சுருதி லயத்திற்குச் சிறப்புப் பெற்றவர் மரபு இசையிற் சிறந்தவர். இளம் கலைஞர்களை ஊக்குவித்தவர்."**
>
> - சங்கீத கலாநிதி பாலமுரளி கிருஷ்ணா

என்னைக் கவரத் தொடங்கியது. இப்படியான பாடல்கள் ஒலிபரப்பாகும் போதெல்லாம் நிலையத்தை மாற்றும் வழக்கம் இல்லாது போனது எங்கள் வீட்டில்.

தீராத விளையாட்டுப் பிள்ளை..., ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே..., சாந்தி நிலவ வேண்டும்... என்றெல்லாம் அந்தக்குரல் ஒலிக்கும்போது குரலுக்குரியவரின் பெயர் தெரியாமலேயே இரசித்தாலும் பின்னாளில் அந்தக் குரலுக்குரியவர் இவர்தானென்று அறியப்பெற்றபோது இவர் ஏன் அதிகம் பாடுவதில்லை என்ற எண்ணம்கூட என்னுள் எழுந்ததுண்டு.

ஆனால், என் கணிப்புத் தவறென்று காலம் உணர்த்தியது.

ஜுலை 16ம் திகதி தனது 90வது அகவையில் மறைந்த தாமல் கிருஷ்ணசுவாமி பட்டம்மாள் அவர்களைப்பற்றி எழுத முனைந்தால் பெயர் தெரியாமலே குரலைக் கேட்டு இரசித்த 70களின் பிற்பாதிதான் எனக்கு நினைவுக்கு வருகின்றது.

சங்கீத பெண் மும்மூர்த்திகள் எனப் புகழப் பட்டோரில் ஒருவர் டி.கே.பட்டம்மாள் அவர்கள். மற்றைய இருவர் காற்றினிலே பல கீதங்களைக் குறையொன்றுமில்லாமற் தந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களும், கொஞ்சும் புறாவையும், குமரன் வரக் கூவும் குயிலையும் பாடி எல்லாம் இன்பமயமாக்கிய எம்.எல். வசந்தகுமாரி அவர்களும்.

எல்லோராலும் செல்லமாக பட்டா என்று அழைக்கப்பட்ட அலமேலு என்ற இயற்பெயரைக் கொண்டிருந்த பட்டம்மாள் சிறு வயதில் முறையான இசைப்பயிற்சியை யாரிடமும் பெற்றுக்கொள்ளவில்லையாம். கச்சேரிகளைப் பார்த்துவிட்டு வருவதுதான் எங்களுக்கு வழமை. ஆனால், சிறுமி பட்டா கச்சேரிகளைக் கேட்டு விட்டு வீடுவந்து அப்படியே கேட்டது போலவே பாடும் வல்லமை கைகூடப் பெற்றிருந்தாள். தந்தையும் சில இறையிசைப் பாடல்களைச் சொல்லிக் கொடுத்திருந்தார். 1929இல் 10 வயதிலேயே அப்போதைய சென்னை மாநகராட்சி வானொலியில் (Madras Corporation Radio - பின்னாளில் அனைத்திந்திய வானொலி) பாடும் வாய்ப்பு பட்டாவுக்குக் கிடைத்தது. 3 ஆண்டுகளுக்குப் பின் சென்னையின் புகழ் பெற்ற ரசிக ரஞ்சனி சபாவில் முதலாவது கச்சேரி. இதற்கிடையே மகள் மேடைக் கச்சேரி செய்வதனை அரைமனதோடு அனுமதித்த பட்டாவின் தந்தையார், 'காலா காலத்தில் பட்டாவுக்குத் திருமணம் முடித்து வைத்துவிட்டால் பொது இடங்களில் மகளின் இசைநிகழ்ச்சிகள் நின்றுவிடும்' என்று கணக்குப்போடத் தொடங்கினார். பட்டம்மாள் படித்துவந்த பாடசாலையின் தலைமை ஆசிரியை, பட்டம்மாளின் திறமை வெளியுலகத்திற்கு நன்கு தெரிய வேண்டுமென்ற நோக்கோடு செய்தித் தாளொன்றில் பட்டம்மாளின் படமொன்றை வெளிவரச் செய்தார். இதைக் கண்ணுற்ற கொலம்பியா கிராமபோன் நிறுவனத்தினர் பட்டம்மாளின் பாடல் கொண்ட இசைத் தட்டொன்றை வெளியிட முன்வந்தனர். முதலில் மறுத்தாலும் மகளின் திறமைக்கும் ஆசார அனுட்டானத்திற்குமிடையே ஊசலாடிக்கொண்டிருந்த தந்தையார், பட்டம்மாளை ஓர் இசைக்கலைஞராக வளர்த்துவிடுவது என்று முடிவெடுத்துச் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். இசைக்கல்வியும் தொடர்ந்தது. கச்சேரியும் தொடர்ந்தது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதரின் கீர்த்தனைகளைத் தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டு பாடத்தொடங்கினார். தீட்சிதர் கீர்த்தனைகள் என்றால் பட்டம்மாள்தான் என்ற நிலை உருவானது. தீட்சிதரின் பூட்டன் அம்பி தீட்சிதரிடம் முத்துசாமி தீட்சிதரின் கீர்த்தனைகளை மேலும் பயின்று தன்னைத்தானே வளப்படுத்திக் கொண்டார் பட்டம்மாள். புகழின் உச்சியிலிருந்த போதிலும் இன்னொருவரிடம் கற்றுக்கொள்வது



கலையுலகில் மிக அரிது. மிக எளிமையானவர் என்று பெயரெடுத்தபடியே இசையுலக மரபுகள் சிலவற்றை தகர்த்தெறிந்தார்.

அதுவரையில் ஆண்களின் இசைதான் உயர்ந்தது. பெண்களின் இசை தங்களின் இசையோடு ஒப்பிடப்படக்கூட முடியாதது என்று இறுமாந்திருந்த ஆண்கலைஞர்கள் எல்லோருக்கும் சாட்டையடியாக விழுந்தது பட்டம்மாளின் ராகம்-தானம்-பல்லவி. வானொலியிலும் மேடையிலும் முதன்முதலாகக் கச்சேரி செய்த பிராமணப் பெண் என்று பெயர்பெற்றிருந்த பட்டம்மாள், அதுவரையில் ஆண்கள் மட்டுமே பாடி வந்த; வேறு வகையிற் சொல்வதானால் பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்த ராகம்-தானம்-பல்லவியை மிகச்சிறப்பாக மேடைகளிற் பாடினார். ராகம்-தானம்-பல்லவியை மேடையில் பாடிய முதலாவது பெண் என்ற பெருமையையும் பெற்றார். அதுவரையில் இசை வேளாள சமூகத்துப் பெண்கள் மேடைகளிற் பாடி வந்தனர். அவர்களுக்கும் ராகம்-தானம்-பல்லவி பாட அனுமதியில்லையெனும்போது இசையுலகில் ஆணாதிக்கம் எவ்வளவு வலுவாக இருந்ததென்பதைப் புரிந்துகொள்ளலாம். ராகம்-தானம்-பல்லவியில் பல்லவியில் ஒரு கரைகண்டு 'பல்லவி' பட்டம்மாள் என்று அழைக்கப்படலானார் பட்டம்மாள். 1939இல் திருமணம். கணவர் ஈஸ்வரனுக்கு பட்டம்மாளின் இசை ஆர்வத்தில் எதிர்ப்பில்லாவிடினும் திரைப்படம் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். திருமணத்தின் பின் படமே பார்க்காதிருந்தார் பட்டம்மாள்.

இப்படியான ஒரு நிலையில் பாபநாசம் சிவன், தியாகபூமி திரைப்படத்தில் பாடும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார். திரைப்படமே பிடிக்காத கணவனோடு திரைப்படத்தில் பாடும் வாய்ப்பு வரும்போது அதை பட்டம்மாள் எவ்வாறு எதிர்கொண்டிருப்பார் என்று நினைக்கத் தோன்றுகிறது. தியாகபூமி திரைப்படத்திற் பாடினார். தொடர்ந்து நாம் இருவர், வேதாள உலகம், ஹேராம்... வரையில் 10க்கு மேற் பட்ட படங்களிற் பாடினார். நாட்டுப்பற்று மிகுந்த, ஆன்மீகப் பாடல்களை மட்டும் தான் பாடுவேன் என உறுதியாக இருந்தார். பாரதி பாடல்கள் மீது காதல் கொண்டார். ஒருமுறை திருநெல்வேலியில் பாரதியார் பாடல்களைப் பாடியபோது பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பட்டம்மாளைக் கட்டியணைத்துத் தாரை தாரையாகக் கண்ணீர் உகுத்தாராம்.

'இசைத்தட்டுக்களிற் பாடினால் பட்டிதொட்டி, மூலைமுடுக்கெல்லாம் தன் மகளின் குரல் ஒலிக்கும்... அது மரியாதைக்குரியதாய் இருக்காது' என்று இசைத்தட்டு வாய்ப்பு வந்தபோது முதலில் தந்தை மறுத்தார். திரைப்படத்திற்



கந்தசாமி கங்காதரன்

பாடியபின் பட்டம்மாளின் குரல் பட்டிதொட்டியெங்கும் மூலைமுடுக்கெங்கும் ஒலித்துப் புகழையல்லவா சேர்த்தது. திரைப்படங்களிற்

> **"பட்டம்மா, நீ பாடுபட்ட பாட்டம்மா"**
>
> இசையறிஞர் ஜஸ்டிஸ் டி.எஸ்.வெங்கடராம ஐயர்

பாடமுன்பே இந்திய விடுதலை இயக்கப் பாடல்கள் பலவற்றையும் பாடியிருக்கின்றார் பட்டம்மாள். கோபாலகிருஷ்ண பாரதியார், முத்துத்தாண்டவர் பாடல்களையும் பாடிப் பிரபலப்படுத்தியிருக்கின்றார். பாபநாசம் சிவனின் பாடல்களும் பட்டம்மாளுக்குப் பிடித்தமானவை. தமிழிசை இயக்கத்துக்கு முன்னரே தமிழிசைப் பாடல்களைப் பாடத் தொடங்கிவிட்டார் பட்டம்மாள். 1934இல் பம்பாயில் (மும்பை) ஒரு நிகழ்ச்சியிற் பாடிய போது அந்நாளைய பம்பாய் இசை விமர்சகர் சிதம்பரம் ஐயர், பட்டம்மாளின் தமிழிசைப் பாடல்களைச் சுவைப்பதற்கு நாம் அதிர்ஷ்டமுள்ளவர்களாயிருக்கிறோம் என்று எழுதினார். அந்த இசை நிகழ்ச்சிக்கு கிடைத்த பெரும் வரவேற்பினால் ஆண்டுதோறும் பம்பாயில் தமிழிசைக் கச்சேரி செய்வதை மிக நீண்ட காலம் வழமையாக்கிக் கொண்டிருந்தார் பட்டம்மாள். பாடுவதோடு நின்றுவிடவில்லை. தன்னுடைய தம்பி டி.கே.ஜெயராமனைத் தன் முதல் மாணவனாக்கிக் கொண்டார். பல் வேறு நாடுகளிலிருந்தும் அவரிடம் இசை கற்றோர் பலர். ஜப்பானிய மாணவி அகிசோ இவரிடம் கற்றதோடு நின்றுவிடாது திருவையாறு தியாகராஜ உற்சவத்திலும் பாடியிருக்கின்றார். பிரபல பாடகி நித்தியஸ்ரீ மகாதேவனும் பட்டம்மாளின் மாணவியாவார்; பேத்தியும் கூட. 'கர்நாடக இசை உங்களாற் பெருமை பெற்றிருக்கின்றது' என்று ஒரு செவ்வியின் போது சொல்லப்பட, இடைமறித்து 'கர்நாடக இசை என்பது ஒரு சமுத்திரம் - அங்கு கற்பதற்கு இன்னமும் நிறைய விடயங்கள் உள்ளன. நீங்கள் எவ்வளவுதான் கற்றாலும் அங்கு கற்பதற்கு நிறைய விடயங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தக் கலையின் ஆழத்தைக் காண்பதற்கு ஒரு பிறவி போதாது. நான் இறைவனிடம் கேட்பதெல்லாம், பாடிக் கொண்டிருக்கும்போதே என் உயிர் பிரியவேண்டுமென்பதைத் தவிர வேறொன்றுமில்லை' என்று சொன்னார். ஒரு புரட்சிப் பெண்ணாக, வழிகாட்டியாக, தனக்கு விருப்பமான கலையைத் தொடர்வதற்கான, விடுதலையைத் தானே பெற்றுக்கொண்ட ஒரு பெண்ணாக, கலைவழி தன் தனித்துவத்தை, தன் ஆளுமையை வெளிக்காட்டிய கலைஞராக வாழ்ந்த டி.கே.பட்டம்மாள் பெண்விடுதலை, பெண்ணுரிமையைப் பற்றித் தொண்டை கிழியக் கத்துவோருக்கும், 'பெண் விடுதலையென்றால் என்ன? அதை எப்படி நிலைநாட்டுவது என்று முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்' என்றால் மிகையாகாது.

கானசரஸ்வதி டி.கே.பட்டம்மாள் அவர்களுக்குத் "தாய்வீடு" பத்திரிகையின் அஞ்சலி.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல்
போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள்அந்த மனக்கவலையை விடுங்கள்.
வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.



**Life**
Universal Life
Whole Life
Term Life

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**Critical Illness**
Upto 25
Illness

digi Media



**Insurance Broker**

# Guna Selliah

## 416.371.7776

Assumption Life IA RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# சில வீடுகளில்...

கௌரி
சதானந்தன்



எனக்கு எப்பவுமே இந்த வயதுபோன சனங்களில ஒரு ஈடுபாடு. ஊரில சில வீடுகளுக்குப் போனா அந்த வயதுபோனதுகள் வாசல் முகப்பில குந்தியிருப்பதைப் பார்ப்பதே ஒரு தெய்வீகமாயிருக்கும். எங்கட ஆச்சியும் (அம்மம்மா) அப்படி ஒரு தெய்வீகம்தான். அவர்களின் இழப்புகள் நேர்ந்தபோது நாங்கள் குடும்பகாரர் ஆகிப்போய் நகரத்திற்குள் தொலையப் போய்விட்டிருந்தோம். அந்த தெய்வீகக் "கிழவி" அந்த இடத்தை வெற்றிடமாக்கிவிட்டு, எங்களை அந்த இடத்திற்காய் தயாராக்கிக் கொண்டிருந்ததைப் புரிய இத்தனை காலமாகியிருக்கிறது.

எங்கட அம்மாவை அந்த இடத்தில் குந்தியிருக்க நாங்கள் விட்டதில்லை. ஏனென்றால் அவவின்ர தலையில நாங்கள் ஒவ்வொருவராய் எங்கள் பாரங்களைச் சுமத்திக்கொண்டிருந்தோம். அக்காவின்ர பிள்ளைகள், அண்ணாவின்ர பிள்ளைகள், தம்பியின்ர பிள்ளைகள், என்ர பிள்ளைகள், தங்கச்சியின்ர பிள்ளைகள் என்று அவரவர் பிள்ளைகளின் வயதுக் காலங்களின் அடிப்படையில நாங்கள் அவர்களை "குத்தகைக்கு" எடுத்திருந்தோம். அவவோ பாவம் பாசச் சூழலில் சுழன்று கொண்டிருந்தா. "சீ" என்றதில்லை, எனக்கேலாதென்றதில்லை, பேரர்கள் மீது அத்தனை பிரியம். எத்தனை பிள்ளைகளைக் கண்டிருந்தாலும் புதிதாகக் கிடைக்கும் ஒவ்வொரு பேரக் குழந்தையும் புத்தம் புதியதாக – புதினமுள்ளதாகத்தான் அவவுக்குத் தெரியும். அந்தக் குழந்தைகள் செய்யும் குறும்புகளையும் அவர்களின் கெட்டித்தனங்களையும் வேலைக்குப் போகும் பெற்றோர் இழக்கின்றார்களே என்ற தவிப்பையும் அவ சொல்லிக்கொள்வா. "உங்களுக்கு என்ன தெரியும் - இந்தப் பிள்ளைகளின் விளையாட்டும் குறும்பும்.. எல்லாம் நான்தானே ரசிக்கிறன்" என்று சொல்லுவா. இந்த அனுபவிப்புகளே போதுமெனக் கருதியதாலோ என்னவோ தனக்கென எதுவித எதிர்பார்ப்பையுமே காட்டிக்கொள்வதில்லை.

அக்கா சொல்லுவா தன்ர பிள்ளைகளை விட அவவுக்கு தங்கச்சியின் பிள்ளைகளிலும் தம்பியின் பிள்ளைகளிலும்தான் பாசம் என்று. அண்ணா சொல்லுவார்- அவவுக்கு பொம்பிளைப் பிள்ளைகளில தான் பாசம், என்ர வீட்ட என்டால் "எட்டத்தான்" என்று. நான் கொஞ்சம் நல்ல பிள்ளையாய் இருந்திருக்கிறன் போல. ஏனெண்டால் என்னட்டத்தான் இதையெல்லாம் அவ சொல்லுறவா.

இதற்குள் ஐயா வேற தனிச்சுப் போனார். ஒருவருக்குமே அவர் தனியாய் இருக்கிறதைப்பற்றி எந்தவித உணர்ச்சியுமே இல்லாமல் இருந்திருக்கிறோம். வாழ்நாள் முழுதும் தன்ர மனைவியை பிரியமாட்டேன் என ஐயரிடம் அக்கினிக்கு முன்னால் வாக்குக் கொடுத்தவரிடம் பிள்ளைகள் அவரிடம் கேட்காமலே அம்மாவைக் கையாடிக் கொண்டோம். ஐயா ஒருநாள் அக்கா வீட்டில் இருப்பார். அதேநாள் அம்மா அண்ணா வீட்டில் இருப்பா. இதுவே ஒரு கிழமையாகவும் இருக்கும், ஒரு மாதமாயும் இருக்கும், வருடமாகவும் இருக்கும். அவ்வப்போது ஐயா வந்து அம்மாவையும் சந்தித்துப் போவார். உதாசீனப்படுத்தும் மருமக்கள் பற்றி எதுவுமே சொலமாட்டார். அவரவர் வீட்டு வெளிவேலைகளை அக்கறையாகச் செய்துகொடுத்துவிடுவார்.

அவருக்கு அம்மா தன் கையால் தேத்தண்ணியை அவர் கையில் கொடுக்கவேண்டும். அது அவரது ஒரு ஆசை. "இந்தா இருக்கு, எடுங்கோ" எண்டாலும் பிடிக்காது. அதை கையில் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்டவர் இந்த இடைவெளிகளையெல்லாம் தாங்கிக்கொண்டார், விட்டுக்கொடுத்தார். அவர்கள் இருவரும் சந்திக்கும்போது பேரர்களின் விளையாட்டுக்கள், பழைய இலக்கியங்கள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், சமகால அரசியல்கள் பற்றியெல்லாம் பேசுவார்கள். அம்மா சில பாட்டுகளின் வசனங்களில் ஒன்றிரண்டு மட்டும் ஏதோ வகையில் தெரிந்து வைத்திருப்பா. அதை எங்களுக்குத் தெரியப்படுத்தி அந்தப் பாட்டைத் தேடித்தரும்படி கேட்பா. இந்தக் காலத்தில் போல் கொம்பியூட்டரும், கூகுளும் அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் இல்லை. என்னுடன் வேலை செய்த ஒருவர் இந்த இலக்கியங்களில் நல்ல ஈடுபாடு உள்ளவர். அவரிடம் கேட்டு, அம்மா கேட்ட பாட்டை நான் தேடிக் கொடுத்திருக்கிறேன்.

இப்படி பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே எவ்வளவோ விஷயங்கள் இருக்கு.

> " ஐயா வேற தனிச்சுப்போனார்.
> ஒருவருக்குமே அவர் தனியாய் இருக்கிறதைப்பற்றி
> எந்தவித உணர்ச்சியுமே இல்லாமல்
> இருந்திருக்கிறோம்.
> வாழ்நாள் முழுதும், தன்ர மனைவியை
> பிரியமாட்டேன் என அக்கினிக்கு முன்னால்
> வாக்குக் கொடுத்தவரிடம்,
> அவரிடம் கேட்காமலே, பிள்ளைகள் நாங்கள்
> அம்மாவைக் கையாடிக் கொண்டோம் "

உண்மையில் எத்தனையோ இடையூறுகளை நாம் அறியாமலேயே இவர்களுக்குச் செய்து விடுகிறோம். அது அவர்களின் மனநிலையைப் பாதிக்குமென்று நினைப்பதே இல்லை. நமது இயலாமைகளையும், மற்ற போட்டி பொறாமைகளையும் இவர்களின் மேல் காட்டுகிறோம். நமது தேவைகள் முடிந்த பிறகு அவர்களுக்கும் இயலாமல் போகும்போது அவர்களை எடுத்தெறியத் தொடங்குகிறோம்.

புத்திசொல்லும் வேளைகளில் உங்களுக்கு என்ன தெரியும் என்று அடக்கிவிடுகிறோம். அவர்களுக்கு வயது போய்க்கொண்டிருக்கும் காலங்களில் அவர்களின் தேவைகளை, ஆசைகளை புறக்கணிக்கத் தொடங்குகிறோம். இனி அவர்களுக்கு அவை அவசியமில்லை என்று நாமாகவே தீர்மானித்துக் கொள்கிறோம். எனவே, அவர்கள் மற்றவர்களிடம் தாம் பிள்ளைகளால் புறக்கணிக்கப் படுவதாக சொல்லிக்கொள்ளத் தொடங்கி, இதனால் அவர்கள் ஆறுதலைத் தேடிக்கொள்வதாக நினைக்கிறார்கள். சில வேளைகளில் தமது பிள்ளைகளை மற்றவர்கள் தவறாக நினைக்கும் நிலையை உருவாக்குவதாகவும் இது அமைகிறது. உண்மையில் வயதுபோய்க்கொண்டிருப்பவர்களின் மனநிலையை, இளம் பெற்றோர்கள் தமது சுமைகளின் பாதிப்புகளால் அறிந்துகொள்ளும் நினைப்பையே கொண்டிருப்பதில்லை. பலரும் அறியாமையாலோ, சுயநலத்தாலோதான் இவ்வாறான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். தாமறியாமலேயே இத்தவறுகள் நிகழுகின்றன.

எனது நண்பரொருவரின் தாயாருக்கு அப்போது அறுபத்தைந்து வயதிருக்கும். அவரது கண்பார்வை மங்கத் தொடங்கியிருந்தது. மருத்துவரிடம் காட்டியபோது 'கற்றாக்ற்' என்றும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். அவரது நெருங்கிய உறவினரான ஒருவர் "இனி அவவுக்கு எதுக்குக் கண்பார்வை? ஒப்பறேசன் அவசியமா?" என்று சிண்டு முடியப் பார்த்திருக்கிறார்! இது எப்படியிருக்கு? இந்தளவிற்கு நமது புரிந்துணர்வுகள் இருந்தால் இது நமது அறியாமையேயன்றி வேறென்ன?

"அனுபவம் என்பது தலையில் வழுக்கை விழுந்தபின் வாழ்க்கையில் கிடைக்கும் சீப்பு போன்றது" என்று சமீபத்தில் வாசித்தது ஞாபகம் வருகிறது.

சின்னச் சின்ன சம்பவங்கள் மனதில் நன்றாகவே பதிந்துவிடுகின்றன. எனது நண்பியின் வீட்டில் அவளது மகள் "அம்மா, அப்பம்மா அம்புலிமாமா வாசித்துக் காட்டச்சொல்லி என்னட்ட ஒரே கேக்கிறா. நான் விளையாடப் போகவேணும். எனக்கேலாது" என்றாள் ஒரு நாள். அவள் தாயாரோ "பிள்ளை, அவ பாவம். கண் ஏலாது. நீங்க வாசித்துத் தான் காட்ட வேணும். பிறகு அவவுக்கு ஒன்று நேர்ந்தால் நீங்கள்தான் பிறகு கவலைப்படுவீர்கள். போய் வாசித்துக் காட்டுங்கோ" என்றாள். உண்மைதான். வயதானவர்கள் காலமானதன் பின்னர் "ஐயோ அவர்களுக்கு நான் அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே" என்று கவலைப்படுபவர்கள் பலர்.



வெளிநாடென்று வந்தபின்னர், பெற்றோரை வரவழைத்துக்கொள்ளுகிறார்கள் பிள்ளைகள். சிலர் இவர்கள் தங்கள் "கட்டுப்பாட்டில்" தான் இருக்கவேண்டுமென்றும் ஒரு எழுதாத வரைமுறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தாம் உறவினைப் பேணாத தம் சொந்தச் சகோதரர்களுடன்கூட பெற்றோர் தொடர்பு கொள்ளக்கூடாதென்று கட்டாக்கினை வைக்கிறவர்களும் இருக்கிறார்கள். பாவம் இந்தப் பெற்றோர்கள்! சொந்தப் பிள்ளையிடம் பேசுவதற்குக் கூட மற்றப் பிள்ளையின் தயவை எதிர்பார்க்கவேண்டிய துர்ப்பாக்கியம்! ஒளித்து மறைத்தே தமக்குத் தேவையானவர்களிடம் தொலைபேசியில் கதைக்கவேண்டிய அவல நிலை! பெற்றோரின் சுதந்திரத்தில் இவ்வளவு தூரம் தலையிடுவது ஒருவித அநாகரிகம் என்பதை எப்படித்தான் உணரப் போகிறோம்?.

நம் தாயகத்தில், அல்சைமர் நோயாளிகளாகப் போன வயதானவர்கள் சிலர் பேணப்பட்ட விதம் குறித்து கவலையான சில மனப் பதிவுகள் என்னிடம் உண்டு.

திருமணமாகாத ஒரு மகளிடம் இருந்தார் ஒரு தாய். நான் அவர்கள் வீட்டிற்குப் போனபோது அந்தத் தாயாரைக் காணவில்லை. அவர் எங்கே என்று கேட்டபோது, அவ அந்த அறைக்குள்ள இருக்கிறா என்றார் அந்த மகள். நான் போய்ப்பார்த்தபோது, உள் பாவாடை மட்டுமே அணிந்தபடி இருந்த அவர் வெறுந் தரையில் படுத்திருந்தார். சிறுநீரும் போயிருந்தது. இப்படித்தான் அவர் நடத்தப்பட்டார். இவ்வாறு அவர் இருந்தைப்பற்றி மகள் அலட்டிக்கொள்ளக்கூட இல்லை. இதைவிட்டால் வேறு எப்படி பராமரிப்பது என்பது அவரது முடிவு - இது ஒரு பதினைந்து வருடங்களுக்கு முந்திய நடப்பு.

இன்னொருவர் வீட்டில் வயதானவர் படுக்கையில் இருந்தார். படுக்கைப் புண்கள் வேறு. அவர் பசியென்று கேட்பார். உடல் வலு இருந்தவர்களோ போதுமான சாப்பாடு கொடுப்பதில்லையாம்! ஏனென்று கேட்டால் அவர் அதிகம் சாப்பிட்டால் ஒரே 'கக்கா' போகிறாராம்!

உதாரணத்துக்குத் தான் இவையே தவிர, இவைதான் பிரச்சினைகள் என்றில்லை. கெட்ட கொலஸ்ரோல் நல்ல கொலஸ்ரோல் போல நல்ல பிரச்சினைகளும் உண்டு.
வயதான பெற்றோரையோ, மாமனார் மாமியாரையோ தாங்கோ தாங்கென்று தாங்குவோர் பலராக இருக்கிறார்கள். இன்று வெள்ளிக் கிழமை - பெற்றோர் அல்லது மாமனார்-மாமியார் கோவிலுக்குப் போகும் நாள். அவர்களைக் கூட்டிப் போகவேண்டுமென்று அக்கறைகொள்வோரும் வயதானவர்களுடன் சேர்ந்து சுற்றுலா போவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

முதியோர் நலன்பேண் நிலையங்களில் வயதானவர்களை விடுவதில் இருவேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. பிள்ளைகள் பெற்றோரைப் பாரமாக நினைத்து அவர்களை அங்கே விட்டுவிடுகிறார்கள் என்று சுகமாக குற்றம் சாட்டிவிடுகிறார்கள் உறவினர். தாம் அவர்களைப் பராமரிப்பதிலும் பார்க்க நலன் பேண் நிலையங்களில் வசதியாக இருப்பார்கள் என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு அங்கே சேர்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வாராவாரம், நல்லநாள் பெருநாள் என்று அவர்களைப் போய்ப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டுவந்தால் 'எல்லாம் சௌக்கியமே'.

வயதானவர்களுக்குத் தேவையானவற்றை அக்கறையாகச் செய்வோர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

kowry.sathananthan@thaiveedu.com

■ ■ ■

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# இரு இடங்களில்

## துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

## இதில் 18 வருடங்கள் கனடாவில்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?



தமிழ் மக்கள் இதயங்களில்
பணமாற்றுச் சேவையில்
இடம் பிடித்தவர்கள்

## மு. காசிப்பிள்ளை சகசு புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
தொலைபேசி எண்: **416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**(Markham & Steeles)**
**SCARBOROUGH, ON. M1X 0A6**
தொலைபேசி எண்: **416-321-8221**

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51



செந்தியின்
தமிழன்
# வழிகாட்டி
416-615-4646

உங்கள் வர்த்தகர்களை கண்டுபிடியுங்கள்...
கண்டுபிடிங்கோ...
பரிசில்களை வெல்லுங்கள்...

உலகெங்கும் வியாபித்திருக்கும் எமது இன ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு துவங்கப்பட்ட ஒரு இணையதளம்தான் WWW.TAMILSGUIDE.COM. இந்த இணையதளத்தில், முதல் மூன்று பிரிவுகளில் தலா 102, வர்த்தகர்களும், கடைசி பிரிவில் 32 வர்த்தகர்ளுமாய் ஆகமொத்தம் 328 வர்த்தகர்களின் புகைப்படங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் கொடுக்கப் பட்டிருக்கும் சீரான வரிசையில் அமையாத வர்த்தகர்களின் பெயர்களைக் கண்டறிந்து படங்களுடன் உள்ள சரியான இலக்கங்களை கண்டுபிடித்து தருபவர்களுக்கு பரிசுகள் காத்திருக்கின்றன. குறைந்தது 250 சரியான பதில்கள் தருபவர்களே போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியுடையவர்கள். போட்டி நிர்வாகிகள் எடுக்கும் முடிவுகளே இறுதியானது. நவம்பர் 15ஆம் திகதி வரை போட்டியில் கலந்து கொள்ளலாம். தங்கள் முழு ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்.

# WWW.TAMILSGUIDE.COM

செய்திகள்
விளம்பரங்கள்
சோதிடம்
அறிவித்தல்கள்
சினிமா
அரசியல்

உங்களை இணைக்கிறோம் நாங்கள்

பரிசுகள் வழங்கும் எம் பெருமைக்குரிய வர்த்தகர்கள்

**முதல் பரிசு**

€250



STANDARD MORTGAGES INC.

**S. Raj** Standard Mortgage
416.993.2638

**இரண்டாம் பரிசு**

€150



MORTGAGE ALLIANCE

**Senthil Manalan**
647.895.6052

**மூன்றாம் பரிசு**

€100



Sun Life Financial

**Chandran Rasalingam**
416.909.0400

# காற்றுவடி இயந்திரம்

வீட்டின் ஜன்னல் வழியே சூரிய ஒளி உள் வரும் போது தூசின் நடமாற்றத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். வீட்டுக்குள் என்ன அவ்வளவு தூசியா..? வல்லுனர்களின் கணிப்பின்படி சாதாரண வீடொன்றில் ஒரு கன அடி காற்றுக்குள் 3 மில்லியன் வரையிலான தூசுத் துகள்கள் இருக்கும். அதனால்தான் வீட்டுக்குள் தூசைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும் அமுலில் உள்ளன.

> “பொதுவாக ஒவ்வாமை வியாதி உள்ள பலருக்கு தூசு உடல் கேடை விளைவிக்கிறது. ஆஸ்மா, தோல்கடி, கண்கடி, தும்மல், போன்ற வியாதிகளுக்கு ஒரு காரணமாய் அமைவது மட்டுமல்லாது பக்றீயா போன்ற நுண்ணுயிர்களின் காவிகளாய்க் கூட இவை தொழிற்படுகின்றன.”

தூசு என்பது பொதுவாக அழைக்கப்படும் சொல்லாக இருப்பினும் அது பல்வேறு வகையினதை உள்ளடக்கியதாகவே இருக்கிறது. உதாரணமாக: விறகுச் சாம்பல், சிக்கிரட் அல்லது சமையல் புகை, இறந்த தோல் கலன்கள், வளர்ப்புப் பிராணிகளின் மயிர்கள் மற்றும் இறந்த கலன்கள், மோல்ட் நுண்ணுயிர்கள், பூஞ்சணம், தாவரங்களின் பூ மற்றும் தாவர உதிர்வுகள், துணி துகள்கள் போன்ற பலவற்றை உள்ளடக்கியதாகவே தூசு காணப்படுகிறது.

பொதுவாக ஒவ்வாமை வியாதி உள்ள பலருக்கு தூசு உடல் கேடை விளைவிக்கிறது. ஆஸ்மா, தோல்கடி, கண்கடி, தும்மல், போன்ற வியாதிகளுக்கு ஒரு காரணமாய் அமைவது மட்டுமல்லாது பக்றீயா போன்ற நுண்ணுயிர்களின் காவிகளாய்க்கூட இவை தொழிற்படுகின்றன.

இதனால்தான் வீட்டுக்குள் காற்றை சுத்தமாகப் பேண பல வழிமுறைகள் முன்வைக்கப்படுகின்றன. பிரதான வழிமுறைகளாக

- காற்று நுண் துவாரங்கள் கொண்ட வடிக்குள்ளால் செலுத்தி வடிகட்டல்.
- காற்றில் உள்ள தூசுகளுக்கு மின்னேற்றி காந்தகவர்ச்சி மூலம் தூசுகளை கவர்தல்
- மேற்கூறிய இரண்டும் இணைந்த செயற்பாடு.

வீடுகளில் மேசைகளில் வைக்கப்படும் காற்றுவடி இயந்திரம் பொதுவாக மூன்று நிலைகளில் தங்கள் காரியங்களை புரிகின்றன. முதலில் Foamக்குள்ளால் காற்று வடிகட்டப்பட்டு அதன் பின்னர் நுண்ணுயிர்களை வடிகட்டக்கூடிய வடிக்குள்ளால் செலுத்தப்பட்டு பின்னர் காபன் வடிக்குள்ளால் செலுத் தப்பட்டு காற்றின் துர்நாற்றம், சில வாயுக்கள் மற்றும் மீறிய தூசுகள் போன்றவை அகற்றப்படுகின்றன.

சந்தையில் பல்வேறு வகையான காற்றுவடி இயந்திரங்கள் விற்பனையில் உள்ளன. இவைகளில் எது தனது தொழிலை செவ்வனவே செய்கிறதென்பது எம்முன்னுள்ள கேள்வி. பொதுவாக குறிப்பிட்ட ஒரு பொழுதில் வடியில் தங்கும் தூசின் அளவைக்கொண்டு இவ் இயந்திரங்களின் திறன் அறியப்படுகிறது. அத்தோடு எவ்வகையான தூசு வடியில் தங்கி நிற்கின்றது என்பதும் கவனத்தில் எடுக்கப்படுகிறது.

காற்றுவடியின் செயல்திறன் அதிகரிக்க வடியில் சேரும் தூசுகளும் அதிகரித்து அடைப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனால் அடிக்கடி இந்த வடியை மாற்றவேண்டிய தேவையும் ஏற்படுகிறது. ஆயினும் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட காற்று வடிகள் நுண் தூசுகளை வடிகட்டக் கூடியனவாயும், தொடர்புப்பரப்பு கூடியனவாயும் இருப்பதினால் கூடியகாலம் பாவிக்கக்கூடியனவாய் உள்ளன. காந்த கவர்ச்சி முறை வடிகள் மிகச்சிறிய தூசுகளை கவர்வதினால் காற்று தடைப்படுதல் மிக அரிதாகவே நிகழ்கிறது. ஆயினும் தூசுத்துகள்கள் வடியில் சேரும் போது மின்னேற்றத்தை இழக்க நேரிடுகிறது. இவ் வடிகளுக்குள்ளால் காற்றும் மிகக் குறைந்தவேகத்தில் செல்லும்போதே மிகச் சிறப்பாக பணியாற்றுகிறது.

தூசுத்துகள்களை அளப்பதற்கான அளவு கோலாக “மக்ரோன்” அலகு பாவிக்கப்படுகிறது. ஒரு மக்ரோன் என்பது 1/25,400 அங்குலம் ஆகும். 10 மக்ரோன்களுக்கு மேல் உள்ள தூசுகளை எம்மால் பார்க்கக் கூடியதாய் இருக்கும். கூரிய பென்சிலால் இடப்படும் புள்ளியின் விட்டம் கிட்டத்தட்ட 200 மக்ரோனாய் இருக்கும். இப்பொழுது ஓரளவேனும் தூசை அடையாளங்காணக் கூடியதாய் இருக்கிறதா? பொதுவான காற்று வடிகள் கண்ணால் பார்க்கக்கூடிய தூசுகளை வடிகட்டுகின்றன. மிகத் திறனான காற்றுவடி இயந்திரங்கள் 10 மக்ரோன்களுக்கு உற்பட்ட தூசுகளையும் வடிகட்டவேண்டும்.

### காற்றுவடி இயந்திரங்களை வாங்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியவை:

ASHRAE (American Society of Heating Refrigeration and Air-Conditioning Engineers) எனப்படும் அமெரிக்க பொறியாளர் நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றுக் குறிப்பு நல்ல காற்றுவடி இயந்தித்தை வாங்குவதற்கு ஏதுவாய் உள்ளது. Clean Air Delivery Rate (CADR) இவ் சான்றுக்குறிப்பு, ஒரு நிமிடத்திற்கு காற்றுவடிக்குள்ளால் செலுத்தப்படும் காற்றின் கனஅளவும் அதன்போது வடிகட்டப்படும் தூசுகளின் அளவும் கவனத்தில் எடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது. CADR அளவு அதிகமாய் இருந்தால், குறைந்தளவு நேரத்தில் குறிப்பிட்டளவு பிரதேசத்தில் உள்ள கூடியளவு தூசு வடிகட்டப்பட்டு காற்று சுத்திகரிக்கப்படுகிறது.

AHAM - The Association of Home Appliance Manufactuersஇனால் உறுதிப்படுத்தப்பட்ட காற்றுவடி இயந்திரங்கள் CADR சான்றுக்குறிப்பு தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே காற்றுவடி இயந்திரங்களை வாங்கும்போது இதை நாமும் கவனத்தில் வைத்திருத்தல் நல்லது.

செல்வி அதினி

selvi.a@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

KathirHomes
Design group
DIV. OF 1780681 ONTARIO LTD.
Build Your Dream Home
கனவு மனை ஒன்றை புதிதாய் கட்டி வாழ்ந்திட



Design & Construction
416 856 6900
Custom home Design
Building permit
Committee of adjustment



Kathir
S Kathirgamanathan P.Eng.

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்




416.203.0344

# Renewable Energy - Ecoaction

# பின்தங்கிய வீடுகளை சீர் செய்தல்

## Photovoltaic



**K. கண்ணன்**
- Marketing Director -

**சுற்றுச்சூழல் சக்தி மூலம் பின் தங்கிய வீடுகளை சீர் செய்தல்**

**விரைவான தொடர்புகள்:**

- வழிமுறை தொகுப்பு பற்றிய தகவல்.
- பண உதவி பெறுவதற்கு நான்கு சுலபமான வழிகள்.
- பண உதவி சம்பந்தமான அட்டவணை
- சக்தி ஆலோசனையாளரை (Advisor) தொடர்பு கொள்ளுதல்.
- கேள்விகள் மற்றும் பதில்கள்.
- பிரசுரங்கள் (Publications).
- மாநில வழிமுறை தொகுப்புகள்.
- சக்தி நட்சத்திர தகுதி பெற்ற பொருள்கள்.

### புதிய தகவல்கள் சில

பின்தங்கிய வீடுகளில் சக்தியை பயன்படுத்தி பணத்தை மிச்சப்படுத்துவதற்கு ஒரு புதிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அதை கனடாவின் வீட்டு உடமைக்காரர்கள் தங்களுக்கு சாதகமாக இப்போதே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என்று வலியுறுத்தப்படுகிறார்கள். இயற்கை வளங்கள் துறை அமைச்சர் மாண்புமிகு Lisa Raitt அவர்கள், March 30, 2009 முதல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சுற்றுச்சூழல் சக்தி மூலம் பின்தங்கிய வீடுகளை சீர் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 25 சதவீதம் கூடுதலாக பண உதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

### கூடுதல் விபரங்கள்

கனடாவில் Retro Foam insulation பொருள்களை கனடாவின் Retro Foam incorporate நிறுவனம் சட்டத்திற்கு புறம்பாக இறக்குமதி செய்து விற்பனை செய்துள்ளது என்று கனடாவின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார துறை தன்னுடைய நுகர்வோர் பயனாளிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளது. Retro foam என்பது ஒரு Urea formadehyde அடிப்படையிலான thermal insulation ஆகும். Retro foam நிறுவிய வீட்டு உடமைக்காரர்களுக்கு மேலும் கூடுதல் விபரங்களை கனடாவின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார துறை நேரடியாக வழங்கும். இன்னும் கூடுதல் விபரங்களை அரசு துறையின் இணையதளத்தில் பார்க்கலாம். இலவச தொலைபேசி: 1-800-443-0395யும் தொடர்பு கொள்ளலாம். சுற்றுச்சூழல் சக்தி மூலம் பின்தங்கிய வீடுகளை சீர்படுத்துவதற்கு, கனடாவின் 2,00,000க்கும் மேலான வீட்டு உடமைக்காரர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் கனடிய அரசின் பொருளாதார செயல்திட்டத்தின் ஒரு அங்கமாகிய சுற்றுச்சூழல் சக்தி திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களில் 300மில்லியன் டாலருக்கும் மேலாக இந்த நீண்டகால செயற்திட்டத்திற்கு செலவிடப்படும்.

> “ பின்தங்கிய வீடுகளை
> சீர் செய்யும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக,
> சக்தி திறனை மேம்படுத்துவதற்கு
> ஒவ்வொரு வீட்டிற்கும் 5,000 டாலர் வீதம்,
> கனடாவின் வீடு மற்றும் சொத்து
> உடமைக்காரர்களுக்கு வழங்கப்படும். ”

**இப்போதிருக்கும் பண உதவிகள் இனிமேல் 25சதவீதம் அதிகரிக்கப்படும்.**



பின்தங்கிய வீடுகளை சீர் செய்யும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, சக்தி திறனை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் 5,000 டாலர் வீதம், கனடாவின் வீடு மற்றும் சொத்து உடமைக்காரர்களுக்கு வழங்கப்படும். சிறிய கூட்டு குடியிருப்பு கட்டிடங்களுக்கும் இதற்குரிய தகுதி உண்டு. ஆனால் அவை சரியான அளவை ஈடுசெய்ய வேண்டும். மேலும் 50 சதவீதம் அல்லது அதற்கு மேலான தரை இடம் நிரந்தரமான குடியிருப்பு இடங்களாக பயன்படுத்தப்பட வேண்டும். கனடாவின் இயற்கை வளங்கள் கழகத்தால் சான்றிதழ் வழங்கப்பட்ட வீடுகளுக்கு மட்டும் தான், பண உதவி பெறும் தகுதி கிடைக்கும். ஒரு சக்தி ஆலோசனையாளர் இதற்காக குடியிருப்பின் சக்தி திறன் பற்றி மதிப்பீடு செய்வார்.

தனியாக பிரிக்கப்பட்ட வீடுகள், வரிசையிலுள்ள வீடுகள், இரட்டையான வீடுகள், மூன்று தொகுதியான வீடுகள், (triplexes) மற்றும் நகரும் வீடுகள் ஆகியனவும், மேலும் மூன்று மாடிகள் அல்லது அதற்கு குறைவாக உள்ள சிறிய குடியிருப்பு கட்டிடங்களும் இந்த பண உதவி பெறுவதற்கு தகுதி உள்ளவை. எந்த வகையான மற்றும் எண்ணிக்கையிலான சக்தி திறன் மேம்பாட்டு செயல்முறைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன மற்றும் ஒரு வீட்டின் சக்தி திறன் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பதின் அடிப்படையில் தான் பண உதவி கிடைக்கும். சக்தி திறனை மேம்படுத்துவதற்கு ஆன செலவின் அடிப்படையில் இல்லாமல், எவ்வளவு பயனுள்ள வகையில் சக்தியை மிச்சப்படுத்த முடியும் என்பதை பொறுத்துதான் பண உதவி அளிக்கப்படும்.

ஒரு வீட்டிற்கு அல்லது பல அடுக்கு குடியிருப்பு கட்டிடத்திற்கு ஒருவர் உயர்ந்தபட்சமாக 5,000 டாலர் பெறமுடியும். அதே வேளையில் ஒரு மனிதர் தன்னுடைய சொத்துகளின் மீது செயற்திட்டத்தின் கால அளவுக்குள் 500,000 டாலர் வரை மொத்தமான பண உதவி பெறமுடியும். சராசரி பண உதவி 1,000 டாலருக்கும் மேலாக இருக்கும். மேலும் சக்தி பயன்பாடு மற்றும் செலவிற்காக சராசரியாக 25 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படும். இன்னும் கூடுதலாக, அனேகமான மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள், சக்தி மேம்பாட்டு செயற்திட்டங்களை பூர்த்திசெய்கிற வீடுகளுக்கு அதிக அளவிலான பண உதவி செய்கின்றன. உங்களுடைய சக்தி ஆலோசனையாளர் இது சம்பந்தமான விண்ணப்படிவத்தை அரசிடம் சமர்ப்பிக்கும் போது, மாநில மற்றும் பிரதேச செயற்திட்ட அரசு துறைக்கும் அது போன்ற விண்ணப்பங்களை அனுப்பி வைப்பார்.

இந்த செயற்திட்டத்தில் பங்கு பெறும் வீட்டு உடமைக்காரர்கள், வீட்டில் நிறைவேற்றிய சக்தி மேம்பாட்டு வேலைகளுக்காகவும் மற்றும் வீடு புதுப்பித்தல் வரி சலுகைக்காகவும் (HRTC) தற்காலிக பண உதவி பெறும் தகுதியை அடைவர். HRTC சம்பந்தமான மேலும் கூடுதல் விபரங்களுக்கு Canada Revenue Tax Agency இணைய தளத்தின் கேள்விகள் மற்றும் பதில்கள் பக்கத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

kannan.k@thaiveedu.com

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A
Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com



COLDWELL BANKER



உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSI
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்..
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# மைக்கல் ஜாக்சன்

## இரண்டு ஆவணப் படங்கள்

எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பாடல்கள் பெரியளவில் எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவை பிரபலமாயிருக்கவுமில்லை. Boney M, Abba ஆகிய குழுக்களின் பாடல்களே அதிகபட்ச ஆங்கிலப் பாடல்களாக வலம்வந்தன. அவையும் பெருமளவில் நகரப் பகுதியிலேயே ஒலித்தன. 83 இனக்கலவரத்தின் பின் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்த கொழும்பு வாழ் உயர்குடித்தமிழர்கள் புதியதொரு பாடகரையும் தம்முடன் அழைத்து வந்திருந்தனர். நண்பன் ஒருவனின் புண்ணியத்தில் எனக்கு அவரின் பாடல் கசெற் ஒன்று கிடைத்தது. அதுவரை கேட்டிராத பின்னணி இசை, உயர் தொழில்நுட்பத்துடனான ஒலியமைப்பு என பாடல்கள் புதுமையாக இருந்தன. அவர் சீனமொழியில் பாடுகிறாரா அல்லது ஆங்கிலத்தில் பாடுகிறாரா என்பதும் எனக்குப் புரியவில்லை. அந்தக்குரல் ஆணா, பெண்ணா என உய்த்தறியவும் முடியவில்லை. அதை விடவும் கசெற்றின் முகப்பில் இருந்த அவரின் படமும் அந்தக்குழப்பத்தை அதிகரித்தது. இந்த வகையில்தான் மைக்கல் ஜாக்சன் எனும் பாடகர் எங்களுக்கு அறிமுகமானார். அதன்பிறகு சகமாணவிகளைக் கடந்து செல்லும்போது, அவரது பெயரையும் எமது உரையாடலில் வலிந்து நுழைத்து நாம் உயர்ந்த ரசனையுடையவர்கள் என்று காண்பித்துக் கொண்டோம். இதைத்தவிர அவரை அறிந்து கொள்ள நாங்களோ, எங்களை அறிந்து கொள்ள அவரோ எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.

தொன்னூறில் கனடாவுக்கு புலம்பெயர்ந்த பின்னர் ஆங்கிலப் பாடல்களை அடிக்கடி தொலைக்காட்சியில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. என்னுடன் அறையிலிருந்த நண்பன், 'சில்க்'ஸ்மிதாவை விட கவர்ச்சியாக ஆடையணிந்திருந்த ஆங்கிலப் பாடகிகளைப் பார்த்ததும் Much Musicஐ விட வேறு சானல் பார்ப்பதில்லை என்று சத்தியமே செய்திருந்தான். அந்த நேரத்தில் மைக்கல் ஜாக்சனின் புதிய இசைத் தொகுப்பு (Album) வெளியாக இருப்பதாகவும், அதன் முதலாவது பாடலைப் பல உலகத் தொலைக் காட்சிகள் ஒரே நேரத்தில் ஒளிபரப்ப இருப்பதாகவும் செய்திகள் வெளியாகின. இரண்டு மூன்று நாட்கள் இதே செய்தியை எல்லாத் தொலைக்காட்சிகளும் திரும்பத் திரும்பக் கூறின. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பாடல் ஒளிபரப்பானபோது ஆச்சரியம் இன்னும் அதிகமானது. அது ஒரு குறும்படம்போல இருந்தது. அந்தப் பாடலின் கரு எனக்குப் பிடித்திருந்தது. நான் தினசரி பார்க்கும் ஏனைய பாடல்கள் 'வெளங்காத' கருக்களைக் கொண்டிருந்தன. இந்தப் பாடலில் அப்போது பிரபலமாக இருந்த பல திரைப் பட நடிகர்கள் நடித்திருந்தார்கள். அதில் வந்துபோன 'கிராபிக்ஸ்' காட்சிகளை நான் திரைப்படங்களில்கூட கண்டிருக்கவில்லை. இவற்றைவிட ஒரு பரதநாட்டியமும் அதில் வந்துபோனது. அன்றிலிருந்து ஒருவகையில் அவரது ரசிகனாகிப்போனேன்.

•

உலகில் வியாபாரரீதியில் வெற்றிகரமான பாடகர் மைக்கல் ஜாக்சன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவரது Thriller இசைத்தொகுப்பு 110 மில்லின் பிரதிகள் விற்பனையாகியது. அதிகாரபூர்வமற்ற சில தகவல்களின் படி அது 140மில்லியன் பிரதிகள் விற்பனையாகியது. உலகில் அதிகம் விற்பனையான இசைத்தொகுப்பு இது. இரண்டாவது இடத்திலிருக்கும் இசைத்தொகுப்பு (AC/DCயின் Back in Black) 49மில்லியன் பிரதிகளே விற்பனையாகியிருந்தது. அவரே பாடல்களை எழுதினார், இசையமைத்தார், பாடினார், அவற்றுக்கான நடனத்தை வடிவமைத்தார், நடனமாடினார். பாடல்களின் வீடியோக்களை குறும்படங்களைப்போல் அமைத்தார். இவை எல்லாவற்றிலுமே பல புதுமைகளைப் புகுத்தினார். பல பிரபல பாடகர்களை ஒன்றிணைத்து USA for Africa என்ற குழுவை உருவாக்கி ஆபிரிக்காவில் ஏற்பட்ட வறுமையை போக்கும் நிதி சேகரிப்பிற்காக We are the world என்ற பாடலை வெளியிட்டார். இவ்வாறு புகழின் உச்சிக்கு போன அவருக்கும் ஊடகங்களுக்கும் எட்டாம் பொருத்தமே இருந்து வந்திருக்கிறது.

மைக்கல் ஜாக்சன் 1980ம் ஆண்டு தனது Off the wall இசைத்தொகுப்புக்கு தேவையான முக்கியத்துவத்தை தொடர்புசாதனங்கள் தர வில்லையென்று கவலையடைந்தார். Rolling Stone சஞ்சிகையுடன் தொடர்பு கொண்டு தன்னைப்பற்றி ஒரு முகப்புக் கட்டுரை வெளியிடும் படி கேட்டார். சஞ்சிகை மறுத்து விட்டது. 'ஆபிரிக்க அமெரிக்கப் பாடகர் ஒருவரின் படத்தை அட்டையில் நீங்கள் வெளியிட மாட்டீர்கள் என்று பலர் எனக்குக் கூறினார்கள். என்றாவது ஒரு நாள் இந்த சஞ்சிகைகள் என்னிடம் பேட்டி கேட்டு கெஞ்சும். அப்போது நான் போனால் போகட்டும் என்று இவர்களுக்கு ஒரு பேட்டி கொடுக்கலாம்' என்று மைக்கல் பதிலுக்குக் கூறினார். இரண்டு வருடங்களில் அவரது Thriller இசைத்தொகுப்பு வெளியான போது அவரிடம் Appointment எடுப்பதற்காக அதே Rolling Stoneசஞ்சிகை ஆறு மணிநேரம் காத்திருக்க வேண்டிவந்தது. பின்னர் அவரது தொலைக்காட்சிப் பேட்டிக்காக உலகம் பதினொரு ஆண்டுகள் காத்திருக்கவேண்டிவந்தது. 1979க்குப் பின்னர் 1993இலேயே ஜாக்சன் Oprah Winfreyக்கு ஒரு தொலைக் காட்சிப்பேட்டியை வழங்கினார்.



மைக்கல் ஜாக்சன் வாழ்ந்த போது தினமும் அவரைப்பற்றி ஏதாவது செய்தி வெளியாகிய வண்ணமே இருந்தது. ஆரம்பத்தில் 'தன்னைப்பற்றிய சில செய்திகளை' தானே வெளியிட்டார் என்றும் சில Tabloid பத்திரிகைகள் எழுதின. இந்த செய்திகளில் பெரும்பாலானவை எதிர்மறை யானவை. அவரது புகழைப் பெருமளவில் பாதித்தவை. பல Tabloid ஏடுகள் தமது வியாபாரத்துக்காக இந்த எதிர் மறைச் செய்திகளைப் பரப்பின என்று குற்றஞ்சாட்டுவோரும் உண்டு. அவர் உலகின் மிகப் பெரிய பாடகராயிருந்தார். அதனாலேயே ஊடகங்கள் அவரை இலகுவாக இலக்கு வைத்தன எனலாம்.

**- விவேகநாதன் -**

அவர் தவறிழைக்க வில்லை என்று வாதிடுவது எனது நோக்கமல்ல. சில சந்தர்ப்பங்களில் தாம் பிரபலமாவதற்காகவும், அதிக இலாபமீட்டவும் சில ஊடகங்கள் எவ்வாறு அவரை பலிக்கடாவாக்கின என்று கூறுவதே எனது நோக்கு.

இரண்டு ஆவணப்படங்கள் அவரது வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஒரு பிரபலத்தின் வாழ்க்கையை தமது வியாபாரத்துக்கு, எவ்வாறு ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் பாவித்தனர் என்பதற்கு இவையிரண்டிலும் போதுமான சாட்சியங்கள் உள்ளன.

2001ம் ஆண்டின் இறுதியில் மாட்டின் பஷீர் (Martin Bashir) என்ற பிரித்தானிய செய்தியாளர் மைக்கல் ஜாக்சனைத் தொடர்பு கொள்ளுகிறார். ஜாக்சனைப்பற்றி தேவையற்ற, போலியான செய்திகள் உலாவருவதாயும், ஜாக்சனுடைய உண்மையான முகத்தை வெளிக்கொண்டுவர தான் ஒரு ஆவணப் படத்தை தாயாரிக்க விரும்புவதாயும், எதையும் மறைக்காது தன்னுடைய கேள்விகளுக்கு பதிலளிப்பதுடன் அவருடைய மாளிகை வீடு, வாழ்கை முறை என்பவற்றையும் காண்பிக்குமாறும் கேட்கிறார். தன்னைப்பற்றிய பல தவறான செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இது சரியான சந்தர்ப்பம் என நம்பிய மைக்கல் ஜாக்சன் உடன்படுகிறார். மைக்கலின் 2,700ஏக்கர் பரப்பளவுடைய Neverland Ranch வீட்டின் கதவுகள் திறக்கின்றன. கிரனடா தொலைக்காட்சியால் தயாரிக்கப்பட்ட அந்த Living with Michael Jackson என்ற ஆவணப்படம் 2002ம் ஆண்டு மே மாதத்திலிருந்து 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒளிப்பதிவு செய்யப்படுகிறது. பெப்ரவரி, 2003இல் அது பிரித்தானியத் தொலைக்காட்சியான ITVஇல் ஒளிபரப்பான போது மைக்கல் ஜாக்சன் கூறியவை பல, தலைகீழாகிப் போயிருந்தன. அவருடைய செல்வாக்கையும், புகழையும் அதிகம் பாதித்தது இந்தத் தொலைக்காட்சி விவரணம்தான் என்று நம்பப்படுகிறது.

மாட்டின் பஷீர் பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட பிரித்தானிய ஊடகவியலாளர். ஆரம்பத்தில் BBCசேவையில் பணியாற்றிய பஷீர் பின்னர் ITVக்கு இடம்மாறினார். 1995இல் பஷீர் இளவரசி டயானாவை BBC தொலைக்காட்சிக்காக பேட்டி கண்டார். அந்தப்பேட்டியிலேயே டயானா தோல்வியடைந்த தனது திருமண வாழ்க்கை பற்றிய பல தகவல்களை உலகுக்கு வெளிப்படுத்தினார். அதன்பின்பு பஷீர் புகழின் உச்சிக்குப்போனார். செல்லும் இடங்களிலெல்லாம் ஒரு Rock Starஇன் வரவேற்பு அவருக்குக் காத்திருந்தது. தொடர்ந்து பல பிரபலங்களையும், முக்கிய நபர்களையும் பேட்டிகாணும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. டயானாவின் பேட்டியிலேயே 'பல தகவல்களை தவறான முறையில் விளங்கிக்கொள்ளும்' முறையில் தொகுப்பு (Editing) செய்யப்பட்டிருந்ததாகவும் ஒரு குற்றச்சாட்டு உண்டு.

மைக்கல் ஜாக்சனின் Living with Michael Jackson ஆவணப்படம் ஒளிபரப்பாகி சிறிது காலத்தின் பின் அமெரிக்காவில் மற்றுமொரு தொலைக்காட்சி ஆவணப்படம் ஒளிபரப்பானது. Living with Michael Jackson take two என்ற அந்தப்படத்தைப் பார்த்தவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. மாட்டின் பஷீர் பல தகவல்களைத் திரித்துக் கூறியிருக்கிறார் எனும் உண்மை வெளியாகியது. பஷீரின் வியாபார நோக்கு தோலுரித்துக் காட்டப்பட்டது. பின்னர் Channel 4 நடத்திய பிரித்தானியா

68ம் பக்கம் பார்க்க...

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

**Sun Life Financial**

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# கடந்த மாதத்தில்...





"கறுப்பு யூலை 83" நினைவாக கனடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் குயின்ஸ் பாக் திடலில் இடம்பெற்ற "விழிப்பு நிகழ்வில் (யூலை 25 - 09)




ரொறன்ரோவில், அமெரிக்க துணைத் தூதரகத்திற்கு முன்னால் இடம்பெறும் கவனயீர்ப்பு நிகழ்வின் 100வது நாள் கவனயீர்ப்பு (யூலை 31 - 09)



கனடியத் தமிழ் வானொலியின் நமக்காக நாம் நிகழ்வில் (யூலை 18 - 09)





"நிருத்தியகலாஞ்சலி கலைக்கல்லூரி" ஆசிரியை நிரோதினி பரராஜசிங்கம் அவர்களின் மாணவிகள் வழங்கிய "நிருத்தியதானம்" பரதநாட்டிய நிகழ்வில் (யூலை 11.09)




**'MANON'** இசைக் கல்லூரி திறப்புவிழா நிகழ்வில் (யூலை 11.09)



திரு. லோகநாதன் மற்றும் திரு.எஸ். சிவசேகரம் அவர்கள் உரையாற்றும்போது.



செல்விகள் காயத்திரி செந்தில்ராஜா மற்றும் சகானா சிவகுமாரின் இசை நிகழ்வு

தமிழர் வகைதுறைவள நிலையத்தின் ஏற்பாட்டில் திரு. சிவம் அவர்களின் நினைவுநாள் நிகழ்வு (யூலை 04.09)




கனடாதின நிகழ்வில் கனடியத் தமிழர் பேரவையினர் (யூலை - 01 - 09)



கனடாதின நிகழ்வில் பங்குபற்றிய நாட்டியத் தாரகைகள் (யூலை - 01 - 09)

**உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net**

# கடனிலிருந்து விடுபடுவது எப்படி?



அலன் சிவசம்பு

- வீடு விற்பனைப் பிரதிநிதி -

எமது உடம்மில் நிறை கூடுவதால் எமக்கு எவ்வளவு சிரமமாக இருக்கின்றதோ அதே போல்தான் எமக்கு கடன் ஏற்பட்டாலும் கடனைக் குறைப்பதும் ஒரு சிரமமான வேலையாகும்.

### கடன் என்றால் என்ன?

வேறொருவரிடம் பணம் வாங்குவது கடனாகும். பொதுவாக கடனை வங்கிகளினூடாகவோ அல்லது கடனட்டைகள் மூலமாகவோ கடன் பெறுவது வழக்கம். ஆனால் கிரடிற்காட்டில் கடன் வாங்கும்போது அதிக வட்டிகளைச் செலுத்த வேண்டியிருக்கும். கடன்களில் நல்ல கடன் கூடாத கடன் என இருவகைகள் உண்டு. நல்ல கடன் என்பது ஒரு சொத்தை வாங்குவது. அதாவது shares, Investment Properties அல்லது வியாபார நிலையங்கள் எடுத்து நடத்துவது.

ஆனால் நாம் கார் அல்லது வேன் வாங்குவதானால் அதற்காக கடன் பெறுவதை கூடாத கடன் எனக் குறிப்பிடுவார்கள். காரணம் ஒரு காரை அல்லது வேனை வாங்கியதும் அதனது பெறுமதி குறிப்பிட்ட காலத்தில் வெகுவாகக் குறைந்துவிடும். அதேநேரத்தில் ஒரு வீடு ஒன்றை கடனாக வாங்கினால் நாளடைவில் அதனது பெறுமதி அதிகமாகும். ஆகவே கார் வாங்குவதானால் பாவித்த காரை வாங்குவது ஒரு சிக்கனமான வழியாகும்.

வட்டிவீதம் என்பது வாங்கிய கடனுக்காக அதிகமாகச் செலுத்தும் பணமாகும். சில கடன்களுக்கு Compound Interestஇல் கடனைச் செலுத்த வேண்டியிருக்கும். அதாவது உங்களது குறிப்பிட்டகாலத்தில் வட்டி முதலுடன் சேர்க்கப்பட்டு பின்பு அந்தத் தொகைக்கு மீண்டும் வட்டி அறவிடப்படுவதாகும்.

ஆகவே நாம் கடன் வாங்கும் தேவை இருந்தாலும் ஒரு வரவுசெலவுத் திட்டத்தை செயல்படுத்தும்போது நாம் எம்மால் முடியாத அளவிற்குக் கடன் பெறாமல் தப்புவதற்கு வழிவகுக்கும்.




### வரவு - செலவுத்திட்டம்.

எமக்குக் கடன் வருவதற்குக் காரணம் நாம் எமது வரவுற்கு அதிகமான செலவை வைத்திருப்பதாகும். நாம் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை, எமது வருமானத்தை விட அதிகரிக்கும் போது எமக்கு கடன் தொகை அதிகரிக்கின்றது. வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்கும்போது, நாம் நாளாந்தம் வாங்கும் Coffee, Lunch என்பவற்றையும் உள்ளடக்குதல் முக்கியமாகும். அத்துடன் வரவு செலவுத்திட்டத்தைச் தயார் செய்த பின்பு, அடுத்த மாதத்தின் உண்மையான செலவுடன் ஒப்பிடும் போது எமது உண்மையான பிரச்சினை தெரியவரும். அப்போது கிடைக்கும் தகவலைக் கொண்டு, தேவையற்ற செலவுகளைப் புறக்கணிக்க முயற்சி செய்யலாம். ஆனால் உங்களது வரவு செலவுத்திட்டத்தில் வேவையற்ற செலவுகள் இல்லாவிடில் உங்களது வருமானத்தை அதிகரிப்பதால் மட்டும்தான் உங்களது கடன்களை குறைக்கமுடியும்.

### Bankruptcy (கடன் தீர்க்க வகையற்றநிலை)

இது எமது கடைசித் தெரிவாக இருப்பது நல்லது. இந்த Bankruptcyஇல் ஈடுபடுபவர்களில் 50 வீதமானோர் மீண்டும் bankruptcyல் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன. அதேநேரத்தில் Bankruptcyல் ஈடுபடுபவர்கள் குறைந்த வட்டியில் கடன் பெற முடியாத நிலையில் உள்ளதுடன், தொடர்ந்தும் அவர்கள் தங்களது செலவு செய்யும் முறையையும் மாற்ற முயற்சிப்பது இல்லை.

### Refinance

நீங்கள் உங்களது Credit cardற்கு 18%மும் Personal Loanற்கு 10%மும் செலுத்துவீர்களானால் உங்களது வீட்டுக்கடனை அதிகரித்து அந்தப்பணத்தில் உங்களது Credit Card, Personal Loanஐ இல்லாமல் செய்யலாம். ஆனால் refinance செய்யும்பொது வேறு செலவுகளும் ஏற்படும் அவற்றையும் கருத்தில் எடுத்தல் வேண்டும்.

### Consolidation

அடுத்த நல்லவழி எமது கடன்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கட்டணமாகக் குறைந்த வட்டிக்கு மாற்றுவதாகும்.

ஆகவே நாம் கடன் வராமல் எமது செலவுக்கு ஏற்ப வாழ்க்கை நடத்துவதே சிறந்த வழியாகும். ஆனால் சில வேளைகளில் எம்மால் அதைக் கட்டுப்படுத்த முடியாமல் கடன் ஏற்பட்டால் மேலே கூறிய கருத்துகளை எடுத்து செயல்படுத்தவதால் நாம் கடன் தொல்லையிலிருந்து மீள முயற்சிக்கலாம்.

### எப்படித் தயாரிப்பது மாதிரி Budget

**Monthly Income**

| | |
|---|---|
| You Income | $ |
| Your Partner Income | $ |
| Other Income | $ |
| Total Monthly Income | $ |

**Monthly Household Expenses**

| | |
|---|---|
| Mortgage/Rent | $ |
| Food & Beverages | $ |
| Electricity | $ |
| Gas | $ |
| Telephone/Mobile | $ |
| Water | $ |
| Car – Petrol | $ |
| Car Registration | $ |
| Maintenance & Insurance | $ |
| Car loans | $ |
| Personal Loans | $ |
| Credit Card repayments | $ |
| Public transport/Taxi/ Travel | $ |
| School Fees/Day care | $ |
| Clothing | $ |
| Entertainment | $ |
| Subscriptions (Newspapers) | $ |
| Insurance (Life, Health, - home & contents) | $ |
| Medical | $ |
| Other (holiday, gift) | $ |
| Total Monthly household Expense | $ |
| Cash let over (or short fall)- per Month | $ |

alen.sivasambu@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

**Convenience store in Mississauga for sale-**
8 years in business. $140,000 plus inventory. Sales on lottery plus ATM-$10-11k/month.

**Carole's Café Kitchen. Franchises now available for sale in Toronto, North York and Oakville.**
Offering the famous Carole's cheesecake and unique fresh and healthy homemade foods in an urban

**Art & framing business for sale in Oakville-**
Net Operating Income over $80,000/yr. 20 yrs. in business. Sale price $180,000 (includes inventory of Approx. $50,000).

**Pharmacy, Variety store and Doctor's office space with Property for sale in London, ON.**
Both Buisnesses, vacant furnished Doctor's office and property. Price $800,000 plus inventory. café atmosphere.

Please call
Alan Sivasambu
647-504- 2536

# மைக்கல் ஜாக்சன்...

64ம் பக்கத் தொடர்ச்சி...

வின் மோசமான 100நபர்கள் என்ற கருத்துக் கணிப்பில் பஷீர் ஐந்தாவதாக வந்தார். அவரது மோசமான ஊடக அறவியலை ஏராளமான ஊடகங்கள் கணடித்தன.

மைக்கல் ஜாக்சனின் பேட்டியை மாட்டின் பஷீர் குழுவினர் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தபோது இன்னுமொரு முக்கிய ஒளிப் பதிவும் சத்தமின்றி நடந்துகொண்டிருந்தது. Hamid Moslehi என்ற ஜாக்சனின் பிரத்தியேக ஆவண ஒளிப்பதிவாளர் அங்கு நடந்த எல்லாவற்றையும் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தார். பஷீர் தனது ஒளிப்பதிவுக்கு முன்னரும், பின்னரும் மைக்கல் ஜாக்சனுன் பேசியவை, முழுமையான பேட்டி என எல்லாம் Moslehiயினால் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்தன. இது பஷீருக்கு தெரிந்தே நடந்ததாக ஜாக்சன் தரப்புக் கூறினாலும், தனக்கு அது பற்றி எதுவும் தெரியாதென பஷீர் கூறுகிறார். இந்த ஒளிப்பதிவுகளையே மற்றொரு ஆவணப்படமாகத் தயாரித்து Maury Povichஎன்ற பிரபல ஊடகவியலாளரின் வர்ணணைகளுடன் ஜாக்சன் தரப்பு வெளியிட்டது. Living with Michael Jackson take two என்ற இந்த ஆவணப்படத்திலே மைக்கலின் இரண்டு குழந்தைகளுக்குத் தயான Debbie Rowe, அவருடைய பெற்றோர், சகோதரர், புகைப்படக்கலைஞர், ஒப்பனையாளர், அவருடைய வீட்டுக்கு வந்துசென்ற சிறுவர்கள் என்று பலருடைய பேட்டிகளும் இடம்பெறுகின்றன.

பஷீர் தன்னுடைய ஆவணப்படத்தில் மைக்கல் ஜாக்சனின் வதிவிடமான Neverland Ranchஐ பற்றிக் குறிப்பிடும்போது ‘அங்கு வாய்ப்புக்களற்ற சிறுவர்கள் அதிகம் செல்வதைக் கண்டேன். அது அவர்களுக்கு ஆபத்தான ஒரு இடம். நான், மைக்கல் சிறுவர்களுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதைக் காணவில்லை. ஆனாலும் அந்தவகை ஆபத்து அவர்களுக்கு இருந்தது. அவருடைய படுக்கையில் சிறுவர்கள் தூங்கும் ஒரு மாளிகைக்கு சிறுவர்கள் செல்லக்கூடாது...’ என்று கூறுகிறார். ஆனால் ஜாக்சன் வெளியிட்ட ஆவணப்படத்தில் இதே பஷீர் ‘இந்த இடமும், மைக்கல் சிறுவர்களுடன் பழகும் விதமும் தெய்வீகமானவை. இதைப்போன்றதொரு இடத்தை நான் பார்த்ததேயில்லை. அவர்களின் (இதற்கு முன் குற்றம்சாட்டியவர்களின்) குற்றச்சாட்டுகளும், திரித்து வெளியிடும் செய்திகளும் மிகமோசமாவை. நாங்கள் அதைச் செய்ய இங்கு வரவில்லை’ என்று மைக்கலுக்குக் கூறுகிறார்.

அதே போல மைக்கல் ஜாக்சனின் குழந்தைகள் பற்றித் தனது ஆவணப்படத்தில் ‘ஜாக்சன், அவர்களை மிகக் கடுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். அவர்கள் எல்லைமீறிய பாதுகாப்புடன் வாழ்கிறார்கள். அவர்கள் துன்பப்படுவதற்காக உருவாக்கப் பட்டிருக்கும் முறையைப் பார்த்தபோது எனக்குக் கடுமையாகக் கோபம் வருகிறது...’ என்று கூறுகிறார். ஆனால் நேரில் ஜாக்சனிடம் ‘எனக்கு உங்களை இத்தனை நாளும் தெரியாது. நேரிலே பார்க்கிறபோது உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுமான உறவு அற்புதமானது. அவர்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் பாசம் என்னை அழ வைத்து விட்டது. அந்த அன்பு இயற்கையானது, கரிசனையில் உருவாவது’ என்கிறார். இவ்வாறே மைக்கல் ஜாக்சன் தொடர்பாக வழமையாக வைக்கப்படும் எல்லாக் குற்றச் சாட்டுகளுக்கும் நேரிலே ஒரு மாதிரியும், ஆவணப்படத்தில் அதைத்திரித்து வேறு கோணத்திலும் பஷீர் கூறுகிறார். இந்த இரண்டு ஆவணப்படங்களும் Youtube வலைத்தளத்திலே முழுமையாகக் கிடைக்கின்றன.

மைக்கல் ஜாக்சன் தனது 11வது வயதிலேயே வெற்றிகரமான தனது முதலாவது இசைத்தொகுப்பை வெளியிட்டிருந்தார். சிறு வயதிலேயே அவரது பல இசைத்தொகுப்புக்கள் பெரு வெற்றிபெற்றிருந்தன. ஜாக்சன் இளைஞரானபோது கோடிக்கணக்கான சொத்துகளுக்கு அதிபராகவிருந்தார். பொப் இசையுலகின் சக்கரவர்த்தியாவிருந்தார். பொப் இசை தொடர்பான எல்லாத்துறைகளிலும் ஆச்சரியமூட்டும் வகையில் திறமை



சாலியாகவிருந்தார். இதைவிட அவர் ஒரு ஆபிரிக்க அமெரிக்கராயிருந்தார். கடுமையான போராட்டத்தின் பின்பே அவரது Thriller ஒளிநாடாவை ஒளிபரப்ப MTV சம்மதித்தது. அதுவரையில் ஆபிரிக்க அமெரிக்கர் ஒருவரின் பாடல் MTVயில் ஒளிபரப்பப்பட்டிருக்கவில்லை. ஆபிரிக்க அமரிக்கர்களுக்கு பல கதவுகளை ஜாக்சனே திறந்துவிடதாக அவரது இறுதி நிகழ்வின்போது பிரபல கூடைப்பந்து வீரர் மஜிக் ஜோன்சன் கூறியிருந்தார். இவைகளே மைக்கல் ஜாக்சன் பற்றிய எதிர்மறையான செய்திகள் பரப்பப்பட காரணமாகவிருந்தன என்று கூறுவோரும் உள்ளனர்.

அவரது குழந்தைகளுக்கு சாதாரண ஒரு வாழ்கையை அவரால் தரமுடியவில்லையென்றும், அவர்கள் அவருடைய குழந்தைகளே இல்லையென்றும் கூட சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஜேர்மனியில் அவர் தனது மூன்றாவது குழந்தையை ரசிகர்களுக்குக் காண்பித்தபோது உருவான சர்ச்சை, அவர் ஒரு பொறுப்பற்ற தந்தையாக நடந்து கொள்கிறார் என்ற குற்றச்சாட்டையும் உருவாக்கியது. ஆனால் அவரது இறுதிநிகழ்வில் அவரது மகள் உரையாற்றியபோது பார்த்தவர்களின் கண்களில் அது நீரை வரவழைத்தது. அவர் தனது குழந்தைகளை எவ்வளவு நேசித்தார் என்பதை அது துல்லியமாகக் காண்பித்தது.

மைக்கல் இறந்துபோனாலும் அவருடைய சாதனைகளும், இசையும் வாழ்ந்துகெண்டேயிருக்கும். இதை நான் எழுதிக்கொண்டிருக்கும்போதும் அவருடைய வரிகள் மட்டும் ரீங்காரமிட்டுக்கொணடிருக்கின்றன.

*You never said goodbye*
*Someone tell me why*
*Did you have to go*
*And leave my world so cold*


■ ■ ■

- மைக்கல் ஜாக்சன் ஏனைய பொப் பாடகர்களை விட அதிக நன்கொடைகளை வழங்கி மிகச்சிறந்த கொடை யாளராகத் திகழ்கிறார். 39அமைப்புகளுக்கு அவரிடமிருந்து நன்கொடைகளைப் பெற்றிருக்கின்றன.
- 1991, நொவெம்பர் 14ம் திகதி மைக்கல் ஜாக்சனின் பாடல் 27 நாடுகளில் ஒரே நேரத்தில் ஒளிபரப்பானது. 500மில்லியன் பார்வையாளர்கள் அதைப் பார்த்தனர். அதிக பார்வையாளர்கள் ஒரு பாடலின் ஒளிவடிவத்தைப் பார்த்ததில் இது சாதனையாகும்.
- 1991இல் மைக்கல் ஜாக்சன் சோனி நிறுவனத்துடன் 890மில்லியன் டொலருக்கு இசைவெளியயீடுகள் தொடர்பாக ஒப்பந்தம் செய்தாதார். உலகில் இசைத்துறையில் கலைஞர் ஒருவரால் செய்யப்பட்ட மிகப் பெரிய ஒப்பந்தம் இது.
- 1986ம் ஆண்டு மைக்கல், பெப்சி நிறுவனத்துடன் 15மில்லியன் டொலருக்கு விளம்பர ஒப்பந்தமொன்றை செய்தார். ஒரு பொருள் விளம்பரத்துக்கு செய்யப்பட்ட மிகப்பெரிய ஒப்பந்தம் இதுவே.
- ஒரு தடவையில் அதிக Grammy விருதுகளைப்பெற்ற இரு கலைஞர்களில் ஒருவர் மைக்கல் ஜாக்சன். 1984ம் ஆண்டு Grammyவிருது நிகழ்ச்சியிலேயே 8விருதுகளை வென்று அவர் இந்த சாதனையைப் புரிந்தார். 2001ம் ஆண்டு விழாவில் 8விருதுகளைப்பெற்ற மற்றக் கலைஞர் Carlos Santana

VEEDU
REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467




Cell Tel Mobility
CELL TEL MOBILITY
For all your cellphone and accessory needs...
12th ANNIVERSARY SPECIAL!!!
We sell new & used cellphones, Pagers and accessories for:
ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY
Anniversary Sale
Geunine Leather Case
From $2.99
Reg. $19.99
Offer Valid between August 1st 2009 To August 31st 2009.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Anniversary Sale
Hands free
From $3.99
Reg. $29.99
Offer Valid between August 1st 2009 To August 31st 2009.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
Anniversary Sale
Smart car charger
From $4.99
Reg. $39.99
Offer Valid between August 1st 2009 To August 31st 2009.
One coupon per family. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.
-Car charger
-Leather case
-Head sets
-Home charger
-Clear case
-Bluetooth headset
-Bluetooth dongle
-Data cables
-Batteries
-Belt clip/Holder
-Antenna booster
-Flashing antenna
-Flashing light
GSM UNLOCK
Call Toll free:- 1.877.312.5123
SHOP ONLINE @ www.celltelmobility.com
CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE,
Display,Antenna Replacement and all other
Repairs (Software & Hardware).
2637 Eglinton Ave. East,
Eglinton Ave/Midland Rd
416.266.6818
5C - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.495.7776
5A - 1162 Morningside Ave
Morningside Ave/ Sheppard Ave
416.281.2355
220 - 5990 16th Avenue
16th Avenue/ Markham Rd
905.201.4859

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




**Floral Arrangement for Funeral Needs**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**

# A1 TOP QUALITY FLORIST





**உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு**

**தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்**

**பிள்ளை 416-269-5522**

**2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8**

# ஜனநாயகத்தில் அரசியல் சாம்ராஜ்யங்கள்

- பொன் குலேந்திரன் -

பண்டைய காலத்தில் பல சாம்ராஜ்யங்கள் சில நூற்றாண்டு காலத்துக்கு தம் ஆதிக்கத்தை பல தேசங்களின்மேல் நிலைநாட்டிய பின், காலப்போக்கில் படிப்படியாக மறைந்த விபரங்கள் வரலாற்றில் பதிவாகிவுள்ளன. குப்தா, அசோகன், மோகல் சக்கிரவர்த்திகளான அக்பர், பாபர், சோழ சக்கிரவர்த்திகளான இராஜேந்திரன், இராஜஇராஜ சோழன், மற்றும் அலெக்சாந்தர், ஜுலியஸ் சீஸர், ரம்ஸே போன்ற மாமன்னர்கள் உருவாக்கிய சாம்ராஜ்யங்கள் இதில் குறிப்பிடப்பட வேண்டியவை. படை பலத்தின் மூலம் எதிரிகளை வென்று தமது ஆட்சியையும் அதிகாரத்தையும் விஸ்தரித்தனர். சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி தீர்மானித்ததே இறுதி முடிவாயிருந்தது. அதற்கு மறுப்பு சொல்ல எவராலும் முடியாது. சுருங்கக் கூறின், சர்வாதிகார ஆட்சியே சாம்ராஜ்யங்களில் நிலவியது. வரி, சட்ட திட்டங்கள் யாவும் ஒருவரால் உருவாக்கப்பட்டன. அதிகாரிகளின் நியமனங்கள் கூட அவர் கையிலேயே இருந்தன. மந்திரிகள் ஆலோசனை கொடுப்பார்களே தவிர இறுதி முடிவு மன்னன் கையிலிருந்தது. பெரும்பாலும் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்களும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களுமே பெரும் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். திறைசேரியின் அதிகாரமும் மன்னர் கையில். இதே அமைப்பின் மிச்ச சொச்சங்கள் இன்றும் மன்னர் ஆட்சி நடக்கும் மத்திய கிழக்கு நாடுகளான சௌதி அரேபியா, குவைத், கட்டார், ஓமான், ஐக்கிய அரபு நாடுகள், பஹ்ரெயின் போன்ற நாடுகளில் நிலவுகிறது. ஜனநாயகம் என்ற சொல்லுக்கு அங்கு இடமில்லை. நாட்டின் செல்வம் ஒரு சிலர் கையில். மக்கள் தம் தலைவரைத் தெரிந்தெடுக்கவில்லை. அமைச்சர்கள் பெரும்பாலும் இனத்தவர்கள் வம்சவழி வந்த மன்னர் பதவியே அவை. ஒரு சக்கரவர்த்தி இறந்தால் அவர் இடத்தை நிரப்புவதற்கு சில விதி முறைகள் இருந்தன. ஆண் சந்ததிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

## ஜனநாயகம் மன்னர் ஆட்சி போன்றதா?

மன்னர் ஆட்சிகளின் பின் சாம்ராஜ்ய முறை முற்றாக அழிந்துவிடவில்லை. இன்றும் சாம்ராஜ்யங்கள் நிலைத்து நிற்கின்றன. ஜனநாயகம் என்பது மக்களால் தேர்ந்தெடுத்த ஆட்சி. நாட்டின் அரசியல் அமைப்புச்சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வருடங்களுக்கு ஒரு முறை ஆட்சித் தேர்வு நடைபெறும். அமெரிக்கா, சிறீலங்கா போன்ற சில நாடுகளில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருதடவைக்கு மேல் தொடர்ந்து பதவியில் இருக்க முடியாது. ஆனால் அவரின் நெருங்கிய இனத்தவர் அவருக்குப்பின் பதவி வகிப்பதில் தடையில்லை. உதாரணத்துக்கு இராஜபக்சா இரு தடவைகளுக்கு பின்னர் அவரோடு கூடப்பிறந்தவர் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புண்டு. இந்தியா, பிரித்தானியா, மற்றும் பல ஆபிரிக்க நாடுகளில் ஜனநாயக முறையில் தேர்தல் நடந்தாலும், நாட்டின் ஆட்சிக்கு தலைவர் தொடர்ந்து பல தடவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகிக்க முடியும். உதாரணத்துக்கு சிம்பாப்வே நாட்டில் தேர்தலில் பல வன்முறைகளையும் தில்லு முல்லுகளையும் கையாண்டு முகாபே தொடர்ந்து சர்வாதிகார முறையில் ஆட்சி புரிந்து வருகிறார். இத்தகைய தலைவர்கள் பதவிக்கு வந்ததும் இராணுவம், காவல் துறை போன்றவற்றில் தமக்கு ஆதரவு அளிப்பவர்களை அதிகாரிகளாக நியமித்து தம் விருப்பத்திற்கு ஏற்றவாறு எதிர்க்கட்சியினர் மீது ஒடுக்கு முறைகளை கையாளுவார்கள். அதுவுமன்றி பாக்கிஸ்தான், பங்காளதேசம், இந்தியா, சிறீலங்கா போன்ற நாடுகளில் சட்டத்துறையை தமக்கு சாதகமாக பாவித்து ஊழல், பயங்கரவாதம், தேர்தல் விதிகளை மீறல் போன்றவற்றை அடிப்படையாக வைத்து வழக்கு தொடர்ந்து எதிர்கட்சியினரின் பிரஜா உரிமையை பறித்தல், நீண்ட கால சிறைத் தண்டனை விதித்தல், சொத்துக்களை பறிமுதல் செய்தல் போன்ற தண்டனைகளுக்கு ஆளாக்குவார்கள். இவையெல்லாம் எதிரிகளை அடக்கி ஒடுக்கும் ஜனநாயகம் என்ற போர்வையில் கையாளும் அரசியல் போர் முறைகள் என்று கூடச் சொல்லலாம். உலகத்தின் முதல் பெண் பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பிரஜா உரிமை எதிர்க்கட்சியை சேர்ந்த ஜெயவர்த்தனாவால் அவர் ஆட்சிகாலத்தில் சில வருடகாலத்துக்கு பறிக்கப்பட்டது. இதே முறை பாக்கிஸ்தானிலும் கடைப்பிடிக்கப்பட்டதை நாம் காணக் கூடியதாகயிருக்கிறது. தென் கிழக்கு ஆசியாவிலும் அமெரிக்காவிலும் ஜனநாயகம் என்ற போர்வையில் பல அரசியல் சாம்ராஜ்யங்கள் உருவாகியுள்ளன. இவை தோன்றுவதற்கு நாட்டின் பெரும்பான்மையினரின் மதம், இனம், மொழி, மரபு வழி வந்த அந்தஸ்து, செல்வம், நாட்டுக்கு செய்த தியாகங்கள் போன்றவை துணைபோகின்றன. கல்வியறிவில் பின் தங்கிய மக்கள் ஒரு தனிமனிதரை தெய்வமாக அரசனைப்போல் மதித்து தலைவராகவோ அல்லது தலைவியாகவோ ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

## அமெரிக்காவில் அரசியல் சாம்ராஜ்யங்கள்

அமெரிக்காவின் அரசியலில் குடும்ப சாம்ராஜ்யங்கள் பல உண்டு. கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஜோர்ஜ் புஷ், அல் கோர் ஆகிய இருவரினதும் தந்தைமார் அவர்களுக்கு முன்னரே அரசியலில் குதித்தவர்கள். ஜோர்ஜின் தந்தை 4 வருடங்கள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து, இரண்டாம் முறை தேர்தலில் நின்று பில் கிலின்டனால் தோற்கடிப்பட்டவர். இவரின் இன்னொரு மகன் புளோரிடாவின் கவர்னர். டெக்சஸ் பிரதேசத்தில் உள்ள செல்வந்தர்களில் புஷ் குடும்பமும் ஒன்று. அவருக்கு ஆதரவானவர்களான கொலின் பவல் கூட புஷ்சின் மகன் ஜோர்ஜ் ஜனாதிபதியானவுடன் அவரின் பரிபாலன கூட்டத்தில் சேர்ந்துவிட்டார். குடும்ப நண்பர்கள், இனத்தவர்கள், தேர்தல் பிரச்சாரத்துக்கு பணம் கொடுத்து ஆதரித்தவர்கள் ஆகியோர் அவரின் பரிபாலன குழுக்களில் இருப்பார்கள். இது நம்பிக்கையினதும் நன்றிமறவாமைக்கும் எடுத்துக்காட்டு.

இதே போன்று பண்டைய மன்னர்கள் தமக்கென தம் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களை தம்மோடு வைத்திருந்தனர். அமெரிக்காவில் செல்வந்தர்கள் தான் அரசியல் சாம்ராஜ்யங்களை அமைக்கமுடியும், ஏனெனில் முதலாளித்துவ நாடுகளில் முன்னணியில் நிற்பது அமெரிக்கா. புஷ் குடும்பத்தைப்போல் அமெரிக்காவின் இரண்டாவது ஜனாதிபதியான ஜோன் அடெம்சின் மகன் ஜோன் குவின்சி அடெம்ஸ் ஆறாவது ஜனாதிபதியானார். அமெரிக்காவின் ஒன்பதாவது ஜனாதிபதியான வில்லியம் ஹரிசனின் பேரன் பென்ஜமின் ஹரிசன் இருபத்திமூன்றாவது ஜனாதிபதியானார். அரசியலில் ஈடுபட்டு பிரபல்யமானவர்களின் பிள்ளைகள் தம் தந்தைமாரின் பெயரில் அரசியலில் குதித்து வெற்றிபெற்றுள்ளார்கள். பில் கிளின்டன் இரு தடவைகள் தொடர்ந்து ஜனாதிபதியாயிருந்தவர். அவரது மனைவி ஹிலரி கிலின்டன் ஜனாதிபதி பதவிக்கு பராக் ஒபாமாவுடன் போட்டியிட்டார்.

அரசியல் குடும்ப சாம்ராஜ்யங்களுக்கிடையே திருமணங்கள் பல நடந்திருக்கிறது. உதாரணத்துக்கு முன்னைநாள் ஜனாதிபதிகளான நிக்ஷன் - ஐசனோவர் குடும்பங்களுக்கிடையேயான திருமணம். இது முற்காலத்தில் மன்னர் ஆட்சிகளுக்கிடையே நடந்த திருமணங்கள் போன்றது என்பது குறிப்பிடத் தக்கது. இதன் முக்கிய நோக்கம் குடும்ப சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தை விஸ்தரிப்பதே.

அமெரிக்காவில் சுமார் 700 குடும்பங்கள் அரசியலில் ஈடுபட்டுள்ளார்கள். இக்குடும்பங்களில் இரண்டுக்கு மேற்பட்டோர் அரசியல் வாதிகள். 1774ம் ஆண்டிலிருந்து 10,000 பேர் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதில் கிட்டத்தட்ட 1,700 பேர் அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

அமெரிக்க அரசியல் சாம்ராஜ்யங்களில் முக்கிய இடம் வகிப்பது கெனடி சாம்ராஜ்யம். ஐரிஷ் நாட்டிலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறி அரசியலில் வெற்றிக்கொடிநாட்டிய கத்தோலிக்க குடும்பங்களில் கெனடி குடும்பமும் ஒன்று. அவர்கள் குடும்பத்தில் அரசியல் படுகொலைகள், விபத்துகள் நடந்ததினால் மேலும் சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க முடியவில்லை. ஆனால் உலகில் உள்ள அரசியல் சாம்ராஜ்ய பட்டியலில் கெனடி குடும்பத்தின் பெயர் உண்டு என்பதை மறுக்கமுடியாது. அமெரிக்காவில் மாபியா கும்பல்களுக்கும் அரசியல் குடும்பங்களுக்கு மிடையே தொடர்புகளுண்டு, ஆனால் வெளிப்படையாக காட்டிக்கொள்ளப்படுவதில்லை.

## இந்தியாவில் அரசியல் குடும்ப சாம்ராஜ்யங்கள்.

நடிகர் எம்.ஜி.ஆர். சினிமா மூலம் தன் நடிப்பாலும், தானங்களாலும் பெருபான்மையான தமிழ் நாட்டு மக்களின் மனதில் இடம்பிடித்தார். தி.மு.க மூலம் அரசியலுக்கு வந்த அவர் பின்னர் கருணாநிதியின் குடும்ப சாம்ராஜ்யத்தால் தனக்கு உரிய இடம் கிடையாது என்ற காரணத்தால் தனக்கு சினிமாமூலம் கிடைத்த மக்களின் ஆதரவைப் பாவித்து தனிக்கட்சி ஆரம்பித்து தமிழ் நாட்டு ஆட்சியைக் கைப்பற்றினார். அவர் மரணத்துக்கு பின்னர் இவருக்கு பிள்ளைகள் இல்லாத காரணத்தால், எதிர்பாராதவாறு அவரின் மனைவி ஜானகி முதல்வரானார். ஆனால் ஜானகி அம்மாள் எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஜெயலலிதாவினால் விரட்டப்பட்டார். இதே வழியில்தான் இலங்கையிலும் பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டவுடன் அவர் மனைவி சிறிமாவோ பிரதமரானார். இதைப் போன்றே அனுதாப அலை நேரு குடும்பத்தில் இந்திரா படுகொலை செய்யப்பட்டபோது அவரின் அரசியல் அனுபவமற்ற மகன் ராஜீவுக்கும் கிடைத்து அவர் பிரதமரானார்.

எம்.ஜி.ஆருடன் சினிமாவில் ஜோடி சேர்ந்து கதாநாயகியாக நடித்து பின்னர் அவர் கட்சியில் கொள்கைபரப்புச் செயலாளராக இருந்த ஜெயலலிதா, எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகிக்கு போட்டியானார். சின்னவீடா அல்லது பெரியவீடா என்ற போட்டியில் தனது சாதுர்யத்தால் ஜானகியுடன் உடன்பாடுசெய்து தலைவியானார் ஜெயலலிதா. எத்தனை தவறுகள் செய்தாலும் அவரை எம்.ஜி.ஆருக்காகவும் சினிமாமேல் உள்ள மோகத்தாலும் தலைவியாக மக்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதில் பணமும் அறியாமையும் முக்கிய பங்கு வகித்திருக்கிறது. அதுவுமன்றி எதிர்கட்சியாளரான மு.கருணாநிதி தனது குடும்ப சாம்ராஜ்யத்தை தமிழ் நாட்டில் வளர்க்க முயலுகிறார் என்ற குற்றச்சாட்டும் ஒரு காரணமாகும். திமுக கட்சியில் சிரேஷ்ட பதவிகளில் இருப்பவர்கள் பெரும்பாலும் கட்சியின் தலைவர் கருணாநிதி குடும்பத்தை சேர்ந்தவர்கள். அதனால் கருணாநிதிக்குப் பின் யார் கட்சித் தலைமையை வகிப்பது என்பதில் குடும்பத்தினுள் பூசல்கள் தோன்றியுள்ளது. இந்த குடும்ப அரசியல் காரணத்தால் வை.கோபாலசாமி திமுகவை விட்டு பிரிந்து தனிக் கட்சி அமைத்தார்.

ஆந்திராப் பிரதேசத்தில் சினிமாமூலம் தன்னை கிருஷ்ண பரமாத்மாவாக மக்களிடையே தன் செல்வாக்கை நிலைநாட்டிய ராமராவ் கூட முதல்வராகி மரணமடைந்த பின்னர் அவரின் இரண்டாம் மனைவியான பார்வதியே அவரின் தலைமைப் பதவிக்கு வாரிசானார்.

இத்தகைய இந்திய அரசியல் குடும்ப சாம்-

74ம் பக்கம் பார்க்க...

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
Commercial Building Inspections
Environmental Assessments
Air Quality Investigations
Problem Analysis & Solutions
New Home Warranty Inspections
Resale Home Inspections
Complete Home Audit
Thermal Imaging
www.expertinspector.com
Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
Exceed Nationally Recognized Standards
Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
On-Site Narrative Reports
Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario

# துயர் பகிர்வோம்



## திருமதி. ஸ்ரீபுவனேஸ்வரிதேவி ஆறுமுகம்

முரசுமோட்டையை பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபுவனேஸ்வரிதேவி ஆறுமுகம் அவர்கள் 18.07.2009 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், சின்னத்துரை ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயமோகன் (சுவிஸ்), ஜெயதேவன் (சுவிஸ்), ஜெயகாந்தன் (சுவிஸ்), ஜெயவதனி(இந்தியா), ஜெயசீலன், ஜெயலிங்கன் (இந்தியா), ஜெயபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகுதாயாரும் நிர்மலாதேவி, துசிதா, தர்சினி, ஸ்ரீகணேசதாசன், கார்த்திகா, மாலினி ஆகியோரின் மாமியாரும், நதீசன், யாழினி, ஜெயராம், யாமினி, அர்ஜுன், சஞ்ஜீவன், சீலன், தர்ஷனா, சரன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிவணக்க நிகழ்வு 18.07.2009 அன்று இந்தியாவில் நடைபெற்றது.

ஆறுமுகம் - இந்தியா 91 938 088 2654



## திருமதி. சாந்தினிமலர் சிவபாதம்

பத்தமேனி, அச்சுவேலியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினிமலர் சிவபாதம் அவர்கள் 17.07.2009 அன்று ஜேர்மனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தசாமி நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லமுத்து செல்வரத்தினத்தின் அன்பு மருமகளும், ஆசிரியர் சிவபாதத்தின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி (அவுஸ்திரேலியா), திலகேஸ்வரி(கனடா), தவராசா(லண்டன்), பிறேமா(கனடா), பிரதீபன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கீத்தாயினி, உதேந்திரா, வினித்தாயினி ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவதர்சனின்(லண்டன்) அன்பு மாமியாரும், சந்திரமூர்த்தி (இலங்கை), இராசகுல தேவி(கனடா), தேவராணி(கொலன்ட்), இந்திரா (அவுஸ்திரேலியா), கோபாலராஜா(கனடா), சமிலா(லண்டன்), சிவநாதன் (கனடா), ரஜனி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவலிங்கராசா(கனடா), பாலசரஸ்வதி (இலங்கை), கேதாரலிங்கம் (கொலன்ட்) ஆகியோரின் அன்புசகலியும், செல்லா பத்மநாதன் (இலங்கை), அன்னரத்தினம் (இலங்கை) ஆகியோரின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 27.07.2009 அன்று ஜெர்மனியில் நடைபெற்றது.

சிவபாதம் - ஜெர்மனி 49 23 052 0029



## திரு. கதிரவேற்பிள்ளை மதனராஜா (முகுந்தன்)

பம்பைமடு, வவுனியாவை பிறப்பிடமாக கொண்டவரும் பிரபல விஷகடி வைத்தியர் பூலோகசிங்கம் காசிப்பிள்ளை அவர்களின் பேரனும், அமரர் கதிரவேற்பிள்ளை, திலகவதி தம்பதிகளின் சிரேஸ்ர புத்திரனும், கதிரேசு நாகம்மா தம்பதிகளின் மருமகனுமாகிய முகுந்தன் என அழைக்கப்படும் மதனராஜா அவர்கள் வாகன விபத்தில் காலமானார். அன்னார் பரமநாயகியின் அன்புக் கணவரும், சயூரன், கம்சா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நித்தியானந்தராசா (ஆனந்தி), தேவராசா (சசி-கனடா), கவிதா, குமுதா, வினிதா(கனடா) ஆகியோரின் அன்புமிகு சகோதரரும், விநாயகமூர்த்தி, ஜெயகுமார், கஜேந்திரராஜா (றங்கன்-கனடா), உஷாந்தினியின் மைத்துனரும், கனிமகள், ஆனந், வினிதரன், ஜதுஷன், யுரேகா, ரிஷா, பவிஷா, அல்வின் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிலன், மகிஷா ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

சசி 905-235-0625
ரமணன் 647-885-4182
றங்கன் 647-891-4071

# CTR தகவல் பலகை

### ROOMS / BASEMENT RENT

**BRIMELY & LAWRENCE**
2 b/r Basement
Siva 416 904 7212

**BRAMPTON**
2 B/R Basement 1 room @ upper level
Thavamani 905-216-7777

**MARKHAM & STEELS**
2 B/R Basement தனிவழி
Siva 647 896 8687

**MCCOWAN & STEELES**
2 bedroom basement
Gana: 647-229-1413/ 416-332-8699

**BRIMLEY & LAWRENCE**
basement for rent 1 bedroom
siva: 416-799-3221

**KENNEDY & EGLINTON**
2 bedroom basement / car parking
nanthan: 416-820-3116

**AIRPORT & SANDLEWOOD**
room for rent
kobi: 416-738-3001, 647-427-8180

**KINGSTON & MARKHAM**
1B/Room wanted
Raja: 416-269-3517

**MORNINGSIDE & SHEPPARD**
1 Room for Student
Rani: 647-290-9635

### AUTO FOR SALE

**98 HONDA ACCORD**
auto 223 km
$4300.00
rajan: 416-569-1385

**95 HONDA ACCORD**
Auto Sunroof/ Fully loaded $ 2750
Raja: 416-451-6895

**96 HONDA CIVIC**
210km
Silver 4 door A/C
Ratha: 647-338-7316

**99 HONDA ODDOSY**
pass 170 km fully loaded $ 6000.00
Raj – 416 357 7570

**94 NISSAN**
7 passengers
Thurai: 416-661-4004

**93 PATHFINDER**
170km
Good Condition $ 1000
Siva: 416-459-0417

**1993 TOYOTA CAMRY**
V6 - Fully loaded
Suresh: 416-850-1565

**2006 TOYOTA COROLLA**
Gold, 67km
Nesan: 416-274-5594

**92 HONDA ACCORD**
2B/R Rooms near York University
Kumar: 416-546-1475, 416-627-1956

**1992 HONDA ACCORD**
4 doors new tires
Sri: 416-823-3552

**99 NISSAN SENTRA**
208km
Ram: 416-271-9129

### OTHERS

**COMPUTER REPAIR**
Brampton/ missisauga
Suthan: 647-409-2045

**CYCLE AND PIANO**
Prema : 416-292-5772
416-939-7032

**DUCT CLEANING**
electronic product for sale
siva: 416-897-8844

**TRANSLATOR & TUITION**
Sabarimuthu: 416-520-6920
416-282-0951

**LOVE BIRDS**
Bobby: 647-409-4145

**YOGA CLASS**
Stitching Class/ Yoga class
pushpa: 647-278-8445

**COMPUTER REPAIR**
Suthan: 647-802-1599

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**SUMMER CLASS**
Home work help – computer class for kids
Mayooran: 416-335-1477 – 647-869-1475

**HOSPITAL BED NEW**
Parames: 647-345-6672

**BIRDS FOR SALE:**
Bobby: 647-409-4145

**FOOTBALL CLASS**
Ages from 4 year-16 years
Anton: 416-873-2148 – 416-638-1954

**STITCHING AND MAKE UP CLASS**
Pushpa: 647-278-8445

**HOUSE STUFFS/ SAREES/ ETC FROM INDIA**
Sekar: 416-823-3552

உங்கள்
அறிவித்தல்களும்
"தாய்வீட்டில்"
இடம்பெற வேண்டுமா
416 400 6406

# நாம் அழகாய் இருக்க



சசி நரேன்
Cosmetologist & Aestheticia

இயற்கையின் படைப்பில் எல்லாமே அழகு தான். அழகு என்பது முகத்தில் மட்டும் அல்ல. உடை, சிகை, நடை, பாவனை, பேச்சு இவை எல்லாமே இணைந்ததுதான்.

அழகுப் பாதுகாப்பு, அழகுக் குறிப்புகள், இவை யாவும் இக்காலத்தில்தான் உண்டான என்பது தவறான எண்ணம். அழகுக் கலை பயிற்சி ஆதி காலத்திலேயே இருந்தது. இதற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு. நமது தோற்றத்தை அழகாய் வைப்பதற்கு முக்கிய-மாக சரும பாதுகாப்பு முதலிடம் வகிக்கிறது.

## அழகைப் பாதுகாக்க முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்கள்.

- ஆரோக்கியம்
- உணவு
- சுத்தம்
- உடற்பயிற்சி
- சருமத்தை பாதுகாக்கும் வழிமுறைகள்

அதிகமான உழைப்பு, கவலைப்படுதல், தூக்கமின்மை, மலச்சிக்கல் இவை எல்லாம் அழகைப் பாதிக்கும். நாம் முதலில் அழகுக்கு மிகவும் முக்கியமான சருமத்தைப் பற்றி தெரிந்து கொள்வோண்டும். (இதற்கென சரும பராமரிப்பு பயிற்சி பெற்றவர்களின் வழிநடத்தலுடன் உதவியைப் பெற்றுக் கொள்ளல் சிறந்தபயனைத் தரும்)

## சருமமும் பாதுகாப்பும்

நமது சருமத்தின் வெளியில் தெரியும் மேற் பாகம் 'எபிடெர்மிஸ்' (Epidermis) என்றும் கீழ்பாகம் 'டெர்மிஸ்' (Dermis) என்றும் கூறப்படுகிறது. எபிடெர்மிஸில் குறைந்தபட்சம் இலட்சக்கணக்கான உயிர் அணுக்கள் உள்ளன. இந்த உயிர் அணுக்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டே வரும். உயிர் அற்ற அணுக்கள் நாம் உடலைக் கழுவும் போது வெளியேற்றப்படுகின்றது. எபிடெர்மிஸ் முக்கியமாக டெர்மிஸ்சை பாதுகாக்கின்றது. டெர்மிஸ் இரத்தக் குழாய்கள் நரம்புகள், வியர்வைச் சுரப்பிகள், முடிசுரப்பிகள், சபேசியஸ் சுரப்பிகள், இவைகள் எல்லாம் நம் சருமத்தில் இருக்கின்றன.

சபேசியஸ் சுரப்பிகள் சீபம் எனும் கொழுப்புப் பொருளை உற்பத்தி செய்து நமது சருமத்-திற்கு தேவையான எண்ணெய் பசையை கொடுத்து சருமத்தை மென்மையாகவும் ஈரப்பசை உடையதாகவும் வைக்கின்றது. குளிர் பிரதேச சருமங்களில் சீபம் மிகக் குறைவாக உற்பத்தியாவதால் சர்ம வரட்சி சுருக்கங்கள் கோடுகள் ஏற்படுகின்றது. இதனால் வயது அதிகமானதாக தோற்றம-ளிக்கும். ஆகவே நமது உடல் அழகுக்கு சத்துணவு எவ்வளவு முக்கியமோ அதே போல நமது சருமத்திற்கும் பாதுகாப்பு தேவை.

## சருமத்தில் சிலவகைகள்

- உலர்ந்த சருமம் (Dry skin)
- எண்ணெய் கசிவான சருமம் (Oily Skin)
- பலவகைப்பட்ட அமைப்புள்ள சருமம் (Combingtion Skin)
- சாதாரண சருமம் (Normal Skin)
- உணர்ச்சியுள்ளதும் அலர்ச்சியுள்ளதுமான சருமம் (Sensitive and Allergic Skin)

ஒருவருக்கு மேற்கூறியவற்றில் எந்த வகை சருமம் உள்ளது என்பதை தெரிந்து கொண்டதன் பின்னர் அதற்கு உண்டான பாதுகாப்பு முறையையும் அழகு சாதன பொருட்களையும் உபயோகிப்பது நன்று.

பொதுவாக சருமத்திற்கு இன்னும் ஒரு குணமும் உண்டு. சருமம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. நாம் வசிக்கின்ற இடம், குளிரூட்டிய அறை, காற்று, சூரியன் இவைகளினால் சருமத்திற்கு தொல்லைகள் வரலாம். இதனால் சருமத்தின் தன்மை, நிறம், அமைப்பு மாறுபட வாய்ப்புள்ளது. குறிப்பாக வயது ஆக ஆக சருமப் பராம-ரிப்பில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.



சருமத்திற்கு கீழே இருக்கும் சதைப்பகுதி உறுதியாக இருக்க வேண்டும். சருமத்தை நன்றாக வைத்துக் கொள்ளாவிட்டால் அழகைக் கெடுக்கும் புள்ளிகள், மறுக்கள், பருக்கள், கறுப்பு, வெள்ளைப் புள்ளிகள் உண்டாகும். இவை எப்படி உண்டாகும் என்றால் சருமத்தில் உள்ள அழுக்கும் எண்ணெய்ப் பசையும் ஒன்றாக சேர்ந்து சரு-மத்திலுள்ள துவாரங்கள் ஊடாக உள்ளே சென்று அங்குள்ள பற்றீரியாவுடன் சேர்ந்து வெள்ளை கறுப்பு புள்ளிகளாக தோலிற்கு மேலே தோன்றுகிறது. இவை முக்கியமாக முகம் சார்ந்த சருமத்திலேயே அதிகமாக காணப்படும்.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்நாட்டில் தினந்தோறும் புதிய புதிய அழகுசாதனங்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை-களை நாம் வாங்கி உபயோகிக்கும் போது இவை என்ன மூலப் பொருட்களினால் தயா ரிக்கப்பட்டுள்ளன, இம் மூலப்பொருட்களின் சேர்க்கை நமது சருமத்திற்கு ஏற்புடையதா என்பனவற்றில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

உடலில் முகம் தவிர்ந்த மற்றைய அங்கங்-களிலுமுள்ள சருமத்தையும் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். இதற்கான Hand and body Lotion பற்றித் தெரிந்து கொள்வதும் அவசியமாகும். கண் மற்றும் கண்ணைச் சுற்றியுள்ள பகுதியையும் மிகவும் அவதான-மாக பராமரித்தல் வேண்டும். கண்ணைச் சுற்றியுள்ள நரம்புகள் மிகவும் மிருதுவான-வையாகவும் உணர்ச்சியுள்ளதாகவும் இருக் குமாதலால் கண்களைச் சுற்றியுள்ள நரம்புகள் பாதிக்கப்பட்டு கண்ணைச் சுற்றி கருவளையம் தோன்றும். இக்கருவளையத்தைப் போக்க பல வழிகள் உண்டு.

சருமப் பாதுகாப்பும் அழகுக் கலையும் ஒரு பாரிய விடயமாகும். எதிர்வரும் காலங்களில் பல்வேறுபட்ட சருமங்களின் தன்மை அதற்-குரிய பராமரிப்பு முறைகளை விரிவாக ஆராய்வோம்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■




# சிறிய நிறுவனங்களில் முதலீடு

## சிறிய நிறுவனங்களில் முதலிட்டவர்களுக்கு சுக்கிர திசை ஆரம்பம்

ஜுன் 1982ல் ஒரு பொருளாதார பின்னடைவுக்கு நடுவில் வங்கிகள் பல இக்கட்டான நிலையில் இரட்டை எண் வேலையில்லாத திண்டாட்டம் வீதமாக இருந்ததால் சிறிய நிறுவனங்களின் பங்குகள் முதலிட்டவர்கள் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்ற நிலையில் இருந்தார்கள். இந்நிலையில் மிகவும் இடருக்கு முகம் கொடுக்கத் துணிந்தவர்கள் அந்த நிறுவனங்களில் முதலீட்டார்கள். அடுத்த ஆண்டில் BMO Nesbit Burns Small Cap Index 96% உயர்ந்தது.

இந்த சிறிய நிறுவனங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான வட்டங்கள் 4 தொடக்கம் பல ஆண்டுகளுக்கு நீடிக்கும். ஆனால் கடந்த சில ஆண்டுகளைப் போல் பாரிய வீழ்ச்சியடைந்து இருந்தால் இந்த நிறுவனங்கள் மீது எவரும் அக்கறை காட்டுவது அரிது.

BMO Nesbit Burns Small Cap Index கடந்த ஆண்டு – 29.4வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த ஆண்டுடன் இது 5 ஆண்டுகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆனால் கடந்த காலத்தை கூர்ந்து அவதானித்தால் சில முதலீட்டாளர்களுக்கு சிலநேரம் அக்கறை வரலாம். கடந்த 40 வருடங்களாக ஒரு ஆண்டில் 20 வீதம் விடக்கூடிய வீழ்ச்சியைக் காட்டினால் தொடர்ந்து வந்த ஆண்டில் சராசரியாக 33 வீதம் BMO Nesbit Burns Small Cap Index உயர்ந்திருக்கின்றது. இனி வரும் காலங்களில் இந்தச் சுட்டியில் உயர்ச்சி கடந்த காலத்தை விட கூடவாக இருக்கலாம். ஏனென்றால், தற்போது முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த சுட்டி வீழ்சசியடைந்துள்ளது.


இந்த சிறிய நிறுவனங்களின் பட்டியலில் 12 பங்கு விலைபோன சில நிறுவனங்கள் சில $0.40-0.50C பங்கு நிலையில் இருக்கின்றன. பங்குகளின் விலைகள். March 2009 வீழ்ச்சியில் இருந்து மீண்டு வந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும், பல பங்குகளில் விலைகள் அவற்றின் ஆகக்கூடிய விலையிலிருந்து 75வீதம் வரையில் குறைவாகவே உள்ளன. பெரிய நிறுவனங்களின் விலைகளுடன் ஒப்பிடும் போது வருமானத்தைக் காட்டும் சிறிய நிறுவனத்தை ஒப்பீட்டளவில் மலிவாக வாங்கிக்கொள்ளலாம். இந்த பெரிய நிறுவனங்களுக்கும் சிறிய நிறுவனங்களுக்குமான விலை விகிதாசாரம் 1996க்குப் பின் தற்போது சிறிய நிறுவனங்களுக்கு சார்பாக இருக்கிறது.

கனடாவைப் பொறுத்தமட்டில் பொருளாதார பின்னடைவின் போது சிறிய நிறுவனங்கள் மிகவும் பாதிப்படைவதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அந்த நேரத்தில் முதலீட்டாளர்கள் விரைவாக வெளியேறுவதால் அவற்றை நடத்த தேவையான பணம் இருப்பதில்லை. இரண்டாவது இந்த நிறுவனங்கள் அடிப்படை பொருட்களின் சுரங்கத் தொழிலில் இருப்பவை. இந்த அடிப்படை பொருட்கள் தேவை குறைவானதாகும். இந்த காரணங்களால் இந்த நிறுவனங்களின் பங்குகள் மிகவும் பலவீனமான நிலையை அடைகின்றன.

சிறிய நிறுவனங்களில் பங்குச்சந்தை கனடாவில் 60வீத அடிப்படைப் பொருட்களை அகழும் நிறுவனங்கள் ஆகும். இதனால் இவற்றின் லாபமீட்டும் தன்மை இந்த அடிப்படைப் பொருட்கள் விலைகளில் தங்கியுள்ளது.

கடந்த தசாப்தத்தில் பல பெரும் சக்திகள், இந்த அடிப்படைப் பொருள் சந்தையில் ஊடுருவி உள்ளன. இந்த ஊடுருவல் காரணமாக அடிப்படைப் பொருள் விலையின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. சீனா, இந்தியா Hedge Funds மற்றும் சில்லறை முதலீட்டாளர்கள் என அடிப்படைப் பொருள் சந்தையில் மிக நெருக்கமடைந்து விட்டதால் அடிப்படைத்தாதுப் பொருட்களின் விலையில் ஸ்திரத்தன்மை இழப்புக்கு காரணமாகும்.

அடுத்த காரணி Liquidity Risk. கடன் சந்தையில் நெருக்கம் ஏற்பட்டு முதலீட்டாளர்கள் போட்டிபோட்டுக் கொண்டு வெளியேறும்போது பங்குகளில் விலைகளை காலில் போட்டு மிதித்து விடுகிறார்கள். பின்பு அங்கு வாங்குதலும் விற்றலும் மிகவும் குறைவடைகிறது.



மாறன் செல்லையா

- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

இந்த நடவடிக்கை மீண்டும் நன்றாக நடப்பதுண்டு. மீண்டும் பங்குச்சந்தையில் பணம் புரள ஆரம்பிக்கும் போது சிறிய நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களை விட விலையில் அதிகரிக்கின்றன. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து இந்த நடவடிக்கை ஆரம்பித்துள்ளது. கடந்த ஆறு மாதங்களில் BMO Nesbit Burns Small Capitalistic Index 27.5% உயர்ந்துள்ளது. இந்த நிகழ்வு இனிவரும் ஆண்டில் நடக்கக்கூடிய சந்தர்ப்பம் மிகவும் கூடுதலாக இருக்கிறது.

இந்த சுட்டிகளுக்கு மேலாக வளர்ச்சி வீதத்தைக் காட்டும் சிறிய நிறுவனங்கள் சந்தையில் முதலீட்டு நிர்வாகிகள் மிகவும் பலர். ஏனென்றால் சிறிய நிறுவனங்களில் முதலீட்டு நிர்வாகச் சந்தையில் போட்டி குறைவு. தற்போது வந்திருக்கும் சந்தர்ப்பம் போன்ற சந்தர்ப்பங்களை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வர்.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■

# ஜனநாயகத்தில் அரசியல்...

71ம் பக்கத் தொடர்ச்சி...

ராஜயங்களை விட மிகவும் பலம் வாய்ந்த விரிவடைந்து மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான நேரு குடும்ப சாம்ராஜ்யம் இன்னும் நிலைத்து நிற்கிறது. மோதிலால் நேரு செல்வம் படைத்த காஷ்மீர் பிராமணர். அரசியலில் அவருக்கு அதிக ஈடுபாடிருந்தது. தன் மகன் ஜவஹர்லால் நேருவை கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் சட்டபடிப்புக்காக அனுப்பியது ஒரு காலத்தில் நேரு வம்சாவழி இந்தியாவின் அரசியல் சாம்ராஜ்யதை உருவாக்கவே என்பது பல அரசியல் ஆய்வாளர்களின் கருத்து. அவர் எண்ணம் போல், பல தடவை நாட்டுக்காக சிறை சென்று வந்த ஜவஹர்லால் நேரு காங்கிரசின் தலைவாராகி, நாட்டின் பிரதமரானார். பல தேசபக்தர்களின் தியாகத்தில் உருவாகிய காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை காந்தி, ஜின்னாவைப் போல் ஏற்காமல், ஜவகர்லால் நேருவிற்கு கையளித்தார். சர்தார் வல்லபாய் பட்டேல் கூடிய தகுதியுடையவர் என்றும் காந்தி நேருவில் வைத்திருந்த பிரத்தியேக அன்பினால் நேருவுக்கு பிரதமர் பதவியை தாரைவார்த்துக் கொடுத்தார் என்று சிலர் கூறுவர்.

நேருவுக்குப்பின் இந்திரா பிரதமரானார். அவருக்குப்பின் அவரின் இரு புத்திரர்களில் யார் வாரிசு என்பதில் ஆரம்பத்தில் பிரச்சனையிருக்கவில்லை. ராஜீவிற்கு அரசியலில் ஆர்வமிருக்கவில்லை. வெளிநாட்டில் படித்துக்கொண்டிருந்த அவருக்கு மக்களுடன் தொடர்பு குறைவாக இருந்தது. ஆனால் அவரின் தம்பியான சஞ்சேய் காந்தி மும்முரமாக அரசியிலில் தாயுடன் ஈடுபட்டார். அவரின் மனைவி மேனகா கூட ஒரு புதுமையான அரசியல் போக்குடையவர். மாமியார் மருமகளுக்குகிடையே உறவு நல்லதாக இருக்காவிடினும் சஞ்செய் விமான விபத்தில் மரணமடையாவிட்டால் அவரே இந்திராவுக்கு பின் பிரதமராகியிருப்பார் என்பது அரசியல்வாதிகளின் கணிப்பு. அப்படி சஞ்செய் பிரதமாராகியிருந்து அதற்கு பின்னர் மரணம் ஏற்பட்டிருந்தால் அனுதாப அலை மேனகாவை பிரதமாராக்கியிருக்கும். அதனால் பிறப்பில் வெளிநாட்டவரான ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி காங்கிரஸ் தலைவராகி பலத்த விமர்சனத்துக்கு ஆளாக வேண்டிய நிலமை ஏற்பட்டிருக்க முடியாது.

தனக்கு பின் தன் மகள் பிரியங்கா என்ற நோக்குடன் சோனியா செயல்பட தொடங்கியிருந்தாலும் வெளிநாட்டில் படித்த அவரின் சகோதரர் ராகுல் காந்தியே தற்போது வாரிசாக அறிமுகமாகியுள்ளார். ஆனால் ஒன்று, இந்தியர்களில் பெரும் பாலோர் நேரு குடும்பத்தின் மூன்றாம் தலைமுறையைத் தலைவராகவோ அல்லது தலைவியாகவோ ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு தயாராகவுள்ளார்கள். பொருட்கள் சந்தையில் பிராண்ட் பெயரில் விற்பனையாவது போல், நேரு பிராண்ட் பெயரில் குடும்ப அரசியல் வளருகிறது. மன்னர்கள் பலர் பல பகுதிகளில் ஆட்சி புரிந்த இந்தியாவில் இந்தக் குடும்ப சாம்ராஜ்ய பிடியில் இருந்து வெளிவர பல ஆண்டுகள் எடுக்கலாம்.

## சிறீலங்காவின் பண்டாரநாயக்கா குடும்ப சாம்ராஜ்யம்.

இந்தியாவில் நேருவின் குடும்ப அரசியலலுடன் இலங்கையின் பண்டாரநாயக்கா குடும்ப அரசியலை ஒப்பிட்டுப்பார்க்கும் போது பல ஒற்றுமைகளைக் காணலாம். இரண்டிலும் மரணத்துக்குப்பின் அனுதாப அலை முக்கிய பங்கெடுத்துள்ளது. அதுவுமன்றி மதமும், மொழியும், மரபு வழிவந்த மக்களின் மரியாதையும் ஒரு காரணமாகும். பண்டாரநாயக்கா கிறஸ்தவ மதத்தவரானாலும் அரசியலுக்காக மதம்மாறியவர். பண்டாரநாயக்கா குடும்பத்தின் பூர்வீகம் நீலப்பெருமாள் என்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் இனமானாலும் காலப்போக்கில் மேல்நாடு எனப்படும் கண்டி உயர் சாதியினத்தவராக மக்களால் கருதப்பட்டார். வெளிநாட்டில் கல்விபயின்ற பண்டாரநாயக்கா சிங்கள மொழியை தன் அரசியல் ஆயுதமாக பாவித்து பிரதமரானார். அவர் கொலையுண்ட பின்னர் கிடைத்த அனுதாப அலையினால் அவர் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானார். இவரும் உயர் சாதியினராவார். அவரும் தன் குழந்தைகளை வெளிநாட்டில் கல்வி பயில அனுப்பியதற்கு காரணம் தனக்குப் பின் அவர்களில் ஒருவர் பதவிக்கு வாரிசாக வரவேண்டும் என்பதே. இதில் அவரது இரண்டாவது மகள் சந்திரிக்காவுக்கு அதிர்ஷ்டம் கிட்டியது. ஒரு பிரபல நடிகரான குமாரணதுங்காவை காதலித்து திருமணம் செய்து பின்னர், அவரின் சிறீலங்கா மக்கள் கட்சியின் உதவித் தலைவராக அரசியலில் புகுந்து, தன்னை அரசியலில் வளர்த்து, குமாரணதுங்கா படுகொலை செய்யப்பட்ட பின்னர் அனுதாப அலை என்ற சந்தர்ப்பத்தை தாயைப்போல் பாவித்து சிறீலங்காவின் ஜனாதிபதியானவர். இவருக்கு பின்னர் இவரின் மகன் விமுக்தியா அல்லது தம்பி அனுராவா என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் அதில் எதுவும் கைகூடவில்லை.

அத்தனகல தொகுதி பண்டாரநாயக்கா குடும்பத்தின் மரபு வழிவந்த அரசியல் தொகுதி. ஒரு காலத்தில் அத்தொகுதியில் நிலங்கள் எல்லாம் அவர்களுக்கு சொந்தமாயிருந்தது. அதனால் பண்டாரநாயக்கா ஒரு குட்டி ஜமீந்தாராயிருந்தார் என்பதில் தவறில்லை. சிறீலங்காவில் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகம். ஆனால் கிராமப்புறங்களில் இன்றும் பண்டாரநாயக்கா என்ற பெயருக்கு இருக்கும் மதிப்புக்கு ஊடகங்களும் பிரசாரங்களும் காரணமாகும். நாடு தற்போதைய பின்னடைந்த நிலைக்கு தள்ளப்பட்டமைக்கு பண்டாரநாயக்கா அரசியல் சாம்ராஜ்யமே காரணம் என்பதை மக்கள் உணரத் தொடங்கும் வேளை சாம்ராஜ்யம் சரியத்தொடங்கியது.

பண்டாரநாயக்கா சாம்ராஜ்யத்தைப்போல் ஜெயவர்தனாவின் அரசியல் சாம்ராஜ்யம் அவ்வளவுக்கு விருத்தியடையவில்லை. பொது மக்களின் ஆதரவைப் பெற்ற பிரேமதாச அதற்கு முட்டுக்கட்டையாக இருந்தார். தனது இனத்தவரான தொழில் அதிபர் விஜயவர்தனவை பதவிக்கு கொண்டுவர நினைத்தார். ஆனால் விமான விபத்தில் அவர் மரணமானதும் காமினி திசநாயக்காவை வாரிசாக்க நினைத்தார். அதுவும் முடியவில்லை. அவரின் மிக நெருங்கிய இனத்தவரான ரணில் விக்கிரமசிங்கா அவரால் அரசியல் பாடம் சொல்லி கொடுத்து வளர்க்கப்பட்ட வாரிசாவார்.

சிங்களவர்களிடையே குடும்ப அரசியல் வளர்ந்தது போல தமிழர்களிடையே குடும்ப அரசியல் வளரத்தான் செய்தது. தமிழரசு கட்சியைச் சேர்ந்த தர்மலிங்கத்திற்குப் பின்னர் சித்தார்த்தன். ஒரு காலத்தில் இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவரான ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்குப் பின்னர் அவர் மகன் குமார் பொன்னம்பலம், அவருக்குப் பின்னர் குமாரின் மகன் கஜன் பொன்னம்பலம் போன்ற குடும்ப அரசியல் வாதிகளை குறிப்பிடலாம். இதை டிரேட் மார்க் அரசியல் என்று நகைச்சுவையாக ஒரு அரசியல் விமர்சகர் குறிப்பிட்டுள்ளார்.

## வேறு நாடுகளில் அரசியல் சாம்ராஜ்யங்கள்.

பெண்கள் அரசியலில் குதிப்பதற்கு தந்தை அல்லது கணவன் மரணம் காரணமாக இருந்துள்ளது. இதுவும் குடும்ப அரசியல் தோன்ற காரணமாகவுள்ளது. பாக்கிஸ்தானில் சர்வாதிகாரி ஸியா உல் ஹக், பெனசீர் பூட்டோவின் தந்தையும் முன்னைனாள் பிரதமருமான பூட்டோவை தூக்கிலிட்டபோது அதைக் காரணமாக வைத்து பெனசீர் அரசியலில் குதித்து பிரதமரானார். இதேபோன்று அரசியல்வாதி அக்கினோ பிலிப்பைன் நாட்டு சர்வாதிகாரி மார்கோசால் படுகொலை செய்யப்பட்டபோது நாட்டில் புரட்சிவெடித்து, சர்வாதிகாரம் அழிந்து ஜனநாயகமுறையில் அக்கினோவின் மனைவி கொராஷன் ஜனாதிபதியானார். இந்தோனேசியாவின் முன்னைநாள் தலைவரான சுகர்னோவின் மகளான மேகவதி தற்போது ஜனாதிபதியாக கடமையாற்றுகிறார். சிங்கப்பூர், பங்காளதேஷ் ஆகிய தென்கிழக்கு நாடுகளலிலும் குடும்ப அரசியல் நிலவுகிறது.

## பத்திரிகை சாம்ராஜ்யத்திற்கு ஊடக சாம்ராஜ்யம் துணைபோகிறதா?

ஒரு அரசியல் சாம்ராஜ்யம் வளர ஊடகம் பெருமளவுக்கு துணைபோகிறது. தினமும் குறிப்பிட்ட குடும்பத்தைபற்றிய சார்பான செய்திகளை பிரசுரிப்பதன் மூலம் மக்களின் சிந்தனைகளை சலவை செய்கிறார்கள். இவ் வூடகங்கள் பெரும்பாலும் அரசியல் குடும்பத்திற்கு சொந்தமானவை. செய்திகள் பெரும்பாலும் உண்மைக்கு புறம்பாகவும் குறைகளை மூடிமறைத்தும் வெளிவரும். தேர்தலின் போது முழுமூச்சாக பத்திரிகைகள் பிரச்சாரத்தில் ஈடுபடும். உதாரணத்துக்கு ஒரு காலத்தில் ஏரிக்கரை பத்திரிகைகள் ஜெயவர்தனாவின் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்தும் குணசேனா பத்திரிகை சுதந்திரக்கட்சியை ஆதரித்தும் எழுதின. அக்காரணத்தால் சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்ததும் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பழிதீர்க்கும் நோக்குடன் ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தை அரச உடைமையாக்கினார்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

# TAMILS' FOCUS

Tamils' Business Cards Directory

## இதுக்கு மேலேயும் இன்னுமொண்டா?



*கொஞ்சம் பொறுங்கோ*

**இது......**

- தன்னறிமுக அட்டையின் கோர்வை
- சுயகுறிப்பேடு
- கையில் எடுத்துச் செல்லக்கூடியது
- குறித்த நேரத்தில் உங்களை வந்தடைந்து விடும்
- தரமானதும் பாவனைக்குரியதும்
- மற்றவையுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டது

**Tel : 416.548.7235**

Email : tamilsfocus@gmail.com

# SP Electronics

## 416-264-6400

## தமிழ் வானொலி

SALES & SERVICES



உங்களிடமுள்ள ஒரு தமிழ் வானொலியில்
அனைத்து தமிழ் வானொலிகளையும்
இணைத்துக்கொள்ள **$ 20** மட்டுமே




**TV, VCR, DVD, Players-Telephone-Computers**

**All Brand Laptops Chip Level**
**Full service and Replaced Accessories**
**PS Server Service Virus and Spyware**
**Removal and date backup**

**2641 Eglinton Avenue East (Brimley & Eglinton)**



# எல்லாமும் எல்லோரும் பெற வேண்டும்

## Non Medical Insurance up to Age 85

- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Home Equity Line of Credit
- RESP / RRSP



INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC Insurance


Manulife Financial

Unity Life of Canada


Canada Life



3 Bedroom + 1 Washroom
**$ 184,900**



3+1 Bedroom, 3 Washroom
**$ 349,900**




3 Bedroom + 2 Washroom
**$ 229,000**



3+1 Bedroom + 3 Washroom
**$ 335,000**



2 Bedroom + 1 Washroom
**$ 199,000**



3+1 Bedroom, 1 Washroom
**$ 269,900**



2+1 Bedroom + 2 Washroom
**$ 227,000**



3 Bedroom + 2 Washroom
**$ 229,500**



3 Bedroom +2 Washroom
**$ 235,000**




3+2 Bedroom, 2 Washroom
**$ 274,900**



3+1 Bedroom + 3 Washroom
**$ 229,900**



2 Bedroom + 1 Washroom
**$ 189,900**



2 Bedroom + 1 Washroom
**$ 79,000**



Gas Station
**$ 199,000**




3 Bedroom + 3 Washroom
**$ 285,000**



2 Bedroom + 2 Washroom
**$ 88,888**

RE/MAX®

**Rouge River Realty Ltd. Brokerage**

Independently Owned and Operated

37-31 Tapscott Rd. Toronto, ON. M1B 4Y7

Tel : 416-321-1999 Fax : 416-321-2290

## Uthayan Nadarajah

Broker

**Direct : 416-727-9945**



Apex Creations - 416-297-0707

# பிரச்சனைகளற்ற கோடை விடுமுறை



ஜீவா திசைராஜா

பாடசாலைகளில் கோடை விடுமுறை ஆரம்பமாகி ஒரு மாதம் கழிந்து விட்டது. இந்த ஒரு மாதத்தில் பிள்ளைகளை எவ்வாறு சந்தோஷமாகவும், பிரச்சனைகள் இல்லாதும் வைத்திருப்பது என எண்ணி போராடி, செப்டம்பர் எப்போது வரும் என நாட்களை எண்ணிக் கொண்டிருக்கலாம். எனினும் இன்னும் இருக்கும் ஒரு மாதத்தை உபயோகமாகவும், சிக்கனமாகவும், பிரச்சனைகள் இன்றியும் எவ்வாறு கழிப்பது என்பதை சற்று சிந்திப்பதற்கு இக் கட்டுரை உபயோகமாகும் என்ற எண்ணத்தில் இது எழுதப்படுகின்றது.

பொதுவாக, தமது பிள்ளைகளின் நடத்தை சார்ந்த அல்லது உணர்வு சார்ந்த பிரச்சனைகளை அவதானிக்கும் பெற்றோர் அவர்களை சரியான பாதைக்கு கொண்டு வருவதற்கு இக் கோடை விடுமுறைக் காலம் உதவும். எனினும் இத்தகைய பிரச்சனைகளைப் பற்றிக் கதைப்பதற்கு நீங்கள் கோடை விடுமுறை வரை காத்திருக்கத் தேவையில்லை. கோடை விடுமுறை விடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே நீங்கள் பிள்ளையுடன் கதைத்து விடுமுறைக்கான திட்டங்களை மேற்கொள்ளலாம். பாசறைக்கான இடங்களைத் திட்டமிடல், நேர அட்டவணைகளை அமைத்தல் என்பன விடுமுறைக்கு முன்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்.

உங்கள் வளரிளம் பருவ பிள்ளை (Teenager) சோபாவில் அமர்ந்திருந்து சிப்ஸ் சாப்பிட்டபடி, தொடர்ந்து வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தால் என்னவாகும் என்று எண்ணிப் பாருங்கள். வளரிளம் பருவத்தினருக்கு கோடை காலம் வருடத்தின் உச்சகட்டமான உல்லாசமான பருவமாகும். எந்த வித பொறுப்புகளுமில்லாது, மத்தியானம் வரை தூங்கி எழுந்து நாள் முழுக்க சாப்பிட்டபடி சுதந்திரத்தை அனுபவிக்கும் காலமாகும். அநேக பெற்றோர்கள் கோடை முழுவதும் முழுநேரமாக வேலை செய்வர். சில பெற்றோர் தமது பிள்ளைகளை உறவினரிடம் விட்டு விட்டு விடுமுறையில் செல்வதுமுண்டு. சில வளரிளம் பருவத்தினர் பெற்றோர் வெளியில் செல்லும் போது தனியாக விடப்படுகின்றனர். பாடசாலை காலத்தில் காணப்பட்ட ஒழுங்குகள், கால அட்டவணை என்பன எதுவும் இல்லாது முழுச் சுதந்திரம் இந்த கோடை விடுமுறையின் போது மாணவர்களுக்கு கிடைக்கின்றது.

பெற்றோரைப் பொறுத்தவரையில் கோடை விடுமுறை ஆரம்பிக்கும் போதே செப்டம்பரில் பாடசாலை எப்போது ஆரம்பிக்கும் என நாட்களை எண்ண ஆரம்பித்து விடுவார்கள். பாடசாலை விடுமுறை காலம் அண்மிக்கும் போது பெற்றோர் 3 நீண்ட மாதங்களுக்கு தமது பிள்ளைகளை அவசரமாக ஆயத்தம் செய்வர். ஒரு சில கிழமைகள் கட்டாயமாக குடும்ப விடுமுறையில் கழிக்கப்பட வேண்டியது தான். சில வளரிளம் பருவத்தினர் கோடை பாடசாலைக்குச் செல்வார்கள். வேறு சிலர் புதிய பொழுதுபோக்கை ஆரம்பிப்பார்கள். எப்படி இருந்த போதிலும் ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு நாளும் சில மணித்தியாலங்கள் வீட்டில் எதுவும் செய்யாது இருக்க வழி வகுத்து விடுகின்றது. எவ்வளவு நாட்களுக்கு பிள்ளைகளை பிரச்சனைகளுக்குள் சிக்காது ஆர்வமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதுடன் வெளியேயும் கொண்டு செல்ல முடியும்?

ஒழுங்கமைப்பும் வளர்ந்தவர்களின் மேற்பார்வையும் கோடை விடுமுறையில் குறைந்து விடும்போது, தவறான நண்பர்கள், போதை வஸ்துக்களையும் மதுபானத்தையும் பரீட்சார்த்தமாக அருந்திப் பார்த்தல் அல்லது ஏனைய தவறுகளில் பிள்ளைகள் ஈடுபட வாய்ப்பைக் கொடுத்து விடுகின்றது. உங்கள் பிள்ளை பாடசாலைக் காலத்தின் போது பிரச்சனைகளில் ஈடுபவராக இருந்தால் கோடை விடுமுறையின் போது அதிக பிரச்சனைகளை நீங்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கும். 'Idle hands are the devil's tools' (சும்மா இருக்கும் கைகள் சாத்தானின் கருவிகள்) என்று ஒரு பழமொழியுண்டு. வளரிளம் பருவத்தினர் குறிப்பாக கோடை காலத்தில் துணிகரச் செயல்களில் ஈடுபட விரும்புவதுடன் ஆர்வமூட்டும் அபாயமான செயல்களிலும் ஈடுபட விரும்புவார்கள். உங்கள் ஆதரவோ அல்லது வழிகாட்டலோ இல்லாது கூட இத் தகைய செயல்களில் ஈடுபட முயல்வார்கள்.

> "இந்த விடுமுறை
> இன்னும் ஒரு மாதத்தில் முடிந்துவிடப் போகின்றது
> என எண்ணி
> செப்டம்பர் வரை நாட்களை எண்ணிக் கொண்டிராது
> பிள்ளைக்கு உபயோகமான வழிவகைகளை
> சிந்தித்து செயலாற்றுங்கள்.
> வீணாக்கப்பட்ட காலம்
> வீணாக்கப்பட்ட சந்தர்ப்பத்தையே குறிக்கும்."

கலிபோர்ணியாவின் Fight Crime எனும் இலாப நோக்கற்ற நிறுவனத்தின் வாக்கெடுப்பின்படி மேற்பார்வையற்ற (unsupervised) பிள்ளைகள் குற்றச் செயல்கள் புரியவும், குற்றங்களால் பாதிக்கப்படவும், மதுபானம், போதைவஸ்துப் பாவனைகளில் ஈடுபடவும் தவறான நண்பர்களுடன் குழுக்களாக (Gang)



இயங்கவும் அதிக வாய்ப்புக்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் அறிக்கை, இளைஞர்கள் கோடை விடுமுறையின் போது குற்றங்களைச் செய்ய ஆரம்பிக்கும் காலம் மதியத்தில் இருந்து ஆரம்பமாகின்றது எனவும், இதுவே பாடசாலைக் காலத்தின் போது பிற்பகல் 3 மணிக்குப் பின்னராக காணப்படுகின்றது எனவும் கூறுகின்றது. மேலும் வளரிளம் பருவத்தினர் கோடை விடுமுறையின் போது போதை வஸ்து தொடர்பான குற்றங்களை பின்னேரத்தில் ஆரம்பிக்கின்றனர் எனவும் இதற்கு இவர்கள் அடுத்த நாள் காலையில் பாடசாலைக்கு போவதற்காக அதிகாலையில் எழும் தேவை இராதது காரணம் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கு பாடசாலை காலத்தை விட கோடை காலத்தின் போது அதிக ஒழுங்கமைப்பும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் தேவை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. வேலை செய்யும் பெற்றோருக்கு மத்தியானத்திலிருந்து பின்னேரத்தின் இறுதி வரை ஒவ்வொரு நாளும் பிள்ளைகளோடு இருப்பது சாத்தியமற்றதாகின்றது.

தேசிய போதைவஸ்து கட்டுப்பாட்டு கொள்கையின் வெள்ளை மாளிகை அலுவலகத்தின் அறிக்கையின் படி (White House Office of National Drug Control Policy) அதிகமான அமெரிக்க வளரிளம் பருவத்தினர் வருடத்தின் எந்தவொரு காலத்தையும் விட கோடை காலத்தின் போதே மரிஹுவானாவை முதன் முறையாக பரீட்சித்துப் பார்க்கிறார்கள். அத்துடன் வயது குறைந்தவர்கள் மதுபானம் அருந்துதல் சிகரெட் புகைத்தல் என்பவற்றில் ஈடுபட ஆரம்பிப்பதும் கோடை மாதங்களான ஜூன், ஜூலை மாதங்களிலேயே ஆரம்பிக்கின்றது.

பொதுக் கொள்கை ஆராய்ச்சிக்கான நிறுவனத்தினால் (Public Policy Research) மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி நீண்ட பாடசாலை விடுமுறைகள் "பிள்ளைகளுக்கு கேடாகும்" எனவும் பிள்ளைகள் 6 கிழமைகட்கு மேற்பார்வையற்று விடப்படாது இருப்பதைத் தடுப்பதற்கு பாடசாலை கோடை விடுமுறைகள் குறைக்கப்படவேண்டும் என கூறப்படுகின்றது.

பாடசாலையின் ஒரு வருடமானது 5 தவணைகளாக பிரிக்கப்பட வேண்டுமெனவும் இதன் மூலம் இளைஞர்களின் குற்றச் செயல்கள் குறைக்கப்படவும் கல்வித் தரம் மேம்படவும் வாய்ப்பு ஏற்படும் என நம்பப்படுகின்றது.

தற்போதைய பாடசாலை வருடமானது, கோடை காலத்தில் வயல்களில் வேலை செய்வதற்கான ஆட்களின் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாகவே ஏற்பட்டது. இது பிள்ளைகட்கு எந்த வித நன்மையையும் கொடுப்பதாக அமையாது.

இந்த அறிக்கை பின்லாந்திலும் கனடாவிலும் பாடசாலைக் கல்வி தொடர்பான ஆய்வுகள் பற்றியதாக அமைந்துள்ளது. இந்த அறிக்கையின்படி, "சில இளைஞர் குழுக்கள் குறிப்பாக பாதகமான பின்னணிகளைக் கொண்டவர்கள் கோடை விடுமுறையின்போது முன்னெப்போதும் இல்லாதவாறு அதிக நேரத்தை மேற்பார்வையற்று செலவிடுகின்றனர். கோடை விடுமுறை காலமே இளைஞர் குற்றச் செயல்கள் அதிகரிக்கும் காலமாக உள்ளது".

"நீண்ட கோடை விடுமுறையானது பிள்ளைகளின் கல்வியில் ஓர் பின்னடைவை ஏற்படுத்தும். குறிப்பாக பொருளாதார - சமூக நிலையில் தாழ் நிலையில் உள்ள குடும்பங்களில் இந் நிலை அதிகமாக உள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. சமமற்ற, காலநீட்சியுள்ள பாடசாலைத் தவணைகள் கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு பாடசாலைகட்கு மிகவும் கடினமாக இருப்பதுடன் நீண்ட இலையுதிர்கால (Autumn) தவணையானது மாணவர்களுக்கு களைப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது" என இந்த அறிக்கை கூறுகின்றது.

இந்த அறிக்கையின் எழுத்தாளர்களில் ஒருவரான சோனியா சோதா, எட்டுக் கிழமையுள்ள 5 தவணைகள் அதாவது கிறிஸ்மஸ் இற்கு முன்பாக 2 தவணைகளும் கிறிஸ்மஸ் இற்குப் பின்பாக 3 தவணைகளுமாக ஒவ்வொரு தவணைகட்கும் இடையில் 2 கிழமை இடைவேளையுடன் குறுகிய 4 கிழமை கோடை விடுமுறையுடன் பாடசாலை தவணைகள் பிரிக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார்.

78ம் பக்கம் பார்க்க...

# பிரச்சனைகளற்ற கோடை...

77ம் பக்கத் தொடர்ச்சி...

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் கோடை கற்றலுக்கான தேசிய மையத்தின் படி (National Center for summer Learning) அநேகமான மாணவர்கள் தமது கோடை விடுமுறையின்போது கணிதபாட கணக்கீட்டு திறன்களில் பின்னடைவை அடைவதாக கூறப்படுகின்றது. இதன் காரணமாக ஆசிரியர்கள் அடுத்த வருட ஆரம்பத்தின்போது மீண்டும் பாடங்களை மீட்டல் செய்வதில் அதிக நேரத்தைச் செலவிட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

பெற்றோர் சரியான முன்னெச்சரிக்கைகளையும் திட்டமிடலையும் எடுப்பதன் மூலம் வளரிளம் பருவத்தினருக்கு கோடை விடுமுறையை ஓர் நன்மை பயக்கக் கூடியதும் நினைவில் வைக்கக் கூடியதுமான அனுபவமாக ஏற்படுத்தலாம்.

தற்போது நடைபெறும் பொருளாதார மந்தம் எல்லா மக்களையும் பாதிப்பதால் கோடை விடுமுறையில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செலவு கூடிய இடங்களுக்குச் செல்லுதல் சாத்தியமற்றதாக உள்ளது. எல்லாப் பிள்ளைகளும் இப் பொருளாதார கஷ்டங்களைப் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. இப் பொருளாதாரக் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளாத பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமிடையே வாக்குவாதங்கள் ஏற்படத்தான் செய்கின்றது.

கல்லூரி மாணவர்களைப் பொறுத்த வரையில் இந்நாட்களில் செலவு குறைவான பிரயாணங்களைக் கண்டறிவது மிகவும் சவாலானதாகும். உயர்ந்து நிற்கும் பெற்றோல் விலைகளினால் மோட்டார் வாகனம், ஆகாய விமானம் ஆகியவற்றில் பிரயாணம் செய்வது முன்னெப்போதுமில்லாதவாறு செலவு கூடியதாகவுள்ளது. முக்கியமாக கோடை காலத்தில் இதன் விலை அதிகமாக உள்ளதுடன், கோடையானது மிகவும் சுறுசுறுப்பான பிரயாண காலமாக உள்ளது.

அநேகமான பெற்றோர் தம்மால் செலவுகளைப் பொறுப்பேற்க முடியாத அளவிற்கு அதிகமாக இருப்பதன் காரணமாக இத்தகைய கோடை விடுமுறை நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றி அறிய முயற்சி செய்தும் பார்ப்பதில்லை. ஆனால் அவை பிள்ளைகளின் மனதையும், சமூக ஆற்றல்களையும் உடலையும் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க வைக்க உதவுகின்றன என்பதை மறந்து விட வேண்டாம். சில நிறுவனங்கள் இலவசமான நிகழ்ச்சித்திட்டங்கள், செலவு குறைவான பொழுதுபோக்குகள் பற்றி அறியத் தருகின்றன. சிறுவர் உதவி சமூகம் (Children's Aid Society), தென்னாசிய குடும்ப சேவைகள் (South Asian Family Services) போன்ற சமூக நிறுவனங்களில் இத்தகைய தகவல்களைப் பெற முடியும்.

கோடை பாசறைகள் (Summer camps) செலவுடையதாக இருந்த போதிலும் இதன் பயன்பாடுகள் பெறுமதி மிக்கவையாகும். அநேகமாக வளரிளம் பருவத்தினர் தமது நண்பர்களுடன் சுற்றித் திரிவதை விட கோடை விடுமுறையின் போது எதனையும் அதிகமாக விரும்புவதில்லை. எனினும் பாடசாலைக் காலத்தின் போது படிப்பில் கவனத்தைச் செலுத்தாது அதிகாரம் மிகுந்தவர்களை மதிக்காது சட்டத்திற்கு முரணாக எந்நேரமும் பிரச்சனைகளில் ஈடுபட்டு தவறான நண்பர்களுடன் திரிபவர்களுக்கு கோடை பாசறைகள், ஒரு அவசியம் தேவைப்படும், மாறுபாடான அனுபவத்தைக் கொடுக்கும். பிரச்சனைப்படும் வளரிளம் பருவத்தினர் பாசறையின்போது, குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகளை அணுகும் வழிவகைகளையும் திறன்களையும் கற்கும் அதே வேளை இது முழுக் குடும்பத்திற்குமே ஒரு ஆறுதலான இடைவேளையைக் கொடுப்பதாக அமையும்.

பாசறையின்போது, புதிய திறன்களைக் கற்றுக் கொள்ளுதல், பரிச்சயமற்ற இடங்களை கண்டறிதல், புதிய மக்களைச் சந்தித்தல், கால்நடையாக இயற்கைப் பிரதேசங்களில் சுற்றித் திரிதல், சவாலான குழு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன வளரிளம் பருவத்தினருக்கு ஆக்கபூர்வமாக நேரத்தைச் செலவிட சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. தொலைக்காட்சி, கணனிகள், வீடியோ விளையாட்டுக்கள் போன்ற வீட்டின் ஒரே மாதிரியான சௌகரியங்களில் இருந்து விடுபட்டு வித்தியாசமான பாசறை அனுபவத்தைப் பெறும் போது வளரிளம் பருவத்தினர் தம்மையும் மற்றவர்களையும் ஆழமாக அறிய ஆரம்பிக்கின்றனர். இது அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் பிரகாசமான எதிர்காலத்தையும் கொடுக்கின்றது.

கோடை பாசறைகள் பொதுவாக $100 இருந்து அதிகரித்துச் செல்வதாக அமையும். இது செலவு கூடியதாக இருந்தால் நம்பிக்கைக்குரிய நண்பர்களின் வீட்டிலோ அல்லது விருப்பத்திற்குரிய உறவினர்களின் வீட்டிலோ அவர்கள் விரும்பும் பட்சத்தில் ஓர் சில நாட்களை செலவிட அனுமதியுங்கள்.

உங்கள் வளரிளம் பருவ பிள்ளைக்கு இத்தகைய கோடை பாசறைகள் ஒத்துக் கொள்ளாவிடில், பிள்ளையை தன்னார்வ பணிகளில் (Volunteer work) ஈடுபடுத்துவதைக் குறித்து சிந்தியுங்கள். மிருகங்களின் புகலிடங்கள் (Animal shelters), ஆலயங்கள், வீடற்றவர்களின் புகலிடங்கள், பராமரிப்பு இல்லங்கள் (Nursing homes) போன்றவற்றில் ஈடுபடுத்தும் போது அவர்களது நேரம் பிரயோசனமாக செலவிடப்படுவதுடன் அவர்களுக்கென ஒரு நோக்கம், தன்னம்பிக்கை, தனிப்பட்ட பொறுப்புணர்வு என்பன ஏற்படவும் வழிவகுக்கின்றது. தன்னார்வ பணிகளில் ஈடுபடும்போது தன்னலமின்றி பணியாற்றுவதை அவர்களுக்கு கற்பிக்கும் அதே வேளை கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் போதும் அவர்களது சுயவிபரக் கோவைக்கும் (Resume) இது உதவியாக இருக்கும்.

வளரிளம் பருவத்தினரை சுறுசுறுப்பாக வைத்திருப்பதற்கான இன்னொரு நடவடிக்கை பகுதி-நேர வேலையாகும். அநேக பெற்றோர் தாம் வேலை செய்யும் இடங்களிலேயே சிறிய வேலைகளை தமது பிள்ளைகளுக்காக பெற்றுக் கொடுப்பதுண்டு. அல்லது உணவு விடுதிகள், மளிகைப் பொருட்கள் விற்கும் கடைகள் போன்றவற்றில் வேலை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க ஊக்குவிக்கலாம். குழந்தைகளை பராமரித்தல் (Baby sitting), புற்தரைகளை சுத்தம் செய்தல் போன்ற சிறிய வேலைகளின் மூலமும் மேலதிக பணத்தை பெற்றுக் கொள்ளலாம். பகுதி நேர வேலைகளின் மூலம் வளரிளம் பருவத்தினருக்கு திட்டமிடவும், நண்பர்களைப் பெற்றுக் கொள்ளவும், வேலை ஒழுங்கு நியமங்களைக் கற்றுக் கொள்ளவும், அதிகாரம் மிக்கவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடக்கவும், டொலரின் பெறுமானத்தை அறிந்து கொள்ளவும் உதவி புரிகின்றது.

அண்மையிலுள்ள வாசிகசாலைக்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று புத்தகங்களை வாசிக்கும்படி பிள்ளைகளைத் தூண்டுங்கள். இது பிள்ளையின் மூளைக்கும் உணர்வுகளுக்கும் ஆறுதலை அளிப்பதோடு பிள்ளையின் எழுத்தறிவை வளர்க்கவும் பெருமளவில் உதவுகின்றது. "வாசிப்பு ஒரு மனிதனை பூரணமானவனாக்கும்" (Reading makes a full man) என்ற பழமொழியை ஒருபோதும் மறக்க வேண்டாம். கோடை விடுமுறையில் அவர்கள் ஒவ்வொருநாளும் செல்லும் இடங்கள் பற்றியும் அவர்கள் செய்யும் செயல்கள் பற்றியும் கட்டுரை எழுதும்படி கூறுங்கள். இது அவர்களது எழுத்தாற்றலுக்கு உதவுவதாக அமையும்.

அநேகமான பாடசாலை பிரிவுகள் (School district) மாணவர்களுக்கு பகல் நேர நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றன. சில கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களுடன் பொழுது போக்கு அம்சங்களையும் கலந்து வழங்குகின்றன. உங்கள் பிள்ளையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு இத்தகைய திட்டங்களில் பிள்ளையைக் கலந்து கொள்ள வைப்பதையிட்டு யோசியுங்கள். இவை ஒப்பீட்டளவில் செலவு குறைவானதாகவே இருக்கின்றன.

அநேகமான ஆலயங்கள், சமூக குழுக்கள் என்பன மாணவர்களுக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை கோடை விடுமுறையில் வழங்குகின்றன. சில சமூக கல்வி மையங்கள் அல்லது அவ்வப் பிரதேசங்களில் உள்ள தனியார் கல்வி மையங்கள் ஓவிய வகுப்புக்களையோ அல்லது ஏனைய கைவினை (Craft) வகுப்புக்களையோ நடத்தலாம். சில கிறீஸ்தவ ஆலய இளைஞர் குழுக்கள் கோடையில் பிள்ளைகளை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருப்பதற்காக சில செயல்பாடுகள், நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றன.

புதிய மொழியைக் கற்றுக் கொள்ளல், வீட்டை ஒழுங்குபடுத்தல், வீட்டுத் தோட்டங்களைப் பராமரித்தல், நல்ல திரைப்படங்களைப் பார்த்தல், உடற்பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்றன வேறு சில வழிமுறைகளாகும்.

பூங்காக்கள், சமூக மையங்களின் நீச்சல் தடாகங்கள் என்பன செலவு குறைவான பொழுதுபோக்கு மையங்களாக அமைகின்ற அதே வேளை ரொறன்ரோ நகரத்தின் பல துறைகளில் குறிப்பாக கழிவகற்றல் (Garbage removal), சமூக மையங்கள் (Community Centres) ஆகியவற்றில் பணிப்புறக்கணிப்பு (Strike) நடைபெற்றமை உல்லாசமாக கோடை விடுமுறையை ரொறன்ரோ நகரப் பகுதி ஒன்ராறியோ ஏரிக் கரைகளில் (Beaches) கழிப்பதற்கு தடையாக அமைந்தது. இதற்கு கழிவறைகள், நீச்சல் தடாகங்கள் பூட்டப்பட்டமை காரணமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பின்வரும் தெரிவுகளை மேற்கொள்ளலாம்.

- வீட்டிற்கு அருகில் உள்ள பூங்காக்களுக்குச் செல்லுதல்
- கோடை விடுமுறையின்போது அநேக விழாக்கள் நடைபெறுகின்றன அவற்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லலாம்.
- செவ்வாய் கிழமைகளில் திரைப்படங்களின் நுளைவுச்சீட்டுகள் $5இற்கு விற்பனை செய்யப்படும்போது அழைத்துச் செல்லலாம் அல்லது பிள்ளைகளுக்கேற்ற காட்சிகளின் CDகளை எடுத்து வீட்டில் பார்வையிடச் செய்யலாம்.
- வீட்டினுள்ளிருந்து விளையாடக் கூடிய விளையாட்டுக்கள் விளையாடவிடலாம்.
- அடுத்த வகுப்புக்குச் செல்லுவதற்கு முன்பாக படிப்பில் ஆயத்தம் செய்தல்
- நூதனசாலைக்கு அழைத்துச் செல்லுதல் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளலாம்.

இந்த விடுமுறை இன்னும் ஒரு மாதத்தில் முடிந்து விடப்போகின்றது தானே என எண்ணி செப்டம்பர் வரை நாட்களை எண்ணிக் கொண்டிராது பிள்ளைக்கு உபயோகமான வழிவகைகளை சிந்தித்து செயலாற்றுங்கள். வீணாக்கப்பட்ட காலம் வீணாக்கப்பட்ட சந்தர்ப்பத்தையே குறிக்கும்.

உசாத்துணை:
http://www.aspeneducation.com/Article-summer-vacation-teens.html

http://www.familiesonlinemagazine.com/summer_students_camp.html

http://www.wctv.tv/home/headlines/19725729.html

http://pbskids.org/wayback/summer/tp.html

http://www.wikihow.com/Spend-Your-Summer-Vacation-Indoors-and-Outdoors

http://hubpages.com/hub/Keep_Kids_Safe_from_Strangers_in_Summer

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

ஆயுட்காப்புறுதி

For all your Insurance needs...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Life Insurance Broker

- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி (Life Insurance)
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான

உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
20% - 40% அரச மானியத்துடன்
15% அதிக போனஸ்

- Disability Insurance
- Non Medical Insurance
- RRSP & Investments



$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND
INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5

# ஆயுட் காப்புறுதி

**Universal Life • Whole Life • Term Life • Non Medical**

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**CRITICAL ILLNESS**
Upto 25 Illness

digi



**VASANTH VINAYAGAMOORTHY**
Insurance Broker
**647-885-3012**
www.vvinsurance.ca

759 Warden Ave., Toronto, ON M1l 4B5
Office: 416-759-5453, Fax: 416-759-6220




**Bedrooms: 2**
**Washroom: 1**

**Morningside/Finch**

Living Room & Sep. Laundry With an Eat-In Kitchen, Close To Ttc & Schools. Mins. To Hwy. 401, Mall, Hospital & Rec. Centre 5 appliances. One parking space.

**647.504.5474 / 416.893.2683**

Call for Rent! *Available June 1, Must see!!*





**Canada Murugan Kovil Mandapam**
**733 Birchmount Road**
(Birchmount & Eglinton)

## அழகிய பூஞ்செடிகள்

# கனகாம்பரம்

## (Crossandra, Firecracker flower)

**வீட்டுத் தோட்டம் - 18**



செல்லையா சந்திரசேகரி


### அறிமுகம்:

கனகாம்பரம் (Crossandra) குடும்பம் அக்கன்தேசியேயைச் (Family Acanthaceae) சார்ந்தது. இக்குடும்பம் ஏறக்குறைய 50 இனங்களைக் கொண்டது. ஆபிரிக்கா, மடகாஸ்ரர், அரேபியா, இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் பிரகாசமுள்ள அழகான பூக்களைத் தருவதால், வளர்க்கப்படுகின்றன. தென் இந்தியா, இலங்கை போன்ற வெப்ப மண்டல நாடுகளின் மஞ்சள், செம்மஞ்சள் நிறக் கனகாம்பரம் பூச்செடிகள் பூர்வீகமானவை. இவை அநேகமாக வீட்டுச் செடிகளாகக் கருதப்பட்டவை. இவற்றை எல்லோரும் இலேசாக வளர்க்க முடியும். கிரேக்க மொழியில் (Crossandra) "குறசாண்டிரா" என்ற பதத்தின் கருத்து "அலங்கரிக்கப்பட்ட மகரந்தப்பைகள்" காணப்படுபவை. சிறப்பாகப் பூவின் ஆண்பகுதியான மகரந்தப்பை தெளிவாக அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. (infundibulifomis) 'இன்பண்டிவ்புலிபோர்மிஸ்' என்ற பதம் 'புனல் அமைப்பாக' பூவின் தோற்றம் இருப்பதனால் பெயர் பெற்றது.

### வளர்க்கும் முறைகள்:

நன்கு காய்ந்த பூக்களிலிருந்து எடுக்கப்பட்ட வித்துக்கள் அல்லது கீழே விழுந்த வித்துக்கள் முளைத்து நன்றாக வளர்கின்றன.



ஒவ்வொரு பூவிலிருந்தும் ஒரு வித்துத்தான் விருத்தியாகும். வித்துக்கள் இலைதுளிர்கால ஆரம்பத்தில் வெப்பநிலை 60 பாகையாக இருக்கும்போது முளைப்பதற்கு பதிக்கலாம். செடிகளில் இருக்கும்போது வித்துக்கள் நன்கு உலர்ந்துவிடுகின்றன. இதற்கு சான்றாக முதிர்ந்த பழத்தினை எடுத்து நீரில் போடும் போது வித்துக்கள் சிதறித் தூர இடங்களுக்கு பரவுவதைக் காணலாம். இதனை 'வித்துக்கள் வெடித்துப் பரவுதல்' முறை எனக் கூறுவர். ஈரலிப்பு இருக்கும்போது 3-4 கிழமைகளில் வித்துக்கள் முளை கொள்ளும். முளைத்த நாற்றுக்கள், வித்துக்களின் திறனைப் பொறுத்து ஒரு சில மாதங்களில் வளர்ந்து விடும். இவற்றைக் கவனமாக வேறாக்கி புதிய இடத்தில் நடவேண்டும். ஈரலிப்பான நிலத்தில் பாத்திகளின் விளிம்புகளில் ஏறக்குறைய 30 செ.மீ இடைவெளி தூரத்தில் நடவேண்டும். உப்புக்கரைந்த இடம் தவிர்க்கப்படவேண்டும். ஏனெனில் சில வேளைகளில் போசாக்குக் குறைவுகள் செடிகளுக்கு





ஏற்படலாம். நாற்றுக்களை நடும் போது பீற்மொஸ், வளம்நிறைந்த மண் சரி பாதியாக சேர்த்துக் கொள்ளவேண்டும். அப்போது நல்ல செடிகளுக்கு நீரோட்டம் கிடைக்கும். நல்ல பசளையுடைய இடத்தில் போதிய சூரியவொளியும் ஈரலிப்பும் கிடைக்குமாயின் செடிகள் சுகாதாரமாக ஒரு அடி தொடக்கம் இரண்டு அடிவரை மேலாக வளர்ந்து கொண்டிருக்கும். பழைய செடிகளிலிருந்து எடுக்கப்படும் வெட்டுத்தண்டுகள் நிலத்தின் வெப்பம் சீராக இருக்கும்போது வேர்கள் விட்டு வளரக்கூடியவை. Firecrackle flower எனப்படும் பூர்வீக இனங்கள் வருடந்தோறும் நிலைத்திருக்கும் செடிகளாக பல ஆண்டு காலம் சுமார் மூன்று அடி உயரமாகவும் வளரக்கூடும்.

### வீட்டினுள் சாடிகளில் வைத்து வளர்க்கும் முறை:

சாடிகள் நன்கு நீர் வடியும் திறனுள்ளதாக அமைந்தால், வீட்டினுள் வளர்க்கும் பூக்கும் செடிகளில் கனகாம்பரமானது அதிக பூக்களைக் கொடுத்து நீண்ட காலம் அழகுபடுத்துபவையாகக் காணப்படுகிறது. குளிர்ப் பிரதேசங்களிலும் வீட்டினுள் சூரியவொளி கிடைக்கக்கூடிய இடத்தில் வைத்து சாடிகளில்தான் இவற்றை வளர்ப்பார்கள். கடுமையான பூச்சிகளின் அல்லது நோய்களின் தாக்கம் ஏற்படுவது மிக மிகக் குறைவென்றுதான் கூறமுடியும். ஏப்பிட்ஸ், ஈக்கள், திறிப்ஸ் போன்றவை சிலவேளைகளில் தாக்கலாம்.

### பூக்கள்:

பூக்கள், அமைப்பில் வேறுபாடான தோற்றத் தையுடையவை. நான்கு பக்கமுள்ள கதிர்த் தண்டில், மிகச்சிறிய, முக்கால் அங். நீளமான குழாயின் விளிம்புகள் ஒழுங்கற்ற பிளவுகளாக அல்லிகளை விட்டிருக்கும். பூக்கள் ஒலிப்பாகக் காணப்படும் பகுதிகளில் கடும் துலக்கமான பச்சைநிற இலைத்துளிர்கள் இருப்பது பூக்களை மேலும் அழகுபடுத்துகின்றன. பூக்கள் மொட்டிலிருந்து விரிவதற்கு இரண்டு நாட்கள் எடுக்கும்.

மஞ்சள், சிவப்பு நிறப் பூக்களையுடைய செடிகளும் நன்கு விருத்தி செய்யப்படுகின்றன. ஆனால் செம்மஞ்சள் நிறப்பூக்கள்தான் பெண்களுக்கு கூந்தல் அழகினை மேம்படுத்துவதற்காகப் பயன் படுத்தப்படுகின்றன. உதாரணமாகத் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் இப்பூக்கள் மல்லிகைப் பூக்களோடு சேர்த்து சிறிய அளவு நீளங்களில் கட்டப்பட்டு தெருவோரங்களிலும் சிறிய கடைப்பந்திகளிலும் வைத்து விற்பனை செய்வார்கள். இத்தகைய முறைகளில் மாலைகள் கட்டுவதால் ஒருவித கவர்ச்சியைக் கொடுக்கிற தென்பது குறிப்பிடத்தக்கது. இவை எல்லாப் பெண்களையும் கவரக் கூடியதாக இருப்பதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு பெண்களும் தமது கூந்தலில் வைத்து அலங்கரிப்பதில் கவனமும் செலுத்தி வருவதைக் காண்கின்றோம். இப்பூக்கள் தொகையாக கோயில்களில் விற்பனைக்கு வைக்கப்படும். பக்தர்கள் பூக்களைக் காணிக்கையாக இறைவனுக்குக் கொடுப்பார்கள்.

### பசளை:

இயற்கைப் பசளை சிறந்தது. இருந்தும் செயற்கையுரங்களும் பயன்படுத்தப்படும். யூறியா, பொசுபேற், பொற்றாஸ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உபயோகிக்கலாம். மழை காலத்தில் பசளை தேவையில்லை. சாடிகளில் செடிகள் வளரும்போது நீரில் கரையக்கூடிய 20-20-20 கலந்த பசளை ஒன்றவிட்ட ஒருகிழமையாக போடவேண்டும்.

### சில வேறுபட்ட இனங்கள்:

வர்த்தக ரீதியில் நான்கு இனங்கள் வளர்க்கப்படுகின்றன. செம்மஞ்சள், மஞ்சள், டெல்கி, சிவப்பு நிறங்கள் பிரத்தியேகமானவையாகும்.

- Crossandra infundibulifomis - yellow
- Crossandra nilotica - red pink
- Crossandra undulaefolia - orange
- Crossandra guineensis - delhi
- Crossandra pungens - gold
- Crossandra fortuna -yellow orange


sekari.s@thaiveedu.com

■ ■ ■

**Family Tapaceae - Tamarind:**

# புளியமரம்

**(Botanical name: Tamarindus indica : Eng.Name: Tamarind)**



புளியமரம் (Tamarind) குடும்பம் ரப்பேசியே (Family Tapaceae) குடும்பத்தைச் சேர்ந்தது. இது வெப்ப மண்டலங்களில் காணப்படும். ஆபிரிக்கா நாட்டின் பூர்வீக மரமானது, இந்தியாவிற்கு பல வருடங்களுக்கு முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்டது. மலேசியா, பிலிப்பையின்ஸ், இந்தோனேசியா, இலங்கை போன்ற நாடுகளில் வீதியோரங்களில் நிழலுக்காகவும், பழத்தின் சதைப்பற்று சமையலில் கறிகளுக்கு ஒரு முக்கிய ருசியினைக் கொடுப்பதற்காகவும் பயன்படுகின்றன.

இம்மரம் ஏறக்குறைய 50-60 அடி உயரயமாக வளரக்கூடியது, இது 200 வருடங்களுக்கு மேலாக வாழக்கூடியது. இம்மரம் எப்பொழுதும் பச்சை நிறமாக காட்சியளிப்பதும் வரட்சியான வெப்ப நிலைகளில் தாங்கி வாழக்கூடியதுமாகும். மரமானது நெருக்கமான பரந்த கிளைகளையுடையதாக இருக்கும். மரத்தின் முதிர்ச்சியான தண்டுகள் வெளிப்புறம் தடித்த மண்ணிறப் பட்டைகளால் மூடப்பட்டவை. உள்ளே மென்னையானதும் சதைப்பற்று உள்ளதுமான பகுதி காணப்படும். பழத்தின் சதைப்பற்றுள்ள பகுதி பதனிடப்பட்டு நீண்ட காலம் வைத்திருக்கும் முறையில் சந்தைப்படுத்தப்படும். விதைகள் அரைக்கப்பட்டு மாவானது வெப்பமாக்கி பசைபோன்றதாக்கி பற்கள் ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும். இலைகள், பூக்கள் மிகவும் பயனுள்ளதாகச் சாப்பிடக்கூடியவை. இதன் மரப் பலகைகள் அதி உன்னத பெறுமதியுள்ளவை, சில்லுகள், தளபாடங்கள் செய்வதற்கு உபயோகமாகின்றன. அதி சிறந்த அழகான மரங்களுள் ஒன்றாக புளிய மரத்தினை, உலக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.


HONDA
CHECKERED FLAG EVENT
INDY-INSPIRED PERFORMANCE
YOUR BUDGET CAN HANDLE.
PURCHASE FINANCING
AS LOW AS
0.9%
FOR 5 YEARS
ON SELECT MODELS
Accord EX-L V6
model CP3689JN
CR-V EX-L
model RE4879JN
Civic EX-L Sedan
model FA1509JNX
ACCORD
LEASE FROM/APR
$298
@2.9%
PER MONTH FOR 48 MONTHS WITH $3,073 DOWN
ON APPROVED CREDIT
$25,290 MSRP FOR ACCORD LX
JUNE BONUS DOLLARS
$1,000
CIVIC
LEASE FROM/APR
$178
@1.9%
PER MONTH FOR 48 MONTHS WITH $2,544 DOWN
ON APPROVED CREDIT
$16,990 MSRP FOR CIVIC DX SEDAN
Civic 11
CR-V
LEASE FROM/APR
$298
@2.9%
PER MONTH FOR 48 MONTHS WITH $4,315 DOWN
ON APPROVED CREDIT
$27,790 MSRP FOR CR-V LX
JUNE BONUS DOLLARS
$1,500
HONDA
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416)720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-4555 EXT. 2705, FAX: 416-754-9465


Let Serandib Travel Make Your Dream Vacations Come True.
your dream vacation awaits you . . .
We Do
• Sun-Fun Destinations • Vacation Packages
• Sight Seeing Tours • Pilgrimage Packages
• Via Rail / Euro Rail • Travel Insurance
• Hotels • Cruises
HOT VACATION PACKAGE DEALS
Cuba
$925* +taxes $210 Aug 15 - 22 Holguin - 7 Days Club Amigo Guardalavaca Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$945* +taxes $210 Aug 15 - 22 Cayo Coco - 7 Days Club Cojimar Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$665* +taxes $210 Aug 19 - 26 Santa Lucia - 7 Days Gran Club Santa Lucia Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$855* +taxes $210 Aug 15 - 22 Varadero - 7 Days Playa Caleta Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$885* +taxes $210 Aug 15 - 22 Havana - 7 Days Oasis Panorama Flight + Hotel + Transfers Meal plan: EUROPEAN PLAN
Dominican Republic
$935* +taxes $309 Aug 15 - 22 Punta Cana - 7 Days IFA Villas Bavaro Beach Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$955* +taxes $309 Aug 15 - 22 Santo Domingo - 7 Days Hotetur Dominican Bay Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
Jamaica
$795* +taxes $268 Aug 14 - 21 Falmouth - 7 Days SuperClubs Breezes Trelawny Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
$895* +taxes $309 Aug 14 - 21 Montego Bay - 7 Days Sunset Beach Rsrt Flight + Hotel + Transfers Meal plan: ALL INCLUSIVE
* Above hotel packages are subject to availability of rooms. Certain conditions and restrictions apply. Single passenger supplements extra.
FANTASTIC FALL SEAT SALES TO INDIAN DESTINATIONS
JET AIRWAYS
$1170.00 taxes INCL * Toronto - Brussels - Chennai Travel up to Sept 3th
ETIHAD AIRWAYS
$1090.00 +taxes * Toronto - Abu Dahbi - Chennai Travel up to Aug 30th
Emirates Toronto - Dubai - Chennai
$1650.00 +taxes * Travel up to Aug 23th
$1320.00 +taxes * Travel Period: Aug 24th- Sept 13th
ALL INDIA FARE
starting from $1170.00 taxes INCL*
Toronto - Brussels - Indian Destinations
• Cochin • Goa • Trichy • Trivandrum
• Bangalore • Mumbai • Delhi • Hyderabad
* Above fares are Seat Sale Fares. Taxes range from $47 - $411. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
Your Satisfaction is Our Success.
Serandib travel.com
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564 Montreal: 514.448.1389
Calgary: 403.770.9647 Vancouver: 604.625.0495
PATA ACTA
KLM

# மகரிசியின் மனவளக் கலை

என்னதான் பணம் கொட்டிக்கிடந்தாலும் அள்ளிக் கொடுக்க மனம் வரவேண்டும். பணம் கையில் இல்லாதவர்களே சரி போனால் போகிறதென்று நம்மால் முடிந்தது இவ்வளவுதான் என்று உதவி செய்யத் தயங்குவது இல்லை.

இக்கட்டான நேரங்களில் கை கொடுத்து உதவுவதென்பது எல்லாருக்கும் வரக்கூடிய சுபாவமல்ல. பயப்படாதீர்கள் என்ன வந்து விடப்போகின்றது. ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள் என்று மனிதன் படும் துன்பத்திலும் ஆறுதல் சொல்பவர்கள் இருக்கின்றார்களே. அவர்கள் உண்மையில் ஆண்டவனால் அனுப்பப்பட்ட அவனின் தூதுவர்களே.

துன்பப்படுபவர்களுக்கு உதவ பணம் கேட்பதே இன்றைக்கு கூச்சப்படக்கூடிய ஒரு காரியமாக இருக்கின்றது. காரணம் மற்றவர்களின் பணத்தில் வயிறு வளர்த்து, வீட்டு Mortgageஜ வளர்த்து, அழகிய BMWவை ஓடி எம்மக்களின் மனதில் தப்பானவர்கள் கையில் பணத்தைக் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தை வளர்த்துவிட்டது.

இதனால்தான் இன்றைக்கு நம்மில் பலர் நம்மவரில் பலரை நம்பாமல் வாழும் சூழல் உருவாகிவிட்டது. நம்ப நட நம்பி நடவாதே' என்று சொன்னது உண்மையாகிவிட்டதே என்று பலரும் அங்கலாய்ப்பது எமக்குத் தெரியும். ஆண்டவன் இருக்கின்றான் என்ற மனம் தோன்றுமானால் அதில் நமது வாழ்வுக்குத் தேவையான வெளிச்சம் நிச்சயம் தென்படும்.

இன்பங்களை இறையருள் தந்திருக்கின்றது. அவற்றை எல்லாம் அனுபவிக்க அமைதிதான் வேண்டும். சினம் அவற்றை எல்லாம் உதறித் தள்ளிவிடும். இந்த இழப்பு நமக்கு வேண்டாம். இயற்கை இன்பத்தை பூரணமாக அனுபவிப்போம். அறிவையும் அன்பையும் வளர்த்துக் கொள்வோம். கருணையைப் பெருக்கிக் கொள்வோம். ஒருவரோடு ஒருவர் ஒத்தும், உதவியும், இனிமையாக வாழ்வோம்.

முயன்று முயன்று சினத்தை ஒழித்துத்தான் ஆகவேண்டும். கோபம் செயல்பட வேறு நபர் இல்லாத சூழ்நிலையும் சில உண்டு. எதிரி இல்லாத போது அது தன்மீதே திரும்பும், அந்தச் சூழலில் அதனையே கவலை என்கின்றோம்.

மகளின் திருமணத்திற்காக வாங்கி வந்த அழகிய பரிசுப் பொருளை கைதவறுதலாக கீழே போட்டு விட்டவர் தலையில் அடித்துக் கொள்கிறார். அவருக்கு யார் மேல் கோபம்?

நாள் முழுவதும் உழைத்துக் களைத்துப் போன கணக்காளர் மாலையில் ஒரு கணக்கு பார்க்கும் போது ஒவ்வொரு முறையும் தப்பாக விடை வருகிறது. தலையில் குட்டிக் கொள்கிறார். அவருக்கு யார் மேல் கோபம்?

துன்பத்தை போக்கவோ, இன்பத்தை அடையவோ முயலும் போது அதற்கு ஏதேனும் தடை ஏற்பட்டாலும், அத்தடையை நீக்க முயலும் போது அது அதிக வலுப்பெற்றிருக்கக் கண்டால் அவ்விடத்தில் முயற்சியே கோபமாகிறது. கோபம் செயல்படமுடியாத இடத்தில் இது கவலையாக மாறுகின்றது. கோபம் எழுந்த கையோடு வெளிப்படுத்த வில்லையானால் அது இருப்புக் கட்டப்பட்டு வாய்ப்புக் கிடைக்கும் போது வஞ்சமாக மாறுகின்றது.

சினம் எழும்போது யார் மேல் எழுந்ததோ அவர்களை மன்னித்து சினத்தை ஒழித்து விட்டால் வஞ்சம் கொஞ்சமும் மிஞ்சாது. அல்லது தேவையானால், அளவான தண்டனையை விழிப்பு நிலை நின்று வழங்கும் சீரான தண்டனையை கொடுத்து சினம் எழவோ, தேங்கவோ இடமின்றிச் செய்துவிட வேண்டும். சினமே எழாதபோது அங்கே கவலைக்கும் வஞ்சகத்திற்கும் இடமேயில்லை.

'அறிவதனைக் கருவினிலே இணைத்துத் தவம் ஆற்ற ஐம்புலன்களே அமைதிபெறும். அறுகுணம் சீராம், அறிவுதன் விழிப்புநிலை பிறழாத தெளிவில் ஐந்து பெரும் பழிச்செயல்கள் விளைய வழியேது, அறிவு உயிரில் அடங்கி அந்நிலையில் மேலும் ஆழ்ந்து ஒடுங்கித் துரியம் நிற்க முன்வினைகள் போமே, அறிவு துரியாதீத நிலைநிற்க நிற்க ஆதியாம் மெய்ப் பொருளாம், ஆறும் பிறதவித் தொடரே.'

> “ பதுன்பத்தை போக்கவோ, இன்பத்தை அடையவோ முயலும் போது ஏதேனும் தடை ஏற்பட்டால், அத்தடை நீக்க முடியாமல் போகும்போது அவ்விடத்தில் முயற்சியே கோபமாகிறது. கோபம் செயல்படமுடியாத இடத்தில் இது கவலையாக மாறுகின்றது. ” கோபத்தை வெளிப்படுத்த வில்லையானால் அது இருப்புக் கட்டப்பட்டு வாய்ப்புக் கிடைக்கும் போது வஞ்சமாக மாறுகின்றது.

உள்ளத்தின் களங்கமாகிய நோய்களும், உயிரின் களங்கமாக விளங்குகின்ற வாழ்க்கைச் சிக்கல்களும் கவலையாக மதிக்கப்படுகின்றன. உடலுக்காயினும் மனத்துக்காயினும் சிக்கல்கள் வருகின்ற போது அந்தச் சிக்கல்களைச் சந்திக்க போதிய பலமில்லாத மனநிலையைக் கவலை என்கின்றோம். கவலை எந்தச் சந்தர்ப்பத்தில் தோன்றுகின்றது. நினைப்புக்கும் நடப்புக்கும் இடையே வித்தியாசம் வருகின்ற போது அச்சூழ்நிலையை மனத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத போது அந்த மனநிலையை கவலை என்கின்றோம்.

கவலை என்பது ஒருவகை மனநோய் தனது இயலாமையை உணர்ந்து நினைத்து அல்லது கற்பித்துக் கொண்டு வருந்தி அமைதி இழந்து இயங்குகின்ற மனோநிலைதான் கவலை. நினைப்பதற்கும் நடப்பதற்கும் இடையே காணும் முரண்பாடுதான் கவலைக்கு அடிப்படைக் காரணம். நடப்பவையெல்லாம் காரணத்தையொட்டிய தொடர் விளைவுகளே. அந்த இயற்கை ஒழுங்கமைப்பை உணர அறிவில் எழுகின்ற தப்புக் கணக்குத்தான் நினைப்பதில் தவறாக தவறாக விளங்குகின்றது. கவலையை உண்டுபண்ணுகிறது.

வாழ்க்கைச் சிக்கல்கள் பல காரணங்களால் விளைகின்றன. பெரும்பாலும் தன் அறிவில் உள்ள குறைபாடுகள் தான் வாழ்க்கை சிக்கல்கள் விளையக் காரணமாகின்றன. அறிவின் குறைபாட்டினால் இயற்கை நியதி தெரிவதில்லை. செயல் விளைவுத் தத்துவம் புரிவதில்லை. தவறு செய்தால் இன்னொரு நாளையோ அறிவிற்கோ உடலுக்கு துன்பம் விளையும் என்பது தெரிவதில்லை. இத்தகைய அறியாமையால் செய்த தவறுகள் காரணமாக பெருகிக் கொள்கின்ற துன்பங்களே வியாதியாகவும் வாழ்க்கைச் சிக்கல்களாகவும் நம்முன் எழுந்து நிற்கின்றன.

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உருளும் வாழ்வு எனும் கால கட்டத்தை கடந்துகொண்டிருக்கும் போது நான் யார் என்று தெரிவதில்லை என் மூலமென்ன? என் முடிவென்ன என்பதை விளங்கக் கொள்வதில்லை.

எனவேதான் சினத்தைத்தான் தவிர்க்க வேண்டும். அதுமாத்திரமல்ல ஒருவர் மீது நாம் சினம் கொள்வது அது நாம் அவர்மீது காட்டும் அவமதிப்பு ஆகும். ஒருவர் மீது சினம் கொள்கின்றபோது அவர்கள் படும் வருத்தம் ஒரு சாபமாக மாறுகின்றது. இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது பிறரை சினம் எவ்வாறு பாதிக்கின்றது என்பது நன்றாக தெரியவரும்.

ஓர் எண்ணம் மனதில் தோன்றி அதற்குப் பிறர் மனத் தூண்டுதல்தான் காரணம் என்று கண்டாலே நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தத் தீய எண்ணம் நம்மைப் பாவச் செயலில் இழுத்துவிட்டு துன்பத்திற்கு ஆளாக்கி வேடிக்கை காட்டும்.

இதைத்தான் "பெற்றேன் பல் பிறவி பிறர்க்கே உழைத்து ஏழையானேன்" என்றார் ஓர் ஆழ்வார்.

கருவமைப்பால் வரும் எண்ணமெல்லாம் நல்லதன தான் என்று சொல்வதற்கு இடமேயில்லை. தந்தை குடிகாரனாக இருந்த காரணத்தாலேயே நல்லவனாகவே இதுவரை இருந்துவிட்ட மகனுக்குத் திடீரென குடிக்கும் எண்ணம் வரக்கூடும். எனவே எண்ணத்தின் பின் வரும் செயலின்விளைவை முக்கியமாகக் கொள்ள வேண்டும். எந்த எண்ணத்தையும் உடனுக்குடன் அதன் வேரை ஆராய்ந்து வந்தோமானால் காலப்போக்கில் பிறர் எண்ணத்திற்கு ஆளாகாத விழிப்பு நிலை வந்து விடும்.

ஒரு எண்ணம் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, மனத்திற்கோ



திரு மகேசன்

உடல் உணர்ச்சிக்கோ ஊறுவிளைவிக்காமல் இருக்க வேண்டும்.

ஒருவர் இருக்கிறார். அவர் மிகவும் நல்லவர். அதற்காக அவர் அள்ளிக் கொட்டிக் கொடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்பது அவர் தலைவிதியல்ல. ஆனால் நல்லவர்கள் கெட்டதாக சரித்திரம் இல்லை. ஆனால், சோதனைக் காலங்கள் அவர்களைக் கடந்து செல்லும். இந்த சோதனையான காலகட்டத்தில் கண்ணை மூடித்திட்டித் தீர்த்து சினம் கொண்டு முண்டியடித்து மற்றவர் மனதை முறியடித்து தம் வாழ்க்கையை கெட்டவர்களாக்கிக் கொள்ளுகின்றார்கள். காலம் நின்று விடப்போவதில்லை. அது ஓடிக்கொண்டே இருக்கும். அதில் சோதனைகள், வேதனைகள், விருப்புகள், வெறுப்புகள் வந்து போய்க் கொண்டே இருக்கலாம். பொறுமை அவசியம். அந்தத் துன்பங்களை நீக்க வேண்டியது இறைவனே. நீக்க வேண்டிய இடத்தில் இறைவன் இருக்கின்றான். கருணை என்பது எங்கு பிறக்குமென்றால் உண்மையிலேயே மெய்ப்பொருளை உணரும் போதுதான் கருணை பிறக்கும்.

இவனைத் தெரிந்துகொண்டால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அப்போதுதான் மனிதன் மனிதனாக வாழ முடியும். மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அடையமுடியும். அதற்காகவே நாம் எல்லோரும் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எந்த வழியிலேயே ஒருவர் முன்னால் போனார் மற்றவர்கள் பின்னால் வந்துகொண்டிருக்கின்றார்கள். தெரிந்தவர்கள் தெரியாதவர்களை வழிநடத்தி அணைத்துக்கொண்டு போகின்றார்கள். அதுதான் நீங்களும் நானும் கூடி ஒருவர் அனுபவத்தை ஒருவருக்கு சொல்லிக் கொடுக்கின்றோம். சிறிது முன்னே பின்னே வந்தவர்களாதலால் சில வகையில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

யாருக்கும் எத்துணையும் பேதமில்லை. நான் என் அனுபவத்தை உங்களுக்குத் தருகின்றேன். எனக்குச் சிலர் தங்கள் அனுபவத்தை தருகின்றார்கள். அனைவரும் சமமாக இந்த உலகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்நிலையில் எல்லா உயிர்களும் ஒரே நிலை என்ற எண்ணம் எழவேண்டும். சில கொள்கைகளை வைத்துக்கொண்டு, அதிலே எல்லை கட்டிக் கொண்டு சட்டம் போட்டுக் கொண்டு அதைத் தாண்டவும் கூடாது. அதிலே குறைக்கவும் கூடாது என்ற கொள்கையை வைத்துக் கொண்டால் மனிதனுக்கு மதம் பிடித்துவிடும்.

மனிதனை மனிதன் மதித்து வாழப்பழகி, உதவப்பழகி, கரம்நீட்டிப் பழகி வந்தால் வாழ்வு சிறக்கும். அதைவிட்டு கூலி கொடுப்பவனுக்கே குறி வைத்து எப்போ இவருக்கு ஆப்பு வைக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருப்போமானால் ஏறிய ஏணியிலிருந்து மல்லாக்கவே விழ வேண்டிய நிலை ஏற்படும். ஏற்றிய ஏணி தீபம் போன்றது. அதனை அணைத்துவிடாது காப்பதே மனிதப் பண்பு.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416-400-6406

digi

# மரக்கறிப்பிரியர்களாக உங்களை மாற்றுங்கள்



மஞ்சுளா ராஜலிங்கம்

உலகத்தைப் பொறுத்தவரையில் மரக்கறி உண்பதற்குப் பொருளாதார நிலையும் ஒரு காரணம் என்று நம்பப் படுகின்றது. பல நாடுகளில் மாமிசம் என்பது ஒரு விலையுயர்ந்த உணவாக இருப்பதால் விஷேட நாட்களில் மட்டும் மாமிசம் சாப்பாட்டில் சேர்ப்ப தென்பது இருந்து வருகிறது. இதனால் மாமிசத்தை முழு உணவாக உண்ணனது பக்க உணவாகவே உண்ணும் பழக்கம் இருக்கிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் மரக்கறி உணவுப் பதார்த்தங்கள் விலை அதிகமில-



லாத போதிலும், விலையைவிட மற்ற விளைவுகளை கருத்தில் கொண்டு, மக்கள் மரக்கறிப்பிரியர்களாக மாறிக் கொண்டு வருகின் றார்கள்.

பெற்றோரின் விருப்பம், சமய நம்பிக்கைகள், உடல் ஆரோக்கிய முக்கியத்துவங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டே தற் போது பலர் மரக்கறி உணவை விரும்பிச் சாப்பிட விளைகிறார்கள். அதிலும் பலர், மிருகவதை மற்றும் சுற்றுச்சூழல், சுகாதாரம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மாமிசத்தை உணவில் சேர்க்க விரும்புவதில்லை. ஒவ்வொருவருக்கும் மரக்கறி உணவைச் சாப்பிடுவதற்கு, ஒன்றல்ல, பல காரணங்கள் இருக்கின்றன.

மரக்கறி நமக்கு நிறைய புரதச் சத்தைக் கொடுக்கின்றது என்பதில் ஐயமில்லை, அதேசமயம், அந்த மாமிச வகையானது எக்கசக்கமான கொழுப்பையும் (உடலுக்குத் தேவையற்ற) கொடுக்கின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. இவை உடலில் தங்கிவி டக் கூடிய கொழுப்புக்கள். ஆனால் மாமிசத்தைத் தொடாமல் விடுவதன் மூலம், உடலில் சேரும் கொழுப்பின் அளவைக் குறைப்பதுடன், நல்ல கொழுப்பென்று கருதப் படும் கொழுப்பை சில மரக்கறி உணவு வகைகளின் மூலம் உடலுக்குத் தேவை யான அளவில் சேகரித்துக் கொள்ளலாம். நன்மைகள் என்னவெனில், மரக்கறிப்பிரி யர்களுக்கு இதயநோய்கள் குறைந்த அளவில் வருவதுடன், புற்றுநோய், மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை கட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் அல்லது வராமலே தடுக்கக் கூடிய சாத்தியங்கள் மிக.

மற்றும் மாமிச வகைகள், விற்க, தயாரிக்க, உற்பத்தி செய்யப்படும் இடங்களில், சரியான வகையில் பதப்படுத்தப்படாவிட்டால், அவற்றில் பக்டீரியா போன்ற கிருமிகள் ஊடுருவி, அந்த உணவுப் பதார்த்தத்தையே நச்சுத்தன்மை உள்ள ஒன்றாக உருவாக்கி விட வாய்ப்புகள் அதிகம். அதுபோல், நாம் வீட்டிலும், சரியான விதத்தில் சேகரித்து, சமைத்து, பதப்படுத்தி உண்ணாவிட்டால், அங்கும் தீமைகள் அதிகரிக்க வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

அடுத்து, இதற்காக வளர்க்கப்படும் மிருகங் கள், பறவைகள் ஆகியவற்றை விரைவாக வளர்த்து விற்பதற்காக அவற்றை ஒரு குறுகிய காலகட்டத்திற்குள்ளேயே (உதாரணமாக: பதினாறு மாதத்தில் வளர்க்க வேண்டிய மாட்டை, ஒரு மாதத்திற்குள்ளேயே அசுரத்தனமாக வளர்த்துவிடும் வித்தைகள், மருந்துகள் மூலம் நடைபெறுகின்றது.), அவற்றைச் சந்தைப்படுத்தி இலாபம் காணத் துடிக்கும் நிறுவனங்கள், இவையெல்லாம் மனிதர்களிடையே நீண்டகால நோயைத் தோற்றுவிக்கும் உத்திகள், நம் கண்ணிலும், மனதிலும் படுவதில்லை. இதுவும் ஒருவித, மறைமுகமான மிருகவதை என்பதைக் கொஞ்சம் சிந்திப்பதில்லை.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான மரக்கறி உணவுமுறையைக் கடைப்பிடிப்பதுண்டு. உண்மையான மரக்கறிப்பிரியர்கள் எனப்படு வோர், மாமிசத்தையோ, கடலுணவுப் பொருட்களையோ சாப்பிட மாட்டார்கள். lacto-ovo vegetarian எனப்படுபவர்கள் பால் மூலம் தயாரிக்கப்பட்ட உணவுகளையும், முட்டை யையும் மட்டும் சாப்பிடுவார்கள். lacto vegetarian என்று சொல்லப்படுவோர், பால் உற்பத்தி வகைகளை உட்கொண்டாலும், முட்டைச் சமாச்சாரங்களை உணவிலிருந்து விலக்கி விடுவார்கள். அதுபோல், ovo vegetarian வகையினர், பால் உற்பத்திப் பொருட்களை விலக்கி, முட்டை சேர்ந்த உணவுவகைகளை மட்டும் சாப்பிடுவார்கள்.

கடைசியில் குறிப்பிடப்பட்ட முறையில் உணவுகளைச் சாப்பிட விளையும்போது, உடலில் வைட்டமின் மற்றும் இன்னபிற சத்துப் பற்றாக்குறைகளும் ஏற்படுகின்றன. அதுவும் வளரும் பிள்ளைகளாக இருந்தால், இம்மா திரிச் சாப்பாட்டுப் பழக்கவழக்கங்கள் இருக்கும் தறுவாயில் போதியளவு புரதச் சத்தும், கல்சியமும் உள்ள உணவுவகைகளைத் தேர்ந்தெடுத்து உண்பது சரியான வளர்ச்சிக்கும் உடல் பலத்திற்கும் போதிய சத்தைக் கொடுக்கும். இம்முறை மரக்கறி உணவுமுறையைக் கடைப்பிடிக்க விரும்புபவர்கள் முதலில் இதற்கெனப் பிரத்தியேகமாக உள்ள மருத்துவ சம்பந்தப் பொறுப்பிலுள்ளவர்களிடம் ஆலோசனை கேட்டு அதன்படி நடந்தால், நல்ல பலன் உண்டு.

Semi-vegetarian எனப்படுபவர்கள் காய்கறிகளுடன் கூடுதலாக மீனையும் அத்துடன் கொஞ்சமான பறவை இறைச்சி வகைகளை யும் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்வார்கள். இதில் காய்கறிப்பின், விதைகள், பழங்கள், தானியக் கதிர்கள், பருப்புக்கள் முதலியன அடங்கும். Pesci vegetarians எனப்படுபவர்கள் மீனைச்சேர்த்தாலும் மேற்கூறிய இறைச்சி வகைகளைத் தவிர்ப்பவர்களாவார்கள்.

சற்றே சிந்தியுங்கள். இவ்வாறான உணவுப் பழக்கவழக்கத்தைக் கடைப்பிடிப்பது வளரும் பிள்ளைகளுக்கு உகந்ததா?.

நல்ல, திட்டமிட்ட அளவில் உணவுச் சேர்க் கை இல்லாதிருப்பின், இதை வளரும் பிள்ளைகளுக்குத் திணிக்காமல் இருப்பதே நலம். பல வருடங்களுக்கு முன், அமெரிக்காவில் மாமிச வகைகளைச் சாப்பிடாதிருப்பது ஒரு வழக்கத்திற்கு மாறான ஒரு செயலாகக் கருதப்பட்டது. காலப்போக்கில் இந்த வழக்கம் மாறிவிட்டது. அமெரிக்காவில் சிறிய அளவிலான மக்கள் மரக்கறி சாப்பிடுகின்றார்கள், ஆனால் இவ்வழக்கம் வரவரக் கூடிக்கொண் டே போகின்றது. அமெரிக்க ஆராய்ச்சிக் கழகங்கள், இவ்வாறு மரக்கறி உணவு வகைகளைச் சாப்பிடுவது காலப்போக்கில் பலவித நோய்களையும் கட்டுப்படுத்த உதவும் என்பதை வலியுறுத்தி மக்களின் மனதில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

அப்படியானால், இதனால் உங்களுக்குள்ள பயன் என்ன? ஏற்கெனவே நீங்கள் மரக்கறிப்பிரியராக இருந்தால், அல்லது அவ்வாறு மாறிக்கொண்டு வர முயற்சி செய்கின்றீர்கள் என்றால், நீங்கள் நல்லதோர் முடிவைச் சேர்கின்றீர்கள் என்றுதான் அர்த்தம். நல்ல, விதவிதமான, அருமையான காய்கறி உணவு வகைகள் மளிகைக் கடைகளில் கிடைக்கும் என்பதுடன், பள்ளிக்கூடங்களும், பலவித உணவுச்சாலைகளும் கூட, நல்ல பலன் கொடுக்கும் மரக்கறி உணவு வகைகளை அறிமுகப்படுத்துகின்றன.

மரக்கறி உணவு சாப்பிடும் தறுவாயில் இரும்புச்சத்து, கல்சியம், புரதச்சத்துக்கள், வைட்டமின் D, வைட்டமின் B12, zinc போன்றவை சரியான அளவில் இருக்க வேண்டும்.

மரக்கறிப்பிரியராக மாறவேண்டும் என்று நினைத்தாலே, உடன் இறைச்சி வகைகளைத்தான் முதலில் விட்டுவிட வேண்டியிருக்கும். ஆனால் ஒரேயடியாக இறைச்சியைத் தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்தால் மரக்கறி உணவாளராக வரக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும்.

முதலில் மாட்டிறைச்சி மற்றும் பன்றியிறைச்சி போன்றவற்றை சிலவாரங்களுக்குத் தொடர்ச்சியாக தவிர்த்துப் பாருங்கள். பின்னர் மெதுவே, கோழி இறைச்சியைத் தவிர்த்து சில மாதங்களுக்குள், மீனையும் தவிர்த்தால், வந்தது மரக்கறி உணவுப் பழக்கம்.

இறைச்சியை மெதுவே தவிர்க்கும் தறுவாயில், pork chops, hamburgers, steak போன்றவற்றை உண்பதைத் தவிர்த்து, இம்மாதிரி இறைச்சி வகைகள், soup, pizza, lasagna போன்றவற்றில் சிறிதளவு சேருமாற்போற் உண்ணலாம். இதனால், உங்கள் தட்டில் பெரியளவில் இறைச்சி வகைகளைக் கண்ணால் பார்ப்பதை முதலில் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

வீட்டில் மாமிசம் சமைக்கும் பழக்கத்தை விடுங்கள், ஆனால் உறவினர், நண்பர் வீடு

85ம் பக்கம் பார்க்க...

TRAFFIC TICKETS!
● SPEEDING ● STOP SIGN
● RED LIGHT ● ACCIDENT
● CARELESS ● TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே
CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

களில், மற்றும் உணவுச்சாலைகளில் மாமிசம் சாப்பிடுவதைத் தொடரலாம். இப்படிச் செய்துவரும் காலங்களில் மெதுவாக மாமிசத்தின் புறக்கணிப்பை வெற்றிகரமாக வாழ்க்கையில் பின்பற்ற இலகுவாக இருக்கும்.

மேற்கூறப்பட்டவற்றில் ஏதாவது ஒருவிதத்தைப் பின்பற்றி உங்கள் மாமிசம் உண்ணும் பழக்கத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டால், பின்னர் மாமிசத்தைப் புறக்கணிப்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. இதற்குப் பதிலாக என்னவிதமான உணவுப் பதார்த்தங்களை உங்கள் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம் என்பதையும் இத்தருணத்தில் ஆராய்ந்து வைத்து, அவற்றை அடிக்கடி உணவில் சேர்க்கத் தொடங்குங்கள்.

மரக்கறிப்பிரியர்களாக மாறுகின்றோம் என்பதற்காக, கண்டமாதிரி நொறுக்குத் தீனிகளையும் சாப்பிடலாம், நம் உடம்பு “சிக்கென்று” இருக்கும் என்று ஒருபோதும் தப்பர்த்தம் பண்ணிக்கொள்ளல் கூடாது. மரக்கறியிலும், சரியான அளவு, சத்து முறைகளில் உணவை உட்கொள்ளாது விட்டால், நிச்சயம் நம் எடைகூட வாய்ப்புண்டு. Coke, pizza, chips, French fries மற்றும் எண்ணெய் பாவித்து செய்த உணவு வகைகளை அளவுக்கணக்கில்லாமல் உட்கொள்ளலும் சரியில்லை. ஆனால் உடல் பருமனைக்குறைக்க வேண்டுமென்றாலே அதிகளவில் மரக்கறி உணவுவகைகளைச் சாப்பாட்டில் சிறிதுசிறிதாகச் சேர்த்து வருதல் நலம்.

உணவைச் சமைப்பதிலும், எல்லாவிதமான, சமையல் முறைகளையும் தூக்கி ஒரேயடியாகத் தவிக்கத் தேவையில்லை. வழமையாக சமைக்கும் முறையில் மாமிசம் இருந்தால், அதற்குப் பதிலாக வேறுவகையான காய்கறிகள், tofu, soymeant போட்டு அதே உணவுவகைகளைத் தயாரிக்கலாம். Spaghetti with marinara sauce, veggie pizza மற்றும் cashew curry போன்ற உணவுவகைகள் ஒரு மாறுதலாக அதேசமயம், இறைச்சிவகைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய ஒரு உணவுப் பதார்த்தமாக இருக்கும். சில வகை உணவுத் தயாரிப்புக்களை மாமிசம்போல் மரக்கறி கொண்டு தயாரிப்பதால், இவைகள் எல்லாருக்கும் பயன்படக்கூடிய ஒரு உணவுவகைப் பதார்த்தங்களாக இருக்கின்றன.

மரக்கறி உணவுவகைகளைச் சமைக்கும் ஒருநாளில், தாராளமாகவே சமைத்துக் குளிர்சாதனப்பெட்டியில் வைத்துப் பதப்படுத்தினால், மறுநாளும் வைத்துச் சாப்பிடுவதுடன், அவைகளின் சுவை கெடுவதில்லை, மற்றும் சமைக்கும் ஓரிருநாளும் மிச்சமாகும்.

சில மரக்கறி உணவுப் பதார்த்தங்களில் மாமிசத் தொடர்புகள் மறைமுகமாக கலக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிந்து கொள்ளல் நல்லது. வெளியிடங்களில் சாப்பிடும்போது, இதைப்பற்றிப் பரிமாறுபவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாமாக பதப்படுத்தப் பட்டவைகளை வாங்கும்போது, அதில் ஒட்டியிருக்கும் பொருளடக்கக் குறிப்புக்களில் இருந்து அதைத் தெரிந்து கொள்ளலாம்.

gelatin ஆனது ஒருவகை மாமிசச் சேர்க்கையாகும். Kosher என்று யூதர்களால் கருதப்படும் உணவு வகைகளானது மரக்கறி என்ற வகையைச் சேராது. சர்க்கரை (sugar), சில எலும்புகளின் துணையுடன் பதப்படுத்தப் படுகின்றது

காய்கறிகளைச் சாப்பிடுவது உடலுக்கு நல்லதுதான், ஆனால் மாமிசம் மற்றும் மீன் வகைகளால் கொடுக்கப்படும் சத்துக்களுக்கு ஏதுவான மரக்கறி உணவைப் பழக்கத்தில் கொண்டுவரல் வேண்டும். நிறைய காய்கறிகள், பழங்கள், மற்றும் தானிய வகைகளையும் உணவில் அன்றாடம் கட்டாயம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இதற்கான புத்தகங்கள் மற்றும் இவைசார்ந்த எழுத்துப் படைப்புக்கள் இருந்தால், அவற்றைப் படித்து, தீர ஆராய்ந்து நல்ல முறையில் உங்கள் மரக்கறி உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கலாம்.

உங்கள் உறவினர்களிடமும், நண்பர்களிடமும், நீங்கள் ஒரு மரக்கறிப்பிரியராக மாறி விட்டீர்கள் என்பதைச் சொன்னால், ஒரு சிலர் மட்டுமே உங்களுக்கு முதலில் ஆதரவுக் கரம் நீட்டுவார்கள். மற்றவர்கள் அதைக் கொஞ்சம் மாறாக எடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் நிறைய உள்ளன. சிலபேர் கங்கணம் கட்டிக்கொண்டு, “மீண்டும் நீ மச்சத்திற்கு மாறுகின்றாயா இல்லையா என்றுபார்”, அல்லது “உன்னை திருப்பியும் எப்படி மாற்றிக் காட்டுகிறேன் பார்” என்று உங்கள் முடிவுக்கு வில்லனாய் நிற்பார்கள். புறக்கணியுங்கள். மனதில் உறுதியைக் கடைப்பிடித்து “என்னால் என் முடிவில் நிலைத்துநிற்க முடியும்” என்பதை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டுங்கள். கொஞ்ச நாட்களில் அவர்கள் ஓய்ந்து விடுவார்கள்.

நண்பர்கள் நம் முடிவை ஆதரிக்காத பட்சத்தில், அவர்களுடன் சேர்ந்து, ஒன்றாக உணவுச் சாலைகளிலிருந்து உணவைச் சாப்பிடுவதென்பது தொடக்கத்தில் ஒரு இக்கட்டான, இறுக்கச் சூழலை ஏற்படுத்தும்.

தன்னம்பிக்கையும், நல்ல உடல், மன விருத்தியும் வாழ்க்கையில் அமையப்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■


# Private Tutoring

## French

For grade 4 to grade 10

By a native French speaking teacher

Intersection

**Victoria park and Ellesmere**

**Tel: 647 262 9430**

# சகல சட்டத் தேவைகளுக்கும்

**Real Estate Law**

Purchase, Sale & Mortgage

**Immigration Law**

Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit

**Business Law & Commercial Law**

**Accident Benefit Claims**

**Translation Services**

Tamil, English & Sinhala languages



தமிழ் வழக்கறிஞர்

Raphael Maharaja

Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON
M1S 0C2

from the firm foundations of creative photos

la photographie est un art





digimedia creations

**karuna photography**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# கோழி முட்டை சத்தான உணவு - உயிர் ஆபத்தும் உள்ளது

- சிவா சுப்ரா -

மனிதர்களுக்கு புரதம் மிக மிக முக்கிய மானது. நொதியங்கள், ஓமோன்கள் என்று மனித உடலைக் கட்டுப்படுத்தும் அனைத் துமே புரதத்தினால் ஆக்கப்படுகின்றன. இந்த புரதங்களை உருவாக்க 20 விதமான அமினோ அசிட்டுகள்( 20 different amino acids)உடலுக்குத் தேவை. ஆனால் இதில் ஒன்பது வகையான அமினோ அசிட்டுகளை மனித உடலால் ஒருபோதும் தயாரிக்கவே முடியாது. அவை மனித உடலுக்கு உண் ணும் புரத உணவுப்பொருட்களில் இருந்தே பெறப்படவேண்டும். ஆச்சரியமாக இந்த கோழி முட்டையில் மனித உடலால் தயாரிக்க முடியாத அந்த ஒன்பது அமினோ அசிட்டுகளும் உள்ளன. இதன் காரணமாக முட்டை மனிதருக்கு மிக அத்தியாவசிய மான ஒரு உணவுப் பண்டமாக இருக் கின்றது.

இதை விடவும் மனிதருக்குத் தேவையான விட்டமின்கள், கனியுப்புகளையும் முட்டை கொண்டுள்ளது. அதற்காக தினமும் ஒருவர் பத்து முட்டைகளை சாப்பிட முடியாது. ஏன் என்றால் முட்டையில் கலோஸ்ரோல் என் கின்ற கூடாத கொழுப்பு உள்ளது. அது எமக்கு மாரடைப்பை ஏற்படுத்தும். இது உயிர் ஆபத்தில் முடியும். எனவே முட்டை யையும் அளவாகவே உண்ணவேண்டும்.

மனிதருக்கு ஒருநாளுக்கு 300மில்லி கிராம் கலோஸ்ரோல் மட்டுமே தேவை. அதற்கு அதிகமாக நாம் உட்கொண்டால் அது குருதிக் குழாய்களில் படிந்து அடைப்பை ஏற்படுத்தி, மாரடைப்பை ஏற்படுத்தும். ஒரு பெரிய முட்டையில் தற்போது 194 மில்லி கிராம் கலோஸ்ரோல் உள்ளது. ஆனால் நாள் ஒன்றில் நீங்கள் முட்டை மட்டும் உண்பதில்லை. வேறு இறைச்சிவகைகள்,



எண்ணேய் மற்றும் பட்டர், மையனைஸ் என்று கலோஸ்ரோல் உள்ள பண்டங்களை யும் உண்பதால் கலோஸ்ரோல் தொடர் பாக மிகுந்த அவதானம் தேவை.

தற்போது கோழி முட்டையில் இன்னொரு வகையான முட்டை சந்தைப்படுத்தப்படு வதை பார்த்திருப்பீர்கள். ஒமேகா- 3 என்ற fatty acids( Omega-3 fatty acids) சேர்க் கப்பட்ட முட்டைகள் கடைகளில் விற்கப் படுகின்றன.

இந்த Omega-3 fatty acids நமக்கு பெரும் நன்மைகளைச் செய்கின்றது. நமக்கு இரத் தத்தில் உள்ள, மாரடைப்பை ஏற்படுத்தக் கூடிய கூடாத கலோஸ்ரோலை நல்ல கலோஸ்ரோலாக இந்த Omega-3 fatty acids மாற்றுகின்றது. எனவே முட்டையை தெரிவு செய்யும் போது Omega-3 fatty acids சேர்க்கப்பட்ட முட்டையை தெரிவு செய்யுங்கள். இது வழமையான முட்டை யை விட ஒரு டொலர் அதிகமாக இருக் கலாம். ஆனால் உங்கள் உயிரை அது பாதுகாக்கும்.

அதே சமயம் கோழி முட்டையினை உண் பதால் தொற்று நோய் ஏற்படுகின்ற வாய்ப்பு உள்ளது. ஆனால் அந்த வாய்ப்பு மிகக் குறைவானது மனிதர்களுக்கு அதி ஊட்டச் சத்து நிறைந்த உணவாக இருக்கின்ற வேளை, பற்றீரியாக்கள் வளர்வதற்கும் உரிய உணவூட்டங்களைக் கொண்டுள்ளது இந்த முட்டை.

> “ உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த வயோதிபர்கள், இன்னமும் உரிய நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாத குழந்தைகள், கர்ப்பிணிகள் மிக எளிதில் இந்த தொற்றினால் பாதிப்படைகின்றனர். ”

சல்மொனெலா(Salmonella) என்ற பற்றீரியா முட்டைக்குள் இருப்பதும் கண்டறியப்பட் டுள்ளது. அது 20,000 முட்டைக்கு ஒரு முட்டையில் இருக்கின்றது என்று அமெரிக் காவில் கண்டறியப்பட்டுள்ளது. அதே சம யம் முட்டையின் ஓட்டில் பற்றீரியா ஒட்டிக் கொண்டிருப்பதற்கும் சந்தர்ப்பம் உள்ளது. அதனால் முட்டை விற்பனைக்கு வருமுன் கழுவப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்படு கின்றது.

இதேசமயம் நாமும் முட்டைகளை உடைப் பதற்கு முன் கழுவுவதன் மூலமும், கடை யில் வாங்கிவரும் போது முழுமையாகவோ அல்லது சாடையாகவோ முட்டைக்கோது உடைந்து காணப்படுகின்ற முட்டைகளை எறிந்து விடுவதன் மூலமும் முட்டையினால் ஏற்படக் கூடிய ஆபத்தை தவிர்க்க முடியும்.

கடையில் இருந்து நாம் வாங்கிவருகின்ற முட்டையில் சல்மொனெலா இருக்கின்றதா? இல்லையா என்பதை கண்ணால் பார்த்து கண்டுபிடிக்கமுடியுமா? முடியவே முடியாது. முட்டை உடைந்திருந்திருந்தால் சந்தேகப் படலாம். ஆனால் உடையாத முட்டையி லும் சல்மொனெலா இருக்கலாம். இந்த முட்டையை சாப்பிட்டால் நமக்கு நோய் தொற்றிக்கொள்ளுமா?

சல்மொனெலா கிருமிகளைக் கொண்ட முட் டையை குளிர்சாதனப்பெட்டியில் பாதுகாப் பாக வைத்து பின்னர் அதை பொரித்தோ, அவித்தோ உடனடியாக சாப்பிடுவதால் எமக்கு தொற்று ஏற்படாது. ஆனால் அதே சமயம் இந்த முட்டையை குளிர்சாதனப் பெட்டியில் இருந்து எடுத்து பல மணிநேரம் வெளியில் அறைவெப்பநிலையில் வைத்து பின்னர் பூரணமாக சமைக்காமல் உண்ப தால், அல்லது இந்த முட்டையை எடுத்து ஏதாவது இனிப்பு வகைகள் செய்து அதை அறைவெப்பநிலையில் பல மணி நேரம் வைத்து பின்னர் பூரணமாக சமைக் காமல் உண்பதால் நமக்கு சல்மொனெலா தொற்று ஏற்படும். அதை ஆங்கிலத்தில் Salmonellosis என்று அழைக்கின்றார்கள்.

இதற்குக் காரணம் சல்மொனெலா தொற் றுள்ள முட்டையையோ,தொற்றான முட்டை யில் தயாரிக்கப்பட்டு சமைக்காத அல்லது முழுமையாக சமைக்காத உணவுப்பண்டங் களையோ குளிர்ச்சாதனப் பெட்டிக்கு வெளி யில் வைப்பதேயாகும். இதன் காரணமாக சிறிய அளவில் உணவில் உள்ள சல்மொனெலா கிருமிகள் குறுகிய நேரத் தில் பல்லாயிரம், இலட்சம் என்று பல்கிப் பெருகுகின்றன.

நான்கு பாகையில் இருந்து அறுபது பாகை C வெப்பநிலை கிருமிகள் பல்கிப்பெருகி உருவாவதற்கு உரிய வெப்பநிலையாகும். ஒரு இருபது நிமிடம் கிருமிகளை இந்த வெப்பநிலையில் வைத்திருந்தால் அவை இரண்டு மடங்காகும். இன்னமும் இருபது நிமிடத்தில் முதல் இருந்த எண்ணிக்கையில் இருந்து நான்கு மடங்காகவும், அடுத்த இரு பது நிமிடத்தில் முதல் இருந்த எண்ணிக் கையில் இருந்து எட்டு மடங்காக அதி- கரித்து இருக்கும். ஒரு கிருமி ஆறுமணி நேரத்தில் மில்லியன் எண்ணிக்கையாகும் என்று ஆய்வுகள் சொல்லுகின்றன. இப்படி பல்கிப் பெருகி மில்லியன் எண்ணிக்கையில் இருக்கின்ற உணவுப் பொருட்களை உண்ப வர்கள் Salmonellosis நோயினால் பாதிக் கப்படுகின்றனர்.

குறிப்பாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த வயோதிபர்கள், இன்னமும் உரிய நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாத குழந்தை கள், கர்ப்பிணிகள் ஆகியோர் மிக எளிதில் இந்த தொற்றினால் பாதிப்படைகின்றனர். இவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட லாம்.அவ்வாறு இந்த Salmonellosis தொற் றினால் உயிர் இழந்தவர்களும் கனடாவில் உள்ளனர்.

இவ்வகையான சல்மொனெலா தொற்றான உணவை உண்டு ஆறுமணிநேரத்தில் இரு ந்து 72 மணிநேரத்தில் தொற்று ஏற்பட்ட வருக்கு வயிற்று குத்து, வாந்தி, வயிற் றோட்டம், உடல் குளிர்ந்து போதல் மற்றும் காச்சல் என்பன ஏற்படலாம்.


siva.subra@thaiveedu.com

■ ■ ■



# தமிழ் மக்கள் - நாடு கடந்த அரசியல்

நடராஜா முரளிதரன்



முள்ளிவாய்க்காலில் வைத்து எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டுத், தமிழ்மக்களுடைய சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான அடுத்த கட்டப்பயணம் அரசியல், இராஜதந்திர வழிமுறைகளுக்கூடாகத் தொடரும் என்ற நிலைப்பாட்டைக் கடந்த நாற்பது வருடகாலப் பட்டறிவினை எமது ஈழ அரசியல் குறித்துப் பெற்றுக் கொண்ட என் போன்றோர் ஏன் தீவிரமாக ஆதரிக்க வேண்டியுள்ளது என்பது தொடர்பாக அலசுவதே இப்பத்தியில் எனது நோக்கமாக இருக்கும்.

இன்றைய ஈழ அரசியல் சூழலில் அரசியல் இராஜதந்திரப் பாதையினை முன்னெடுத்துக் கொண்டு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. அது தற்கொலைக்கு ஒப்பானது. அவை சிறிலங்கா அரசுக்கு மேலும் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துத் தொடர்ச்சியான இராணுவ அழுத்தத்துக்குள் எம் மக்களை ஆழ்த்தி விடும் அபாயத்தை உள்ளடக்குகிறது. இறைமை படைத்த நாடு என்ற வகையில் அவ்வகை அணுகுமுறையானது சிறிலங்கா அரசுக்கு இன்னும் கூடுதலாக அதனது இராஜதந்திர நகர்வுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மேலும் கதவுகளை



அகலத் திறந்து விடுதல் என்ற வகையில் அமைந்து விடும் என்ற கருத்தோட்டம் அரசியல் அரிச்சுவடி தெரிந்த அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவே நான் கருதுகின்றேன்.

தற்போதய அனைத்துலக ஒழுங்கில் நாம் அரசியல் இராஜதந்திரப் பாதையில் பயணிக்கும் அதே வேளையில் ஆயுதப் போராட்டத்தினையும் சமகாலத்தில் முன்னெடுப்பது முரணான இரு திசைகளில் பயணிப்பதற்கு ஒத்ததாக இருக்கின்றது. இது எமது மக்களின் நலன்களை மையப்படுத்தும் விடுதலைப் போரினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்வதற்குப் பலவித நடைமுறைத் தடைகளை ஏற்படுத்தும் எனப் பத்மநாதன் கூறுகின்றார்.

தடுப்பு முகாம்களுக்குள் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களையும், போராளிகளையும் பாதுகாத்து எவ்வாறு அந்த மக்களை இயல்பு வாழ்க்கைக்குள் இட்டுச் செல்வது, உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையின் கீழ் மக்களின் வாழ்விடங்களை, வயல்களை, தோட்டங்களை, கடற்கரையோரங்களை, வழிபாட்டிடங்களை, பாடசாலைகளை, நூல் நிலையங்களை, விளையாட்டு மைதானங்களைக் கையகப்படுத்தி நிற்கும் சிறிலங்கா அரச இராணுவ இயந்திரத்தின் கோரப்பிடியினில் இருந்து எவ்வாறு அவற்றையெல்லாம் மீட்டெடுத்து அவற்றின் சொந்தக்காரர்களான மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது போன்ற சங்கடங்களைத் தாங்கியவர்களாக நாமெல்லோரும் தவித்துப் போயிருக்கும் காலச்சூழல் இது.

சிறிலங்கா அரசினால் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கிலான போராளிகளின் எதிர்காலம், பாதுகாப்பு என்பன அனைத்துலகச் சட்டங்களின் அடிப்படையில் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டு அதனூடான அணுகுமுறையிலான நடவடிக்கைகள் அவர்கள் குறித்து மேற்கொள்ளப்படுமா என்பது குறித்த வலுவான சந்தேகங்கள் அனைத்துலக மட்டங்களில் எழுப்பப்படுகின் றன. எனவேதான் புத்திசாதுரியத்துடன் கூடிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக புலம்பெயர்ந்த நாடுகளில் நாம் உள்ளோம்.

மக்கள் தமக்கான சொந்த இடங்களில் முடிந்தளவு விரைவாகக் குடியமர்த்தப்படுவதற்குரிய அரசியல் இராஜதந்திர அழுத்தங் களை முன்னெடுப்பதென்பது சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களை ஆதார தளமாகப் பயன்படுத்திக் கொண்டு மேற்கொள்ள வேண்டிய விடயமாகும். எனவே பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டுப் பலவீனமடைந்துள்ள எமது மக்கள் சமூகத்தை மனித உரிமைகள் என்ற தளத்தில் மீண்டும் ஜனநாயக விழுமியங்களை உள்வாங்கிய சமூகமாகக் கட்டமைத்து நிமிர்த்தி வைப்பதில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்களுக்கு மிகப் பாரிய பொறுப்பு இருக்கின்றது.

ஏனெனில் இறுதிக் கட்டச்சமரின் போது சிறிலங்கா அரசு எம்மக்கள் மீது புரிந்த மிக மோசமான மனித உரிமை மீறல்களே ஒரு வகையில் எமக்கான அனுதாப அலைகளை மேற்குலகில் ஏற்படுத்தித் தந்துள்ளது. அவற்றின் விரிவாக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில், சர்வதேச நாணய நிதியம் போன்ற உயர் தளங்களில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இது போன்ற விடயங்களில் மேற்குலகின் அரசியல், இராணுவ, பொருளாதார, பூகோள நலன்களும் உள்ளடக்கம்.

எனவே வீணே உணர்ச்சி வசப்படுதல் என்ப தும் ஆயுதப் போராட்டம் தான் தீர்க்கமான வழிமுறையென்று முரசறைவதும் புலம் பெயர் சூழலில் வாழும் எம்மில் சிலருக்கு தங்கள் இருப்பை நிலைநாட்டவும், தாம் குறித்துப் புகழ்பாடவும் வாய்ப்பான சூழ்நிலையை உருவாக்கலாம். ஆனால் இன்றைய இக்கட் டான பின்னடைவுச் சூழலில் நீண்டநாட்களுக்குத் தடுப்பு முகாம்களுக்குள் மக்களை முடக்குவதற்கான வழிமுறைகளையே இவ்வாறான நிலைப்பாடுகள் உருவாக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது.

மரணம் வாய் பிளந்து நிற்கும் அந்தப் பூமியில் சோகச்சிலுவைகளைச் சுமந்து கொண்டு வெறும் நடைப்பிணங்களாகக் காட்சியளிக்கும் எம் மக்களை மேலும் கொடிய துயரத்துக்குள்ளாக்கும் வாய்ப்புக்களைத் தேர்ந்தெடுத்தலைத் தவிர்த்து அந்த மக்கள் தமது வாழ்க்கையை மீளக் கண்டடைவதற்கும், கட்டமைப்பதற்கும் ஆதரவாய் ஐக்கியப்பட்டு உதவவேண்டியதே இன்று எம் தோள்களில் சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பு.

மக்கள் நடமாட்டம் அற்ற சூனியப்பரப்பாகக் காட்சியளிக்கும் வன்னிப்பெரு நிலப்பரப்பினைத் தான் விரும்பியவாறு மாற்றியமைப்பதற்கான இராணுவ மேலாண்மையை அப்பிரதேசத்திலே கொண்டுள்ள சிறிலங்கா அரசினைச் சர்வதேசத்தின் துணையுடன் எதிர்கொள்வதே மிகச்சிறந்த இராஜதந்திரமாகும். அதனைக் கட்டமைத்துக் கொள்வதற்கான வியூகத்தில் வன்முறையற்ற அரசியலும், ஜனநாயகமும் மிகச் சக்தி பொருந்திய கோட்பாடுகள் மட்டுமல்லாது எம்மை ஆரோக்கியமான அரசியலுக்குள் அழைத்துச் செல்லும் அரசியல் பண் பாட்டுப் பலம் மிக்கவையுமாகும். தொடர்ச்சியான உரையாடல் களமும், வாதப்பிரதி வாதங்களும், பன்மைத்துவமும், பல்வேறு வகைப்பட்ட அபிப்பிராயக் குவிப்புக்களும் அந்தத் தளத்திலே நடைபெறுவதற்கான திறந்தவகை மனோபாவம் அங்கு ஊக்கு விக்கப்படுகின்றது. அந்த அறுவடை மூலம் மிகப் பெரிய விளைச்சலை தமிழ் பேசும் மக்களாகிய நாம் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இன்றைய உலக ஒழுங்கில் இறைமை படைத்த அரசு தவிர்ந்த ஏனைய அமைப்புக்கள் முன்னெடுக்கும் தேசிய விடுதலையை நோக்கிய ஆயுதப்போராட்டங்கள் பனிப்போர் காலத்துச் சாதக அம்சங்களை இழந்து நிற் கின்றன. இன்றைய உலகம் இரு முகாம்களாகப் பிளவுண்ட நிலையில் இல்லை. முன்னொரு காலத்தில் சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாம் என்று அழைக்கப்பட்ட அணியினரால் இவ்வாறான பல்வகைப்பட்ட போராட்டங்களுக்கு ஆதரவின் பேரிலான உந்துதல் வழங்கப்பட்டமை யை நாம் காணலாம். அப்படியிருந்தும் அவ்வாறான ஆதரவு வழங்கலுக்கான காரணிகள் குறித்து உலகத்துச் சிந்தனையாளர்களால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது. எனவேதான் இன்றைய உலகச் சூழல் அணுகுமுறைமையில் ஆயுதம் தாங்கிய அரசியல் செயற்பாட்டால் எவ்விதமான அரசியல் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளவோ அல்லது அரசியல் இராஜதந்திர அழுத்தங்களை சிறிலங்கா அரசுக்குத் தாக் கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுத்தவோ முடியாமற் போகின்றது.

எனவேதான் அடுத்த கட்டத் தீர்மானமாக அரசியல் வழிப்பயணம் அமைகின்ற வேளையில் சமகால உலக உறவுகள், அரசியல், பொருளாதார நிலைப்பாடுகள் தொடர்பான புரிதல்களின் அடிப்படையில் அரசியற் செயற்பாடுகளைக் கட்டுதல் அவசியம். தியாகங்களாலும், அர்ப்பணிப்புக்களாலும் வளர்த்தெடுக்கப்பட்ட எமது உரிமைகளைப் பெற்றெடுப்பதற்கான கட்டுமானம் தார்மீக அடிப்படையில் தமிழ் மக்களுக்கான அறஞ்சார் அரசியல் நிலைப்பாட்டின் ஆதார அடித்தளத்தில் மீண்டும் பற்றியெழ வேண்டியுள்ளது. எனவேதான் போராட்ட வடிவத்தினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது பற்றிய சிந்தனையில் அரசியல் விஞ்ஞான அணுகு முறையினைக் கையாள்வதற்கு தமிழ்புலத்தில் உள்ள அரசியல் சிந்தனையாளர்களும், புத்திஜீவிகளும் கடுமையாக உழைக்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்து நிற்கிறது.

ஆகவேதான் நம் மக்களுக்கு மெய்யாக இருப்பதும், அதற்கான உணர்வுபூர்வமான செயல்முறை வழிப்பாட்டின் அடிப்படையில் போராட்ட வடிவத்தை மாற்ற வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தைக் கொண்டவர்களாக நாம் உள்ளோம். எனவே அதனைப் புறந்தள்ள நாம் முனைவதானது எமது மக்களுக்கு நாம் செய்யும் துரோகமாக அமைந்து விடும்.

அனைத்துலகத்தின் நலன்களும் நமது நலன்களும் ஒரே கோட்டில் சந்திக்காமையால் திறக்கப்பட்ட அனைத்துலக அரசியல் இராஜ தந்திரக் கதவுகள் ஊடாக நம்மை நன்மைகள் பெரியளவில் வந்தடையவில்லை. இறுதியில் சிறிலங்கா அரசு அனைத்துலக சமூகத்தை தன்வசப்படுத்தியவாறே போரை முன்னெடுத் தது என்று மிகச்சரியாகவே பத்மநாதன் தன் வலைப்பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாசியாவினதும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தினதும் புவிசார் அரசியல் நலன் களின் அடிப்படையில் இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற வல்லாண்மைச் சக்திகள் இலங்கைத் தீவினை ஒரே நாடாகப் பேணியவாறு தமது நலன்களை அடைந்து கொள்வ தை உசிதமானதாகக் கருதியமை, இலங்கைத் தீவில் ஆயுதப்போராட்டம் ஏதோ ஒரு வழியில் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் அனைத்துலகம் ஒரே முடிவைக் கொண்டிருந்தமை, எனப் பத்மநாதன் சுட்டும் காரணங்களின் அடிப்படையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகம் வன்முறையற்ற அரசியல், ஜனநாயகம் ஆகிய கோட்பாடுகளை வரித்துக் கொண்டு தமிழ் மக்களுக்கான வரலாற்றுப் பாதையில் முன்னொக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே தமிழ் மக்களின் சமகாலச் சூழலைக் கருத்திற் கொண்டு போராட்ட வடிவத்தை மாற்றியே ஆக வேண்டியுள்ளது. இலங்கைத் தீவினை ஒரே நாடாகப் பேணியவாறு தமது நலன்களை அடைந்து கொள்ள முனையும் பேரரசுகளின் புவிசார் அரசியல் தோல்வியினை அடையும் சூழலில் அந்த மாற்றங் களின் ஊடாகத் தமிழீழ மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை நாம் வென்றெடுத்துக் கொள்வதற்கான நிலைமைகள் உருவாகும். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நமது விடுதலைப் போராட்டத்தை அரசியல் இராஜதந்திரப் பாதையின் ஊடாக நாம் நகர்த்த வேண்டுமென்பது என்ற கருத்தியலுக்கு அப்பால் ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள எந்த சமூகமும், எந்த மனிதனும் நேர் கொள்ளும் யதார்த்தத்தைக் கருத்திற் கொண்டு தனது இலக்கினைச் சென்றடையத் தந்திரோபாயங்களை அடிக்கடி மாற்றியமைத்துக் கொண்டே ஒடுக்கப்பட்ட மக்களுக்கான லரலாற்றை முன்னோக்கி நகர்த் தலாம்.

ஏனவே அரசியல் இராஜதந்திரப் பாதையின் ஊடாகப் பயணம் செய்வதென்பது இலகுவான ஒரு விடயம் அல்ல. பல சவால்களை எதிர்கொண்டு மிகுந்த சகிப்புத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நீண்ட தூரப் பயணம் ஆகும்.

muralitharan.n@thaiveedu.com

■ ■ ■

# Recession is over,sell your house for Top $$$$$ Sellers Market is back, Call today.....

**It's is the great time to Sell a Home with seller's benefit**

*Complimentary Evaluation of Your Home *Written cancellation guarantee *Guarantee advertising







IS THIS WHAT YOU'RE LOOKING FOR

FOR SALE


Selling Commission
Starting as low as 0.5 - 2.75%
Some condition may apply

SOLD


IT'S WHAT I DO!

'Let me show you how my strategic marketing plan gets results'





Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers




















**Negotiating the Right Price for your home can be tricky
Call Raja for professional advice**



**MANY MORE HOUSES FORE SALE**

**HomeLife / Future Ralty Inc., Brokerage***
205-7 Eastvala Drive ,Markham Road, Ontario L3S 4N8
Bus: 905-201- 9977 Fax: 905-201-9229
* Independently Owned and Operated, REALTOR

**Raja V. S. Rajagopal**
Sales Rrpresentative
**Dir: 416-727-8647**
Email: sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com

## நலமுடன் வாழ இருதயத்தைப் பேணுவோம்

# இருதய நோய் காரணிகளும் தடுப்பும்



Dr. றிச்சாட் ஜெயரஞ்சன்
- Specialist in Cardiovascular & internal Medicine -


இருதயத்திற்குக் குருதியை வழங்கும் முடியுருநாடிக் (coronary artery) குழாயில் ஏற்படும் அடைப்புக் காரணமாக ஏற்படும் மாரடைப்பு நோய் எமது மக்களின் ஆரோக்கியத்தின் முதல் எதிரியாக விளங்குகிறது. எனினும் உங்கள் இதயத்தைப் பற்றியும் உங்கள் நலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காரணிகள் பற்றியும் அறிந்துகொண்டு அவற்றைக் குறைக்கக் கூடிய வகையில் ஆரோக்கியம் தொடர்பாக மிகவும் எளிதான மாற்றங்களை நீங்கள் செய்வீர்களானால் இருதய நோய் ஆபத்துக்கள் உங்களை அணுக வாய்ப்புக் குறைவு.

இத்தகைய மாற்றங்களைச் செய்துகொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் ஒவ்வொரு மணித்தியாலமும் எமக்கு ஏற்படுகின்றன. குறைவாக கொழுப்புள்ள உணவைச் சாப்பிடுதல், புகைப்பவரானால் மேலதிகமான அந்த ஒரு சிகரட்டைப் புகைக்காது விடுதல் அல்லது மேலதிகமான உடல்நிறையைக் குறைத்துக் கொள்ளுதல் போன்றவை மூலமாக இன்றே மாரடைப்பு வராமல் தடுக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம். நலமாக இருதயத்தை வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு இன்னும் காலதாமதமாகவில்லை என்பது மிகவும் முக்கியமானது. இச்செயலை நீங்கள் இப்பொழுதே ஆரம்பிக்கலாம்.

> “புகைப்பிடித்தல், கூடிய இரத்த அழுத்தம், நீரிழிவுநோய் என்பவற்றுடன் வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளின் அழுத்தங்களும் முடியுருநாடிக் குழாயில் கொழுப்புப் படிதலைப் படிப்படியாக அதிகரிக்கச் செய்கின்றன.”

### இருதயத்தையும், இருதய நோய் பற்றியும் புரிந்து கொள்வோம்.

நலமான இருதயம் எவ்வாறு இயங்குகிறது என்பதை முதலில் நீங்கள் விளங்கிக் கொண்டால், முடியுருநாடியில் அடைப்பு எவ்வாறு விருத்தியடைகின்றது என்பதையும் எத்தகைய செயல்களால் அதனைத் தடுக்கலாம் என்பதையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.




உங்கள் இருதயம் தனித்தன்மை வாய்ந்தது. இதுதான் உங்களது மிகவும் வலிமை வாய்ந்த தசையாகும். இது, ஒவ்வொரு நாளும் 100,000 தடவைகள் துடித்து 2,000 கலன் (8,000 லீற்றர்) குருதியை உடலில் சுற்றோட்டத்திற்கு அனுப்புகின்றது. ஒட்சிசன், ஊட்டச் சத்து என்பவற்றை இருதயம் குருதியூடாக உங்கள் உடலுக்குத் தருகிறது. தனக்கு ஊட்டத்தையும் ஒட்சிசன் ஏற்றப்பட்ட குருதியையும் தருவதற்காக இருதயம் முடியுருநாடிகளை வைத்திருக்கின்றது. எனவே, தன்னுடைய தொழிற்பாட்டுக்குத் தேவையான சக்தியை தானே வழங்குகின்ற ஒரேயொரு தசை இருதயமே. இருதயத்திற்குக் குருதியை வழங்கும் முடியுருநாடிகள் ஒரு பெரிய குருதிக்குழாயிலிருந்து கிளைகளாகப் பிரிவன வாகும். இருதயத்திலிருந்து புறப்படும் மிகப் பெரிய குழாய் தொகுதிப்பெருநாடி ஆகும். முடியுருநாடிக்குழாய்கள் இருதயத்தின் மேற் பாகத்தில் பரந்து காணப்படும். அவை ஒட்சிசனையும் ஊட்டச்சத்தையும் இருதயத்திற்கு வழங்குகின்றன. வலது முடியுருநாடி இருதயத்தின் வலது பக்கத்திற்கும், அதன் கீழ்ப் பகுதியின் மேற்பரப்பிற்கும் குருதியை வழங்குகின்றது. இடது முடியுருநாடி இருதயத்தின் மிகப் பெரிய பகுதியாக உள்ள வலது பக்கத்திற்கும் அதன் முற்பக்க மேற்பகுதிகளுக்கும் குருதியை வழங்குகின்றது. ஆரோக்கியமான முடியுருநாடியின் உட்புறம், குருதி தங்குதடையின்றிச் சீராக இருதயத்தை நோக்கிப் பாய வாய்ப்பாக அமைந்திருக்கும். முடியுருநாடிகளின் தசை நார்கள் விரிந்தும், சுருங்கியும் குருதியோட்டத்தை கட்டுப்படுத்துகின்றன. இத்தசைநார்களை சூழவுள்ள நரம்புகள் இத்தசைநார்கள் எப்பொழுது விரிதல் வேண்டும் என்பதையும், எப்பொழுது சுருங்குதல் வேண்டும் என்பதையும் தீர்மானிக்கின்றன. இருதயம் தனது தொழிற்பாடுகளைத் தங்குதடையின்றித் தொடர்ச்சியாகச் செய்வதற்கு, தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் ஒட்சிசன் வழங்கப்பட வேண்டி உள்ளது.

உடற்பயிற்சி மற்றும் செயல்களில் ஈடுபடும் போது இருதயத்திற்குக் கூடிய சக்தி தேவைப் படுகின்றது. ஆரோக்கியமான முடியுருநாடிகள் நன்றாக விரிவடையக்கூடியதாகவும், குருதிச் சுற்றோட்டத்திற்கு நல்ல வாய்ப்பான உட்புறத்தைக் கொண்டிருப்பதாலும் விரைவாகத் தொழிற்பட்டு அதிகளவு ஒட்சிசனை இருதயத்திற்கு வழங்க அவற்றால் முடியும். நீங்கள் ஓய்வாக இருக்கும்போது உதாரணமாகப் புத்தகம் வாசிக்கும்போது உங்கள் இருதயம் வழமைபோல் சீராகச் செயற்படுகின்றது. ஒவ்வொரு நிமிடமும் 40 - 80 தடவைகள் களைப்பின்றித் துடித்தும், சுமார் 5 லிற்றர் குருதியை உங்கள் உடல் முழுவதற்கும் பாய்ச்சியும், உங்கள் இருதயம் தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. ஒட்சிசன் வழங்கல் இருதயத்தின் தேவைக்கு ஏற்ற அளவில் நடைபெற்றுக்கொண்டிருப்பதன் மூலமே நீங்கள் சுகதேகிகளாகச் சௌகரியமாக இருப்பதாக உணர்கிறீர்கள். முடியுருநாடியின் குருதியிலிருந்து சரியான அளவு ஒட்சிசன் வெளியேறி உங்கள் இருதயத்தின் தசை நார்களுக்குச் செல்கின்றது. நீங்கள் மெதுவான துள்ளல் நடை போன்ற சுறுசுறுப்பான செயல்களில் ஈடுபடும் போது உங்கள் உடலுக்குத் தேவையான சக்தியை வழங்கும் வகையில் உங்கள் இருதயம் தனது வேகத்தை இரட்டிப்பாக்குவதோடு, வழமையைவிட ஒவ்வொரு நிமிடமும் 3-4 தடவைகள் மேலதிகமான அளவு குருதியைச் சுற்றோட்டத்திற்கு விடுகின்றது. உங்கள் இருதயத்தின் அதிகரிக்கப்பட்ட தேவைக்கேற்ப அதிக அளவு ஒட்சிசனை இருதயம் பெற்றுக்கொள்வதால் நீங்கள் சௌகரியமாக இருப்பதை உணர் கிறீர்கள். இருதயத்தின் அதிகரிக்கப்பட்ட தேவையை எதிர்நோக்கும் வகையில் முடியுருநாடி விரிவடைவதோடு, மெல்லிய திரை போன்ற மென்மையான உட்புறம் அதனுடைய மேலதிகமான குருதி இருதயத்தின் தசைநார்களுக்குப் பாய்ந்து செல்வதற்கும் இசைவாக இருக்கின்றது.

### நாடிக்குழாய்களுள் அடைப்பு (Atherosclerosis)

பெரும்பாலும், ஒவ்வொருவரது நாடிக்குருதிக் குழாய்களின் உட்சுவர்களில் சிறிதளவு கொழுப்புப் படிந்துகொண்டேயிருக்கும். இதனை நீங்கள் பார்க்கவோ அன்றி உணர்ந்துகொள்ளவோ முடியாதிருக்கலாம். குருதியில் கொலஸ்ரோல் இருத்தல், புகைப்பிடித்தல், கூடிய இரத்த அழுத்தம், நீரிழிவுநோய் என்பவற்றுடன் வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளின் அழுத்தங்களும் முடியுருநாடிக் குழாயில் கொழுப்புப் படிதலைப் படிப்படியாக அதிகரிக்கச் செய்கின்றன. இக்காரணிகள் நாடிக்குழாய்களை சுருக்கமடையச் செய்வதோடு இருதயத்திற்கான இரத்த ஓட்டத்தையும் குறைத்துவிடுகின்றன. இவ்வாறாக நாடிக் குழாயின் உட்புறம் பாரதூரமாகச் சுருக்கம் அடையுமேயானால் அது மாரடைப்பு நோயை ஏற்படுத்தும். இத்தகைய காரணிகளால் மாரடைப்பு நோய் ஏற்படுவது பொதுவாக இருப்பினும் 'ஸ்ரோக்' எனும் வலிப்பு நோயும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

### அஞ்சைனா (Angina) எனும் மார்புவலியும், மாரடைப்பும் (கடுமையான குருதிச் சுற்றோட்டத்தடை)

நீங்கள் ஓய்வாக இருக்கும்போது உங்களது முடியுருக்குருதிக் குழாயில் மிகக் கடுமையான அடைப்பு ஏற்பட்டால், உங்கள் இருதயம் போதியளவு ஒட்சிசனைப் பெறக்கூடியதாக இருக்கும். எனினும் நீங்கள் பதட்டமடைந்திருக்கும் வேளைகளில் அல்லது ஏதாவது செயலில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் உங்கள் இருதயம் தனக்குத் தேவையான ஒட்சிசனை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகலாம். குறைந்த இரத்த ஓட்டமானது மார்புவலி அல்லது மார்பு அழுத்த உணர்வு முதலான நோய் அறி குறிகளை ஏற்படுத்தலாம். அத்துடன் அது தாடை அல்லது இடது கைப்பகுதிகளுக்குப் பரவலாம். இவை ஓய்வு எடுத்துக் கொள்வதன் மூலம் குறைவடையும் இந்நிலைமை உங்கள் இருதயத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய அளவுக்கு நீடிப்பதில்லை.

குருதி உறைதல் மூலமாக மிகக் கடுமையான அடைப்பு முடியுரு நாடிக் குழாயில் ஏற்படுமாயின், குருதியோட்டம் முற்றாகவே தடைப்பட்டுவிடும். இந்நிலைமை நீடிக்குமாயின் இருதயத் தசை நார்கள் இறந்துவிடலாம். அஞ்சைனா முதலியவற்றிற்குரிய நோய் அறிகுறிகள் இருந்தாலும் அதேவேளை நோ கூடியதாகவும் நீண்டநேரம் உணரக்கூடியதாகவும், ஓய்வு எடுப்பதன் மூலம் குறைத்துக்கொள்ள முடியாததாகவும் இதன் அறிகுறிகள் காணப்படும். உடலில் வியர்வை ஏற்படுதல், வாந்தி எடுக்கும் உணர்வு, தலை இலேசானதாகக் கனதியின்றி இருத்தல் மற்றும் மூச்சுத்திணறல் என்பன உங்களிடம் நோய் அறிகுறிகளாகக் காணப்படும்.

### நீங்கள் என்ன செய்யலாம்?

ஆபத்துக்குரிய காரணிகள் உங்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்களை அதிகரிக்கும் தன்மை உடையவை. இவற்றுள் பெரும்பாலானவற்றை உங்களால் கட்டுப்படுத்த முடிவதோடு, சிலவற்றை முற்றாகவே நீக்கிவிடவும் இயலும்.

### நான்கு பெரிய ஆபத்துக் காரணிகள்

- கூடிய அளவிலான கொலஸ்ரோல்
- புகைத்தல்
- கூடிய இர்த அழுத்தம்
- நீரிழிவு நோய்

இந்நான்கையும் கட்டுப்படுத்தல் அல்லது நீக்குதல் மூலமாக உங்களது முடியுருநாடிக் குருதிக்குழாய் நோய் ஏற்படும் வாய்ப்பு மிகப் பெரிய அளவில் குறைக்கப்படுகிறது. முதலில் உங்களிடம் இந்நோய்க்காரணிகள் எந்தளவில் உள்ளன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்றவாறு ஆபத்துக் காரணிகள் இருப்பின் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதற்கு உங்களது வைத்தியர் உங்களுக்கு உதவியாக இருப்பார்.

### ஆபத்துக்காரணி: குருதியில் கூடிய அளவு கொலஸ்ரோல்

'நான்கு பெரிய' ஆபத்துக்காரணிகளில் முதலாவது குருதியில் மிகக் கூடதலாகக் கொலஸ்ரோல் இருத்தல் ஆகும். இது உங்களது முடியுருநாடிக் குருதிக்குழாயில் கொழுப்பினைப் படிப்படியாகப் படியச் செய்கின்றது. நீங்கள் வைத்தியரிடம் காட்டிப் பரிசோதனை செய்து பார்க்காதுவிட்டால் உங்களுக்குக் குருதியில் அதிகரித்த கொலஸ்ரோல் இருக்கின்றதா என்பது தெரியவராது. கொலஸ்ரோல் என்பது ஒருவகைக் கொழுப்பு ஆகும். இது சில உணவுப் பொருட்களில் இருக்கின்றது. நீங்கள் உண்ணும் உணவிலிருந்து பெறப்படும் கொழுப்பிலிருந்து இக் கொலஸ்ரோலினை உங்களது ஈரலே உற்பத்தி செய்கின்றது. பின்னர் அக்கொலஸ்ரோல் உங்கள் குருதி ஓட்டத்துடன் கலந்துகொள்கிறது. இக் கொலஸ்ரோல் இருவகையான புரதப் பொருட்கள் மூலம் உங்களது குருதிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அடர்த்தி குறைந்த கொழுப்புப் புரதம் (LDL தீய கொலஸ்ரோல்) முடியுருநாடியின் உட்பகுதியில் கொழுப்புப் படிவதற்குத் துணை செய்கின்றது. அடர்த்தி கூடிய கொழுப்புப் புரதம் (HDL – நல்ல கொலஸ்ரோல்) நாடிக்குழாயின் உட்பகுதியில் கொழுப்புப் படிவதைத் தடைசெய்கின்றது.

தொடரும்...

jeyaranjan.richard@thaiveedu.com


BUY,..SELL HOMES , BUSINESS,LANDS..
PAT Pushpakanthan 416.490 7653 (SOLD
Real Estate BROKER
#1 Agent for 7 Years
EXPERIENCE! COMMITMENT! RESULTS!
அனுபவம்! திறமை! நேர்மை!
CENTURION AWARDS '03 -'08
Top producer 7 years
Masters Hall of Fame Award
SCARBOROUGH
Detached Home Under $300,000! 4 Bms Large Bsmt. Apt. Sep Entr 4 wsrm 2 Laundry , 2 Kitchens.
MARKHAM
3 brn/ 3wsrm Close To Shopping, brand new
Scarborough/Sheppard
Great Opportunity! Spacious Family Home! 5 Bedroom Backsplit, Fabulous, 60FC Situated On Quiet, Child Safe Cul De Sac Ttc 401, Schools
M.SIDE/ELLESMERE
$137 000
2brn/2wsrm Steps To Centennial College & UFT(Scar Campus) Close To Parks, Ttc & 401
Scarborough central
Detached bangalow
$239000
Close To Shopping subway ,excelent school, larger Lot
Markham
4 bm/ 3wsrm newer home hardwood floor 9' ft ceiling, granite counter oak stairs and more immaculate codition
Open house/Sun 2-4 pm
137 Rizal ave Markham
$599 700
Luxury executive home in Boxgroove community
2982/3242 Sq.Ft(270 Sq.Ft Of Raised Ceil. Of Fyr & Liv Rm)Open To Above Foyer, Coffered Ceiling In Din Rm,.Harwood Combo. Modern Kitchen With Lots Of Upgrades,Sunken Liv Rm W/17' Ceilg Art Niche, Access To Mud Rm Frm/Grge,Mirrord Clst,Centre Islnd W/Raised Brkfs Bar,D.V Gs Firepl, Pot Lights, Open Conceptw/ Decorative Columns & Lots Of Large Windows. Must See Property..Don't Miss.... Stainless Steel Appliances
வியாபாரம்
Cafetaria
Good income
Cafetaria In office building
Century 21
BROKERAGE
80 Corporate Dr. Suite 208. Toronto
Off 416-290 1200
Affiliate Realty Inc.
WWW.PATPUSH.COM
email: rpushpakanthan@trebnet.com
nielson/finch
வியாபாரம்
Convinience64 9... more
$59 000/-
scarborough
MARKHAM/DENISON
வியாபாரம்
Pizza & takeout
busy locn
Start your bus. today
NORTH SCARBOROUGH
முதலீடு
Industrial unit fr sale
Markham steeles
NORTH SCARBOROUGH
முதலீடு
Industrial unit fr sale
Scarborough
Excellent Family Business
brigton ontario
BOOK NOW !!!
DOWN.town
toronto
வியாபாரம்
Supermarket south asian ,video rental ete..... more $59 000/- busy location
Bayview/Stone Rd.
$379 000
4 BM/ 3 WSRM Bright And Spacious Home Close To Public Transit, Schools, And Highway 404.
North Ajax
3 bm/ 3wsrm Newer! Semi-Detached Tribute Built Home Located In North Ajax
SCARBOROUGH
$264000
NEWER HOME
3 Bedroom Townhouse, Family Room On Ground Floor Is Finished. Beautiful Hardwood Floo
Birchmount/finch
$169 000
2+1 CONDO apt in very good location clse to shop finch 24 hr ttc
COTTAGE / CAMPGROUND
BUSINESS
With APPX 6 acres with 10 cottages,and 20 trailor homes
1-2-3 Bedroom fully equipped Comfortable Housekeeping Cottages, Cable TV , 3 & 4 Pce. Bathrooms, Decks & Lawn chairs, Propane B.B.Q ... Bedding Provided and fully supplied kitchens, Elect heat, Municipal Water Boating,exclusive water from, Large storag D.garages
Warden/Finch
3 bdrm 2 wrm condo apt
$164 900
Mccovan/finch
Luxary tridel bldg 2bdrm condo apt $189 900
DON MILLS/EGLINGTON
3 bdrm condo apt. fr
Sale Price :$159 800
CONDOS F0R SALE
Ellesmere
2/3 bdrm condo apt. fr
Sale Price :frm $179000
Pharmacy/ Finch
1 bdrm condo apt. fr $98 000/-
2 Bdrm condo apt $ 129000
117 houses available
Power of sale



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

## Vasanthy Niranjan

*Real Estate Broker*

**416-845-8272**

**McCowan & Steeles**



**$369,900**
3+2 Bedroom, 2 Washroom

**Hurontario / Dundas**



**$169,500**
1+2 Bedroom, 1 Washroom

**Mavis/Dundas**



**$373,900**
3 Bedroom, 3 Washroom

**Bur Oak & 9th Line**



**$425,000**
4 Bedroom, 4 Washroom

**Bur Oak/9th Line**



**$379,000**
3 Bedroom, 4 Washroom

**McCowan/14th**



**$379,900**
3 Bedroom, 4 Washroom

**Brimley/Lawrence**



**$269,900**
3 Bedroom, 2 Washroom

**Lawerence/Scarb.Golf**



**$287,900**
3+2 Bedroom, 2 Washroom

**Brimley / Eglinton**



**$334,500**
3+2 Bedroom, 2 Washroom

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6

# INSURANCE SERVICE

## Life Insurance



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

**Thana Manickavasagar**
*Broker*
**Cell: 416-728-5772**

**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி**

**New Low Rates**
**Approved within 48 Hours**

**85 வயத்துக்கு உட்பட்ட யாரும் நிராகரிக்கப்பட மாட்டார்கள்**



Business: 416-290-1200
thana7@gmail.com
www.thana.ca

# சேமமான சாரதி



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

## தொடர் - 4

### கவனமான சாரதி

ஒருவர் கவனமான சாரதியாய் இருப்பதற்கு உதவும் நிபந்தனைகள் ஐந்து ஏற்கனவே தந்துள்ளேன். ஒரு காப்புறுதி நிறுவனத்தில் செயலாற்றுபவன் என்ற நிலையில் பல கவனயீனமான சாரதிகளுக்கு மீண்டும் மீண்டும் முகம் கொடுத்தவண்ணம் இருக்கின்றேன். ஒருவர் நல்லவன் என்று பெயர் எடுப்பது மிகக் கடுமையான விடயம். எல்லாவற்றையும் சரியாகச் செய்துவிட்டு ஒரு தவறு செய்தால் போதும் பெயர் கெட்டுவிடும். அது போலவே கவனமான சாரதி எனும் பெயர் எடுப்பது மிகக் கஷ்டமான விடயம்.

சில வருடங்களுக்கு முன் எனது நண்பர் ஒருவர் மிக கவனமான சாரதி என்ற பெருமைக்குரியவராய் இருந்தவர். ஞாயிற்றுக்கிழமை காலை அருகில் உள்ள கடைக்கு (நடந்து செல்லக்கூடிய தூரம்) சென்றவர் பிள்ளைகள் தாமும் வருவதாக கேட்டபோது அவர்களையும் காரில் ஏற்றி சென்றார். ஞாயிற்றுக்கிழமை வீதியிலும் அதிக சனநடமாட்டம் இல்லை. வீட்டிலிருந்து ஐம்பது யார் தூரத்திலுள்ள STOP குறியில் காரை நிற்பாட்டாததால் அவருக்கு குற்றப்பத்திரிகை கொடுக்க வந்து பொலிஸ் அதிகாரி அக் குற்றப்பத்திரிகையுடன் அவரையும் சேர்த்து ஐந்துபேர் ஆசனப்பட்டி அணியாததற்கு டிக்கட் கொடுத்ததோடு அவரது சாரதி பத்திரத்தையும் இரத்து செய்துவிட்டார். இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் நாம் மிகவும் கவணமாக இருப்பது மிக மிக அவசியம்.

### கட்டளை 6: ஆசணப்பட்டியை அணியுங்கள்

ஒரு வாகனத்தில் சாரதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கண்டுபிடிப்பு ஆசனப்பட்டி என்று சொன்னால் அது மிகையாகாது. ஆசனப்பட்டியானது உங்களை பலவிதத்தில் காக்கிறது. அது அடிபடும் வேளையில் அதிர்ச்சியைக் குறைக்கிறது. விபத்தின் விசையை குறைக்கின்றது. அதிலும் மேலாக விபத்து ஏற்படும் வேளையில் வாகனத்திற்கு வெளியே எறியப்படுவதைத் தவிர்க்கிறது. அண்மைக்காலத்தில் தயாரிக்கப்படும் வாகனங்கள் குறிப்பிட்ட பகுதியில் நசுக்கப்படாது (crumple zones) காக்கும் பகுதிகள் அமைக்கப்பட்டு அதன் ஒரு அங்கமாக ஆசனப்பட்டி இடம் பெறுகிறது. வாகனம் கவிழும் வேளையில் நசுக்கப்படாத பகுதியில் உங்களை பிடித்து வைக்க இது உதவுகிறது. மேலும் உங்களை ஆசனத்தில் உறுதியாக வைத்திருப்பதால் வாகனம் விபத்துக்குள்ளாகும் வேளையிலும் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. இப்படி பல வகையிலும் நன்மை தரும் இந்த ஆசனப் பட்டியை அணியாது விணாக டிக்கட் எடுத்துவிட்டு கொடுக்கும் விளக்கம், வியாக்கியானம் பல... அவற்றை இங்கு கவனிப்போம்.

### ஆசனப்பட்டி ஆடையை கசக்குகிறது...

நிச்சயமாக ஆசனப்பட்டி உங்கள் ஆடைகளில் கசங்கல்களை ஏற்படுத்துவது உண்மையே. ஆனால், ஆடை கசங்கினாலும் ஆள் தப்புவது முக்கியமல்லவா?

### அவை வசதியில்லாதவை...

நீங்கள் யாராவது 'ரை' (Tie)வசதி இல்லை என்று ரை இல்லாமல் டின்னருக்கு போனதுண்டா? அல்லது ஆடை வசதியில்லை என்று ஆடை யில்லாமல் சென்றதுண்டா? போகப்போக அது பழகிவிடும். புதுச்செருப்பு கடிக்கத் தான் செய்யும் அதற்காக செப்பை போடாமல் செல்ல முடியுமா? மேலும் அதற் காக செருப்பை போடாமல் செல்ல முடியுமா? மேலும் ஆசனப்பட்டியை நீங்கள் சரியாக அணிவது அவசியம். மேலும் புது வாகனமாகில் தயாரிப்பாளர்கள் பட்டியில் சில மாற்றங்கள் செய்து தருவார்கள்.

### நான் விபத்து ஏற்படும் வேளைகளில் வாகனத்திலிருந்து இயன்ற அளவு தூரத்தில் எறிபட விரும்புகிறேன்...

உங்கள் தலைக்குள் என்ன இருக்கிறது என்று ஆச்சரியமாக இருக்கிறது. பெருமளவு மரணங்கள் வாகனத்திலிருந்து எறிபட்டு தலை அடிபட்டுத்தான் இறக்கிறார்கள். உங்களுக்கும் உங்கள் வாகனத்துக்கும் ஏதாவது பழைய கோபம் உண்டா. இறக்கும் வேளையில் வாகனத்துக்கு தூரத்தில் இருப்பதற்கு ஆசைப்படுவதற்கு? தலையில் சரக்கு உள்ள எவரும் ஆசனப் பட்டியை அணிந்திருக்கத்தான் விரும்புவார்கள்.

### உங்களுடன் பயணிப்பவர் ஆசனப்பட்டியை அணிய மறுத்தால்...

நிச்சயமாக உங்களுடன் அழைத்துச் செல்ல உங்களுக்கு தார்மீக உரிமை உண்டு. காரணம் அது தான் சட்டம். மேலும் ஆசனப் பட்டி அணியாதிருப்பவர் விபத்து ஏற்படும் வேளைகளில் தூக்கி எறியப்படுவாராகையால் அவர் உங்களையும் காயப்படுத்தலாம். நீங்கள் ஆசனப்பட்டி அணிந்திருந்தாலும் பின்னால் இருப்பவர் அணியாது இருந்தால் அவர் தூக்கி எறியப்பட்டு உங்களை காயப் படுத்தலாம். எனவே முடியாது என்று முடிவாக கூறிவிடுங்கள்.

> "ஆசனப்பட்டியானது
> உங்களை பலவிதத்தில் காக்கிறது.
> அடிபடும் வேளையில் அதிர்ச்சியைக் குறைக்கிறது.
> விபத்தின் விசையை குறைக்கின்றது.
> அதிலும் மேலாக விபத்து ஏற்படும் வேளையில்
> வாகனத்திற்கு வெளியே
> எறியப்படுவதைத் தவிர்க்கிறது."

### விபத்து ஏற்படும் வேளையில் வாகனத்துக்குள் அடைபட விரும்பவில்லை...

உண்மையில் நடப்பது என்னவென்றால் ஆசனப்பட்டி அணிந்திருப்பவர்கள் கூடிய சுயநினைவுடன் இருப்பார்களாததால் அவர்கள் தப்புவதற்கு கூடிய சந்தர்ப்பமுண்டு. ஆசனப்பட்டி அணியாதவர்கள் வாகனத்துக்குள் தலை அடிபட்டு மயக்கமடைவதனால் சுயமாக இயங்காமல் நீரில் அழுந்தி இறக்க நேரிடும். எனவே ஆசனப் பட்டி நீரில் அமிழ்ந்த வேளையிலும் நெருப்பில் அகப்பட்ட வேளையிலும் உயிர்காக்க உதவும்.

### அரசாங்கம் நான் என்ன செய் யலாம் செய்யக்கூடாது எனக் கூற முடியாது...

நல்ல காலம் நீங்கள் ஏன் நான் பாதையின் இடது பக்கத்தால் காரை செலுத்த முடியாது என்று வாதம் செய்யவில்லை. உங்களுக்கு உரிமை உள்ளதுபோல் மற்றவர்களுக்கும் உரிமை உண்டு. அதனால் தான் சில சட்ட திட்டங்கள் தரப்படுகிறது. மேலும் விபத்து ஏற்படும் வேளைகளில் உங்கள் வைத்தியச் செலவுக்காக சராசரிவருடம் ஒன்றிற்கு 35 மில்லியன் வரிப்பணம் செலவிடப்படும் வேளையில் நீங்கள் எப்படி வாகனம் செலுத்துகிறீர் கள் என்பதை தீர்மானிக்கும் உரிமை அவர் களுக்கு உண்டு. இது சுதந்திரமான நாடு எனும் உங்கள் வாதம் செல்லுபடியாகாது.

### விபத்துக்குள்ளாகி மீண்ட சிலர் தாம் ஆசனப்பட்டியை அணிந் திருந்ததால் உயிர் பிழைத்திருக்க மாட்டேன் என கேள்விப் பட்டேன்...

இந்த வாதம் அர்த்தமற்றது. ஆசனப்பட்டி அணிந்தபடி விபத்தில் சிக்கி இறந்த ஒருவர் ஆசனப்பட்டி அணியாதிருந்தால் தப்பி இருப் பார் என்பது அர்த்தமற்ற வாதம். ஆய்வுகளின் படி 50% மரணங்களும், காயங்களும் தவிர்த்திருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

இன்னுமொரு விடயத்தை கவனத்தில் கொள்வதவசியம். ஒரு பெரும் விபத்து ஏற்படும் வேளையில் தவறு மற்றவருடையதாக இருப்பினும் நீங்கள் ஆசனப்பட்டி அணியாத காரணத்தால் விபத்தின் ஒரு பகுதி விழுக்காடு குற்றம் உங்களுடையதாக தீர்மானிக்கப்படலாம். ஏன் இந்த தொல்லை தயவுசெய்து உங்களுக்காகவும் உங்களை நம்பி இருப்பவர்களுக்காகவும் ஆசனப்பட்டியை அணிந்து கொண்டு வாகனத்தைச் செலுத்துங்கள்.

எனது நண்பர் ஒருவர் இரவில் புதினப்பத்திரிகை விநியோகிப்பவர். ஆசனப்பட்டி அணியாமல் அர்த்தராத்திரியில் காரைச் செலுத்தி விநியோகிக்கையில் பொலிஸ்காரர் பிடித்துவிட்டார். இவர் தனது வாதமாக தான் நிறுத்தி நிறுத்தி பத்திரிகை போடுவதனால் வேகமாக வாகனம் செலுத்துவதில்லை. அத்துடன் ஒவ்வொரு வீட்டிலும் ஆசனப்பட்டியை கழற்றிப் பூட்டுவது கடினம் என்றார். அதற்கு அந்த பொலிஸ்காரர் எனக்குத் தெரியும் நீர் வேகமாக ஒட்டுவதில்லை என்று ஆனால் வேகமாக மற்றவர் ஓடிவந்து இடித்தால் நீர் தப்பமுடியாது என்றார். குரைக்கிற நாய் கடிக்காது என்று எனக்குத்தெரியும். உனக்குத் தெரியும். நாய்க்குத் தெரியாது. பிடிச்சுக் கட்டு என்பது போல் இருந்தது வாதம். நீங்களும் ஆசனப்பட்டியை அணிந்து உங்கள் பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளையுடன் உயிருடன் இருந்து வாழ வாழ்த்துகிறேன்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# ஆயுட் காப்புறுதியும் நிதித் திட்டமிடலும்

# Life Insurance & Financial Planing



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆயுட் காப்புறுதி என்பது ஒருவரின் எதிர்பாராத உயிரிழப்பால் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடு செய்வதற்கு மட்டும் பயன்படும் ஒரு திட்டம் என்று நினைக்கக்கூடும். மாறாக ஆயுட் காப்புறுதித் திட்டங்களை மிகவும் சிறந்த நிதித்திட்டமிடல் திட்டங்களாக உபயோகிக்க முடியும்.

கடந்தகால ஆய்வுகளின்படி மக்கள் தங்கள் வாழ்நாளில் 5 தொடக்கம் 7 தடவைகள் ஆயுட்காப்புறுதித் திட்டங்களை மாற்றம் செய்திருக்கின்றனர். அல்லது புதிதாக வாங்கியுள்ளனர். அதாவது வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றங்களின் போதும் ஆயுட் காப்புறுதித் திட்டங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

சரியான நிதித்திட்டமிடலும் ஆயுட்காப்புறுதித் திட்டங்கள் பற்றிய சரியான தகவல்களும் தெரிந்திருந்தால் அடிக்கடி காப்புறுதித் திட்டங்களை மாற்றுவதால் ஏற்படும் பணவிரயத்தைத் தடுக்கலாம்.

### வாழ்வில் ஏற்படும் முக்கிய திருப்பங்கள்.

- தனிநபர் ஒருவர் முதன் முதலாக ஒரு வேலை பெற்றுக்கொள்வது.
- திருமணமாகித் தம்பதிகளாக வாழ்வை ஆரம்பித்தல்.
- முதல்தடவையாக வீடு வாங்குதல் அல்லது வியாபாரம் ஆரம்பித்தல்.
- முதல்க் குழந்தை பெற்றுக்கொள்வது.
- எதிர்பாராதவிதமாக நோய்வாய்ப்படல் அல்லது வேலை செய்ய முடியாத நிலைக்கு உட்படுதல்.
- ஓய்வூதியத் திட்டமிடல்
- சொத்துக்களை அன்புக்குரியவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தல் அல்லது உயில் எழுதுவது.

எனவே ஒவ்வொருவரும் வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தின்போதும் ஆயுட்காப்புறுதி நிதித்திட்டமிடல் போன்றவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும். உதாரணமாக தனிநபர் ஒருவர் திருமணமாவதற்கு முன்பு அவரில் ஒருவரும் தங்கியராதபடியால் மிகக்குறைந்த தொகைக்கு மட்டுமே காப்புறுதி செய்வார்கள் பின்பு திருமணமானவுடன் அல்லது வீடு வாங்கியபின்பு அல்லது குழந்தை கிடைத்தபின்பு காப்புறுதித் தொகை அதிகரிக்கவேண்டும். காரணம் அவரின் இழப்பு இருவரைப் பாதிக்கும்.

ஒரு வியாபார நிறுவனத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர் அந்த வியாபார நிறுவனத்தின் பெறுமதிக்கு ஏற்றவாறு காப்புறுதித் தொகையை அதிகரித்துக் கொள்ளவேண்டும். காரணம் அவரின் இழப்பால் அந்த வியாபார நிறுவனம் பாதிக்கப்படும். ஒரு வெற்றிகரமான நிதித்திட்டமிடலின்போது ஒருவரின் குறுகியகால இலக்குகளும் நீண்டகால இலக்குகளும் கருத்தில்க் கொள்ள வேண்டும்.

எனவே ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒருவரின் தற்போதய தேவைகளுக்கும் அவரின் நீண்டகாலத் தேவைகளுக்கும் ஏற்ப திட்டமிடப்படவேண்டும். உதாரணமாக ஒருவர் மிகக்குறைந்த செலவில் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள விரும்புவார். அதனால் அவரின் குறுகியகாலத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்ய முடியும். அல்லது காலம் சென்றபின் காப்புறுதித் தொகைக்கான மாதாந்தக் கட்டுப்பணம் அதிகரிக்கும்.

எனவே ஒவ்வொருவருக்கும் ஆயுட்காப்புறுதியின் அளவு காலத்துக்கு ஏற்ப அவரின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படவேண்டும். சாதாரணமாக ஒருவருக்கு எவ்வளவு தொகைப் பணம் ஆயுட்காப்புறுதியாகத் தேவைப்படும் என்று கேட்டால் அவருடைய வருட வருமானத்தின் 5 மடங்கு அல்லது 7 மடங்கு இருக்கவேண்டும் என்று மிகவும் எளிதாகச் சொல்வார்கள். ஆனால் சரியாக ஒருவரின் ஆயுட் காப்புறுதித் தொகையைக் கணிப்பிடுவதற்குச் சரியான நிதித்திட்டமிடல் ஆய்வு செய்தபின்புதான் கணிக்கவேண்டும். எனவே ஒவ்வொருவரின் நிதிநிலமைகளும் காலத்துக்குக்காலம் மாறுபடுவதால் காலத்துக்குக் காலம் உங்கள் காப்புறுதித் திட்டத்தை மறுபரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

### ஆயுட் காப்புறுதி மூலம் எப்படி ஒருவர் தனது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் அல்லது உங்கள் நிதிநிலையை வளமாக்க முடியும்.

ஒருவர் தனது வாழ்நாளில் ஒரு மில்லியன் டொலர்களைச் சேர்த்து தனது குடும்பத்திற்கு பணமாகக் கொடுப்பது இலகுவான தல்ல. ஆனால் ஒரு மில்லியன் டொலர் தொகையை ஆயுட்காப்புறுதியாக பெற்றுக் கொண்டால் அதற்கான மாதாந்தக் கட்டணம் செலுத்துவது இலகுவானது. அப்படி ஒருவர் ஒரு மில்லியன் டொலருக்கு ஆயுட் காப்புறுதி செய்தால் அவர் இறந்தவுடன் அவரது குடும்பத்தினர் மில்லியனராக மாறுகின்றனர்.

வாழ்க்கையில் ஒருதடவையாவது மில்லியனர் ஆகவேண்டும் என்று பலர் ஆசைப்படுவதுண்டு.எனவே ஒரு மில்லியன் டொலர் தொகையை ஆயுட்காப்புறுதி செய்வதன் மூலம் ஒருவர் தான் ஒரு மில்லியனராக வர முடியாவிட்டாலும் தனது குடும்பத்தை ஒரு மில்லியனர் குடும்பமாக மாற்றமுடியும். அதன்பின் அந்தக் குடும்பத்தினர் சரியான நிதித்திட்டமிடல் மூலம் அந்தப்பணத்தை சரியான வழிகளில் முதலிட்டால் அவர்கள் தொடர்ந்து "மில்லியனர்" குடும்பமாக வாழ முடியும். கனடாவில் வாழும் வேறு இனத்தவர்கள் பலர் இப்படிப் பெருந் தொகைப் பணத்தை ஆயுட்காப்புறுதி செய்வதன் மூலம் அவர்களது குடும்பத்தினரை செல்வந்தர்களாக மாற்றியுள்ளனர்.

எமது வாழ்வு எப்போதும் நாம் நினைப்பது போல் நிறைவேறுவதில்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்க்கைக்கு ஒரு மாற்றுத் திட்டம் வைத்திருப்பது அவசியம். அதாவது நாங்கள் திட்டமிட்டபடி எமது வாழ்வை நிறைவேற்றமுடியாத கட்டத்தில் எப்போதும் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒரு மாற்றுத் திட்டமாகச் செயற்பட்டு எமது ஆசையை நிறைவேற்றும்.

### காப்புறுதி உள்ளும் புறமும்

கனடாவைப் பொறுத்தவரை மக்கள், பல வேறு வகையான காப்புறுதித் திட்டங்களை எளிதாகப் பெறக்கூடிய நிலையில் உள்ளனர். ஆனால், அவர்கள் இந்தப் பணத்தைத் தகுந்த வழியில் சரியான திட்டங்களுக்குச் செலவு செய்கின்றார்களா என்பது தெரியாது.

கனடாவின் காப்புறுதி நிறுவனங்கள் பெருமளவில் பணம் சம்பாதிக்கின்றன. வெளிநாடுகளில் உள்ள காப்புறுதி நிறுவனங்களை வாங்கும் அளவிற்கு பணவசதியுடன் இருக்கின்றன. 2004ம் ஆண்டு Manulife Financial Corp. நிறுவனம் அமெரிக்காவில் உள்ள John Hancock Financial Services எனும் நிறுவனத்தை வாங்கியுள்ளது.

கனடாவின் சில பெரிய காப்புறுதி நிறுவனங்கள் வேறு நிறுவனமாக மாறியுள்ளன. அண்மையில் Clarica நிறுவனத்தை Sun life Financial வாங்கியுள்ளது. Canada Life நிறுவனத்தை Great West Life நிறுவனம் வாங்கியுள்ளது.

குடும்பத்தின் பாதுகாப்பை விரும்பும் மக்கள் அதாவது பழமைபேணும் மக்கள் மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் காப்புறுதித் திட்டங்களை வாங்குவதில் தயங்குவதில்லை. எனவே காப்புறுதித் திட்டங்களுக்குச் செலவிடும் பணத்தை விரயமாக்காமல் உகந்த திட்டங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.உங்களுக்குத் தேவைப்படும்போது பயனளிக்காத திட்டங்களுக்குப் பணத்தைச் செலவு செய்யாதீர்கள்.

பெரும்பாலான மக்கள் காப்புறுதி முகவர்களின் வியாபார யுக்திக்காகப் பாவிக்கப்படும் அறிவுரைகளைக் கேட்டு தேவையற்ற திட்டங்களை வாங்குவதுண்டு. ஆனால் எந்தத் திட்டத்தைப் பற்றியும் உண்மையான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதில்லை.

பல காப்புறுதித் திட்டங்களை காப்புறுதி நிறுவனங்கள் அற்ற வேறு நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன. அதாவது காப்புறுதித் திட்டங்களைக் கடன் அட்டை வழங்கும் நிறுவனங்கள், வங்கிகள், கார்வாடகைக்கு விடும் நிறுவனங்கள், பிரயாண முகவர்கள் போன்ற எல்லோரும் விற்பனை செய்கிறார்கள். அதாவது கார் வாடகைக்குப் பெறும்போது அத்துடன் காப்புறுதியும் வாங்கிக்கொள்ள முடியும். அல்லது பிரயாணச்சீட்டு வாங்கும்போது மருத்துவக் காப்புறுதி,ஆயுட்காப்புறுதி போன்றவற்றை வாங்க முடியும்.
ஆனால் இந்தத் திட்டங்களை விற்பனை செய்பவர்கள் காப்புறுதி சம்பந்தமான எதுவும் தெரியாதவர்கள். நீங்கள் வீட்டுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கும் போதுகூட உங்களுக்கு விற்பனை செய்யப்படும் உத்தரவாதங்கள் (Extended Warranties) ஒரு வகையில் காப்புறுதித் திட்டங்கள்தான். எந்த வியாபாரத்தைப் பார்த்தாலும் அங்கே ஒரு காப்புறுதித் திட்டத்தை விற்பனை செய்வதன் மூலம் வியாபாரத்தை வழப்படுத்திக் கொள்கின்றனர். காப்புறுதி முகவர் அல்லாத மற்றைய விற்பனை முகவர்கள் காப்புறுதி பற்றிய விளக்கங்களை மக்களுக்குப் புகட்டுவதால் மக்கள் குழப்பமடைகின்றார்கள்.

'Insurance is a game of language'
காப்புறுதி என்பது வார்த்தைகளுக்கு முக்கியமளிக்கும் ஒரு திட்டம். எனவே, காப்புறுதியின் இழப்பீடு ஒன்றைப் பெறும்போது காப்புறுதியிற் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளின் மதிப்பையும் நீங்கள் உணர்வீர்கள். காப்புறுதித் திட்டங்களில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள் காப்புறுதி முகவர்களுக்குக் கூட நன்றாகத் தெரிந்திருப்பதில்லை. ஒரு காப்புறுதித் திட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, அந்தக் காப்புறுதித் திட்டப் பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் எல்லா விடயங்களும் கவனித்துக் கொள்ளப்பட வேண்டியவை.

உதாரணமாக ஒரு ஆயுட் காப்புறுதித் திட்டத்தைப் பெறும்போது அதில் உங்கள் பெயர் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா? உங்கள் பிறந்த திகதி சரியாக உள்ளதா? என்பன போன்ற அடிப்படையான விடயங்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். காப்புறுதி முகவர் ஒருவர் ஒரு திட்டத்தை உங்களுக்குத் தந்து எல்லாம் சரியாக உள்ளதா என்பதைப் பரிசீலனை செய்த பின்னரே நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டதாகக் கையொப்பம் இடவேண்டும். எந்த ஒரு காப்புறுதித் திட்டமும் நீங்கள் சரியென்று ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் திருத்தம் செய்து தருவார்கள். அல்லது கட்டிய பணத்தைத் திரும்பித் தருவார்கள்.

தற்போது மிகவும் பிரபல்யமாக விற்பனை செய்யப்படும் கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டத்தைப் (Critical Illness Insurance) பெற்றுக் கொள்ளும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கொடிய நோய்களுக்கான காப்புறுதித் திட்டத்தில் எந்த எந்த நோய்கள் ஏற்பட்டால் காப்புறுதித் தொகை பெறமுடியும், அல்லது சில நோய்களுக்குக் காப்புறுதி செய்யமுடியாது என்று இருக்கும். அதாவது எந்த நோய் ஏற்பட்டால் காப்புறுதி பெறமுடியும். எத்தனை நாட்களின் பின்பு காப்புறுதி பெறமுடியும் போன்ற விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

sritharan.t@thaiveedu.com

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada | Canada Life™

# மில்லியன் டொலருக்கான ஆயுட்காப்புறுதி

# மிகக் குறைந்த கட்டணத்தில்

- வயோதிபர்களுக்கான காப்புறுதி - **Non Medical Insurance**
  85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காப்புறுதி - **Life Insurance**
  மாதாந்தக் கட்டணம் மாறாது.. கட்டிய பணத்தை மீளப்பெறமுடியும்
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி - **Critical Illness Insurance**
  கொடிய நோய்கள் ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
- குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம் - **RESP**
  20% - 40% அரச மானியத்துடன் 15% அதிக போனஸ்

## ஒரு மில்லியன் டொலருக்கு

# $28.80

## மாதாந்தம்*

Rate based on 30 year female elite - non smoker (10 year term insurance)

Rate for 30 year male elite - non smoker (10 year term insurance)
**$42.30** per month

Sun Life Financial · Canada Life · Industrial Alliance Insurance and Financial Services Inc. · RBC Financial Group · Assumption Life · Unity Life of Canada

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**



LiLand Insurance Inc. 759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

வீடு வாங்கவும், விற்கவும்.......
Ramanan Ramachandran
Real Estate Broker
Office: 416.298.3200
Cell: 416.670.6467
I ♥ Referrals
HomeLife Today Realty Ltd., Brokerage
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6
HOMELIFE HIGHER STANDARDS
*INDEPENDENTLY OWNED AND OPERATED







இம்மாதப் புகைப்படக் கலைஞர்

## திருமதி. குமுதினி விநாயகமூர்த்தி

கனடா ஸ்காபரோவில் வதியும் இவர் வானொலியில் கவிதை நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொள்வதோடு தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi